# சற்குரு

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும் மாதாந்தரச் செந்
தமிழ்ப்பத்திரிகை

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "— தமிழ்மறை

| தொகுதி—க | 1914ஸு ஜுலைமீ | பகுதி—க |
|---|---|---|

## OURSELVES

## ஸ்வகீயம்.

எலிமென்டெரி உபாத்தியாயர்களுக்கான இந்தப் பத்திரிகையின் நோக்கங்கள் பலவற்றுள், நன்றாக ஆலோசிக்கும்படி அவர்களைத் தூண்டுவது முக்கியமானதாகும். ஒரு விஷயத்தை ஆலோசிப்பதற்கு அதைப்பற்றி மற்றவர்களுக்குள்ள அபிப்பிராயங்கள் தெரியவேண்டியது அவசியமாதலால், ஒருவருடைய அபிப்பிராயத்தை மற்றவர் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய அநுகூலங்களை அமைத்துக்கொடுப்பது எமது கருத்து. இந்தக் கருத்தை நிறைவேற்றும்பொருட்டு எலிமென்டெரி உபாத்தியாயர்கள் தம் அபிப்பிராயங்களை எழுதி இந்தப் பத்திரிகையின் வாயிலாக வெளியிடும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். எலிமென்டெரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் இந்த உலகத்தில் மிகவும் முக்கியமான காரியம் செய்கிறவர்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவ்வளவு முக்கியமான வேலை செய்

கிறவர்களுக்குள்ள மனக்குறைவுகளையும், சாதனக் குறைவுகளையும், மற்றும் அவசியமாக உள்ள பலவிஷயங்களையும் வெளியிடுவதற்கேற்ற பத்திரிகை யொன்று இதுவரையில் ஏற்படாதது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. பாலசிக்ஷைக்குரிய விஷயங்களும், அநுகூலங்களும், பிரதிகூலங்களும் அந்தக் காரியத்தில் அமர்ந்திருக்கிறவர்களுக்கே நன்றாகத் தெரியுமாதலால், அப்படிப்பட்டவர்கள் அந்த விஷயங்களைக்குறித்துச் சர்ச்சிப்பதற்கு இடம் அமைக்கும்பொருட்டு இந்தப் பத்திரிகையை வெளியிடத் தொடங்குகிறோம். இதனைப் பிரசுரிப்பதற்கு வேறு காரணமேனும் சமாதானமேனும் அவசியமில்லை யென்று நம்புகிறோம்.

161995

வெளியார் சொல்லுகிற புத்திமதிகள் சிறிதும் பயன்படுவதில்லை. ஏனெனில், ஒரு காரியத்தில் தாமே அமர்ந்து உழைக்காதவர்கள் அந்தக் காரியத்தை எப்படிச் செய்தால் நன்றாகுமென்றாவது [illegible] இப்படிச் செய்தால் நன்றாகாது என்றாவது திடமாகச் சொல்லமுடியாது. அவர்கள் அந்த விஷயத்தில் சரியான புத்திமதிகள் சொல்லத் திறமைபெறவேண்டுமானால், அந்தக் காரியத்தில் உழைக்கிறவர்களுடைய ஆலோசனையைக் கேட்டே நடக்கவேண்டும். பாலபோதம் செய்வதில் அநுபவம் மிகுந்தவர்களுடைய அபிப்பிராயங்களைத் திரட்டி இந்தப் பத்திரிகை வெளியிடும். இப்பொழுது இருக்கும் சந்தர்ப்பங்களை உள்ளபடி விவரித்து எழுதுவது எமது நோக்கமே யல்லாமல், அவைகளுக்குப் பரிகாரங்களைச் சூசிப்பது எமது நோக்கமன்று; ஏனெனில், அவ்விரண்டு காரியங்களுள் பரிகாரங்களைச் சூசிப்பதே எளிதான காரியமாகும். நமது இலாகா சம்பந்தமான விஷயங்களையும், நமது நிலைமைக்குரிய கஷ்டமான சந்தர்ப்பங்களையும், நமது விவகாரத்தில் தோன்றும் சிக்குகளையும் உள்ளபடி தெளிவாகத் தெரிந்துகொள்வதனால் மிக்க நன்மை விளையும். அப்படித்

டL
TM211, N14 N141



தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன என்று தோன்றுகிறது. இப்பொழுது வழங்கிவரும் பிரதம சிக்ஷையின் முறைப்படி பாடங்கள் கற்பித்து நாம் கண்டறிந்த பயன் சிறிதும் திருப்திகரமாக இல்லை யென்று அநேகர் நினைப்பதனால், மனோராஜ்யமான கோட்பாடுகள் இனி நமக்குப் போதும் என்று சொல்லவேண்டி யிருக்கிறது; வித்தியா-பாலனாதிகாரிகளினால் நியமிக்கப்பட்டுள்ள பாடங்களும், படிப்பிக்கும் முறைகளும் பெரிய மனோரதமென்றும் சொல்லவேண்டியிருக்கிறது. ஆயினும், சற்று நிதானித்துப் பார்க்குமளவில், அந்த அதிகாரிகளின்மீது குற்றம் சொல்வதற்கில்லை யென்றும், அந்த முறைகளைக் கையாளுகிறவர்களுடைய குற்றத்தினாலே நற்பயன் விளையவில்லையென்றும் புலப்படும். உபாத்தியாயர்கள் தம் கடமைகளையும், தாம் செய்யுங் காரியங்களையுங் குறித்து மேலும்மேலும் ஆலோசிக்கவேண்டும். ஏனெனில், ஆலோசிக்கக் கூடியவர்களே நல்ல அம்சங்களை ஆய்ந்து இசைத்துக்கொள்ளவல்லவர்களாவார்கள். உத்தமமானதென்று கண்ட தொன்றைத் தம் காரியத்திற்கு இசைத்துக்கொள்ளும் திறமையே தேர்ந்த உபாத்தியாயருக்கு முக்கிய லக்ஷணமாம்.

ஆகையால், விஷயங்களை நன்றாக ஆலோசித்துச் சொந்த அபிப்பிராயங்கள் அமைத்துக்கொண்டிருக்கும் எலிமென்டரி உபாத்தியாயர்கள் இந்தப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். கூடுமானவிடத்து, அவர்கள் எழுதும் விஷயத்தைப்பற்றி நன்றாகச் சர்ச்சிப்போம்.

எலிமென்டரி பாடசாலையின் சம்பந்தமாகப் பற்பல இடங்களில் நடக்கும் சங்கதிகளை மாதந்தோறும் திரட்டி எழுதுவோம். வித்தியாவிஷயங்களைப்பற்றி உபாத்தியாயர்கள் விஸ்தாரமாய் ஆலோசிப்பதற்கு அநுகூலமாகப் பிறதேசத்துக் கல்வி முறைகளையும் மற்றைய சங்கதிகளையும் விசாரித்து இப் பத்திரிகையில் எழுதுவோம்.

அரிய விஷயங்களைப் போதிக்கத்தக்க வியாசங்கள் இந்தப் பத்திரிகையில் முதன்மையாக அகப்படும். இவை தெளிவாகவும் இனிமையாகவும் எழுதப்படும். சில விஷயங்கள் ஆதியோடந்தமாக நூன்முறைப்படி எழுதப்படும். அப்படிப்பட்ட விஷயங்கள் ஒரே சஞ்சிகையில் முடிவுபெறுவாகையால், இரண்டு மூன்று சஞ்சிகைகளில் தொடர்ச்சியாக எழுதப்பெறும். இதுவல்லாமல், இலக்கியங்களையும் கவனிப்போம். இலக்கிய சம்பந்தமான வியாசங்கள் இதுவரையில் உள்ளவைகளைப் போலல்லாமல் புதுமாதிரியாக எழுதப்படும். இதனால், உள்ள பெரிய நூல்கள் சிலவற்றையேனும் சுலபமாகப் படித்துத் தெரிந்துகொள்வதற்கு ஆசையும், ஊக்கமும், உற்சாகமும், அநுகூலமும் உபாத்தியாயர்களுக்கு அமையுமென்று நம்புகிறோம்.

அப்போதைக்கப்போது புதிதுபுதிதாக ஏற்படும் போதனை முறைகளை இந்தப் பத்திரிகையில் செவ்வனே எடுத்து விவரிப்போம்; ஆனால், பரிபாஷைகளைச் சொல்லி மயக்காமல், தெள்ளிய நடையில் சாமானியமான சொற்களைக்கொண்டு விவரமாக அவைகளை எடுத்துரைப்போம். அந்தந்த விஷயங்களை நன்றாகப் படித்துத் தேர்ந்து, அவைகளைக் கையாளும் திறமையும், இனிமையாக எடுத்துரைக்கும் சாதுரியமும் வாய்ந்தவர்கள் அந்தந்த விஷயங்களைப்பற்றி இந்தப் பத்திரிகையில் எழுதுவார்கள். இவைகளைப் படிப்பவர்கள் சாமானியமான புத்தியினால் தெரிந்துகொள்ளக்கூடிய விதமாக வியாசங்கள் எழுதப்படுமேயல்லாமல், அறைகுறையாகப் பொருள்படும் சூத்திரங்களாக எழுதப்படமாட்டா.

அங்கங்கே பிரசுரமாகும் நல்ல புத்தகங்களையும், படங்கள் முதலியவற்றையும் அப்போதைக்கப்போது தெரிவித்து, அவைகளை விமரிசனையும் செய்வோம். அந்தக் குறிப்புக்களும் விமரிசனைகளும் உபாத்தியாயர்களுக்கு மிக உபயோகமாக இருக்கும்.



ஒவ்வோர் உபாத்தியாயரும் இந்தப் பத்திரிகையைத் தனித்தனியே எளிதில் வாங்கிப்படிப்பதற்கும், உபாத்தியாய சங்கத்தவர் வாங்கித் தம் படனசாலையில் வைப்பதற்கும் அநுகூலமாக இருக்கும்பொருட்டு இந்தப் பத்திரிகையைத் தபாற்கூலி உட்பட வருஷம் ஒன்றுக்கு ஒருரூபாய்க்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

எமது நோக்கத்தையும் விருப்பத்தையும் எடுத்துச் சொல்லிவிட்டோம். இனி, இத்தேசத்தில்எல்லா இடங்களிலும் அறிவைப் பரவச்செய்யும் பொருட்டுத் தத்தம் சக்திக்கேற்றவாறு உழைத்துவரும் பேருபகாரிகளாகிய எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் இந்தப் பத்திரிகையை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். அவர்கள் செய்யும் காரியத்திற்கு எம்மால் இயன்ற உதவி செய்து, அவர்களுடைய கஷ்டத்தை ஒருவாறு தணிப்பதற்கு நாம் எந்நாளும் முயலுவோம்.

# NOTES OF THE MONTH

# மாதாந்தரக் குறிப்புகள்

உபாத்தியாய சங்கங்களில் நடக்கும் விஷயங்களை நண்பர்கள் சுருக்கி நமது பத்திரிகைக்கு அனுப்புவார்களாக. அவ்விஷயங்களைப் பிரசுரஞ் செய்தால் பலன் உண்டென்று உறுதியாக நம்புகிறோம். வாய்க்கால் வழியோடிய நீர் நெல்லுக்கு மாத்திரமன்றிப் புல்லுக்குஞ் செழிப்பைத் தருவது போல, அறிவு ஒருவருக்கே யன்றிப் பலர்க்கும் பயன்தரும் என்பது திண்ணம். அறிவு கல்விக்கு முதற்காரணமாதலால், அதைப் பொன்னைப் போற் போற்றுவோம். இவ்வறிவினைப் பெறும்வகையில், எத்தன்மையோர் கூறுவனவற்றையும் இழிவாகக் கொள்ளாது மேன்மையாகப் பாராட்டுவதே எமது முக்கிய கொள்கையாகும்.

* * * * * *

சீனாவைச் சேர்ந்த கோரியாவில் ஜபானியர் சாதாரணப்பள்ளிக்கூடங்கள் என்று பெயர்கொண்ட பிரதம பாடசாலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவை எட்டு வயது முதல் பனிரெண்டு வயது வரையிலுள்ள சிறுவருக்கான பாடசாலைகள். நமக்குத் தாய்ப்பாஷை ஒன்றினைப் போதிப்பது கஷ்டமாயிருக்க, அப்பாடசாலைகளில், ஜபானிய பாஷைதவிர, கோரியா பாஷையையும் சீனாபாஷையையும் கற்பிக்கிறார்கள். இம்மூன்று பாஷைகளையும் கணிதத்தையும் முக்கிய பாடங்களாக வைத்துக்கொண்டு, நாட்டின் நிலைமைக்கேற்ப இயற்கைப்பாடம், சித்திரம் வரைதல், கைத்தொழில்கள், விவசாயம் முதலிய பற்பல இதரபாடங்களையும் கற்பிக்கிறார்கள்.

* * * * * *



பிரதம பாடசாலைகளில் தமது தாய்ப்பாஷையாகிய மலையாளத்தைச் செவ்வையாய்க் கற்பிக்கும் விதம் எதுவென்று அறியத் திருவாங்கூரில் ஒரு நல்ல ஆராய்ச்சி நடந்தது. அதைப் போன்றதொரு ஆராய்ச்சி நமது தமிழ் ஜில்லாக்களிலும் நமது அருமைத் துரைத்தனத்தார் நடத்தப் படாதோ வென்றால், தமிழ்ப் பாஷையைச் செவ்வையாய்க் கற்பிப்பதற்குரிய வகைகளை நமது எலிமென்டெரி உபாத்தியாயர்கள் தமது அனுபவத்தால் தேடிக் கொள்ளக் கூடிய சாதகங்கள் இருப்பதால், அப்படிப்பட்ட ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லை. அந்தச் சாதனங்களை இங்கு எடுத்துச் சொல்வது நமது நோக்கமன்று; ஆனால், ஒவ்வொரு உபாத்தியாயரும் முக்கியமாக விரும்பவேண்டியது எதனை யெனில், தேனினும் இனிய தமிழ்மொழியிற் சிறந்த தேர்ச்சியையே யென்க.

* * * * * *

தமிழ் கற்கும் மாணவர்களுக்கான சிறுநூல்கள் பல உண்டென்று யாம் அறிந்துள்ளோம். நாட்டுப் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் அவைகளைக் கற்பித்து வருகிறோம். ஆயினும், சுத்தமாகப் பதிப்பித்த புத்தகங்கள் இல்லை. தமிழில் தேர்ச்சி பெற்ற நல்லுபாத்தியாயர்கள் அந் நூல்களை ஒவ்வொன்றாக எடுத்து, வேண்டிய இடங்களில் விளக்கக் குறிப்புகளையுங் கூட்டி, மூலபாடத்தைச் சுத்தமாக வெளியிடுவார்களாயின், தமிழ்நாட்டிற்குப் பேருபகாரம் புரிந்தவர்களாவார்கள்.

* * * * * *

இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹம் என்னும் பட்டணம் கல்வியிற் சிறந்த தென்று தெரியவருகிறது. முனிஸிபாலிடியார் ஒரு வருஷத்துக்கு 1500 பவுன் கல்விக்காகச் செலவழிக்கிறார்கள். சில எலிமென்டெரி பாடசாலைகளில் 1000 பிள்ளைகள் படிக்கிறார்கள். கைத்தொழில்களுக்கு அனுகூலமான விஷயங்களை மாத்தி

ரம் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் ஐந்து உண்டு. இப்பள்ளிக்கூடங்களில் பெரும்பாலும் சாயங்கால வேளைகளில்மாத்திரம் பாடங்கள் நடக்கின்றன. இவ்விதமான பாடசாலை ஒன்றில் 4000 மாணவர்கள் இருக்கிறார்களாம்.

* * * * * *

சென்ற பிரிலிமினெரி பரீக்ஷையிற் கொடுத்த கணிதக் கேள்விகள் வெகு கஷ்டமா யிருந்தனவென்று அப் பரீக்ஷைக்குப் போனவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கேள்விகளைப்பற்றி அடுத்த மாதத்துப் பத்திரிகையில் சர்ச்சிப்போம்.

புதிய ஸ்கீம் பிரகாரம் க்ஷேத்திர கணிதம் இப் பரீக்ஷைக்குக் கிடையாது. இது போதனை முறைப் பாடசாலையிற் பயிலும் மாணவர்களை மகிழ்விக்கக்கூடிய விஷயம். இக் கணிதம் மனத்தெளிவிற்கு இன்றியமையாதது. ஆயினும், "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகும்" என்னுங் கொள்கை பண்டையோர்க்கு மாத்திரம் உரியதன்று.

* * * * * *

இச் சென்னை ராஜதானியிலுள்ள (சென்னை யொழிந்த) 61 முனிஸிபாலிடிகள் 437 எலிமென்டெரி பாடசாலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். 1911—12 ஆம் வருஷத்தில் 327 பாடசாலைகள் இருந்தன; மாணவர்களின் சங்கியை 31, 881-இலிருந்து 33,316-க்கு அதிகரித்தது. மாணவன் ஒருவனுக்குச் செலவு சராசரி ரூ. 5—14—9 ஆகிறது.

* * * * * *

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் மனப்பயிற்சியைப் பரிக்ஷிப்பதற்கு இன்ஸ்பெக்டர்கள் இருப்பது போல, தேகப்பயிற்சியையும் ஆரோக்கியத்தையும் பரீக்ஷித்துத் திருத்தி வளர்ப்பதற்காகப் பம்பாய்க் கவர்ண்மெட்டார் பள்ளிக்கூடங்களுக்கு டாக்டர்களை அப்போதைக்கப்போது அனுப்பி அவர்களுடைய ஆரோக்கிய நிலைமையைக் கவனித்து வருகிறார்களாம். அப்படிப்பட்ட ஏற்பாடு இங்கிலாந்திலும் தென் ஆப்பிரிக்காவிலும் நடந்துவருகின்றது. நமது மாகாணத்திலும் சீக்கிரத்தில் அப்படிப்பட்ட ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

---

# THE MANUAL METHOD

# பிரத்தியக்ஷப் பிரமாணம்

(*)

போதனை முறைகளிற் பயிற்றுவிக்கும் பாடசாலைகளில் (Training Schools) கற்பிக்க வேண்டிய பாடங்கள் இன்னவையெனத் தெளிவாக விளக்கி யெழுதி ஒரு சிறுபுஸ்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தை இந்தப் பத்திரிகையை வாசிக்கும் நேயர்களிற் சிலர் பார்த்திருக்கக் கூடும். அந்தப் பாடக்கிரமத்தைக் கவனிக்கு மிடத்து, அதனில் ஹையர் எலிமென்டெரி உபாத்தியாயர்களுக் கெனத் தனியே "கைத்தொழில்" என்னும் ஒரு புதியபாடம் ஏற்படுத்தி யிருப்பதைக் காண்கின்றோம்.

இந்தப் பாடத்தில் அடங்கத்தக்க விஷயங்களின் அட்டவணை (Syllabus) எங்கும் கொடுக்கப்படவில்லை. இந்தப் பாடத்தைக் கற்பிப்பதன் நோக்கம் இன்னதென்று விளக்கிக் காட்டத்தக்க குறிப்பு எதுவும் கிடையாது. ஆகையால், "கைத்தொழில்" என்னும் பாடத்தின் கருத்து என்ன, அதனிற் கவனிக்க வேண்டிய விஷயங்கள் எவை, அவைகளைக் கற்பிக்கவேண்டிய முறை யாது என்னும் அம்சங்கள் எல்லாருக்கும் சந்தேகமாகவே இருக்கின்றன. நமது சிற்றறிவிற்கு எட்டிய வரையில் அந்தச் சந்தேகங்களை நிவர்த்திப்பதற்குப் பிரயத்தனப் படுவோம்.

புதிதாக எந்தப் பாடம் ஏற்பட்டபோதிலும், அதனைக் கையாளுவதற்கு உபாத்தியாயர்கள் பயப்படுவது இயல்பாகும். அது எப்படி நடந்தேறுமோ, பரீக்ஷாதிகாரிகள் (Inspecting Officers) என்ன குறை கூறுவார்களோ என்பனவாதிய கவலைகள் அவர்களை விட்டு நீங்கா. இப்படிப்பட்ட பயம் இந்தியாவிலுள்ள உபாத்தியாயர்களுக்கு மாத்திரமே யல்லாமல், ஐரோப்பா கண்டத்தில்

உள்ளவர்களுக்கும் இருப்பதாகத் தெரிகின்றது. மேல்நாட்டில் நூதன பாடங்கள் தலைகாட்டின உடனே, உபாத்தியாயர்கள் தமக்குள்ள குறைகளையும் அனனுகூலங்களையும் எடுத்துக்கூறத் தொடங்குகின்றார்களாம்.

“கைத்தொழில்” என்னும் பாடம் முதன்முதல் இங்கிலாந்தில் 1895-ஆம் வருஷத்தில் தோன்றிற்று. அது எலிமென்டெரி பாடசாலைகளுக்கு ஏற்றதென்று வித்தியாபாலன அதிகாரிகள் எண்ணினார்கள். உடனே, அந்த விஷயத்தைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. தச்சுவேலையும், கருமார்வேலையுமே முக்கியமாகக் கற்பிக்கத் தக்கவை என்பது அந்தப் புத்தகத்தின் கொள்கை. ஆனால், அந்தத் தொழில்களைக் கற்பிக்கத் தக்க உபாத்தியாயர் எவரும் அந்தக் காலத்தில் இல்லை. ஆகையால், அந்தக் “கைத்தொழில்” பாடம் நடத்தப்பெறாதாயிற்று; அதனைப் பாடமாக ஏற்படுத்திய உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

மறுவருஷம் மற்றோர் புத்தகம் வெளிவந்தது. அதனில் “கைத்தொழில்” பாடம் வேறுவிதமாகப் போதிக்கப்பட்டிருந்தது. அதைக்கொண்டு உபாத்தியாயர்கள் தம்மால் இயன்றவரையில் பிரயாசப்பட்டுத் தேர்ந்தார்கள். நாளடைவில் அது எலிமென்டெரி பாடசாலைகளிலெல்லாம் பாடமாக அமைக்கப்பெற்றது; எனவே, எலிமென்டெரி பாடசாலைகளுக்குரிய பாட அட்டவணையில் குறிக்கப்பெற்றது. போதனைமுறைப்பாடசாலைகளிலும் அது ஒரு பாடமாக ஏற்பட்டதனால், உபாத்தியாயர்கள் பல கைத்தொழில்களில் பயிற்சிபெற்றார்கள். இப்பொழுது, ஐரோப்பா கண்டத்திலுள்ள எலிமென்டெரி பாடசாலைகளிலெல்லாம் ‘கைத்தொழில்” என்பது முக்கியமான பாடங்களுள் ஒன்றாக இருக்கின்றது.

விவேகமிகுந்தவரெனச் சிறந்து விளங்கும் மைசூர்மகாராஜா அவர்கள் இந்தக் கைத்தொழிற்பாடத்தின் சிறப்புக்களைக் கேள்வியுற்று, அதனால் அடையக்கூடிய நற்பயன்களை நன்குணர்ந்து,



தம் ராஜ்யத்து எலிமென்டெரி பாடசாலைகளில் அதனை ஒருபாடமாக அமைத்திருக்கிறார்கள். அந்தக் கல்வியிலாகாத் தலைவர் சிலமாதங்களுக்கு முன் வெளியிட்டுள்ள ரிபோர்ட்டின்படி, கைத்தொழிற்பாடம் கற்பிப்பதனால் நற்பயன் விளைவது திண்ணமென்று தெரிகின்றது.

இவ்வாறு அநேகர் அநேக இடங்களில் ஆலோசித்து ஆய்ந்து தேர்ந்து கைக்கொண்ட இந்தக் கைத்தொழிற்பாடமானது நமக்கும் நற்பயனைத் தரக்கூடுமென்றெண்ணி, அது நம் நாட்டு எலிமென்டெரி பாடசாலைகளிலும் பாடமாக ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம். இப்படி எதிர்பார்ப்பதன்றி, அது பாடமாக ஏற்படுவதற்கான முயற்சிகளைச் செய்வதே நலமாகும். ஏனெனில், முயற்சியைவிடுத்து எண்ணம் மாத்திரம் தனியே நிற்பின், அது வீண் எண்ணமாகும். விடாமுயற்சியினால் எண்ணம் திண்ணமாகும்; காரியம் சாதகமாகும். வீண்எண்ணத்திற்கு வைரி விடாமுயற்சி யன்றோ?

ஓயாமல் ஒரு திசையைநோக்கி இரவும் பகலும் பாய்கின்ற நதியைப்போல, நமது மனம் கல்விக்கடலை நோக்கிப் பாய்ந்துகொண்டே யிருக்கவேண்டும். அதாவது, நாம் எப்பொழுதும் கல்விப்பயிற்சியையே நாடவேண்டும்.

இகழ்வார் எங்குமுள்ளார்; கற்றோரும் நிந்திப்பார்கள், மற்றோரும் நிந்திப்பார்கள். அப்படிப்பட்டநிந்தனைகளைமேற்கொண்டு மனஞ் சோரலாமோ? இங்கிலாந்தில் ‘கல்வியிலாகா விஷயசங்கம்’ என்னும் ஒரு சங்கம் இருக்கின்றது. பற்பல தேசங்களில் நிகழும் கல்வியிலாகா விஷயங்களைத் தேர்ந்தெடுத்துச் சகலருக்கும் பயன்படுமாறு அவைகளைப் புத்தக ரூபமாகப்பிரசுரித்துக் குறைந்த விலைக்கு விற்பதே இந்தச்சங்கத்தோர் செய்யும்நன்மையான காரியம். இது பெருங் காரியமென்றும், நற்காரியமென்றும் எவரும் ஒப்புக்கொள்வார்களல்லவா? எனினும், அநேக கல்விச்சங்கங்களுக்கு அதிபராக விளங்கும் பண்டித ஹாம்ஸ்டிராம் துரை

என்பவர் இந்தச் சங்கத்தைத் தொலைத்தொழிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு உபாத்தியாயர்களுக்கான பத்திரிகையொன்றில் எழுதியிருக்கிறார். இந்தக் கொள்கை அவருடைய படிப்புக்கும் பொறுப்புக்கும் ஏற்றதாகுமோ?

கைத்தொழிலைப் பள்ளிக்கூடங்களிற் பாடமாகக் கற்பிப்பதற்கு அநேக அனனுகூலங்கள் இருக்கின்றன என்பது இந்நாட்டிலுள்ள கிராமபாடசாலைகளின் நிலைமையை அறிந்தவர்களுக்கெல்லாம் தெரியும். முக்கியமாக, கைத்தொழில் என்பது கூலிவேலை என்றும், அது இழிவானதென்றும், ஆதலால் அதை ஒழித்து எழுத்தைக் கற்றுப் புத்தகங்கள் படித்து மனப்பயிற்சியெய்தி மேன்மை அடைவதே உத்தமமென்றும் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆதலால், கைத்தொழில் என்றால் கோபமும், அரிச்சுவடியென்றால் ஆனந்தமும் அவர்களுக்குப் பொங்குகின்றன. இந்த அபிப்பிராயத்தைச் சுலபமாக மாற்ற முடியாதாதலால், அதற்கு இணங்கி உபாத்தியாயர்கள் நடக்கவேண்டியது அவசியமே. ஆனால், கைத்தொழிலின் நற்பயனை விளக்கி ஜனங்களினுடைய துரபிப்பிராயத்தைச் சிறிது சிறிதாக மாற்றும் பொருட்டு, நாகதாளி அடர்ந்த ஒற்றையடிப் பாதையில் ஒதுங்கிச் செல்பவன்போல, உபாத்தியாயர்கள் இடையிடையே கைத்தொழிற் பாடத்தையும் நடத்தவேண்டியதாகின்றது. இப்படிச் செய்தபோதிலும், கைத்தொழிற் பாடம் அமைத்த தன் நோக்கம் ஈடேறும்.

கண்ணின்வழி மனம் செல்லும், கண்கண்டது கைசெய்யும். ஆகையால், கண்ணினாற் பார்த்துக் கையினாலே ஆளும் விஷயம் மனத்தில் நன்றாகப் பதியுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலால், பிள்ளைகளுக்கு எழுத்துக்களினால் அறிவை ஊட்டுவது மாத்திரமே போதாதென்றும், கூடிய வரையில், எழுத்துக்களினாற் குறிக்கப்படும் வஸ்துக்களை அவர்களுக்குக் காட்டிக் கையா



ளச்செய்வது நன்றென்பது கைத்தொழிற் பாடத்தின் நோக்கமாகும். இதுவே பிரத்தியக்ஷபாடம் எனப்படும்.

பிரத்தியக்ஷமாகப் பொருள்களைக் கொண்டுவந்து காட்டிப் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லுவதற்கு அனுகூலங்கள் இல்லாமையால், அநேக உபாத்தியாயர்கள் பொருள்களைக்கொண்டு வந்து எதிரில் வைக்காமலே விஷயத்தை மாத்திரம் பாடமாகச் சொல்லுகிறார்கள். உபாத்தியாயர்கள் அந்தப் பொருள்களைச் செய்வதற்குக் கற்றிருக்க வேண்டுமென்பது அர்த்தமன்று. உதகரிக்க வேண்டியபொருள்களைப்போன்ற உருவங்கள் அட்டைகளினாலும் களிமண்ணினாலும் செய்து பிள்ளைகளுக்குக் காட்டலாம். அதுவுமில்லையெனின், பொருள்களின் உருவங்களை வரிவடிவமாகக் கரும்பலகையிலாவது காகிதத்திலாவது வரைந்து காட்டலாம். இப்படிப்பட்ட உபாயங்களினால் ரூபங்களை அமைத்து, அவைகளைப் பிரத்தியக்ஷமாகக் காட்டிப் பாடஞ் சொல்லுவது உத்தமமேயன்றோ?

இப்போது உள்ள உபாத்தியாயர்களில் நன்றாக வரிவடிவம் வரையக் கூடியவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? அவர்கள் கைத்தொழில்களில் தேர்ந்தவர்களாயிருந்தால், பாடங்கள் பிள்ளைகளின் மனத்தில் நன்றாகப் பதியுமாறு அவர்கள் பலவகையாகப் பொருள்களைப் பிரத்தியக்ஷமாகக் காட்டிப் போதிக்கக் கூடுமல்லவா? இப்பொழுது இந்தவிஷயத்தில் உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி கிடையாது. இந்தக் குறையைத் தீர்க்கும் பொருட்டே நமது வித்தியா இலாகாத் தலைவராகிய கனம் ஸ்டோன் துரையவர்கள் பிரயத்தனஞ் செய்திருக்கிறார்கள். மனப் பயிற்சியை அதிகப்படுத்துவதற் கேற்ற கைத் தொழில்களில் தேர்ந்தவர்கள் இருவரை இங்கிலாந்திலிருந்து தருவிப்பதற்கு அவர் ஏற்பாடு செய்திருக்கிறாராம். அங்கிருந்து வருகிறவர்கள் நமது பாடசாலைகளுக்கு வேண்டிய கைத்தொழில்களை உபாத்தியாயர்களுக்குக் கற்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.

கைத்தொழில் என்பது அற்பவேலை யென்று எண்ணுவது பிசகு. திருத்தமாகக் கைத்தொழில் செய்வதற்கு நல்ல அறிவு வேண்டும். அதன் நுட்பங்களையும், சிறப்புக்களையும், அமைக்கும் கணக்குக்களையும், பயிற்சியினால் விளையும் திறமைகளையும் கவனிக்குமிடத்துக் கைத்தொழில் மிகுந்த உற்சாகம் பயக்கும். கைத்தொழில் தேர்ச்சியினால் அறிவு வளரும். அறிவின் வளர்ச்சிக்கு மனப்பழக்கமும் கைப்பழக்கமும் அவசியமாகும். இவ்வுண்மையை விளக்கும் பொருட்டு ஜர்மானிய தத்துவஞானியாகிய ஹர்பாட் என்பவர் "கையே மனிதன்" என்று கைப்பழக்கத்தின் சிறப்பை எடுத்துக் கூறியிருக்கின்றார். "மனமே மனிதன்" என்று வேதாந்த நூல்கள் கூறுவதையும் கேட்டிருக்கின்றோம். இக்காலத்துச் சந்தர்ப்பங்களை யனுசரித்து "மனமுங் கையுஞ் சேர்ந்ததே மனிதன்" என்று நாம் கொள்ளல் வேண்டும்.

கைத்தொழிற் பயிற்சியினால் அறிவு வளரும் என்று சொன்னோம். அது வன்றி, மனத் தெளிவும் சுறுசுறுப்பும் எய்தும். இதற்கு உதாரணம் ரோமாபுரியில் மான்டசாரி என்னும் அம்மை சாதித்துள்ள அற்புதக் காரியமே யாம். அந்த அம்மை வைத்திய வித்தையில் தேர்ந்தவள். பத்து வருஷகாலமாக அவள் மந்தமதியினரான சிறுவர்கள் சிலரைச் சேர்த்து வைத்து, அவர்களுக்குக் கைத்தொழில்களைக் கற்பித்து, அவைகளின் மூலமாக அறிவை யூட்டி, அவர்களுக்கு மனத்தெளிவும் சுறுசுறுப்பும் உண்டாகும்படி செய்து பிரசித்தி பெற்றிருக்கின்றாள்.

சுருக்கிச் சொல்லின், கைப்பழக்கமானது மனப்பழக்கத்திற்குப் பெரிய சாதனமாகும். வஸ்துக்களைப் பிரத்தியக்ஷமாகக் காட்டி அவைகளுக் குரிய விஷயங்களை நன்றாகப் போதிப்பதே கைப்பழக்கத்தினால் அடையும் முதற் பிரயோசனம். அறிவை வளர்ப்பதற்குக் கைப்பழக்க மென்பது துணைக்கருவியே யன்றி, முதற் கருவி யன்று. அதாவது, கைப்பழக்க மென்பது தனியே ஒரு பாடம் எனல் தகாது.



பலவகைக் கைப்பழக்கங்களினும் அனுபவம் உண்டானால், நுட்பமான விஷயங்களைப் பற்றித் தெளிவான அறிவும், எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் வழக்கமும் ஏற்படும்.

கைப்பழக்கமும் மனப்பழக்கமும் எள்ளும் எண்ணெயும் போன்றனவாகும். எள்ளே கைத்தொழிலாகும், எண்ணெயே மனப்பயிற்சியாகும். கற்கவேண்டிய விஷயங்களைத் தன் கையினாற் செய்தபொருள்களின் உதவியினால் கற்றுக்கொள்வதே யல்லாமல், எண்ணெய் எடுத்த பிறகு எள்ளினின்றும் பிண்ணாக்கு மிகுந்திருப்பது போலக் கைப்பழக்கத்தினால் சரீரப்பயிற்சியும் சுறுசுறுப்பாயிருக்கும் வழக்கமும் மிகுந்து நிற்கும்.

பிண்ணாக்கை மாத்திரம் கைக்கொள்ளுகிறவர்கள் மனப் பயிற்சியில்லாத கூலிவேலைக்காரர்களாவார்கள். அப்படிப்பட்டவர்களையே நாம் பெரும்பாலும் காண்கின்றோமாதலால், கைப்பழக்கத்தை ஜனங்கள் இதுவரையில் இழிவாக நினைப்பதற்கு இடமுண்டாயிற்று.

இனி, பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கும் பாடம் ஒவ்வொன்றையும் கைப்பழக்கத்தின் உதவியினால் எப்படி வலியுறுத்தலாமென்பதை எடுத்துக் காட்டுவோம். கைப்பழக்கம் என்னும் தலைப்பின் கீழ் பொருந்தக்கூடிய தொழில்கள் எவையென்பதையும் விரித்துக் கூறுவோம். இவ் விஷயங்கள் இனிவரும் சஞ்சிகைகளிற் சிறிது சிறிதாக எழுதப்பெறும்.

கைப் பழக்கமானது அறிவை வளர்க்குஞ் சாதனமாதலின் அது இழிதொழில் அன்று; உபாத்தியாயர்களின் கௌரவத்தை அதிகரிக்கத் தக்கதேயன்றிக் குறைக்கத்தக்கதன்று. இதுவே சான்றோரின் கொள்கை:

"களர் நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக்—கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்."—நாலடியார்.

எம். எஸ். எச். தாம்ஸன், பி. ஏ.

# RAMA & RAVANA

# இராமரும் இராவணனும்

———(*)———

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா
அலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவ ரன்னவர்க்கே சரணாங்களே.

## ஸ்ரீராமபிரான் திருவவதாரம்

அயோத்திமாநகரத்தை (Oudh) தலைநகராகக் கொண்டு தசரதன் என்னும் அரசன் ஒருவன், அநேக வருஷங்களுக்கு முன்னே, கோசலநாட்டை அரசாட்சி செய்து வந்தான். அவன் கல்வி, அறிவு, ஒழுக்கம், பொறுமை, பலம், சௌரியம், உதாரத்துவம், கிருபை, தருமம் முதலிய உத்தம குணங்களை யெல்லாம் உடையவன். அவன் உயிர்களுக்கு அன்பினில் தாயைப் போலவும், நல்வழியிற் செலுத்துதலில் தந்தையைப் போலவும் இருந்தான். பல துறைகளிற் செல்லும் வெள்ளமும், பல விடங்களிற் செல்லும் பறவைகளும், பல வனங்களிற் றிரியும் மிருகங்களும் அவன் தன் சக்கரத்தினைச் செலுத்தும் செம்மையான விதத்தினைக் கண்டு ஒரு துறையிற் செல்லும்.

அப்படிப்பட்ட செங்கோலையுடைய தசரதசக்கரவர்த்திக்கு நெடுநாள் வரையில் புத்திரப்பேறு இல்லாதிருந்தது. பிறகு, வசிஷ்டருடைய உத்தரவின்படி தசரதன், கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு யாகஞ் செய்து தன் மூத்தமனைவியாகிய கோசலையினிடம் ஸ்ரீராமபிரானையும், கைகேயியினிடம் பரதனையும், சுமித்திரையினிடம் இலக்குமணனையும் சத்துருக்கனையும் பெற்றனன். பிறகு, குழந்தைகள் அமுதஞ் சொரியும் குதலைச்



சொற்பேசி, குறுநடையிட்டு நடந்து, சிறுபறை முழக்கிச் சிறுதேர் உருட்டுவாராய், ஐந்துவயதுவர வித்தியாப்பியாசஞ் செய்யப் பெற்று, ஏழாம்வயதில் அரசமரபின்முறைப்படி கற்கவேண்டிய வில்வித்தை முதலிய வித்தைகளைக் கற்றுச் சிறப்புடன் விளங்கினார்கள்.

## தாடகை வதை
### அல்லது கைவண்ணக் காட்சி

தசரதன் தனது புத்திரர் கல்வியிலும் வித்தையிலும் மேம்பாடுற்று விளங்குவதைக் கண்டு பெருமகிழ்ச்சியுற் றிருக்கும் நாட்களில் ஒருநாள் கோசிகமுனிவர் என்பவர் அரசசபையை நோக்கி வந்தனர். அதனைக்கண்டு தசரதன் அவர்க்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து, ஆசனமிட்டு, அவர் வருகையின் காரணம் யாதென்று விசாரித்தனன்.

அதற்கு அவர், "யான் தாருவனத்திற் செய்யும் தவத்திற்கும் வேள்விக்கும் அரக்கரால் இடையூறு உண்டாகாதபடி காக்க வேண்டும். அதற்கு நின் மக்கள் நால்வருள் மேகவண்ணனாகிய சிராமனைத் தருதி" என்றனர்.

அரசன் அதைக்கேட்டுப் பெருந்துயர் அடைந்தான். அவன் தன் குமாரனை அனுப்பாது துயர் அடைந்திருத்தலைக் கண்டு கோசிகர் கோபங்கொண்டார். அப்பொழுது, வசிஷ்டர் விசுவாமித்திரருக்கு ஆறுதல் சொல்லித் தசரதனைப் பார்த்து, இராமபிரானைக் கோசிகருடன் அனுப்பும்படி உத்தரவு செய்தார். அரசன் தன் மூத்தகுமாரனை அழைத்துவரும்படி ஏவினான். உடனே, சிராமன் தன் தம்பியாகிய இலக்குமணனுடன் வந்து முனிவர்களையும் தந்தையையும் பணிந்து நின்றான். அரசன் அவர்களை விசுவாமித்திரரிடம் கையடையாகக் கொடுத்தான்.

உடனே, கோசிகர் சிராமனையும் அவன் தம்பியாகிய இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு சரயுநதியைக் கடந்து, மன்மத

னுடைய அங்கம் வீழ்ந்த இடமாகிய அங்கநாட்டை யடைந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து, மறுநாள் ஒரு பாலைவன மடைந்தனர். அப் பாலைவனமோ மனத்தினாலும் நினைக்கக்கூடாதது; உலோபிகள் மனம்போல் ஈரம் அற்றது. அப்படிப்பட்ட பாலைவனத்தைக் கடந்து செல்லுகையில் சீராமபிரான் விசுவாமித்திரரைப் பார்த்து, " இந் நாடு இப்படி அழிந்து கிடப்பதற்குக் காரணம் யாது? " என்று கேட்டார்.

அதற்கு விசுவாமித்திரர், " இரகுநாயகனே! சுகேது என்பவனுடைய புத்திரியாகிய தாடகை என்பவள் இவ்விடத்தில் வசிக்கின்றாள். அவள் மருதநிலம் எல்லாவற்றையும் அழித்துப் பாலைவனமாக மாற்றி, அடுத்த காடுகளில் தவஞ்செய்வார்க்கெல்லாம் அவஞ் செய்துகொண்டு வருகின்றாள். அவள்

'மண்ணுருத்தெடுப்பினும் கடலை வாரினும்
விண்ணுருத்திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிவரும் பாவிமீண்டியோர்
பெண்ணுருக்கொண்டெனத் திரியும் பெற்றியாள்.'

அவள் இன்னுயிர்களை யெல்லாங் கொன்றுவாழும் வாழ்க்கையினை யுடையவள். அவள் இராவணனுடைய ஏவலினால் என் வேள்வியைக் கெடுக்கின்றாள். அப்படிக் கெடுப்பதுமல்லாமல், அங்க நாட்டிலுள்ள உயிர்களை யெல்லாம் அதிகமாகக் கொன்று திரிகின்றாள். இனிச் சிலகாலத்திற்குள் எஞ்சி யிருக்கும் உயிர்களையும் தன்வாயிற் போட்டுக் கொள்வாள் " என்றனர்.

இவ்வாறு அவளைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கையில், நீலமலையானது அக்கினி கக்கிக் கொண்டு வந்தாற்போலவந்து அவள் தோன்றினாள். "என் காவலையுடையது இக்காடு. இதிலுள்ள எல்லா உயிர்களையுங் கருவறுத்துவிட்டேன். இனி மாமிச உணவு கிடைப்பது அருமை என்றெண்ணியோ, அல்லது விதியானது தள்ளிக் கொண்டுவர இறப்பதை எண்ணியோ நீங்



கள் வந்தவிதம்? " என்று கேட்டு, அவள் சீராமன்மீது சூலப் படையை எறிய முயன்றனள்.

அப்பொழுது, சீராமன் விசுவாமித்திரரைப் பார்த்தார். பார்த்த வளவில் முனிவரர், "பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்' என்பதற்கு மாறாக, பொல்லாங்கென்பவைகளை யெல்லாஞ் செய்துகொண்டுவரும் இவளைப் பெண்ணென்றிரங்கவேண்டாம். இம் மாபாவிக்குத் தருமமுமெண்ணப்படுமோ?" என்று சொல்லிச் சீராமன்மனத்தைத் தேற்றிக் கொண்டிருக்கையில், அவள் சூலப்படையை விட்டாள். அதைச் சீராமன் கண்டு, வில்லை வளைத்துநாணேறிட்டுப் பாணப்பிரயோகஞ்செய்து, அப்படையை இரண்டு துண்டமாக்கினார். பிறகு, அவள் கற்களை வாரியெறிந்தாள். அப்பொழுது, அவர் அவைகளைத் தடுத்து; முனிவர்களுடைய சாபமொழியைப் போலத்தடுத்தற்கரிய பாணமொன்றை விட்டனர். அது கல்லையொத்த அவள்நெஞ்சில் தங்காது, மூடர்க்கு நல்லோர் சொன்ன உபதேசமொழி போலக் கழன்று போயிற்று. இவ்விடத்தில் கம்பர்,

" சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தினாண் மேல் விடுதலும் வயிரக்குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப் புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயிற்றன்றே"

என்று கூறுஞ்செய்யுளழகு எல்லோருங் கவனிக்கத் தகுந்ததே.

சீராமபிரான் ஏவிய பாணம் தைத்த அளவில் 'மின்னலும் இடியும் வீழ்வனபோல்' வீழ்ந்து அவள் இறந்தாள். அவள் இறந்த செய்தியைக் கேட்ட நாட்டோரெல்லாம் பெருங்களிப் படைந்தனர்.

பத்திராதிபர்.

---

# STORY-TELLING

# கதை சொல்லல்

காலவித்தியாசத்தினால் காடுகள் நாடுகளாயின, நாடுகள் காடுகளாயின, கடல்கள் கன்மலைகளாயின, மடுக்கள் மேடுகளாயின, நன்மைகள் தீமைகளாயின, தீமைகள் நன்மைகளாயின, குப்பக்காடுகள் பட்டணவாசங்களாயின; ஜனங்கள் மாறினார்கள், அவர்களுடைய தன்மைகள் மாறின. ஆடைகளும் ஆபரணங்களும் மாறின, எவையும் எல்லாமும் எப்பொழுதும் காலவித்தியாசத்தினால் மாறிக்கொண்டே இருக்கின்றன. எனினும் குழந்தைகளின் தன்மைமாத்திரம் மாறவேயில்லை. இனி மாறவும் மாறாது. குழந்தைகளின் தன்மை எல்லாக்காலங்களிலும், எல்லாத்தேசங்களிலும் ஒரேமாதிரியாகவே இருக்கின்றது. பண்டைக்காலத்தில் குழந்தைகள் கதைகேட்பதிலும் கதைசொல்வதிலும் எவ்வளவு ஆனந்தங்கொண்டார்களோ, அதுமுதல் இதுவரையில் அவர்கள் அதேமாதிரியாகவே கதைகேட்கவும் சொல்லவும் பிரியப்படுகிறார்கள். கதை சொன்னால், ஒரு பிடிசாதம் அதிகமாகவே உண்கிறார்கள்; அதைக் கேட்கும் சந்தோஷத்தில் அவர்கள் மெய் மறந்து பரவசர் ஆகுகிறார்கள்.

டால்ஸ்டாய் என்பவர் ருஷியாதேசத்துப் பெரியபிரபுக்களுள் ஒருவர். அவர் தத்வவிசாரஞ் செய்து ஞானியாகிச் செல்வம் முதலிய சம்பத்துகளைத் துறந்து, உலகத்திற்கு உபகாரமாக அநேக நூல்கள் எழுதியதன்றி அநேககாரியங்களும் செய்தார். அவர் வைத்து வளர்த்த பள்ளிக்கூடமொன்றில் கதை சொல்லல் என்பதை ஒருபாடமாக ஏற்படுத்தியிருந்தார். உபாத்தியாயர் கதை சொல்லத்தொடங்கினவுடனே பிள்ளைகளுக்கு உண்டாகும் உற்சாகத்தையும், அவர்கள் கதைகேட்கும் ஆவலையும், அப்பொழுது அவர்கள் மெய்மறந்து நிற்கும் நிலையையும் அவர் விரித்து எழுதியிருக்கின்றார்.

மருந்தை வெல்லத்தில் வைத்து உண்பிப்பதுபோல, இனிமையாக விஷயங்களை யூட்டுவதே கதைகளின் கருத்து. பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் விஷயங்களைப் பாடங்களென்கின்றோமாதலின், மேற்சொல்லிய காரணத்தினால் கதை கதைத்தலென்பதும் ஒருவகைப் பாடமாக இருக்கத் தக்கதே என்று ஏற்படும்.

கதைகளின் மூலமாக விஷயங்களைப் போதிப்பதன் முக்கியமான கருத்து பிள்ளைகளுக்கு உற்சாகமுண்டாக்கி, விநோதத்தில்பொழுதுபோக்குவதுபோல்,



விஷயங்களை அவர்களுடைய மனத்தில் பதியச் செய்வதெனினும், இக்காலத்துக் கிரந்தகர்த்தரொருவர் அதன் பயன்களை வரையறுத்துக்கூறியபடி, வேறு சில அனுகூலங்களும் வாய்க்கின்றன.

அவையாவன:— 1. இயற்கை யமைப்பின் இரகசியம்
2. பாஷையிற் பயிற்சி
3. திருந்திய பதோச்சாரணம்
4. ஞாபகசக்தி

கதை கேட்பதனால் பிள்ளைகளுக்கு உண்டாகும் அநுகூலங்கள் நான்கனுள் முதலாவதாகிய **இயற்கை யமைப்பின் இரகசியம்** என்பது எப்படியமையுமெனில், அடிக்கடி கதைகள் கேட்பதனால் எல்லாப்பொருள்களுக்கும் தோற்றம், ஆக்கம், அழிவு என்னும் மூன்று நிலைமைகள் உண்டென்பதும், அதுபோலவே எல்லாவிஷயங்களுக்கும் அடி, நடு, முடி என்பன முறையே தவறாதிருக்கவேண்டுமென்பதும் அவர்களுக்குப் புலப்படும்.

இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டால், உலகத்தில் பொருள்களும் விஷயங்களும் வேறுவேறுபட்டுக் காணினும் அவைகளெல்லாம் ஒரொற்றுமையுடையனவென்றும், வேறு வேறு நிலைமைகளில் நின்று விளங்கியும் ஒரே முடிவைப் பெறுமென்றும், அந்த நிலைமைகள் ஒன்றையடுத்தொன்று தவறாது வருமென்றும் நாளடைவில் உபாத்தியாயர் பல உதாரணங்களினால் பிள்ளைகளின் மனத்தில் பதிப்பிக்கலாம்.

மற்றைய மூன்று அனுகூலங்களும் கதைகளினால் ஏற்படும் என்பது தெளிவு.

கதைகளின் நோக்கம் கேட்பவர்களுக்கு இன்பம் விளைவிப்பதாதலின், கதைசொல்வது கலைஞானங்களுள் (arts & sciences) ஒன்றாகும். அந்தக் கலையில் தேர்ச்சியுள்ளவர்கள் எக்காலத்திலும் எத்தேயத்திலும் சிறந்தே விளங்குவார்கள். பாரதக்கண்டத்துக் கதாப்பிரசங்கிகளுள் முதன்மையானவர் சூதமாமுனிவராவர். இராஜ சம்ஸ்தானங்களிலெல்லாம் வைதிக கதைகள் சொல்பவர்களுக்குப் பௌராணிகர்களென்றும், லௌகிககதைகள் சொல்பவர்களுக்குக் கதாப்பிரசங்கிகளென்றும் பெயர். அவர்களுக்கு வருஷாசனமன்றி (annuities) அப்போதைக்கப்போது மரியாதைகளும் வெகுமதிகளும் உண்டு. பெரியகுடும்பங்களிலும் தினந்தோறும் வந்து கதைசொல்லப் பிரசங்கிகள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். கிராமங்களில் குளக்கரைகளிலும் தெருத்திண்ணைகளிலும் கோயிற் பிராகாரங்களிலும் முதியோர்கள் கதைகள் சொல்வதைப் பெரியவர்களும் சிறியவர்களும் ஸ்திரீகளும் புருஷர்களும் ஆவலுடன் கேட்டு ஆனந்திப்

பார்கள். வழிப்பிரயாணங்களில் முதியவர்கள் செய்யவேண்டிய முக்கியமான காரியம் கதை சொல்லலே.

கதைசொல்வது தொன்றுதொட்டுக் கௌரவிக்கப்பட்டு வருகின்றது. கதைசொல்லுங் காலம் சாதாரணமாக எல்லாத்தேசங்களிலும் அந்தி வேளையாகவே இருந்திருக்கின்றது. பகலிற் பலவிதமாக உழைத்து ஓய்வுற்றிருக்கும் வேளையில், சூரியவெப்பமும் தணிந்திருக்கின்றமையின், எல்லாருக்கும் அமைவும் உற்சாகமும் பொருந்தி யிருக்கும். மனவமைதி யேற்பட்ட பின்னரே இனிமையை நாடுவது இயலும்.

கதை சொல்வது பொழுது போக்கின் பொருட்டே யல்லாது, அறிவூட்டும் பொருட்டு அன்றென்று அனேகர் நினைத்தல்கூடும். அந்தக் கொள்கை தவறு. கதைகளினால் அறிவூட்டுவது சாத்தியம் என்பது தேசங்களின் சரித்திர ஆராய்ச்சியினாலும், நமது சொந்த அனுபவத்தினாலும் தெரியத் தக்க **விஷயம்**. ஒரு சிறுவன் வயதில் வளர்ந்து வீரனாக விளங்குவதும், மற்றொருவன் மற்போரிற் சிறந்து மிளிருவதும், வேறொருவன் வித்தைபயின்று வித்துவானாகத் துலங்குவதும், இன்னுமொருவன் பத்தியி லீடுபட்டுப் பரத்தை நாடித் தவஞ் செய்வதும்; ஒருவன் உவாத்திமைத் தொழில் மேற்கொள்வதும், மற்றொருவன் வக்கீல் வேலைக்குப் பிரயத்தனப் படுவதும், இன்னு மொருவன் இஞ்சினியர் வேலையை நாடுவதும், அவனவன் அந்தந்த விருத்திகளின் பெருமைகளைக் கேட்டுத் தன்மனத்தில் கொண்டிருக்கும் ஆர்வ மிகுதியினாலன்றோ?

அறிவு என்பது ஐசுவரியங்களி லெல்லாஞ் சிறந்தது. 'செல்வம்' என்னும் பதம் அதற்குப் பொருந்தாது; எனெனில், அறிவு அழியாயல் நின்று வளரத்தக்கது, செல்லத்தக்க தன்றென்பதாம். ஆயினும், செல்வம் என்னும் வழக்கச் சொல்லையே பொருத்தி, அந்தச் செல்வத்தைக் கல்விச் செல்வமென்றும், கேள்விச் செல்வமென்றும் இருவகையாக வகுத்துள்ளார்கள். இவ்விரண்டனுள் கேள்விச் செல்வமே சிறந்ததென்பது

'செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை'

என்பதனால் விளங்கும்.

(தொடரும்)

கதைப் பிரியன்.

# THE STUDY OF NATURE

## இயற்கைப் பொருளாராய்ச்சி

—(*)—

நம் முகத்தை நாம் காணமாட்டோம். நம் முகத்தின் வனப்பையுங் குற்றங்குறைகளையும் அறிந்து கொள்வதற்குக் கண்ணாடி என்றொரு சாதனம் வேண்டியிருக்கின்றது. கண்ணாடி மாத்திரம் தனியே பயன்படாது; அதன்மீது நம்முடைய பார்வை சென்றாலன்றி, நமக்கு முகந் தெரியாது. ஆதலால், நம்மைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்குத் தகுந்த சாதனமும், அந்தச் சாதனத்தின்மீது நமது கண்களின் பார்வையும் மனத்தின் பார்வையும் பொருந்துவதும் அவசிய மாகும்.

'தன்னை யாள்பவன் தரணியை யாள்வான்,' 'தன்னை யறிந்தவன் மன்னை யறிவான்' என்பன உண்மை யாகையால், தன்னை யறிவதே யறிவு; உலகத்தில் ஒருவன் பெறக்கூடிய அறிவெல்லாம் இதனுள் அடங்கும். ஆதலால், உலகத்தைக் கண்ணாடிக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். உலகக் கண்ணாடியைப் பார்த்து உய்த்துணர்வதே உணர்வு. உலகத்தில் அடங்காத பொருள்களுமில்லை, விஷயங்களுமில்லை. அனேக விதமான பொருள்களும் விஷயங்களுமடங்கி உலகம் கண்ணாடி யென்னும் ஒரேவஸ்துவாக விளங்குகிறது. அந்தப்பொருள்களையும் விஷயங்களையும் ஒவ்வொன்றாக உற்று நோக்கின், ஒவ்வொரு விதமான அறிவும் அனுபவமும் கிட்டும்.

உலகமென்பதே ஒரு புத்தகம்; அதிலடங்கிய ஒவ்வொரு ஊரும் அப்புத்தகத்தின் ஒவ்வோர் ஏடு. ஒவ்வொரு பொருளும் அவ் வேட்டின் ஒவ்வோர் வரியாகும்; ஒவ்வொரு பொருளும் உணர்த்து மறிவு ஒவ்வொரு விஷயம். அந்த விஷயத்தைத் தெரிந்துகொள்வதே மனிதனுக்குரிய நோக்கம்; உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் அப் புத்தகத்தைப் படித்துணர்வதற்குத் தோன்றும் நவமாணவன். இது உலகத்துக் கெல்லாம் பொதுவான சித்தாந்தம். இந்தச் சித்தாந்தத்தை இந் நாளில் ஐரோப்பா கண்டத்தில் பிரபலமாக்கினவன் பிரோபல் (**Froebel**) என்னும் ஜர்மானியப் புலவன்.

இயற்கையையே புத்தகமாகக் கொண்டு, வேறுபுத்தகங்களின் உதவியின்றி, இயர்கையைப் பார்த்து நேரே பாடம்படித்து அறிவை வளர்ப்பதே உத்தமமான மார்க்கமென்பது பிரோபலின் கொள்கை. விதண்டாவாதமாகத் தோற்

றும் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் சித்தாந்தத்தை அந்தப் புலவன் உணர்ந்து உலகத்தவர்க்கு வற்புறுத்தினன்.

'வேற்றுமையில் ஒற்றுமை' யாவது, காப்பும், கொலுசும், மோதிரமும், சரடும் மற்றுமுள்ள பலவகை யணிகளும் வேறு வேறு பெயரும் உருவமுங் கொண்டு விளங்கினும், அவையெல்லாம் பொன் என்னும் ஒரே பொருளின் திரிபென்பது போல, உலகத்துப் பொருள்கள் பலவகையாகத் தோற்றினும் அவையெல்லாம் ஒரே மூலவஸ்துவி னின்றும் உண்டா யிருக்கின்றனவாதலின், ஒரே தன்மையுடையன என்பதாம்.

பிரோபல் என்னும் புலவன் வேதாந்த விசாரணையில் தேர்ச்சிபெற்றவனாதலின், அவன் இயற்கைப் பொருட்பாடத்தை வெறும் மனப்பயிற்சியாகக் கொள்ளாமல், ஜீவாத்மசக்தியை வளர்த்துப் பரமாத்மசக்தியாக்குவதற்குச் சாதனமாகக் கொண்டான்.

1826-ஆம் வருஷத்தில் அந்தப் புலவன் "மனிதனைப் படிப்பிக்குமுறை" (The Education of Man) என்னும் நூலினை எழுதி வெளியிட்டான். படிப்பின் நோக்கத்தைப்பற்றி அவனுக்குள்ள முக்கியமான கொள்கையை அதில் எழுதிவிடுத்தான். படிப்பின் தத்துவத்தை அந்தப் புத்தகம் நன்கு விளக்குகின்றது. அவன் எடுத்துக்காட்டிய படிப்பின் தத்துவத்தை ஆராய்பவர்களுக்குப் படிப்பில் மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். பிரான்சு தேசத்து கிரந்த கர்த்தர்களுள் சிறந்தவனாகிய ரோசோ (Rousseau) என்பவனுடைய கொள்கைகளையும் பிரோபல் என்பவன் ஆராய்ந்து அவைகளை யொருவாறு கைக்கொண்டான்போலும்.

(இன்னும் வரும்)

பிள்ளைப் போதகன்.

Madras: Printed at the Jyotishmati Press, and Published by N. Venkatarayalu & Son, 87 Ramaswamy St., Madras.

ஸ்ரீ

# சற்குரு

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "—தமிழ்மறை

தொகுதி—க | 1914வரு ஆகஸ்டுமீ | பகுதி—உ

## NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

1912 - 1913 ஆம் வருஷத்தில் நமது மாகாணத்தில் எலிமெண்டெரி படிப்பு அதிகப்பட்டிருக்கின்றது, முந்திய வருஷத்தைவிட பாடசாலைகள் அதிகப்பட்டிருக்கின்றன; அந்தப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளின் சங்கியையும் (Number) அதிகப்பட்டிருக்கின்றது:

| | 1911—12 | 1912—13 |
|---|---|---|
| பள்ளிக்கூடங்கள் | 24,034 | 25,211 |
| பிள்ளைகள் | 940,084 | 1,014,448 |

மேற்சொல்லிய அபிவிருத்தி நான்காம் ஸ்டாண்டர்டுக்குக் கீழே உள்ள எலிமென்டெரி பாடசாலைகளில் மாத்திரமே யாகும். உயர்தர எலிமென்டெரி பாடசாலைகளின் சங்கியை குறைந்துபோயிருக்கின்றது.

* * * *

இதுவரையில் படிப்புவிஷயத்தில் பின்னடைந்திருக்கிறஜாதிகளென்று கைக்கோளவர் முதலானசிலஜாதிகளைக்குறிப்பிட்டு, அந்தஜாதியார்கள்பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பதற்குத் துரைத்தனத்தார் அதிக அனுகூலங்கள் செய்து வந்தார்கள்; அந்த ஜாதிப்பிள்ளைகளுக்குக் கிராண்டும் அதிகமாகக் கொடுத்துவந்தார்கள். இப்பொழுது இன்னும் சிலஜாதிகளையும் படிப்பில் பின்னடைந்திருக்கிற ஜாதிகளாக எடுத்துக் கொண்டு, அவைகளுக்கும் மேற்சொல்லியபடி விசேஷ அநுகூலங்கள் செய்வதனால், உயர்தர எலிமென்டெரி பாடசாலைகளில் பிள்ளைகளின் எண் அதிகமாகுமென்று நம்புகிறோம்.

* * *

போர்ட்டு பாடசாலைகளிலும் முனிசிபல் பாடசாலைகளிலு முள்ள படிப்பிற் பின்பட்ட ஜாதிப் பிள்ளைகளுக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கும் துரைத்தனத்தார் சிலேட்டுப் பலகைகளும் புத்தகங்களும் வாங்கிக் கொடுக்க மேற்கொண்டிருப்பதனால், அந்தப்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதனால் பெற்றோர்களுக்குச் செலவு இல்லை. ஆகையால் அப்படிப்பட்ட பிள்ளைகளைப் பெற்றோர்கள் தடுக்காமல் முழுதும் செவ்வையாகப் படிப்பிப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

* * * *

இதுவரையில் நன்றாக நடந்துவராத பள்ளிக்கூடங்களை போர்டாராவது முனிசிபாலிடியாராவது தம்வசப்படுத்திக் கொண்டு கிரமமாக நடத்தி வரவேண்டு மென்பது துரைத்தனத்தாருடைய விருப்பம்; உபாத்தியாயர்களே மேனேஜர்களாக இருந்துநடத்திவரும் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் ஒழுங்காக நடப்பதில்லை யென்று கண்டு, அவைகளையும் போர்டாராவது முனிசிபாலிடியாராவது மேற்கொள்ளவேண்டும் என்பது துரைத்தனத்தாருடைய விருப்பம். சென்றவருஷத்தில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் அநேகம் அந்தந்த மேனேஜர்களிடத்திலிருந்து வாங்கிக் கொள்ளப்பட்டன. அதனால், உதவிபெறும் (Aided) எலிமென்டெரி பாடசாலைகளின் சங்கியை 15,184 இலிருந்து 14.463 க்குக் குறைந்து விட்டது.

* * * *



எலிமென்டெரி படிப்பின் அபிவிருத்தியைத் தெளிவாக எவரும் தெரிந்து கொள்ளத்தக்கவாறு படங்கள் (Map) எழுதிவருகின்றார்கள். அப்படங்களில், பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்களும், அவைகளின் பரிபாலன விவரமும் குறிக்கப்பட்டிருக்கும். இந்தப் படங்கள் சித்தமானால், எலிமென்டெரி படிப்பு எங்கெங்கே பரவியிருக்கிறதென்பதும், இனி எந்த இடங்களில் பரவவேண்டு மென்பதும் ஒரு நொடியில் கண்டு கொள்வதற்காகும்.

* * * *

எலிமென்டெரி உபாத்தியாயர்களின் நிலைமையைச் செம்மைப்படுத்தும் பொருட்டு, அவர்களுக்குப் பப்ளிக் பரிபாலன பாடசாலைகளில் (Schools under Public Management) கொடுத்துவரும் சம்பளத்தை அதிகப்படுத்தி யிருக்கிறார்கள். இதுவரையில் உபாத்தியாயருக்குக் கொடுத்து வந்த கனிஷ்ட சம்பளம் ரூ. 8. இது மிகவும் கொஞ்சமென்று எண்ணி, குறைந்த பக்ஷம் ரூ. 10-ஆவது இருக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இப்படிச் சம்பளத்தை அதிகப்படுத்துவதனால் போர்டாருக்கும் முனிசிபாலிடியாருக்கும் நேரும் அதிகச் செலவுக்கு ஈடுசெய்யும் பொருட்டுத் துரைத்தனத்தார் அவர்களுக்கு ரூ. 80,976 கொடுத்து உதவியிருக்கிறார்கள். உதவிபெறும் (Aided) பாடசாலைகளுக்கோ வெனின், உபாத்தியாயர்களின் திறமைக்குத் தக்கபடி, அவர்களுக்குக் கொடுக்கும் கிராண்டை (Teaching grant) ஒன்றுக்கு ஒன்றரையாகக் கூட்டிக் கொடுக்கலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

* * * *

உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கத் தக்க கனிஷ்ட சம்பளம் ரூ. 8 போதாதென்று அதனை ரூ. 10-ஆக்கியதற்கு உபாத்தியாயர்களெல்லாரும்துரைத்தனத்தாருக்கு மிகுந்த நன்றி செலுத்திச் சந்தோஷிக்கிறார்கள். ஆனால் இந்நாளில் எந்தப் பண்டமும் விலைஅதிகரித்து இருக்கின்றது; அற்பவேலைக்கும்கூலி அதிகம் கொடுக்க வேண்டி யிருக்கின்றது. 10-வருஷத்திற்கு முன்னால் இருந்த விலைகளை விட இப்பொழுது விலைகள் இரண்டெங்குக்கு அதிகமே ஆயிருக்கின்றன. முன்னாளில் 10-ரூபாயைக் கொண்டு ஒரு மாதம் ஜீவிக்கக் கூடியவனுக்கு இப்பொழுது 20-ரூபாய் வேண்டியிருக்கின்றது. உபாத்தியாயர்களுக்கு ஏற்படுத்தி யிருக்கும் கனிஷ்ட சம்பளமாகிய 10-ரூபாயைக் கொண்டு ஒருமனிதனே ஜீவிக்க முடியாதெனின், அவன் குடும்பத்தைக் காப்

பாற்றுவது எப்படி அமையும்? வயிறுநிரம்பச்சோறும் உடம்புநிரம்பத்துணியும் இல்லாதவனுக்கு எந்தவேலையிலாவது உற்சாகம் உண்டாகுமா? இந்த விஷயத்தைக் காருண்ய மிகுந்த துரைத்தனத்தார் கவனித்து உபாத்தியாயர்களுக்கு க்ஷேமமுண்டாக்குவார்களென்று பிரார்த்திக்கிறோம். எலிமென்டெரி படிப்பின் திறமையும் அதன் வியாபகமும் உபாத்தியாயர்களின் க்ஷேமத்தைப் பொறுத்திருக்கிறதென்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

* * * *

எலிமென்டெரி பாடசாலைகளுக்கு வசதியான கட்டடங்கள் அமைப்பதற்காகவும், அவைகளுக்குவேண்டிய சாமக்கிரிகளைவாங்கிக் கொள்வதற்காகவும் லோகல் போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் துரைத்தனத்தார் சென்ற வருஷத்தில் ரூ. 6,98,280 கொடுத்து உதவியிருக்கிறார்கள். 1914வரு மார்ச்சு 31-ஆம்தேதிக்குள் 68 புதுக்கட்டடங்கள் கட்டப்பட்டன; வேறு 142 கட்டடங்கள்தொடங்கிமுடிவு பெறாதிருக்கின்றன. நாட்டுப்புறங்களில் கட்டடம் ஒன்றுக்கு ரூ. 1,847 ஆகிறது; முனிசிபாலிடிகளில் ரூ. 2,904 ஆகிறது.

* * * *

எலிமென்டெரி படிப்புக்காகக் கல்கத்தா கார்பொரேஷன்காரர் (முனிசிபாலிடியார்) வருஷந்தோறும் ஏறக்குறைய ரூ. 70,000 செலவழிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொந்தத்தில் ஒருபள்ளிக்கூடமும் வைத்துப் பரிபாலிப்பதில்லை; அவ்வளவு பணத்தையும் பிரைவேட் பள்ளிக்கூடங்களுக்குக் கிராண்டாகக் கொடுக்கிறார்கள். இந்த ஏற்பாடு அவர்களுடைய சிறப்புக்கு ஏற்றதன்றென்று அந்த மாகாணத்துக் கல்வியிலாகா தலைவராகிய மிஸ்டர் ஹார்நெல் (Mr. Hornell) என்பவர் கூறுகின்றார். அவ்வளவு பெரிய கார்பொரேஷன்காரர் சொந்தத்தில் எலிமென்டெரி பாடசாலைகள் வைத்து நடத்தாதிருப்பது அவர்களுடைய பெருமைக்குப் பெருங்குறை வென்பது அவருடைய கொள்கை. அந்த நகரத்திலுள்ள பள்ளிக்கூடங்களின் கட்டடங்கள் பெரும்பாலும் வசதியற்று விகாரமாக இருக்கின்றனவாம்.

* * * *

கொச்சிசம்ஸ்தானத்தில் சிறிதுகாலமாகப் புதியகல்விச் சட்டத்தின்படி படிப்புச் சொல்லிக்கொடுத்துவருகின்றார்கள். இப்பொழுது அந்த சம்ஸ்தானத்தார் வெளியிட்டிருக்கிற ரிபோர்டின்படி பார்த்தால், புதிய கல்விச் சட்டத்தை அநுசரித்ததனால் மிகுந்த நன்மையே விளைந்திருக்கிறதாகத் தெரிகின்றது. போர்ட்பாடசாலைகள் அதிகரித்திருக்கின்றன; சம்ஸ்தானத்திலிருந்து



பணஉதவிபெற்று நடக்கும்பாடசாலைகளும், தமக்குத்தாமே தோன்றிவளரும் பாடசாலைகளும் சங்கியையில் குறைந்திருக்கின்றன. இதற்குக்காரணம்என்னவென்று ஊன்றி விசாரித்து அறிவதற்காக அவர்கள் பிரயத்தனப் பட்டிருக்கிறார்கள். தேசபாஷையில் எல்லாருக்கும் சம்பளம் வாங்காமலே சம்ஸ்தானத்தார் கல்வி கற்பித்து வருகின்றார்கள். கிராமத்துப் பாடசாலைகளில் இங்கிலீஷ் கற்பிப்பதனால் பிரயோசனம் ஒன்றுமில்லை யென்று தெரிந்து, அவைகளில் இங்கிலீஷ்பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியமில்லையென்று எண்ணுகிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி நமது மாகாணத்திலுள்ள உபாத்தியாயர்கள் நன்றாக ஆலோசிப்பார்களாக. நம்மவர்கள்மாத்திரம் மூன்றாவது ஸ்டாண்டர்டிலேயே பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் கற்பிக்கவேண்டுமென்று விரும்புவதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை.

* * * *

பம்பாய் ராஜதானியில் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய தேசபாஷை புத்தகங்களை அச்சிட்டு விற்பதற்கு இஷ்டமுள்ளவர்கள் அந்த வித்தியா இலாகாத்தலைவருக்கு மனுச்செய்து கொள்ளலா மென்று அவர் பிரகடித்திருக்கிறார். அந்த விருப்பமுடையவர்கள் புத்தகங்களை இந்தியாவிலேயே அச்சிட வேண்டுமென்றும், அவைகளைவிற்று வரும் தொகையில் நூற்றுக்குப் 10வீதம் துரைத்தனத்தாருக்குக் கொடுத்துவிட வேண்டு மென்றும் அவர் நிபந்தனை செய்திருக்கின்றார்.

* * * *

மேற்சொல்லிய இரண்டாவது நிபந்தனையினால் புத்தகங்களின்விலையை அதிகரிப்பது அநேகருக்குப் பெருங்கஷ்டத்தினை உண்டுபண்ணும். சாதாரணமான நிலைமையிலுள்ள ஜனங்கள் தங்களுடைய குழந்தைகளைப் படிப்பிப்பதற்கு ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிறசெலவு அதிகமாயிருக்கின்றது. படிப்புச் செலவை இன்னும்அதிகப்படுத்தினால் ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகமாகும்.

* * * *

தேசபாஷையில் பாடபுத்தகங்கள் வேண்டியிருப்பது பெரும் பாலும் எலிமென்டெரி பள்ளிக்கூடங்களுக்கேயாம். அவைகளில் படிக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் மிகுந்த ஏழைக் குடிகளினின்று வருகிறவர்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். பம்பாய்துரைத்தனத்தார் இந்த நிலைமையை எண்ணி, அந்தப்பாடபுத்தகங்களினின்று தமக்கு லாபம் வரவேண்டுமென்று எதிர்பாராதிருக்க வேண்டுகிறோம்.

* * * *

மத்தியமாகாணங்களில் கைத்தொழில், கல்வி இலாகாவினின்று புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு ஒருடைரக்டரும், அவருக்கு ஆலோசனை சொல்லுவதற்காக எழுபேரடங்கியசபையொன்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; முக்கியமாக கிராமாந்தரத்து வீடுகளுக்கு உபயோகப்படக்கூடிய கைத்தொழில்களை அபிவிர்த்தி செய்ய வேண்டுமென்பதே இந்தப்புதிய இலாகாவின் நோக்கம். கைத்தொழில் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும், அவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய தொழில்களை நிர்ணயிப்பதற்கும் தேர்ந்த பிள்ளைகளுக்கு உத்தியோகங் கொடுப்பதற்கும் மேற்சொல்லிய சபையார் வேண்டிய ஆலோசனைகள் செய்து ஏற்பாடு பண்ணுவார்கள்.

*  *  *  *

பீஹார் மாகாணத்திலுள்ள பாட்னாநகரத்தில் (பாடலிபுரத்தில்) ஒரு யூனிவர் சிடி ஏற்படுத்தக்கருதி, அதன் ஒழுங்குகளை விவரித்து மசோதாச் சட்டம் (**draft scheme**) எழுதியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் விதிகளிற் பலவற்றை மாற்றவேண்டும் என்று பீஹார்மிராசுதார் சங்கத்தார் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லும் விஷயங்களுள் முக்கிய மானவை இரண்டு உண்டு. அவையாவன :—

1. மாணவர்களுக்கு மதாசாரப்படிப்பு கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும். அப்படிக்கற்பிக்கும் பொருட்டு ஹிந்துக்களுக்கு ஒருகோவிலும் மஹம்மதியர்களுக்கு ஒருகோவிலும் வேறு வேறாகக் கட்டிவைக்கவேண்டும்.

2. அந்த யூனிவர்சிடியில் சேர்ந்த மாகாணத்திற்குள் பாதிரிமார்கள் பள்ளிக்கூடம் வைக்கக்கூடாது.

*  *  *  *

பாதிரிமார் பள்ளிக்கூடம் வைக்கக்கூடாதென்று சொல்வது வெறியெனத் தோற்றக்கூடும். பாதிரிப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளெல்லாரும் கிறிஸ்து மதத்தைப் படிக்கவேண்டியது கட்டாயமாக இருக்கின்றது. பீஹார்மிராசுதாரர்கள் கேட்பது என்னவெனில், பிள்ளைகள் அவரவர்களுடையமதத்தைப்படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதேயாம். பாதிரிப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் இஷ்டமிருந்தால் கிறிஸ்து மதத்தைப் படிக்கலாம், இஷ்டமில்லாவிட்டால் கிறிஸ்துமதத்தைப் படிக்கவேண்டிய அவசியமில்லை யென்று சட்டம் ஏற்படுமாயின் பீஹார்மிராசுதாரர் பாதிரிப்பள்ளிக்கூடங்களுக்கு ஆக்ஷேபிக்கமாட்டார்களென்று நம்புகிறோம்.

*  *  *  *

## SANITATION IN INDIA
## இந்தியாவில் தேகா ரோக்கியம்

இந்தியாவில் தேகாரோக்கியம் (**Sanitation in India**) என்னும் விஷயத்தைப்பற்றி இந்தியா கவர்ன் மெண்டார் சிலநாளைக்கு முன் பெரிய தீர்மானப்பத்திரம் ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் ஆரோக்கிய முறைகளை ஆசரிப்பதற்கும், அவைகளை ஜனங்களுக்குப் போதிப்பதற்கும் உள்ள அநுநுகூலங்களையெல்லாம் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆரோக்கியத்தை அபிவிர்த்திசெய்வதற்காக பற்பலவகைகளில் பிரயத்தினம் செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். ஜனங்களை நன்றாய்ப் படிப்பித்து அவர்களுக்கு நல்லறிவு ஊட்டுவதே முதன்மையான வகையென்பது அவருடைய கொள்கை. கல்வியிலாகாவில் ஆரோக்கிய சம்பந்தமான படிப்பை முக்கியமான அம்ஸமாக்கொள்ளவேண்டுமென்று **1913**-ம்வருஷம் பிப்ரவரிமாசம் **21**-ஆம் தேதி துரைத்தனத்தார் கல்வியிலாகாவில் தீர்மானம் ஒன்று செய்திருக்கிறார்கள். இன்னும் சிறிதுகாலத்திற்குள் பள்ளிக்கூடங்களே, சுற்று முற்றும் உள்ள ஜனங்களுக் கெல்லாம் ஆரோக்கியமுறைகள் பரவச்செய்வதற்குப் பெரியசாதனங்களாக ஏற்படுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். பம்பாய் முதலான சிலமாகாணங்களில் ஆரோக்கிய சம்பந்தமான உபந்நியாசங்கள் அங்கங்கே செய்விப்பதன்றி, சிறுபுத்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிட்டு ஜனங்களுக்கு வெளியிடுகிறார்கள். மாயாதீப (**Magic lantern**) க்காட்சிகள் காட்டுகிறார்கள். முனிசிபல் ஹெல்த் ஆபீசர்களைக் கொண்டு உபந்நியாசங்கள் செய்விப்பதும், டெல்லி, கல்கத்தா, சென்னை, பாம்பே, ஆகிய இவ்விடங்களில் நடப்பது போல மருத்துவச்சிகளைக் கொண்டு ஆரோக்கிய முறைகளை வீடுகள் தோறும் உபதேசிக்கச்செய்வதும் உத்தமமானகாரியங்களே யென்று எண்ணுகிறார்கள். ஆரோக்கியவிஷயத்தைப் பற்றிச் சபைகள்கூட்டி அப்போதைக்கப்போது சர்ச்சிப்பதும் பம்பாய் கவர்ன் மெண்டாரைப் போலப் பத்திரிகைகள் வெளியிடுவதும் நல்ல காரியங்கள் என்று மேற்சொல்லிய பெரிய தீர்மானத்தில் இந்தியா கவர்ண் மெண்டார் கூறியிருக்கிறார்கள். ஆனால் மேற்சொல்லிய வகைகளில் எந்தவகையைக்

கொண்டு ஆரோக்கியத்தை நமது நாட்டில் அபிவிர்த்தி செய்யப்போகிறார்களோ, அல்லது மேற்சொல்லிய வகைகள் எல்லாவற்றிலுமே முயற்சி செய்யப்போகிறார்களோ தெரியவில்லை. இந்தியாவில் ஆரோக்கியா அபிவிர்த்திக்காக துரைத்தனத்தார் இதுவரையில் செலவிட்டிருக்கிற பணம் இவ்வளவென்பதும், இன்ன இன்ன காரியங்களால் இவ்வளவு சாதகமாயிருக்கிறதென்பதும், இனிச் செய்யப்போவது இன்னது என்பதும் மேற்படி தீர்மானத்தினால் விளங்கவில்லை. நாட்டிலுள்ளவர்கள் எல்லாருக்கும் எலிமென்டெரி படிப்பாவது உண்டாகத்தக்க வகைகளைத் தேடி, அந்த வகைகளை ஒருவாறு துரைத்தனத்தார் வற்புறுத்தி ஜனங்களைக் கட்டாயப்படுத்தி அறிவூட்டினால், ஆரோக்கியம் நிலைகொள்ளுமென்று நினைப்பதற்காகும். நல்லமாதிரியான படிப்பு பரவச்செய்வதே ஆரோக்கியா அபிவிர்த்திக்குச் சாதனமென்று துரைத்தனத்தார் தீர்மானஞ் செய்திருத்தலின் இப்பயனை நம்நாடு அடைதல்கூடும்.

நமக்குச் சம்பந்தப்பட்டவரையில் இந்தவிஷயமாக நாம் செய்யக்கூடியது என்னவெனில், போர்ட்பாடசாலைகளுக்குத் தாலுக்கு போர்டார் அப்போதைக்கப்போது அனுப்பும் பத்திரிகைகளை மற்ற பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயர்களெல்லாரும் வாங்கிப்படிப்பதும், உபாத்தியாயர்கள் அந்தப் பத்திரிகைகளைப்படித்துப் பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் அவைகளில் அடங்கிய விஷயங்களைச் சுலபமாகஎடுத்துப்போதிப்பதுமே. எம்மால் இயன்றவரையில் ஆரோக்கிய முறைகளைப் பற்றி இந்தப்பத்திரிகையின் வாயிலாக வியாசங்கள் எழுதி வெளியிடுவோம்: மற்றும், கூடுமானால் தனியே சிறு புத்தகங்கள் அச்சிட்டுப் பிரசுரிப்போம். ஆரோக்கியமென்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாதலின், இதற்குரிய விஷயங்களை எல்லாரும் எளிதில் தெரிந்துகொள்வதற்கு இந்தப்பத்திரிகையைச் சாதனமாக அமைப்போம்.

* * * *

சென்ற வருஷத்தில் இந்தியா கவர்ன்மென்டார் அளித்த பொருள் உதவியைக் கொண்டு (Imperial grant) 119 முனிசிபல் எலிமென்டெரி பாடசாலைகளும், 1665 போர்ட் எலிமென்டெரி பாடசாலைகளும் புதிதாக ஏற்படுத்தப் பட்டன.

* * * *

## THE MANUAL METHOD
## பிரத்தியக்ஷப் பிரமாணம்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறையின் தத்துவத்தைப் பொதுவாக எடுத்துரைத்து, இனி இவ்விஷயமாகச் சில வியாசங்கள் எழுதுவோமென்று சென்ற மாதத்திற் சொன்னோம். இனி அந்தப் பொதுவான தத்துவத்தை விளக்கிச்சொல்லி, இந்தமுறை மிகவும் எளிதாயிருப்பினும் விஷயங்களை மிகவும் நன்றாகப் பிள்ளைகளுக்கு உணர்த்தத்தகுந்தது, ஆதலால் இது மற்ற முறைகளைவிட அநுபவத்திற்கு இசைந்தது என்பன முதலாகிய பற்பல விஷயங்களைக் கூறப்புகுவோம்.

ஆனால் அந்த விவரங்களை விசாரிக்குமுன், இந்த முறையின் தத்துவத்தையே இன்னும் சற்றுக் கவனிக்கவேண்டியிருக்கிறது. எந்த அம்சங்களில் இந்த முறையின் உதவி நமக்கு அதிகமாக வேண்டியிருக்கிறதென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு செய்யுளின் சிறப்பை மண்ணாங்கட்டியின் சாதனத்தினால் தெரிந்துகொள்வது இயலுமோ? மண்ணாங்கட்டியிலும் அழகும் அற்புதமும் அமைந்திருக்கின்றனவென்று அறிந்து கவிவாணர்கள் அதனைவிசேஷமாக வருணித்துப்பாடியிருக்கிறார்களென்பது உண்மையே. ஆயினும், செய்யுளின் சிறப்பை விளக்குவதற்கு மண்ணாங்கட்டி பயன்படுமோ?

பிள்ளைகளுக்கு அட்டைகளை அடுக்கி உருவங்கள் அமைக்கக் கற்றுக்கொடுப்பதனால், அவர்களை 'நல்ல பிள்ளைகள்' ஆக்க முடியுமோ? ஆங்கிலக் கிரந்தகர்த்தர் ஒருவர் 'வேலையே வேள்வி' 'கைசெய்தல் கைகூப்பு' 'கைப்பாடே வழிபாடு' என்று சித்தாந்தஞ் செய்திருப்பது உண்மையேயாயினும், கைவேலை செய்வதனால் நல்ல தன்மை எய்துமோ?

நமக்கு இனிமையாயுள்ள கொள்கைகளை ஏற்றிக்கொண்டாடிக் கூத்தடிப்பது நமது நோக்கமாக இருக்கக்கூடாது. உலகமனைத்தும் ஓர் அணுவினிடத்தே அடங்கியிருக்கிறதென்றும், ஒன்றிலேயே எல்லாவற்றையும் காணலாமென்றுஞ் சொல்லுகிற வேதாந்திகளின் கொள்கையைக் கடைப்பிடித்துப் பயிலுவது நமக்குப் பயன்படாது; செட்டுச்செய்வதில் தேர்ந்த செட்டியே சிரேஷ்டியாவான்; 'ஆதாயமில்லாத செட்டி ஆற்றோடுபோகான்;' 'ஆற்றிலே போட்டாலும் அளந்தே போடுவான்.' பயனைக்கருதாமல் எந்தச் செட்டிப்பிள்ளையும் எந்தக்காரியத்தையும் மேற்கொள்ளமாட்டான்; பயன் நல்லதாயின், காரியம் நல்லதெனக்கொள்வான்; நல்ல பயன் விளையாதெனின், அந்தக்காரியத்தைக் கைவிடுவான். அப்படிப்பட்ட செட்டியின் நோக்கத்தைக் கைக்கொண்டு, விளையும் பயன்களை உத்தேசித்து நாம் காரியங்களைச் செய்யவேண்டும்.

தத்துவவிசாரணையில் ஈடுபட்டு, இந்திரியங்களை அடக்கி, மனத்தை ஒருவழிச்செலுத்தி, யோகநிலை பூண்டவர்களுக்கு 'வேலையே வேள்வி' யாக இருக்கலாமேயல்லாமல், சாதாரணமாகச் சமுசாரத்தில் ஈடுபட்டு இன்பதுன்பங்களினால் அலைக்கப்பெறுகின்ற மாணவனுக்கு 'வேலை வேள்வி' யாகுமோ? அவனுடைய நிலைமை நமக்குத்தெரியுமல்லவா? அவனுக்கு வயிற்றுப்பாடே பெரும்பாடாக இருக்கின்றது. வேதாந்தத்திற்கும் அவனுக்கும் வெகுதூரம்.

ஆகையால், நாம் அதிருப்திப்படுவதனாற் பயனில்லை; மதவிசாரணையும் வேதாந்தமும் இப்பொழுது நமக்கு வேண்டாம். நமக்குவேண்டியவையெல்லாம் மனப்பயிற்சியும், அதனால் புத்திக்கூர்மையும், செய்திறமையும், இம்மைச்சுகமுமேயாகும். இந்த நோக்கத்தையும் வேதாந்த நோக்கத்தையும் ஒன்றோடொன்று கலந்துகொண்டு நாம் கஷ்டப்படக்கூடாது. அறிவு பெறும்



வகைகளை ஆராயுமிடத்து, வேதாந்தஞானத்தையும் கலைகளின் விக்ஞானத்தையும் வேறுவேறாகக்கொண்டு விவகரிக்கவேண்டும். பிரத்தியக்ஷமே விக்ஞானத்திற்குப் பிரமாணம்; அநுமானமே ஞானத்திற்கு ஆதாரம். ஆகையால் ஞானக்கண்ணினால் பார்ப்பதற்கும், விக்ஞானக்கண்ணினால் பார்ப்பதற்கும் வித்தியாசமுண்டு. ஞானக்கண் சூக்ஷ்மமானது; விக்ஞானக்கண் ஸ்தூலமானது. நாம் ஸ்தூல உலகத்தில் விவகரிப்பதனால், சூக்ஷ்ம உலகத்து விவகாரம் நமக்கு மறைபொருளே.

சித்தாந்த (Theory) மென்பது ஒருகொள்கை; அந்தக் கொள்கையை விவகாரத்தில் அமைத்துப் பயன்பெறச்செய்வது அநுபவம் அல்லது கைமுறை (Practice). இனி, பிரத்தியக்ஷப் பிரமாணத்தைப்பற்றிய கொள்கையைக் கைமுறையில் பொருத்துவதற்கு உபாத்தியாயர்கள் அதன் நோக்கங்களை எப்பொழுதும் தெளிவாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதற்கு அநுகூலமாயிருக்கும்பொருட்டு, அவ்விஷயங்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்துவோம்:—

## பிரத்தியக்ஷப்பிரமாணத்தின் நோக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஸ்தூலமான பொருள்களின் மூலமாக (Concrete objects) குணவாசகங்களை (abstract ideas) எடுத்துக் காட்டி, எதிரிலுள்ள மாதிரி உருவங்களினால் (Models) விளங்கும் குணவிசேஷங்களை வற்புறுத்துவது; | 1. கைத் தொழில்களிற் பிரியமுண்டாக்குவது; | 1. இதுவரையில் இந்தியாவில் படிப்பின் நோக்கம் இன்னதென்று ஒருமாதிரி ஏற்பட்டிருக்கின்றது. அந்த நோக்கத்தை விசாலப்படுத்திச் சாஸ்திரப்பயிற்சி செய்ய வேண்டுமென்னும் எண்ணத்தை (The Scientific Spirit) ப்புகட்டுவது. |
| 2. அந்த மாதிரி உருவங்களை (Models) அமைப்பதற்காக வேலை செய்விப்பதும் அதைச் செய்து முடிக்குமளவில் ஒரு காரியத்தை உத்தேசித்து ஊக்கமாகவும் உற்சாகமாகவும் உழைக்கப் பழக்குவதும்; | 2. கைவினைப் போக்குகள் (Mechanical processes) இப்படிப்பட்டவையென ஒருவாறு தெரிவிப்பது. (பலவகையிலும் பயன்படக் கூடிய படிப்பு வேண்டுமாயின் இப்படிப்பட்ட அறிவு மிகவும் அவசியமல்லவா?) | |

இப்படிப்பட்ட பயிற்சியினால் விளையும் பயன்:—(1) கம்மியத்தொழில்களில் தேர்ந்து மனவிரிவு எய்தி அறிவிற் சிறந்து விளங்கும் உபாத்தியாயர்கள் அநேகர் தோன்றுவார்கள்; (2) உண்மையாகப் பயன்படத்தக்க பண்டங்கள் பல செய்யப்



பெறும். அதாவது, ஜனங்களுக்குச் சரியான மனப்பாங்கு ஏற்படுமாயின், மனப்பயிற்சியை எவ்வளவு மதிக்கிறார்களோ அவ்வளவு கைத்தொழிலின் திறமையையும் மதிப்பார்கள்.

இப்போதைக்கு முக்கியமாகக் கொண்டாடத்தக்க முதற் பயன் மேற்சொல்லியதேயாகும். அநேக உபாத்தியாயர்கள் மேற்சொல்லிய பயனையே உத்தேசித்துப் பிரத்தியக்ஷப் பிரமாண முறையைக் கைக்கொண்டு உழைப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிக் கண்ணுக்குக்காட்டி மனத்திற்குப் போதிப்பானேன் என்னும் கேள்விக்கு இன்னும் விடைகூறினோம் இல்லை. ஸ்தூலமான உதாரணத்தைக் காட்டினால் மனத்திற்குத் தெளிவு உண்டாகின்றது என்பது எல்லாரும் உடனே சொல்லக்கூடிய மறுமொழியாகும். ஆனால் அந்த உதாரணங்களை எந்த முறைப்படி அமைக்கவேண்டும் என்பதையும் அந்த உதாரணங்களில் ஏதாவது வரிசைக்கிரமம் உண்டோ என்பதையும் ஆலோசிக்குமிடத்து, அவைகளை மூன்றுவிதமாகத் தொகுப்பதற்கு ஆகும். அந்த மூன்றுவிதங்களும், நாம் எப்படிப்பட்ட அறிவை ஊட்டுவதற்கு உத்தேசிக்கிறோமோ அதற்குத் தக்கபடி.

1. முன் முறைப்படியல்லாமல், அநுபவ பரம்பரையாக அமைவது (Empirical);

2. இயற்கை உணர்வுக்கு ஏற்றவாறு அமைவது (Intuitional);

3. பகுத்தறிவுக்கு ஏற்றவாறு அமைவது (Rational)

என ஏற்படும்.

படிப்பிக்குங்காலத்தில், முதல்வகுப்பு உதாரணத்தைக் காட்டவேண்டியவிடத்தில் மூன்றாவதுவகுப்பு உதாரணத்தைக் காட்டுவோமானால், நாம் உத்தேசித்த அறிவு பிள்ளைகளுக்குப் புலப்படாது; நாம் எடுத்துக்காட்டும் விஷயம் அவர்களுடைய மனத்தில் பதியாது. ஆகையால், தாம் எடுத்துக்கொண்ட விஷய

விசாரணை எவ்வளவுதூரம் எட்டியிருக்கின்றது என்பதைத் தெரிந்து, அந்தந்தக் கட்டத்திற்குத் தகுந்தபடி உதாரணங்களை அமைத்துக்காட்டவேண்டும்.

மேற்சொல்லிய உதாரணக் கட்டங்கள் மூன்றும் எலிமென்டெரி பாடசாலைகளில் படிப்பிக்கும் அறிவுக் கட்டங்களுக்கு ஒருவாறு ஒத்திருக்குமென்று சொல்லலாம். எப்படியெனில், பாலர்தரகதியில் (Infant class) முதல்வகுப்பு உதாரணங்களைக் (Empirical) காட்டவேண்டும்; அதற்கு மேலுள்ள தரகதிகளில் இரண்டாம்வகுப்பு உதாரணங்களை (Intuitional) க் காட்டவேண்டும்; உயர்தரகதிகளில் மூன்றாம் வகுப்பு உதாரணங்களை (Rational) க் காட்டவேண்டும்.

பூமையக் கவர்ச்சி (Gravitation) இன்னதென்று ஆறுவயது பையன் தெரிந்துகொள்ள முடியாது. ஆதலால் அவன் செய்ய வேண்டிய காரியம் என்னவெனில், எல்லா வஸ்துக்களும் பூமியில் வந்து விழுகின்றன என்பதைக் கவனிப்பதும்; அவை விழுதற்குக் காரணம் இன்னது என்று சொல்ல அவனுக்குத் தெரியாவிடினும், அவை விழுவது உண்மையென்று அறிந்து சொல்லவாவது அவன் தெரிந்து கொள்வதுமே.

அதற்கு அடுத்த படியில், அநுபவத்தினால் அறிவு முதிர்ந்து, ஊகைக்கு இடம் ஏற்பட்டது. சில காரியங்கள் தமக்குத் தாமே நடந்தேதீருமென்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டோம். அநுபவத்தினால் அந்தச் சித்தாந்தம் ஏற்பட்டுவிட்டது. அந்த அநுபவத்தைக்கொண்டு ஊகித்தறியக்கூடிய விஷயங்களை நடுத்தரமான வகுப்புக்களிலுள்ள பிள்ளைகளுக்குப் போதிக்கலாம்.

கடைசியாக மூன்றாவதுபடிக்கு வருகின்றோம். இந்தப்படியில் மனம் ஒழுங்குபடுகின்றது; இதுவரையில் தெரிந்துகொண்ட சித்தாந்தங்களினாலும் தத்துவங்களினாலும் நம்முடைய அறிவு ஒருவகையாகத் தொகுக்கப்பெற்றது. அந்த வரையறுப்பைக்கொண்டு இது சரியென்றும் அது தவறென்றும், இது நன்றென்றும் அது தீதென்றும் நாம் ஆலோசனை பூர்வகமாகத்



OFFICE OF THE REGISTRAR OF BO[illegible] 7 - NOV 1914 MADRAS

தர்க்கித்து நன்மை தீமைகளை ஆராய்ந்து, புத்தியினால் நிச்சயப்படுத்திக்கொண்டு அப்படி நிச்சயித்தபின் தேர்ச்சி பெறுவதற்கு முயலலாம்.

மேற்சொல்லிய மூன்றுவகைப் பாகுபாடும் இயற்கையில் அமைந்திருப்பதனாலே பிள்ளைகளுக்கு நாம் அறிவூட்டுமுன், அவர்களுக்கு அநுபவத்தினால் ஒருவகை அறிவு ஏற்பட்டிருக்கிறதென்று காண்கின்றோம்; அந்த அநுபவத்தைக்கொண்டு பொதுவான விஷய தத்துவங்களை அவர்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள்; அப்படி தெரிந்துகொண்டு அவர்கள் பரீக்ஷைகள் செய்து பார்க்கத்தொடங்குகின்றார்கள்; அந்த பரீக்ஷைகளினால் விஷயஞானத்திற்கு வரையறைகள் ஏற்படுகின்றன; அப்படி வரையறுத்துச் சொல்லும் புத்தகங்களே பாடப்புத்தகங்களாகும். பெரியவர்களுக்கல்லாமல், பிள்ளைகளுக்கே எழுதப்பட்ட புத்தகங்களில் அடங்கியிருக்கத்தக்கவைகள் மேற்சொல்லியபடி வரையறுத்துக் கூறும் வாக்கியங்களாகவே இருக்கும்.

அநுபவ பரம்பரையான அறிவு எதுவெனில், கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாக எதிர்ப்பட்ட வஸ்துவைக்கொண்டு தெரிந்துகொள்ளும் விஷயமேயாம். ஆகையினாலே எலிமென்டெரி பாடசாலைகளில் பெரும்பாலும் பிரத்தியக்ஷப் பார்வையினாலே அறிவூட்டப் பிரயத்தனப்படுகின்றோம். எந்தக் காரணத்தினால் இக்காலத்துப் படிப்புமுறைகளில் உபகரணங்கள் அதிகமாக வேண்டியிருக்கின்றன, அவையில்லாவிட்டால், பிள்ளைகளுக்குத் தெளிவாக அறிவூட்ட முடியாது; அந்த உபகரணங்களைச் செய்வதற்கும், அவைகளைச் செய்யும் முறையைக் கற்பிப்பதற்கும், எல்லாவகைக் கைத்தொழில்களிலும் தேர்ச்சிபெற்ற உபாத்தியாயர்கள் வேண்டும்.

ஐம்புலன்களின் வழியாக விஷயங்களைத் தெரிந்துகொள்கையில் நன்மைதீமைகளைப் பகுத்தறியுஞ் சக்தி உண்டாகின்றது. அந்தச் சக்தி முதிர்ந்து முடிவில் ஆழ்ந்த ஆலோசனையாக மாறுகின்றது.

(வரும்) எம். எஸ். எச். தாம்ஸன், பி. ஏ.

RAMA & RAVANA

# இராமரும் இராவணனும்

## வேள்வி காத்தல்

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீராமபிரான் தாடகையைப் போரில் வென்ற திறத்தினைப் பார்த்து முனிவர்களெல்லாம் பெருங்களிப்படைந்து, அதற்கு அறிகுறியாக அநேகப்படைகளைக் கொடுத்தனர். அவைகளைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராமன் இலக்குமணனுடன் விசுவாமித்திரர் பின்னே இரண்டுகாததூரஞ் சென்றதும், மானசமடுவிற் பிறந்துவரும் சரயுநதியை மறுபடியும் கண்டு அதன் வரலாற்றைப் பற்றி முனிவரரைக் கேட்டான். அப்பொழுது அவர் அதைப் பற்றிக் கூறவேண்டிய விஷயங்களைக் கூறிக்கொண்டே நடந்து செல்ல, மேகந்தவழ்கின்ற சோலையொன்று அவர்கள் கண்ணெதிர்ப்பட்டது. அதனைக்கண்டு இராகவன் இதன் வரலாறு யாதென்று வினவினான். அதற்கு, "தங்கணவனையே யல்லாது வேறொரு தெய்வத்தையும் நாடாத கற்பினையுடைய மாதர்கள் சிந்தைபோலப் பரிசுத்தமுடையது இச்சோலை. இதில் திருமால் ஒருகாலத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் மாபலி என்னும் பெயருள்ள தானவராசன் விண்ணும், மண்ணும், பாதலமும் தன்வசப்படுத்திக்கொண்டு எவருஞ் செய்து முடித்தற்கரிய பெருவேள்வியொன்றினை முடிக்கப் பிராமணர் முதலியோருக்குப் பூதானம் முதலிய தானங்களை வழங்க உடன்பட்டிருந்தான். அதனை யறிந்த திருமால் வாமன ரூபங்கொண்டு அவனை யடைந்து, உன்னை விரும்பி வந்தடைந்தவருக்கு அவர்கள் விருப்பத்தினும் அதிகமாகக் கொடுக்கும் புகழினால்



நீண்ட கையை யுடையானே! உன்னையடைந்தவரே மாட்சிமையுடையவராவர்" என்றனர்.

மாபலி:—'யான் செய்யத்தக்கது யாது?'

வாமனமூர்த்தி:—'மூன்றடி மண் தானமாகக் கொடுப்பதே: அதனைக் கொடுப்பதா யிருந்தாற் கொடும்'

மாபலி:—'இதோ கொடுத்தேன்.'

இவ்வாறு மாபலிசொல்லவும், அருகிலிருந்த சுக்கிராசாரி மனம்பொறாது தடுத்து, 'அரசே, இவ்வாமனமூர்த்தியைச் சாதாரணமான பிராமணராக எண்ணி மோசம்போக வேண்டாம். கள்ளமாயப்பிரானே இவ்வுருவுகொண்டு வந்துளார்' என்றனன்.

அதற்கு மாபலி 'என் கை உயரவும் என்றும் தாழாத தன்மையையுடைய இறைவன்கையே தாழுமென்றால் எனக்கு இதைப்பார்க்கிலுஞ் சிறந்த நன்மையாது? நல்வழியிற் செல்லும் சிந்தையுடையோர் தங்களிடத்தில் வந்து உயர்ந்தோர்களே ஏற்கவேண்டும் என்று நினைப்பர். அன்றி, தானங்கொள்ளவந்தவர்களை நோக்கி இவர்கள் சிநேகர், இவர்கள் பகைவர்கள் என்று சொல்லித்தடுத்துவிடார்கள் என்றால் இவனைப்போலும் சிறந்தவர் யார் உலகத்திலிருக்கின்றனர்? நீயோ வெள்ளி யென்னும் பெயருள்ளவனாகையாலும், அது வெள்ளறிவுடையான் எனப் பொருள்படுவதனாலும் இவ்வளவு துணிந்து சொன்னாய். மேலோர்கள் தாம் கொடையாளிக ளாகும்பொருட்டு தாம் தித்திப்பாக நினைக்கும் உயிரை இரப்பவர்களுக்குக் கொடுப்பதே நல்லது.

மேலும், இறந்தவர் என்று சொல்லப்படுவோரெல்லாம் இறந்தவரே யாகார். பிறரிடத்தில் கையேந்தி நிற்பவர்களே இறந்தவர்கள். இதனாலே 'ஏற்பதிகழ்ச்சி' என்று பெரியோர் சொல்லி யிருக்கின்றனர். இறந்தவ ரென்போரெல்லாம் இறந்தவ ரென்றே சொல்லப்பட்டாலும் அவர்களுள் இரந்தவர்களுக்குக் கொடுத்

தோரெல்லாம் இருந்தவரே; அவரை யல்லாமல் வேறு இருந்தவர் ஒருவருமிலர். அடுக்கும்படி அரிய பழிப்பான காரியங்களை ஒருவனுக்குச் செய்கின்றவரும், அவனுக்குப் பகையாளிகளல்ல, இரப்பவர்களுக்குக் கொடுப்பவர்கள் எதிரிலிருந்து கொடுக்க வேண்டாமென்று தடுக்கின்றவர்களே பகைவர்கள்; அவர்கள் தம்மைத்தாமே கெடுத்துக் கொள்ளுகின்றவருமாகும். அதற்குச் சரியான கெடுதி வேறில்லை. மேலும் நூல்களில், தம்மிடத்துப் பொருள் கிடைத்த காலத்தில் அதை இரப்பவர்களுக்குக் கொடுத்துப் புகழ்பெற்றுத் தருமம் அடைய முயல்பவர்களுக்கு உள்ளத்தைக் கெடுக்கும்பகையோ உலோபகுணம் என்று சொல்லப்படும். அதனாற் பெரியோர்களும் அக்குணத்தை விடவேண்டு மென்று விலக்கினார்கள். ஆகையால் ஒருவருக்கு எடுத்துக் கொடுப்பதற்கு முன்பே தடுப்பது உனக்கு அழகாகுமோ? வெள்ளி யென்னும் பெயர் பூண்ட தகுதியற்றவனே, கொடையைத் தடுக்குங் கொடியோனே, நீயும் உன் சுற்றத்தாரும் உண்ணச்சோறும், உடுக்க ஆடையுமில்லாமல் போய்விடுவார்கள். இதனாலே தெய்வப்புலவரும்,

‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்,
உண்பதூஉ மின்றிக் கெடும்’ எனவும்

கூறியிருக்கின்றனர்” என்று தகுந்த நீதிமொழிகளை எடுத்துச் சொல்லி மந்திரி கொடியவனென்று அவன் சொல்லைப் பொருட்படுத்தாமல் வாமனமூர்த்தியைப்பார்த்து, ‘நீர் உமது காலளவாக மூன்றடி நிலம் அளந்துகொள்ளும்’ என்று கூறி வாமனமூர்த்தியின் குறுகிய கையில் நீரைத் தாரைவார்த்துக் கொடுத்தான்.

அந்நீர் தமது கையில் தீண்டின அளவில் ஈன்றெடுத்த பிதாமாதாக்களும் அருவருக்கத்தக்க வாமனமூர்த்தி, ‘உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே’ மிகவும் உயர்ந்து ஓங்கினார். பூமியினிடத்தில் நின்ற திருவடியோ பூமிமுழுதும் பரந்தது. மற்றொரு திருவடி வானகத்திற் பரந்தது. தாங்கேட்ட மூன்றடியில் இரண்டுக் கிடமிருந்தது; மற்றோரடிக்கு அளவில்லாமற் போகவும் ‘அதற்கு வழியாது?’ என்று ஆதிபகவான் கேட்டனர். ‘அடியேன் முடிதான்’ என்றனன் மாபலி. உடனே அவன்முடிமேல் அடிவைத்து அவனை நசுக்கி விட்டு அவ்விண்ணகத்தை இந்திரற் குரியதாக்கினார் அத்திருமால். இது கிடக்க.

தீர்த்தற்கு அரியவினை தீர்க்கும் இராகவனே, இச்சோலை இத்தன்மை யுடையதாதலால் இவ்விடத்தி லிருந்து யாகத்தைச் செய்து முடிப்பேன்” என்று சொல்லி அவ்விடத்திற் றங்கி யாகத்திற் குரிய சாதனப் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு, இராமலக்ஷ்மணர்களைக் காவல் அமைத்துத் தான் யாகசாலை சேர்ந்தார். அவர்களோ,

† எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்று நாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்.

இவ்வாறு இலக்குமணரும் சீராமபிரானும் யாகசாலையைக் காத்து வருகையில் அரக்கர்கள் பாணங்களைப் பிரயோகிக்கவும், படைகளை எறியவும் மலைகளை வேருடன் பிடுங்கி வீசவும் தொடங்கினர். அவர்கள்செயலைக்கண்டு இராமர் இலக்குமணரைப் பார்த்தனர். அவரும் கண்டு கடைக்கண்ணில் தீப்பொறி பறக்க ஆகாயத்தை நோக்கிப் பின் தன்னுடைய வில்லையும் நோக்கினார். அதற்குள் சீராமபிரான் வேள்விக் குண்டத்தில் ஒன்றும் வீழாத

† இ-ள். நினைப்பதற்கும் ஆக்குதற்கும் அரிதாகிய ஐந்து நாள்வரையும் விண்ணவர் பொருட்டுச் செய்த விசுவாமித்திர முனிவன் யாகத்தை, மண்ணுலகத்தைக் காக்கும் மன்னவர் மன்னனாகிய தசரதன் மக்கள் கண்ணினை இமைகாப்பது போலக்காத்து நின்றனர்.

படி சரக்கூடங் கட்டினார். இலக்குமணர் பாணம் விட்டார்; இராமரும் பாணந் தொடுத்தார். இராமர் தொடுத்து விட்ட பாணமானது தாடகையின் புதல்வருள் ஒருவனாகிய மாரீசனைக் கடலிற்போய் ஒளிக்கச் செய்தது; மற்றொருவனாகிய சுவாகுவை தென்திசைக்கு அனுப்பிவிட்டது.

இப்படி அரக்கரை யெல்லாம் இடிபோன்ற சில பாணங்களை விட்டு இருவரும் கருவறுத்து விட்டனர். முனிவர்கள் கோதண்டம் ஏந்திய சீராமபிரானையும் அவர் இளவலையும் வாழ்த்தினர். அவர்களுடன் கோசிகரும் வாழ்த்திச் சீராமனைப் பார்த்து, "இரகுநாயகனே, வயலும் தண்ணீரும் நிறைந்த காரணத்தால் மருதம் (arcadia) என்று பெயர் பெற்ற நிலஞ் சூழ்ந்த மிதிலைக்கு அரசாக விளங்கும் சனகன் என்பவன் பெரிய யாகஞ் செய்கின்றான்; அதனைப்போய்ப் பார்த்து வருவோம் வாரும்" என்று சொல்லச் சீராமபிரான் இளையபெருமாள் நிழல்போல் தன்னைப் பின்பற்ற விசுவாமித்திர முனிவருடன் சென்றார்.

(வரும்.) பத்திராதிபர்.

---

# STORY-TELLING.

## கதை சொல்லல்

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு இன்பம் விளைத்தலே கதை சொல்வதன் முதன்மையான நோக்கமென்று கூறினோம். இனிமையான கதை யொன்றைச் சொல்லத் தொடங்கினால், அதைக் கேட்க விரும்பாதவன் எவனாவது இருப்பானோ? தொட்டில் முதல் தொண்டமான் வரையில் எல்லாரும் கதை கேட்பதிற் பிரிய முடையவர்களா யிருக்கிறார்கள்.

முற்காலத்தில் ஒவ்வொரு சம்ஸ்தானத்திலும் அரசனுக்குக் கதை சொல்லுநர்கள் இருந்தார்களென்று மேலே குறித்திருக்கிறோம். சில சமயங்களில் தேர்ந்த மந்திரிமார்களும் சிறந்த பண்டிதர்களும் அரசனுக்குக் கதைசொல்ல மேற்கொள்வதுண்டு. அந்தச் சமயங்களில் அவர்கள் உலக நீதிகளையும், சாஸ்திர விதிகளையும், ஒழுக்க முறைகளையும் கதை ரூபமாகவே மன்னர்களுக்குப் புகட்டுவார்கள்.



அந்த விஷயங்களை வேறு விதமாகப் போதித்தால், அவை இனிமையாக இரா; மன்னர்கள் அவைகளை ஆவலுடன் கேளார்; அவர்களுடைய மனத்தில் அந்தப் பெரிய விஷயங்கள் பதியா.

"அரபிக் கதைகள்" (**Arabian Nights Entertainment**) என்பவை ஒரு கொடுங்கோல் மன்னனுக்குச் சொல்லப்பட்டவைகளல்லவா? பாரசீகத்துப் (**Persian**) பாதுஷா ஒருவன் மதம்மிகுந்து நாள்தோறும் ஒரு யுவதியை மணந்து, மறுநாள் காலையில் அவளைக் கொல்லுவிக்கத் தீர்மானித்தான். அரசன் மணக்கத்தக்க ஸ்திரீகளை முதன் முதலில் பெரிய குடும்பங்களினின்று தெரிந்தெடுக்க வேண்டுமல்லவா? அந்தக் குடும்பங்களில் கலியாணமாகாத ஸ்திரீகளில்லாவிட்டால், சாமானிய குடும்பங்களில் தேடவேண்டி வரும். மேற்சொல்லிய தீர்மானத்தின்படிப், பாதுஷாவுக்கு முதல் நாள் மனைவியாக நேர்ந்தவள் அவனுடைய மந்திரியின் மகள். அந்த மந்திரி மிகுந்த புத்திக் கூர்மையுடையவன், குடிகளிடத்து அன்பு மிகுந்தவன். கொடுங்கோலன் மன்னனாயிருக்க அவ்வளவு நல்ல தன்மையுள்ள மந்திரி இல்லாவிட்டால், குடிகளெல்லோரும்

"கொடுங்கோல் மன்னர்வாழும் நாட்டிற்
கடும்புலிவாழும் காடு நன்றே"

என்று நினைத்து நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போகநேரிடும்.

அப்படிப்பட்ட மந்திரி அருமையாகப்போற்றி வளர்த்த தம் புதல்வியை அந்தக் கொடுங்கோலனுடைய சபலமனத்திற்குப் பலிகொடுப்பது குடிகளுள் எவருக்கும் சம்மதமில்லை. ஆயினும், அந்தக்கொடிய விவாகத்திற்குக் குறிக்கப்பட்ட பெண்மணி யுக்தியும்புத்தியும்மிகுந்தவள். அப்படிப்பட்ட கொடுங்கோல் மன்னனை நல்லவழிக்குத் திருப்புவது தேர்ந்த அமைச்சர்களாலும் முடியாத காரியமாயினும், அவள் தன்னுடைய சாமர்த்தியத்தினால் அரசனுடைய மனத்தைவென்று, அவனுடைய சங்கற்பம் ஈடேறாமற் செய்வாளென்று ஊகையுள்ள மந்திரி நம்பி, அவளை அரசனது அந்தப்புரத்திற்கு அனுப்பினான்.

அவள் போகும்பொழுது தன்னுடைய தங்கையையும் அழைத்துப் போய், அரசனுடைய அனுமதி பெற்று அவளைத்தனக்கு அடுத்த அறையில் படுத்திருக்கச் சொன்னாள். பொழுது விடிவதற்கு ஒருமணி நேரம் முன்னால் விழித்துத் தன்னையெழுப்பி, ஒரு கதை சொல்லும்படி கேட்கவேண்டுமென்று தங்கைக்குக் கற்பித்திருந்தாள். அவள் விரும்பியபடியே தங்கை கேட்க, அவள் கதை சொல்லத் தொடங்கினாள். அவர்களுடைய பேச்சுக்

குரலினால் அரசன் விழித்துக்கொண்டு அந்தக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தான். அது மிகவும் இனிமையாக இருந்தது; அதன் போக்கு மேலே எப்படியிருக்குமோ என்னும் ஆவலை விளைக்கத் தக்கதாயிருந்தது.

கதையைக் கேட்டுக்கொண்டு வருகையில், ஆவலும் வியப்பும் அரசனுக்கு அதிகமாயின; பொழுது விடியலாயிற்று; கதையோ முடிவு பெறவில்லை. முதல் நாள் மனைவியை மறுநாள் உதயத்தில் எரித்து விடவேண்டுமென்பது அவனுடைய தீர்மானம். கதையின் முடிவைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் விருப்பத்தினால் அரசன் அவளை நோக்கி, “இன்றிரவும் நீ வந்து அந்தக்கதையின் தொடர்ச்சியைச் சொல்லு” என்று கட்டளை இட்டான்.

இரண்டாம் நாள் இரவிலும் அந்தக் கதை முடிவுபெறவில்லை. அவள் கதையை வளர்த்துக்கொண்டே போனாள். போகப்போகக் கதை இனிமையாக இருந்தது. கதையின் சந்தர்ப்பங்கள் மிகுந்த மனவெழுச்சியை உண்டாக்கின. அதன் முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் மிகுதியினால் அரசன் அவளைக் கொல்லுவிக்காமல் ஒவ்வொரு நாளும் திரும்பிவந்து கதையை முடிக்கும்படி அவளுக்குச் சொல்லவேண்டியதாயிற்று. இவ்வாறு அவள் ஆயிரத்தொருநாள் கதை சொல்லிக்கொண்டே வந்தாள். முடிவில், பாதுஷா சந்தோஷப்பட்டு, முதலிற் செய்திருந்த தீர்மானத்தையும் விளம்பரத்தையும் மாற்றி, அந்த மந்திரியின் மகளையே மணம் புரிந்துகொண்டு சுகமாக வாழ்ந்தான்.

இந்நாட்டில் வழங்கும் பஞ்ச தந்திரம், இதோபதேசம், பெருங்கதை முதலியவை மிகவும் இனிமையாகவும் அழகாகவும் நற்போதங்கள் அடங்கினவைகளாகவும் இருக்கின்றன. அவை பெரும்பாலும் ஒரே தொடர்ச்சியாக இருக்கின்றன. ஒரு பாடத்தைக் கதை ரூபமாகப் போதிப்பதனால், அது பிள்ளைகளின் மனத்தில் சீக்கிரமாகவும் நன்றாகவும் பதியும். மக்கள் அறிவில்லாத மூடர்களாயிருப்பதைக்கண்டு மகிளாரோப்பியம் என்னும் நகராதிபதியான அமரசக்தி என்னும் அரசன் அவர்களைப் படிப்பிக்கும் வகையும் துறையும் தோன்றாமல் கலக்கமுற்றிருந்த சமயத்தில் விஷ்ணு சர்மா என்னும் பண்டிதர் அந்த பஞ்சதந்திரக் கதைகளைச் சொல்லி அவ்வரசனுடைய புத்திரர்களைச் சிறந்த புத்திசாலிகளாக்கினார். ‘உலகத்தில் அவர்களுக்கு இணையான அறிவுடையவர்கள் இல்லை என்று சொல்லத்தக்கவாறு அவர்களை ஆறுமாதத்திற்குள் பயிற்றுவேன்’ என்று அந்தப் பண்டிதர் அரசனிடத்திற் சபதங்கூறி அப்படியே சாதித்தார். அவ்வளவு விரைவில் அடிமூடர்களை அற்புதமான அறிஞர்களாக்கத்தக்க போதனை முறை எது? விஷ்ணு சர்மாவின் புத்திக்கூர்மையையும் திறமையையும், மேற்சொல்லிய ராஜ குமாரர்களின் விஷயத்தில் அவர் நமக்குப் பிரத்தியக்ஷமாக அநுபவத்திற் காட்டிய உதாரணத்தையுங்கொண்டு ஆலோசிப்போமானால், அவ்வளவு அருமையான போதனை முறை கதை சொல்லல் என்றே காண்கின்றோம்.



கதை சொல்கிறவனுடைய முகத்தைப்பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் சூரியனை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் மலர்மொட்டுகளுக்கு ஒப்பாவார்கள் என்று **புரோபெல் (Froebel)** சொல்லி இருக்கிறார். சூரியனைக்கண்ட மொட்டுகள் மலர்வதுபோல, கதை சொல்லுகிறவனுடைய முகமென்னுஞ் சூரியனைக்காணும் பிள்ளைகளின் முகங்களாகிய மொட்டுகள் மலர்கின்றன. அவர்களுடைய மனங்கள் மகிழ்ச்சியடைகின்றன.

பாடலிபுரத்து சுதரிசன ராஜனது மக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு நாராயண பண்டிதர் என்பவர் “இதோபதேசம்” என்னும் கதைத்தொடர்களைச் சொன்னார். இவை பஞ்சதந்திரக் கதைகளையே கூறுகின்றன. மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களினால், **இனிமையாகக் கதை சொல்லின் எளிதாக அறிவு புகட்டலாம்** என்னும் இரகசியம் முற்காலத்து மகமதியர்களுக்கும், இந்தியர்களுக்கும், இக்காலத்து புரோபெல் முதலிய மேற்றிசைப் பண்டிதர்களுக்கும் தெரிந்திருந்தது என்று காண்கிறோம். அவர்களைப்போலக் கதை சொல்லும் சக்திவாய்ந்தால், நாமும் நல்ல போதகாசிரியர்கள் ஆவோம். அந்த அருமையான திறமையை நாம் பெறுவதெப்படி?

‘கற்றல்’ ‘கேட்டல்’ என்னும் வகைகள் இரண்டனுள், கதை சொல்லல் என்பது ‘கேட்டல்’ என்னும் வகையைச் சேர்ந்தது. இது மாணவருக்கு எளிதான வகையாயினும் போதகருக்குக் கஷ்டம் மிகுந்தது. ஏனெனில் போதகர் சொல்வதையெல்லாம் மாணவர்கள் விருப்பத்துடன் கேட்கும்படி செய்வது எளிதான காரியமல்லவே. மேலும் சொல்லும் விஷயங்களெல்லாம் மாணவர்களின் மனதைக் கவரும்படியாயிருப்பதும் எளிதான காரியமன்றே.

எதையும் கதை ரூபமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள பிள்ளைகளுக்கும் மற்றவர்களுக்கும் பிரியம் உண்டு என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால், கதைகள் நல்லவையென்றும் கெட்டவையென்றும் இரண்டுவகைப்படுமல்லவா? பிள்ளைகளுக்கு விருப்பு உண்டாக்கத் தக்கவைகளும் வெறுப்பு உண்டாக்கத் தக்கவைகளும் இருக்கின்றனவல்லவா?

ஆகையால் கதைசொல்லும் முறையில் போதிக்கும் உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

1. **பிள்ளைகளுக்கு இஷ்டம் உண்டாகத்தக்க கதைகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டுவது;**

2. அவைகளை இரண்டொரு தடவை நன்றாகத் தாமே சொல்லிப் பார்த்துக்கொண்டு, விஷயங்களை ஒழுங்கு படுத்தி, எளிய நடையில் சொல்வதற்குப் பயில்வது;

3. கூடியவரையில் புதிது புதிதாகக் கதை சொல்ல முயற்சிப்பது; நல்ல கதையானால் அதையே அடிக்கடி சொல்வது;

4. கதைகளைக் குருட்டுப்பாடமாக ஒப்பிக்கும்படி பிள்ளைகளைச் செய்யாதிருப்பது; குருட்டுப்பாடமாக ஒப்பிக்கும் கதை பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை உண்டாக்காது என்றறிவது.

இனி, உபாத்தியாயர்கள் தாமாகவே ஆலோசித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் சில உண்டு. அவைகளை இதனடியில் கேள்விரூபமாகக் குறித்திருக்கிறோம். இந்த கேள்விகளுக்கு உபாத்தியாயர்கள் தங்களுடைய அனுபவத்தை யனுசரித்து விடைகள் எழுதி "சற்குரு" பத்திராதிபருக்கு அனுப்பினால் அவ்விடைகள், அவரவர்களுடைய பெயர்களுடன் இந்தப் பத்திரிகையில் அச்சிடப்படும்:—

1. கதை சொல்லும்போது இடை இடையே உபாத்தியாயர் கேள்விகள் கேட்கலாமா?

2. சிறுபிள்ளைகளுக்குச் சிறியகதைகள் கேட்பதில் விருப்பமா, பெரிய கதைகள் கேட்பதில் விருப்பமா?

3. ஒரு கதையிற் பல சங்கதிகள் அடங்கியிருக்கலாமா?

4. வர்ணனைகள் அடங்கிய கதைகள் பிள்ளைகளுக்கு ஏற்றவைகளா?

5. கதைகள் எப்படி முடிவு பெற்றால் சிறுவர்களுக்குப் பிரியமாயிருக்கும்?

6. கதைசொல்லும்படி ஒருசிறுவனுக்குக் கட்டளையிட்டு, அவன் அதைச் சொல்லும் விதத்தைக் கவனித்துப்பார்த்து, அதைப்பற்றிச் சிறு வியாசம் ஒன்று எழுதி இந்தப் பத்திரிகைக்கு அனுப்புக.

குறிப்பு:—மேற் சொல்லிய அம்சங்களுக்கு விடைகள் எழுதி அனுப்புகையில், அந்தந்த விடைக்குரிய மாணவர்களின் வயதைக் குறிப்பிட வேண்டும்.

கதை சொல்லல் என்னும் பாடத்தைச் சேர்ந்த பகுதிகளாகிய (1) கதை நடித்தல், (2) சம்பாஷணம், (3) படத்தைப் பார்த்துக் கதை சொல்லல் ஆகிய இவைகளைக் குறித்து மற்றொரு சஞ்சிகையில் விவரிப்போம்; உதாரணமாகச் சில கதைகளையும் எழுதுவோம்.

கதைப் பிரியன்.

---

Madras: Printed at the Jyotishmati Press, and Published by N. Venkatarayalu & Son, 87 Ramaswamy St., Madras.

OFFICE OF THE REGISTRAR ... 12 OCT 1914 MADRAS.

ஸ்ரீ

# சற்குரு

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| தொகுதி—க | 1914 ஞ செப்டெம்பர் மீ | பகுதி—ங |
|---|---|---|

## NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

—(*)—

இந்நாட்டிலுள்ள மகம்மதிய பாடசாலைகளில் உர்து பாஷை கற்றுக்கொடுத்து வருகிறார்கள். சிறு பிள்ளைகளுக்கு இதைக் கற்றுக் கொடுப்பதனால், பெரியவர்களாகும் பொழுது அவர்களுக்கு இந்தப் பாஷைப் பயிற்சி பயன்படுகிறதோ? இந்தத் தேசத்தில் எழுத்து விவகாரங்களெல்லாம் சுதேச பாஷைகளிலும் இங்கிலீஷிலும் நடக்கின்றன. இங்கிலீஷ் ராஜ்யத்தில் உர்து பாஷையில் எழுத்து விவகாரம் நடக்கக் காணோம்.

* * * *

இப்படி யிருக்க, துரைத்தனத்தார் மகம்மதிய எலிமென்டரி பாடசாலைகளில் பணத்தைச் செலவிட்டு உர்து பாஷையைக் கற்பிப்பதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை. அதைக் கற்றுக் கொள்வதனால், மகம்மதியர்கள் தங்களுடைய மத நூலாகிய கொரானைப் படிப்பதற்காகுமே யல்லாமல், வேறு எதற்கும் அந்தப் பயிற்சி பயன்படாது. அதற்குப் பதிலாக அவர்கள் சுதேச பாஷைகளை இளமைப் பருவத்திலிருந்தே பயின்று வருவார்களானால், பெரியவர்களான பிறகு அந்தப் பயிற்சி எல்லா விவகாரங்களுக்கும் அனுகூலமாயிருக்கும்.

* * * * *

இப்பொழுது இந்த ராஜதானியில் மகம்மதிய எலிமெண்டரி பாடசாலைகள் நடந்து வருகிறபடியே இனியும் நடக்குமானால் துரைத்தனத்தாருக்கு வீணான பெருஞ்செலவும், மகம்மதியர்களுக்கு சுதேச பாஷைகளைக் கல்லாத பெரிய நஷ்டமும் உண்டாகும். இந்த ஆலோசனை பம்பாய் துரைத்தனத்தாருக்கும் தோன்றி இருக்கிறது. அவர்கள் மிகச் சாமர்த்தியமாகத் தீர்த்திருக்கிறார்கள்.

* * * * *

பம்பாய் ராஜதானியிலுள்ள மகம்மதிய பாடசாலைகளில் பாலர்தர கதியிலும் முதல் தர கதியிலும் உர்து பாஷையிலேயே பாடஞ் சொல்லிக் கொடுக்கிறார்கள். உர்துவைத் தவிர வேறு பாஷை அந்தத் தர கதிகளில் கற்பிப்பதில்லை. இரண்டாந்தர கதியில் மகம்மதியப் பிள்ளைகள் சுதேச பாஷையைக் கற்கத் தொடங்கி அது முதல் மேலேயுள்ள தர கதிகளிலெல்லாம் சுதேச பாஷையையே பயிலவேண்டியது கட்டாயம்.

* * * * *

மேல்தர கதிகளில் உர்து பாஷையும் சுதேச பாஷையும் கற்பிக்கப்படுகின்றன. சரித்திரமும் ஆரோக்கிய முதற் பாடமும் (History and Sanitary Primer) உர்துவில் கற்பிக்கப்படுகின்



F THE REGISTR... 12 OCT 1914 ... MADRAS.

றன; மற்றப்பாடங்க ளெல்லாம் சுதேச பாஷையில் கற்பிக்கப்படுகின்றன.

* * * * * *

பம்பாய் துரைத்தனத்தார் செய்திருப்பது ஒரு வகையான நல்ல உபாயமே. நம்முடைய ராஜதானியிலும் அப்படியே செய்வது நலமென்று தோன்றுகின்றது. ஆனால் நமது ராஜதானியிலுள்ள மகம்மதியர்களில் அநேகர் அவர்களுக்கான எலிமெண்டரி பாடசாலைகளில் சுதேச பாஷையே கற்பிக்கப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள். புத்திசாலிகளாயுள்ள மகம்மதியர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குச் சுதேச பாஷையைக் கற்பிப்பதனால் பிற்காலத்தில் அவர்களுக்குப் பிரயோசன முண்டென்று தெரிந்து இப்படிக் கேட்கிறார்கள். இந்தக் கருத்துக் கொண்டே போர்டு மகம்மதிய எலிமெண்டரி பாடசாலைகளில் சுதேச பாஷையும் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

* * * * * *

ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு தோட்டம் இருக்க வேண்டியது அவசியமாயும் அநுகூலமாயும் இருக்கின்றதல்லவா? தோட்டம் நன்றாயிருப்பதற்குத் தக்கபடி பிள்ளைகளுக்கு ஊக்கமும், உழைப்பும், உற்சாகமும், இயற்கைப் பொருள் ஆராய்ச்சியும் அதிகரிக்கின்றன. பள்ளிக்கூடத்துத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும்பொருட்டு லோகல் போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் துரைத்தனத்தார் ரூ. 10,000 கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

* * * * * *

பப்ளிக் எலிமெண்டரி பாடசாலைகளின் சங்கியை அதிகரித்திருக்கிறதென்றும், அதற்கேற்றபடி அவைகளில் படிக்கும் மாணவர்களின் சங்கியை அதிகரித்திருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறோமல்லவா? பாடசாலைகளும் பிள்ளைகளும் அதிகரித்தால், உபாத்தியாயர்களும் அதிகரிக்க வேண்டியதே யல்லவா? 1912ஆம்

மார்ச்சுமீ 31௳யில் 38773-உபாத்தியாயர்கள் இருந்தார்கள். 1913௵ மார்ச்சுமீ 31௳யில் 40,958 உபாத்தியாயர்கள் இருந்தார்கள்.

* * * *

மேற் சொல்லிய உபாத்தியாயர்களில் அநேகர் உபாத்திமைத்தொழில் பயின்று சர்ட்டிபிகேட்டு பெற்றவர்களல்லர். உபாத்தியர்யாகளாக இருப்பதற்குத் தகுதியானவர்க ளென்று சர்டிபிக்கேட் பெறாதவர்கள் அத்தனை பேர் இருப்பது சரியல்லவாதலால் ஸ்பெஷலாகச் சிலர் லோயர் எலிமென்டரி உபாத்தியாயர்களை 1912௵ ஜுலையில் ட்ரெயினிங் ஸ்கூல்களில் சேர்த்துக் கொண்டார்கள். அவர்கள் 22-மாதம் அங்கே பயின்றபிறகு உபாத்தியாய சர்ட்டிபிகேட்டுக்கு உரியவர்களாவார்கள். 1913௵த்திலும் இன்னும் சில லோயர் எலிமென்டரி உபாத்தியாயர்களை மேற் சொல்லியபடி ட்ரெயினிங்குக்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்தார்கள்.

* * * *

துரைத்தனத்தாரது உதவி பெற்று நடந்துவரும் ட்ரெயினிங் ஸ்கூல்களில் மேற் சொல்லியபடி ஸ்பெஷலாக உபாத்தியார்களைச் சேர்த்துக்கொண்டு பழக்குவதற்காக அந்த ட்ரெயினிங் ஸ்கூல்களுக்குத் துரைத்தனத்தார் பண உதவி செய்தார்கள்.

* * * * * *

ட்ரெயினிங் ஸ்கூல்களில் பயிலவேண்டிய காலம் முன் இருந்ததைவிட அதிகப்பட்டு 22-மாதம் பயில வேண்டுமென்று விதிக்கப்பட்டதனால், அநேக உபாத்தியாயர்கள் ட்ரெயினிங் ஸ்கூல்களுக்குப்போகப் பின் வாங்கத் தலைப்பட்டார்கள். ஆயினும், அதனால் அவர்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படாதிருக்கும் பொருட்டு அவர்களுக்குக் கொடுக்கும் மாதவரி உபகாரச் சம்பளத்தை (Stipend) அதிகரித்திருக்கிறார்கள்.

* * * * * *



பிள்ளைகளின் எலிமென்டரி பாடசாலைகளுக்காக இதற்கு முன்னால் செலவிட்டு வந்த தொகை ரூபாய் 37,55,272. 1912 வருஷத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. 42,30,660. இப்படிச் சற்றேறக்குறைய அதிகப்பட்ட 5-லக்ஷம் ரூபாயில், போர்டு பாடசாலைகளைப் புதிதாக ஏற்படுத்தி ஆதரிப்பதற்காக நான்கு லக்ஷம் ரூபாய் செலவாயிற்று; உதவி பெற்று நடக்கும் எலிமென்டரி பாட்சாலைகளுக்குக் கொடுக்கும் உபாத்திமார் கிராண்டுகளை அதிகப்படுத்தியதில் ஒரு லக்ஷம் ரூபாய் செலவாயிற்று

* * * * *

எலிமென்டரி பாடசாலைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை மொத்தம் இன்னதென்று தெரிந்து கொண்டோம். ஒவ்வொரு பையனுக்கும் சற்றேறக் குறைய எத்தனை ரூபாய் வீதம் செலவாயிற்றென்று பார்க்குமிடத்து இதற்கு முன்னால் ஒவ்வொரு பையனுக்கும் ரூ. 4-2-0. செலவாய்க் கொண்டிருந்தது. 1912-13-இல் ரூ. 4-5-0 செலவாயிற்று. இது சராசரிக் கணக்கு.

துரைத்தனத்தார் ஏஜென்சி நாடுகளில் நடத்திவரும் எலிமென்டரி பாடசாலைகளில் ஒவ்வொரு பையனுக்கும் ரூ. 11-3-2 பிடித்தது. போர்டு பாடசாலைகளில் ரூ. 5-5-5 செலவாயிற்று. சர்க்கார் உதவிபெற்று நடக்கும் பாடசாலைகளில் ஒருவனுக்கு 4-0-1 செலவு பிடித்தது. இந்தச் செலவுத் தொகைகளில் பிள்ளைகளிடத்திலிருந்து வசூலான சம்பளம் சர்க்கார் பாடசாலைகளில் நூற்றுக்கு ஐந்து வீதம் வந்தது. போர்டு பாடசாலைகளில் நூற்றுக்கு எட்டு வீதம் வந்தது. உதவிபெற்று நடக்கும் பாடசாலைகளில் நூற்றுக்கு 19-வீதம் வந்தது.

* * * *

ஸ்பெஷல் படிப்புக்காக ஏற்பட்ட பள்ளிக்கூடங்கள் முன்னால் 178 இருந்தன. அவை 1912–13-இல் 197 ஆயின. அவைகளில் படிக்கும் மாணவர்களின் சங்கியை 7,699-யில் இருந்து 8,539 ஆயிற்று. ட்ரெயினிங் ஸ்கூல்களில் உபாத்தியாயர்களும்,

உபாத்தியாயினிகளும் அதிகமானதினாலும், செக்ஷன் ஸ்கூல்கள் அதிகமானதினாலும் மேற் சொல்லிய இரண்டு சங்கியைகளும் அதிகப்பட்டன.

* * * * * *

இம்பீரியல் நிதியினின்று லோகல் போர்டுகளுக்குத் துரைத்தனத்தார் பண உதவி செய்ததனால் செக்ஷன் ஸ்கூல்கள் அதிகமாய் ஏற்பட்டன. டெக்னிகல் ஸ்கூல்களும் கைத்தொழிற் பாடசாலைகளும் 1912-13-இல் குறைவு பட்டன. அவைகளில் படிக்கும் மாணவர்களின் சங்கியை (Number) யும் குறைவு பட்டது.

* * * * * *

உபாத்திமைத் தொழில் பயிற்றும் ட்ரெயினிங் ஸ்கூல்களைப் பற்றிய சட்டம் செகிரடரி ஆப் ஸ்டேட்டின் அநுமதியின்படி 1912-13-யில் மாற்றப்பட்டது. ஹையர் எலிமென்டெரி கிரேடுக்கும் செகன்டெரி கிரேடுக்கும் உபாத்தியாயர்கள் இதுவரையில் ஒரு வருஷம் பயின்றது போலல்லாமல் இனி இரண்டு வருஷம் பயில வேண்டியதாயிற்று. இன்டர் மீடியட் பரிக்ஷை பாஸ் செய்தவர்களுக்கும் எப். ஏ. பரீக்ஷை பாஸ் செய்தவர்களுக்கு மாத்திரம் இந்த நிர்ப்பந்தம் இல்லை. ஹையர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்கள் அது வரையில் 15 இருந்தன, அவை இப்பொழுது 10 ஸ்கூல்களாக்கப் பட்டன. லோயர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்கள் 11 இருந்தன, அவை 14 ஆக்கப்பட்டன.

* * * * *

மேற் சொல்லிய புதிய சட்டத்தின்படி ஸ்ரீகாகுளம், ஒங்கோல், அனந்தபுரம், சென்னை, (பஞ்சமர் பாடசாலை,) கூடலூர், வடகரை ஆகிய இடங்களிலுள்ள 6 லோயர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்களை எடுத்துவிட வேண்டியதாகும். ஆனால், அவைகளை எடுத்துவிடாமல் ஒருவருஷ காலம் வைத்து நடத்திப் பார்ப்போமென்று நமது கல்வி இலாகா தலைவர் தீர்மானித்தார். ஏனெனில் வருஷந்தோறும் இந்த ராஜதானியில் பயிற்றப்படும் உபாத்தியாயர்களின் சங்கியை அதிகரிப்பதற்குப் புதிய சட்டத்தில் ஏற்பாடு செய்திருந்த போதிலும், போர்டு எலிமென்டரி ஸ்கூல்களும் முனிசிபல் எலிமென்டரி ஸ்கூல்களும் மிகவும் அதிகப்பட்டு வருவதனால், எலிமென்டரி உபாத்தியாயர்கள் அநேகர் தேவையாயிருக்கிறது. ட்ரெயினிங் ஸ்கூல்களில் பயின்றுவரும் உபாத்தியாயர்கள் போதுமானவரல்லர், ஆகையால் மேற் சொல்லிய 6-ட்ரெயினிங் ஸ்கூல்களையும் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



* * * * * *

புதிய சட்டத்தின்படி இதுவரையிலிருந்த நான்கு செகண்டரி ட்ரெயினிங் ஸ்கூல்களை எடுத்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாக 6-ட்ரெயினிங் சாகைகளை ஏற்படுத்த வேண்டுமென்று உத்தரவாயிற்று. அந்த ட்ரெயினிங் சாகைகளைப் பொறுக்கி எடுத்து நல்ல செகன்டெரி ஸ்கூல்களோடு சேர்த்து வைக்க வேண்டுமென்பது கருத்து. அந்த ஏற்பாடு 1912-13-யில் செய்ய முடியவில்லை. இப்போதைக்குக் காரியத்தை நடத்திவரும் பொருட்டு, மாடல் செகண்டெரி ஸ்கூல்களை வேறாக ஏற்படுத்தி ட்ரெயினிங் சாகைகளை அவைகளுடன் சேர்த்து நடத்துவதற்குப் பதிலாக, அங்கங்கே நடந்துவரும் செகண்டெரி ஸ்கூல்களையும் எலிமென்டரி ஸ்கூல்களையுமே பயிற்சிச் சாகைகளாக (Practising Sections) வைத்துக் கொண்டு மேற் சொல்லியபடி 6-செகண்டெரி ட்ரெயினிங் சாகைகளை நடத்தலாமென்று 1913-14-யில் உத்தரவு வந்திருக்கின்றது.

* * * *

அந்த உத்தரவின்படி ராஜமஹேந்திர வரம், சைதாப்பேட்டை, தஞ்சாவூர், கோயமுத்தூர், கள்ளிக்கோட்டை, மங்களூர் என்னும் 6-இடங்களிலும் ஒவ்வொரு செகண்டெரி ட்ரெயினிங் சாலை வைத்து நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * * * * *

புதிய ஏற்பாட்டின்படி ட்ரெயினிங் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் அதிகப் பட்டதல்லாமல், மேலும் மேலும் அவர்

கள் அபிவிருத்தி யடைவதற்கு வேண்டிய அனுகூலங்களும் உண்டாயின. செகன்டெரி ட்ரெயினிங் ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் உதவி உபாத்தியாயரும் சப் அசிஸ்டெண்டு தர்ஜாவில் சேர்ந்தவர்களானார்கள்; ஹையர் எலிமென்டெரி ட்ரெயினிங் ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் இரண்டு உதவி உபாத்தியாயர்களும் சப் அஸிஸ்டண்டு தர்ஜாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சப் அசிஸ்டெண்டு தர்ஜாவில் 6-அந்தஸ்துக்கள் உண்டு. அந்த அந்தஸ்துக்களின் சம்பளம் ரூ. 75-முதல் ரூபா 200-வரையில் ஆகும்.

* * * * *

ஹையர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்களிலுள்ள மற்ற உபாத்தியாயர்களும், லோயர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்களிலுள்ள எல்லா உபாத்தியாயர்களும் சூபர்வைஸர் தர்ஜாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்களின் சம்பளம் ரூ. 30-முதல் ரூ. 50-வரையிலாகும்.

* * * * *

மேற் சொல்லிய புதிய ஏற்பாடு வந்த பிறகு, லோயர் எலிமென்டெரி ட்ரெயினிங் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர்களுக்கு உத்தரவாதம் அதிகமாயிருக்கிற தென்றெண்ணித் துரைத்தனத்தார் அந்தத் தலைமை உபாத்தியாயர்களையும் சப் அசிஸ்டெண்டு தர்ஜாவில் சேர்த்துவிட்டார்கள். இவ்வாறு, சப் அஸிஸ்டெண்டு தர்ஜாவில் 54-பேர்களும், சூபர்வைசர் தர்ஜாவில் 38-பேர்களும் சேர்க்கப்பட்டார்கள். இப்படிச் செய்தது அவசியமான காரியமே. எலிமென்டெரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் நிலைமையையும் துரைத்தனத்தார் கவனித்து வேண்டிய அனுகூலங்கள் செய்து உதவுவார்களென்று நம்புகிறோம்.

* * * * *

உபாத்தியாயினிகளைப் பயிற்றுவதற்கு மூன்று ட்ரெயினிங் ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை மங்களூர், கருந்தட்டாங்குடி (தஞ்சாவூர்,) திருவல்லிக்கேணி என்னுமிடங்களே. கருந்தட்டாங் குடியிலும், திருவல்லிக்கேணியிலும் செகன்டெரி கிரேட் உபாத்தியாயினிகள் கூட சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

---

# RAMA & RAVANA

# இராமரும் இராவணனும்

## அகலிகைச் சாபவிமோசனம்

அல்லது

### கால் வண்ணக் காட்சி

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாமித்திரருடன் சென்ற இராம லக்ஷ்மணர், இருவரும் மணி, சந்தனம், புஷ்பம் முதலியவற்றை ஏந்துதலினால் ஒரு பெண்ணைப்போல் நடந்து செல்லும் சோணை நதியைக்கண்டனர். அதன்பின் காசிபர் மனைவியாகிய திதி என்பவள் தவஞ்செய்ததும் மருத்துவர் எழு கூறானதுமாய சோலையைக் கண்டார்கள். அதற்குப் பின்னர்க் குமாரக் கடவுள் அவதரித்த பதுமப் பாசடைச் சரவணப் பொய்கையையும் கங்கை நதியையும் முனிவர் காட்டக் கண்டனர்.

இப்படி இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டே மிதிலை நாட்டை நெருங்கினர். அங்குப் பெரிய குளங்களிலுடைய மதகுகள் முழவுபோல் ஒலித்தன; விளக்கு எடுப்பனபோலச் செங்கமலங்கள் பூத்திருந்தன; வீணையின் நரம்பைப்போலத் தேன் ஒழுக்கினையுடைய மலரிலே வண்டுகள் வீணையைப்போல் இசைபாடின. மயில்கள் வேசையர்போல் நடித்தன. இவைகளைப் பார்த்துக்கொண்டு, நீண்ட கொடிகள் கட்டப் பெற்றிருக்கும் மிதிலைமா நகரத்து மதிலை நெருங்குகையில், அங்கிருந்த திடரின்மேற் கிடந்த கல்லொன்று ஸ்ரீ ராமபிரானுடைய காற்றுகள் பட்டு,பெண்ணுருவாக மாறி எழுந்தது.

அதைக் கண்டதும் விசுவாமித்திரர் ஸ்ரீராமனைப் பார்த்து, “ இரகு நாயகனே! இவள், தீவினையை விரும்பிச் செய்த இந்திரனுக்கு ஆயிரங் கண்ணளித்த கௌதம முனிவன் மனைவி ” என்று சொன்னார்.

அதற்கு இராகவன்,

“ முன்னை ஊழ்வினையினாலோ நடுவென்று முடிந்ததுண்டோ ?
அன்னையே யனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு அருள்க ”

என்றான்.

விசுவாமித்திரர், “ இந்திரனென்போன் கௌதம முனிவன் அகலிகையைவிட்டு நீங்கியிருக்குஞ் சமயம் பார்த்து, அது வாய்க்காமையால் அறிவு கெட்டு ஒருநாள் கௌதம முனிவனுக்குப் பிரிவை யுண்டாக்கி அம்முனிவனைப் போலத் தான் வேடந் தரித்துக்கொண்டு அகலிகையிடஞ்சென்றான். சென்றஅவன் அவளிடம் பேசிக்கொண்டிருக்கையில் கௌதம முனிவர் வீடு நோக்கித் திரும்பி வந்தனர். அவர் வரவைக் கண்டு பயந்து அழியாப் பழி பூண்ட அகலிகையும் எழுந்து நின்றாள். மாறுவேடத்துடன் பேசிக் கொண்டிருந்த இந்திரனும் பூனை வடிவாகிப் பயந்தோடினான். தேவர்களுக்கெல்லாம் அதிபதியாயிருந்தும் பிறர் தாரத்தை விரும்புஞ் செய்கையை விரும்பினானே என்று மனத்துள் வருந்தி அவனை விளித்துச் சாபமிட்டார்.

பிறகு அகலிகையைப் பார்த்து ‘ நீயும் கல்லுருவாகக் கடவை ’ என்றனர்.

அவள் அவருடைய பாதங்களில் வீழ்ந்து,

‘ பிழைத்தன பொறுத்தலென்றும் பெரியவர் கடனே என்பர்,
அழற்றரும் கடவுளன்னாய் முடிவு இதற்கு அருள்க...’

என்று வேண்டினள். அவர்,

‘ தழைத்து வண்டு இமிருந்தண்டார் தசரத ராமனென்பான்,
கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி’

என்றார்.



இதுதான் முன் நடந்த முறைமை, இனி, இந்த உலகங்கட்கெல்லாம் உய்யும் விதமே யன்றி மற்றோர் துயரம் என்னும் தன்மை உண்டாகுமோ? அண்ணலே, உன் கை வண்ணம் அங்குத் தாடகைப் போர்க்களத்திற் கண்டேன்; கால் வண்ணம் இங்குக் கண்டேன் ” என்று கூறி முடித்தார்.

பிறகு இராகவபிரான் அகலிகையை அழைத்துக் கொண்டு கௌதமருடைய ஆச்சிரமத்தை அடைந்து கௌதம முனிவரைக் கண்டனர்; அப்பொழுது விசுவாமித்திரர் கௌதமரைப் பார்த்து, “ ஸ்ரீராமபிரான் திருவடித்துகள் படுமுன்னரே கல்லுருவாயிருந்த உன் மனைவி பெண்ணுருவெய்தினாள். அவளை நீரே அழைத்து அங்கீகரியும் ” என்று சொன்னார். சொல்லவும் கௌதமர் அதற்கு ஒருவாறு இணங்கி நின்றார். அச்சமயத்து ஸ்ரீராமனும் முனிவரை வணங்கிக் குற்றமற்றஅகலிகையை அவரிடம் ஒப்பித்து, விடை பெற்றுக் கொண்டு, தம்பியும் விசுவாமித்திர முனிவாரும் தொடர்ந்துவரக் கௌதமர் இருந்த அச்சோலையைக் கடந்து சென்று, அழகிய மதிள் சூழ்ந்த மிதிலை அகழியைக் கண்டனர்.

பத்திராதிபர்.

# SOME HINTS ON OBSERVATION LESSONS

## காக்ஷிப் பொருட்பாடக் குறிப்பு.

எலிமென்டெரி பாடசாலைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பாடக்கிரமத்தின் (Syllabus) முழு நோக்கமாவது பிள்ளைகள் ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்கவேண்டுமென்பதும், நோக்கப்பட்ட பொருளைப் பற்றி விஷயங்களை ஆராய்ச்சிசெய்து உணரவேண்டுமென்பதுமே.

ஒரு பொருளை உற்று நோக்குவதால் அநேக விஷயங்கள் மனத்துக்குப் புலப்படுகின்றன வென்பதும், அவ்வாறு புலப்பட்ட விஷயங்கள் பச்சை மரத்தில் அறையப்பட்ட ஆணியைப்போல நன்றாக மனத்தில் பதிந்து பிற்காலத்திலும் நன்மையைத்தர ஆதாரமாயிருக்குமென்பதும் அனைவரும் அறிந்த விஷயமே. ஆதலால் பிள்ளைகளுக்கு இயற்கையைக் கவனிக்குந் தன்மையையும், கவனிப்பதால் அவர்கள் பெறவேண்டிய உணர்ச்சியையும் வளர்க்கவேண்டியது உபாத்தியாயர் எனப் பெயர். தரித்தவர்களுடைய கடமையாகும். அவர்கள் இவ்விரண்டினையும் எவ்வாறு வளர்க்கலாம் என்பதைப் பற்றி நமது பத்திரிகையின் வாயிலாக அறிவிப்போம்.

---

### I. BOTANY IN THE SCHOOL ROOM.

### க. தாவர பாடம் - பாடசாலைப் போதனை

காய்களையும், கனிகளையும், இலைகளையும், தளிர்களையும், மலர்களையும், அரும்புகளையும், கிளைகளையும், மிலாறுகளையும், நார்களையும் பிள்ளைகளுக்குக்காட்டி அவைகளைப்பற்றி உபாத்தியாயராயுள்ளோர் போதிக்கின்றனர். அவர்களிலுஞ் சிலர் அறியாமையினாலும், பழக்கக் குறைவினாலும், சோம்பலினாலும் போதிக்கப் பின்னிடைகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குத் தாவர சாஸ்திரம், பக்ஷி சாஸ்திரம், மிருக சாஸ்திரம் என்னும் சாஸ்திரங்களின் பெயர்கள் காதில் விழுந்தமாத்திரத்தில் ஒருவித பெரும் பயம் உண்டாகின்றது. ஆதலினால் அப்பயத்தினை நீக்கி, இவைகளின் முதன்மையாயிருக்கும் தவார பாடத்தினைப் போதிக்கும் விதத்தினைப் பற்றி முதல் முதல் ஆராய்வோம்.



இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன மலர்கள் இன்ன இன்ன இடங்களில் கிடைப்பவை என்பதை உபாத்தியாயர் அறிந்திருப்பாராதலினால் அவ்வக்காலத்திற்கும் அவ்வவ் விடத்திற்கும் தக்கபடி தமது வகுப்புப் பிள்ளைகளைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வயல் வெளிகளுக்கும், தோட்டங்களுக்கும், சோலைகளுக்குஞ் சென்று அங்கு சாதாரணமாய்-என்றும் பார்க்கக்கூடியதாய்-எல்லோரும் அணியக் கூடியதாய்-எல்லோரும் முகரக்கூடியதாயிருக்கும் மலர்களிற் சிலவற்றைப் பறித்து அதன் உள்ளிதழ்களையும், காம்புகளையும், மகரந்தங்களையும் காட்டி அவைகளின் பெயர்களைச் சொல்ல வேண்டும். அவைகளிற் சில மலர்களுக்கு மணமில்லை யென்பதையும், சில, பெண்கள் தரிப்பதற் குரியவை என்பதையும், சில கோயில்களில் பூசைக்குரியவை என்பதையும், சில மலர்கள் பார்வைக்கு அழகாய்க் காணப்படுகின்றன என்பதையும், சில புஷ்பங்கள் கண்ணுக்கு இனிமையல்லவாய்க் காணப்படுகின்றன என்பதையும், அவைகளுக்குள்ள நிற பேதங்களையும், வடிவு பேதங்களையும், மண பேதங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இவ்விதமாக இரண்டு மூன்று முறை நடந்து பிள்ளைகளுக்கு இப்பாடத்தில்-மலர் கொய்வதிலும், மணத்தை முகருவதிலும்-ஊக்கம் உண்டான பிறகு, பிள்ளைகள் தாமே உலாவச் சென்று தாம் காணும் மலர்களை எடுத்து வரும்படி செய்யவேண்டும். அவர்கள் அப்படி எடுத்து வந்ததும் அடியிற் காட்டிய அட்டவணையில், எடுத்து வந்தவர்களின் பெயர்களையும், பறித்த மலரின் பெயரையும், பறித்த தேதியையும் எழுதி வகுப்பில் தொங்கவிட்டால் பிள்ளைகளுக்கு ஒருவித உற்சாகம் உண்டாகும். ஒவ்வொரு பிள்ளையும் தன் பெயரை அவ்வட்டவணையிலிருக்கப் பார்ப்பானாதலால் மலரெடுக்கச் செல்வதிற் பின்னிடான்.

| தேதி<br>1 | மலர் பறித்தவர் பெயர்<br>2 | பறித்தமலரின் பெயர்<br>3 | மலர்பறித்த இடம்<br>4 | மலரின் உபயோகம்<br>5 |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

பிரதிதினமும் வகுப்பிலுள்ள இராமன், கோவிந்தன், சங்கரன் என்னும் பிள்ளைகளில் ஒருவன் பெயரைச் சொல்லி அவன் எடுத்துவந்த மலரைக்காட்டி அவன் நல்ல மலரைக் கொய்துவந்ததாகவும், கொய்துவந்த மலரின் உபயோகம் இன்னது என்பதாகவும் உபாத்தியாயர் எடுத்து உரைப்பாரானால் நல்ல மலரைக் கொய்யவும் அதன் உபயோகத்தை அறியவும் ஆசை உண்டாவதனுடன், மற்ற பிள்ளைகள் கொய்த மலர்களின் பெயர்களையும், அவைகளின் உபயோகத்தையும், அவர்கள் கொய்த மலர்களுக்கும் தான் கொய்த மலருக்கும் உள்ள உபயோக பேதத்தினையும், நிற பேதத்தினையும், வடிவு பேதத்தினையும், மண பேதத்தினையும் அறிய ஊக்கமும் ஜனிக்கும். அப்படி ஜனித்த ஊக்கமானது, உபாத்தியாயருடைய இடைவிடாத சிரத்தையினால், நாளடைவில் விருத்தி யடைந்து, ஒழுங்கான ஆராய்ச்சியையும், நுட்ப விசாரணையையும் அபிவிருத்தி செய்து தோட்டங்களிலுள்ள மலர்களைப் பற்றி யெல்லாம் ஆராய்ச்சிசெய்யும் ஆராய்ச்சியை உண்டாக்கி விடும்.

உபாத்தியாயர், பிள்ளைகள் கொண்டு வந்த மலர்களில் இரண்டொன்றைப்போல் கரும் பலகையில் சித்திரித்து, வர்ணந்தீட்டி, அதைப்போலவே பிள்ளைகளையும் காகிதத்திலாவது, கருஞ்சுவரி (Wall Board) லாவது கூடிய வரையில் எழுதச் செய்தால் நலமாயிருக்கும். அவர்கள் ஒருவாறு அதன் வடிவினை எழுதினாற் போதும்.

பிறகு, உபாத்தியாயர் அம்மலர்களைப்பற்றிச் சில சிறுவாக்கியங்கள் எழுதும்படி பழக்குவதும் நன்மையே.

இப்படியே இலைகளையும், காய்களையும், கனிகளையும், பூண்டுகளையும் செடிகளையும், கொடிகளையும் கொண்டுவந்து அவற்றின் உபயோகத்தினை அறியும்படி செய்யலாம்.

பத்திராதிபர்.

# PRELIMINARY EXAMINATION FOR TEACHERS' CERTIFICATES

## பிரிலிமினெரி பரீக்ஷை-கணிதப் பேப்பர்

பிரிலிமினெரி பரீக்ஷையிற் கொடுக்கப்படும் பேப்பர்களிற் கணிதப் பேப்பர் தான் எப்பொழுதும் கடினமானது. அதில் நீளமான கணக்குகள் அதிகமாயிருக்கும். பேப்பரை வாசித்துச் சங்கதியைத் தெரிந்துகொள்ள நேரஞ் செல்லும். கணக்குகளை முற்றும் போடக் காலமிராது. இது இவ்வாறிருக்கச் சென்ற பரீக்ஷையிற் கொடுத்த பேப்பர் கூடியவரையிற் சுருக்கமாயும் சுலபமாயுமிருந்தது. ஆயினும் அதிற் பின்னக் கணக்குகள் அதிகமாய் இருந்தபடியால் அநேகர் அக்கணக்குகளைப்போட அறியாது திகைத்தார்கள்.

பிறர்க்கு உதவி புரிவது நமது நோக்கமாதலின் அப்பேப்பரில் தோன்றிய கணக்குகளை ஒவ்வொன்றாய் எடுத்துச் சுருக்கமான வழியிற் போட்டுக் காட்டுவோம். கணிதப்பேப்பர் வருமாறு:—

## ELEMENTARY GRADE.

**MARCH 1914.**

### ARITHMETIC AND EXPERIMENTAL GEOMETRY

(FOR MASTERS.)

***Time*—Three hours.**

[குறிப்பு.—படங்களைச் சுத்தமாயும் சரியாகவும் வரைந்து அவைகளின் அளவையும் குறிக்க. எப்பொழுதும் சுருக்கமான வழிகளையே அனுசரிக்க வேண்டும்.]

I. (1) ஒரே தடவையில் 10 புஸ்தகங்கள் வாங்கினால் ஒரு புஸ்தகம் இனாம் கிடைக்கிறது, என்றால், புஸ்தகம் ஒன்று 10 அணா வீதம், 11 டஜன் புஸ்தகங்களின் விலையென்ன?

(2) 1,000 செங்கற்கள் ரூ. 4—8—0 வீதம், 11.95 லக்ஷம் கற்களின் விலையைக் கண்டுபிடிக்க.

(3) ஒரு குவயர் காகிதம் 3 அ. $11\frac{1}{4}$ பெ. வீதம், $21\frac{1}{2}$ குவயர்களின் விலை யென்ன ?

II. (1) $\frac{5}{6} \times \frac{2}{3} = \frac{5}{9}$ என்பதைச் சித்திரத்தால் விளக்குக.

(2) ஒரு ரூபாயிற்கு 4 பைசா வீதம் வருமான வரி கொடுத்தபிறகு, ஒருவர் தன் கைக்கு வந்து சேர்கிற தொகையில் $\frac{3}{4}$ பங்கு தன் சொந்த செலவிற்கும், பாக்கியில் $\frac{1}{3}$ பங்கு தருமத்திற்கும் கொடுத்த பிறகு, அவரிடம் 94 ரூபாய் மீதியிருக்கிறது. அவர் சம்பளம் எவ்வளவு ?

III. 1 டன் ரூ. 35 வீதம், பனிக்கட்டியை வாங்கி அதை 1 பவுண்டு 5 பைசா வீதம், ஒரு வியாபாரி விற்கிறான். பனிக்கட்டியில் 100-க்கு 20 சேதமுண்டாகிறது. அவருக்கு 100-க்கு லாபம் எவ்வளவு ?

IV. அடியிற் கண்டவைகளுக்கு ஏற்ற அளவுகளை காரணங்களுடன் குறிக்கவும்:—

(1) 20 பிள்ளைகளடங்கிய 1 வகுப்பின் கன அளவு.

(2) 2. 5 ஏக்ரா விஸ்தீரணமுள்ள, ஒரு விளையாடுமிடம்.

(3) 8" × 6" × 3" அளவுள்ள 6 டஜன் புஸ்தகங்களைக் கொள்ளும் ஒரு பெட்டியின் அளவு.

V. *A B C D* என்ற நாற்கோட்டுருவத்தை அடியிற் குறித்த அளவிற்கு வரையவும்:—

$AB = 2$ அங்குலம்.

$BC = CD = 14$ அங்குலம்.

$AD = 2.5$ அங்குலம்.

*A B C* என்ற கோணம் $130^{\circ}$.

இதற்குச் சரியாக ஒரு சதுரம் வரைந்து, அதன் ஒரு பக்கத்தின் நீளத்தை அளந்து கூறுக.

VI. ஒரு தட்டையான வளையத்தின் உள் சுற்றளவும் வெளிச் சுற்றளவும் முறையே 15 அங்குலம், 17 அங்குலம். இந்த வளையத்தின் விஸ்தீரணத்தைக் கண்டுபிடிக்க.

VII. ஒரு காலன் (gallon) $277\frac{1}{4}$ கன அங்குலத்திற்குச் சரி. காலன் அளவு ஒரு உருளை (cylinder) வடிவமாக இருக்கிறது. அதன் குறுக்களவு 8 அங்குலம். அதன் உயரத்தைக் குறிக்க.



(அங்குலத்தில் வரும் பின்னத்தை ஒரு தசாம்ச ஸ்தானம் வரையில் சரிவரக் குறிக்கவும்.)

VIII. (1) தசாம்சத்தில் முதல் பாடத்தை எந்த ஸந்தர்ப்பத்தில் நீர் போதிப்பீர் ?

(2) இரண்டாவது வகுப்பிற்கு எண் பரப்பு வேலையில் ஒரு பாடக்கிரமம் தயாரிக்க.

(3) "350 பவுண்டுக்கு வருஷாந்தர வட்டி 100-க்கு 6 வீதம், 15 பவுண்டு 15 ஷி. வட்டி ஏற்பட எவ்வளவு காலம் செல்லும்." இந்தக் கணக்கை ஒரு வகுப்பிற்குப் போதிப்பதுபோல எழுதவும்.

IX. ஒரு பீல்ட் புஸ்தகத்தில் பதிந்துள்ள-அடியிற் குறித்த அளவுகளைக் கொண்டு, ப்ளாட் செய்யாமலே, அதன் பரப்பை ஏகரில் குறிக்கவும்.



விடைவருமாறு:—I. 132-புஸ்தகங்களை ஒரே தடவை வாங்கினால் 13-புத்தகங்கள் இனமாய்க்கிடைக்கும்; 132-13 அல்லது 119-புஸ்தகங்களின் விலை ரூ. 74-6-0.

(2) 11. 95-லக்ஷம்=1195-ஆயிரம். ரூ. 4½-யை 1195-ஆல் பெருக்கினால் தொகை ரூ. 5377-8-0 ஆகிறது.

(3) இந்தக் கணக்கை அடியிற்கண்ட இரண்டு விதமாகப் போடலாம்.

(i) 21-க்குக் காரண எண்கள் (Factors) 3-ம் 7-ம். இவ்வெண்களால் 3-ஷி. 11¼-பெ. ஐ முதற்பெருக்கி, பின், ½-க்கு 1-ஷி. 11-5/8-பெ. எனக் கண்டறிந்து அதனுடன் கூட்டிக்கொள்ளலாம்.

ப. ஷி. பெ.
0—3—11¼
3
0—11—9¾
7
4—2—8¼
1—11-5/8
4—4—7⅞

(ii) 21½-யை 4-ஷி. ஆல் பெருக்கிப்பின் இருபத்தொன்றரை ¾-பெ-க்கு (அல்லது 3-பா-க்கு) 1-ஷி. 4-1/8-பெ. எனக்கண்டு பிடித்துப் பின் வருமாறு கழிக்கலாம்:—

ப. ஷி. பெ.
4—6—0
1—4-1/8
4—4—7⅞

டெஸிமல்ஸ் நன்றாய்த் தெரிந்தவர்கள் 3-ஷி-11¼-பெ.=ப. ·197 என்று கண்டறிந்துகொண்டு, இதை 21.5-ஆல் மூன்று டெஸிமல் ஸ்தானத்துக்குச் சரிவரப் பெருக்கி ப. 4. 236 என்ற ஆன்ஸர் பெறுவார்கள். இது ஏறக்குறைய ப. 4-4-8 ஆகிறது.



II. (I) இதை இவ்வாறு ரூபிக்கலாம்.




A B C D என்ற முழுசதுரத்தில் 36-குழிகள் அடங்கியிருக்கின்றன.

இச்சதுரத்தின் $\frac{5}{6}$-ஆம் பாகத்தில் 30-குழிகள் உண்டு.

இதன் $\frac{2}{3}$-ஆம் பாகமாகிய A G H F என்ற நீண்ட சதுரத்தில் 20-குழிகள் இருக்கின்றன.

ஆகவே,இது A B C D என்ற சதுரத்தின் $\frac{20}{36}$ அல்லது $\frac{5}{9}$ ஆம் பாகம் ஆகிறது.

(2.) 4-பை. ரூபாவின் $\frac{1}{48}$ -பாகம். ஆகையால் வருமான வரியைக் கொடுத்தபின்னர் முழு சம்பளத்தில் $\frac{47}{48}$-ஆம் பாகம் நிற்கிறது. இதில் $\frac{3}{4}$-பங்கு செலவாக $\frac{1}{4}$-பங்கு நிற்கிறது. மறுபடியும் இதில் $\frac{1}{3}$-பங்கு போக $\frac{2}{3}$-ஆம் பங்கு நிற்கிறது.

ஆகவே, முழு சம்பளத்தின் $\frac{1}{4}\times\frac{2}{3}\times\frac{47}{48}$ பங்கு நிற்கிறது.

அதாவது, $\frac{47}{6\times48}$ ஆம் பங்கு = ரூ. 94.

ஆகையால், முழு சம்பளம் ரூ. 576 ஆகிறது.

III. 100-க்கு 20-அல்லது $\frac{1}{5}$-பங்கு சேதமாகிறது

ஆகையால், $\frac{4}{5}$-ஆம் பங்கு நிற்கிறது.

1-டன்னில் 2240-பவுண்டு இருக்க, $\frac{4}{5}$-டன் பனிக்கட்டியின் விலை $\frac{4}{5} \times 2240 \times \frac{5}{192}$ அல்லது ரூ. $46\frac{2}{3}$ ஆகிறது.

வாங்கின விலை ரூ. 35.

ஆகையால் ரூ. 35 செலவிற்கு, லாபம் ரூ. $11\frac{2}{3}$.

ரூ. 100 ,, ,, ரூ. 33-5-4.

IV. (1) சாதாரணமாய் கிளாஸ் ரூம் 12-அடி-குறைந்த பட்சம் 10-அடி உயரமிருந்தாற் போதும்.

ஒவ்வொரு மாணவனுக்கு 12-ச. அடி வீதம் 20-மாணவர்களுக்கு 240-ச. அடி தேவை,

கிளாஸ் ரூம் 20-அடி நீளம் 12-அகலம் இருந்தாற் போதும்.

(2.) 2 ·5-ஏக்ரா=12100 ச. கஜம்.

=110 × 110 ,,

ஆகையால், விளையாடுமிடம் ஒவ்வொரு பக்கமும் 110-கஜம் நீள முள்ள சதுர வடிவமான நிலமாய் இருந்தால் நலம்.

(3.) மொத்த கன அளவு

8 × 6 × 3 × 72 கன அங்குலங்களாம்.

அதாவது, (8 × 6) × (6 × 4) × (3 × 3)

நீளம் 8 × 6 அங். = 4-அடி

அகலம் 6 × 4 ,, = 2 ,,

உயரம் 3 × 3 ,, =9-அங்

வைத்தாற் போதும். வைக்கோல், காகிதம் முதலியவைகளையும் போட்டு புஸ்தகங்களை அடுக்குவோமானால் 3-அங். சுற்றிலும் அதிகமாய் வைக்கலாம்; அதாவது, நீளம் 4'-3'' அகலம் 2'-3'' உயரம் 1'.

V. இது தப்பாயிருக்கிறது.

VI. வளையத்தின் விஸ்தீரணம் கண்டு பிடிக்க, அது ஓர் இடத்தில் அறுக்கப்பட்டு, படத்திற் காட்டியவாறு விரிந்திருப்பதாக நினைக்கவேண்டும்.



பெரிய வட்டத்தின் சுற்றளவு 17 அங்.; ஆகையால் அதன் ரேடியஸ் $\frac{17}{3\frac{1}{7}} \times \frac{1}{2}$ அங். ஆகிறது. அது போலவே சிறு வட்டத்தின் ரேடியஸ் $\frac{15}{3\frac{1}{7}} \times \frac{1}{2}$ ஆகிறது.







சிறு ரேடியஸை பெரியரேடியூஸிலிருந்து கழித்தால் இரண்டு கோடுகளுக்குமுள்ள செங்குத்தான தூரம் தெரியவரும்.

$$\frac{17}{3\frac{1}{7}} \times \frac{1}{2} - \frac{15}{3\frac{1}{7}} \times \frac{1}{2}$$

$$= \frac{1}{3\frac{1}{7}} \times \frac{1}{2} \left\{ 17 - 15 \right\}$$

$$= \frac{1}{3\frac{1}{7}} \times \frac{1}{2} \times 2$$

$$= \frac{7}{22} \text{ அங்}$$

ஆகவே, விஸ்தீரணம்.

$$= \frac{1}{2}(17+15) \times \frac{7}{22} = 5\frac{1}{11} \text{ ச. அங்.}$$

**VII.** ஒரு உருவையின் கன அளவைக்கண்டு பிடிக்க அடிப்புறத்தின் விஸ்தீரணத்தைக் கண்டுபிடித்து உயரத்தால் பெருக்கவேண்டும்.

ஆகவே இவ்வுருவையின் கன அளவு

$= 3\frac{1}{7} \times 4^2 \times$ உயரம்.

ஆனால் கன அளவு $277\frac{1}{4}$ ச. அங். ஆகையால் $3\frac{1}{7} \times 16 \times$ உயரம் $= 277\frac{1}{4}$

$\therefore$ உயரம் $= \frac{7}{22} \times \frac{1}{6} + \frac{1109}{4}$

$= 5 \cdot 5$-அங்.

**VIII.** (1.) அடிக்கோலின் $\frac{1}{10}''$ ஆம் பிரிவுகளைக் கற்பித்துவரும் போது தசாம்ச பின்னங்களைக் கற்பிக்கலாம்; அதனைக் கற்பிப்பதற்கு ஏற்ற அதுவே. ஏனெனில்; பிரத்தியக்ஷமாய் இப்பின்னங்களை ரூபித்துக்காட்ட சாதனங்கள் அப்போது உண்டு. பாலர் வகுப்பில் சாதாரண எண்களைக்கற்பிக்கும்போது எப்படி நாம் கற்களையும் குச்சிகளையும் கொண்டு ஒவ்வொரு எண்ணையும் உதாகரிக்கிறோமோ அதே மாதிரியாக இவ்வெண்களையும் முதல் முதல் பொருள்களைக் கொண்டு ரூபித்துக் காட்டவேண்டும். இல்லாவிடின் அவைகளின் இயற்கை நன்றாய் மனத்தில் பதியாது. .1-க்கும் 1-க்கும் வித்தியாசம் இல்லை யென்று சில பிள்ளைகளுக்குத் தோன்றினுந் தோன்றும். அடிக்கோலை உபயோகப்படுத்தி விஷயத்தை அறிந்துகொண்ட பிள்ளையோ மனப்படத்தின் உதவியால் அதற்குள்ள வித்தியாசத்தினை என்றைக்கும் மறவாதிருக்கும்.

(2.) இதற்கு முந்தி இத்தகைய கேள்வி கேட்டதில்லை. எனினும் இது அவ்வளவு கஷ்டமான கேள்வியன்று, மிகச் சுருக்கமான அட்டவணை தான் தேவை. பாடசாலையின் வேலையைத் தெரிந்த உபாத்தியாயருக்கு இது சுலபமான கேள்வியாகவே காணப்படும்.

இக்கேள்விக்கும் அடுத்த கேள்விக்கும் விடை அவசியமில்லை.

**IX.** A-யிலிருந்து புறப்பட்டு மறுபடியும் A-க்கு வருகிறோம். இரண்டு தடவை மாத்திரம் திரும்புகிறோம். அதனால் இது ஏறக்குறைய ஒரு முக்கோணஉருவமுள்ள வயலாகவிருக்கவேண்டுமென்று கொண்டு அதன் உருவத்தினை அடியில் வரைந்திருக்கிறோம்.



விஸ்தீரணம் ஏறக்குறைய




$= \sqrt{2310 \times 770 \times 880 \times 660}$

$= \sqrt{(21 \times 10 \times 11) \times (10 \times 7 \times 11)}$

$\overline{\times (8 \times 11 \times 10) \times (6 \times 11 \times 10)}$

$= \sqrt{10^4 \times 11^4 \times 3^2 \times 7^2 \times 4^2}$

$= 10^2 \times 11^2 \times 3 \times 7 \times 4$

$12100 \times 84$

$=$ 10,16,400 ச. லிங்ஸ்

$=$ 10·16 ஏகரா

ஆராய்ச்சிப்பிரியன்.

# FOREIGN NEWS.

## பிறதேச வர்த்தமானம்

**அமேரிக்கர் தோட்டத் தொழிற் கல்வி.**

அமெரிக்காவிலுள்ள பட்டணங்களில் இருக்கும் எலிமெண்டெரி பாடசாலைகளில் தோட்டத்தொழிற் கல்விப்பாடம் நன்றாய்ப் போதிக்கப்படுகின்றது. பட்டணத்திற்குப் புறம்பாயிருக்கும் பாகங்களில் பயிர்த் தொழிலைப் பற்றிப் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன.

நாட்டிலிருக்கும் பிள்ளைகளுக்கும் நகரத்திலுள்ள பிள்ளைகளுக்கும் இப்பாடத்தினைப் போதிக்கும் உபாத்தியாயர்கள் பெரும்பாலும் அறிவிற் சிறந்தவர்களாகவே இருக்கிறார்கள். பிள்ளைகள் பெரியவர்களான பிறகு ஜீவன முறையில் பயன் அடையத்தக்க அறிவையே அவர்களுக்கு ஊட்டுகிறார்கள். அவ்வுபாத்தியாயர்க ளெல்லாம் "ஏட்டுச் சுரைக்காய் கறியாக்க உதவாது" என்னும் பழமொழியை நன்கு அறிந்தவர்களாதலால் அவர்கள் எவற்றையும் கையாற் செய்வித்து, செய்விக்கப் பட்டவற்றைப் பார்த்துக் களிக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒவ்வொரு தோட்டம் இருக்க வேண்டும் என்னும் நிபந்தனையுண்டல்லவா? இவ்விடத்திலுள்ள எலிமென்டெரி பள்ளிக்கூடங்களில் எத்தனை பள்ளிக்கூடத்திற்குத் தோட்டம் இருக்குமோ? எத்தனை உபாத்தியாயர்கள் தோட்ட வேலை கற்றுக் கொடுக்கிறார்களோ? கற்றுக் கொடுப்பவர்களுள் பெரும்பாலரும் சட்டத்தை அனுசரிக்க வேண்டுமே, இன்ஸ்பெக்டர் கேட்பாரே, கிராண்ட் குறையுமே என்று கற்றுக்கொடுப்பவர்களோ அல்லது நாட்டினுடைய நன்மையையும் பிள்ளைகளுடைய நலத்தையும் அனுசரித்துக்கற்றுக்கொடுப்பவர்களோ? இவ்விரண்டு நலத்தையும் கவனிப்பார்களானால் ஊக்கத்துடன் அதிக நேரத்தை அக்கல்வி கற்பிப்பதில் செலவிடுவார்களல்லவா? கிராண்டைப் பெறுதலாகிய சுய நன்மை ஒன்றையே உத்தேசித்து வாரத்தில் ¾ மணி அல்லது 1½ மணி நேரம் அப்பாடத்தினைக் கற்பிப்பதால் பிள்ளைகள் எவ்வளவு பயன் அடையக்கூடும்? எவ்வளவு உணர்ச்சி பெறக்கூடும்?

**பாஸ்டன் பிள்ளைகள்.**

பாஸ்டன் (Bostan) என்னும் இடத்தில் சில பள்ளிக்கூடத்தாருக் கென்று பொதுவாக ஒரு தோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்தோட்டத்திற்குப் பிள்ளைகள் முறைப்படி சென்று தோட்ட வேலையைச்செய்து விஷயத்தையுணர்கிறார்கள். அவர்களுக்கு அப்பாடத்தில் அதிகசிரத்தையிருப்பதால் அவ்வாறு செய்கிறார்கள் போலும்.

ஸ்ரீ

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" —தமிழ்மறை

| தொகுதி—க | 1914 ஹு அக்டோபர் மீ | பகுதி—ச |
|---|---|---|

# NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

சென்னை கார்ப்பரேஷன்காரர் அங்கங்கே சில எலிமெண்டரி பள்ளிக்கூடங்களை மாதிரிப் பள்ளிக்கூடங்களாக ஏற்படுத்தி வருகிறார்களல்லவா? இது வரையில் ஏற்படுத்தியுள்ள மாதிரிப் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டடங்கள் அமைத்து, தகுந்த உபாத்தியாயர்களை நியமித்து நடத்தி வருகின்றார்கள். சில நாளைக்கு முன் கொருக்குப் பேட்டையில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தை முனிசிபல் கமிஷனராகிய பி. தியாகராஜ செட்டியார் அவர்கள் திறந்தார்கள். அன்றையதினம் பெரிய உற்சவம் கொண்டாடப்பட்டது. இன்ஸ்பெக்டர் பிரணதார்த்திஹரி ஹரஐயர் அவர்களும், சப் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் என்-

சாமிநாத ஐயர் அவர்களும் வந்திருந்தார்கள். கார்ப்பரேஷன்காரர் மாதிரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதன் கருத்து இன்னதென்றும், அந்தப்பேட்டையிலுள்ள பிள்ளைகளை நன்றாகப்படிப்பித்து அவர்களை நல்ல வழியில் பழக்குவதற்குப் பெற்றோர்கள் செய்யவேண்டிய காரியங்கள் இன்னவென்றும் தியாகராஜ செட்டியார் அவர்களும் இன்ஸ்பெக்டர் அவர்களும் விரித்துக் கூறினார்கள். அன்றையதினத்து உற்சவம் சிறப்பாய் நடந்தேறியது.

* * * * *

சென்னைச் சித்திர கலாசாலையின் 1913-1914-வருஷத்து ரிபோர்ட்டு வெளியாகியிருக்கிறது. அதைப்படிப்பதனால் வெளியாகிற விஷயங்கள் நம்முடைய மனதை வருத்தத் தக்கவைகளாய் இருக்கின்றன. லலித கலைகள் பயில்வதில் இந்தியர்கள் சிரத்தையில்லாதவர்களாய் இருக்கிறார்களென்று அந்த ரிபோர்ட்டுகளினால் விளங்குகின்றது. சித்திரமான கைத்தொழில் வேலைகளை மேற்கொள்ளுவதில் நம்மவருக்கு ஊக்கமில்லை; முக்கியமாய், பொதுப் பயிற்சியும் புத்தி விரிவுமுள்ள ஜாதியர்கள் இந்தத் துறைகளில் இறங்குவதேயில்லை. கண்ணுக்கும் மனதுக்கும் அழகானது இன்னதென்று தெரிந்துகொள்ளத் தக்க பயிற்சியை இந்தப் பள்ளிக்கூடம் உண்டாக்குகின்றது. அப்படிப்பட்ட இனிமையான வஸ்துக்களை செய்யவல்ல வேலைக்காரர்களையும் சித்தமாக்குகின்றது. ஆயினும் எப்படிப்பட்டவர்கள் மேற்கொண்டால் இந்தக் கலைகளுக்குக் கௌரவமும் மரியாதையும் மதிப்பும் அதிகரிக்குமோ அப்படிப்பட்டவர்கள் வந்து படித்துத் தேறாததனால், அந்தப் பள்ளிக்கூடம் செய்துவரும் காரியம் சிறந்து ஓங்காமலிருக்கின்றது. இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து கலை கற்றுத்தேர்ந்து உலகத்தில் ஜீவிக்கப்போகும் தொழிலாளிகளை அன்புடன் ஆதரித்துச் சம்மானிப்பார் இல்லை. இந்த நிலைமை மாறி ஜனங்கள் இவ்விஷயத்தில் சிரத்தைகொண்டு லலிதக் கலைப்பயிற்சியினால் உண்டாகத்தக்க நன்மைகளையெல்லாம் அனுபவிப்பார்களென்று நம்புகிறோம். இந்தியக்கலைகளை அபிவிருத்திசெய்வது இந்தப் பள்ளிக்கூடத்தின் முக்கியமான கருத்தென்று நம்புகிறோம். ஆனால், படிப்பும் பயிற்சியுமுள்ள இந்தியர்கள் தம் நாட்டுக்கலைகளை ஆதரிக்காவிட்டால் அவை வளருவதெப்படி? இந்தியாவிற் செய்த நல்ல இந்திய வேலைப்பாடுகளைக்கண்டு சந்தோஷித்து வாங்காமல் ஐரோப்பியவேலைப்பாடுகளை அநேகர் வாங்கி



ஆதரிக்கிறார்கள்; இது தவறு என்று மேற்சொல்லிய சித்திரகலாசாலைத் தலைவர் அபிப்பிராயப் படுகிறார்.

* * * * *

பெர்காம்பூர் கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூலில் ஹையர் எலிமென்டெரி டிரெயினிங் கிளாஸ் என்று ஏற்படுத்துவதற்குக் கவர்ன்மெண்டார் அனுமதிகொடுத்திருக்கிறார்கள். இது கஞ்சம் ஜில்லாவுக்கு அவசியமானதே.

* * * * *

சென்னையில் இளைஞர்களின் கிறிஸ்தவ சங்கம் (Young Men's Christian Association) என்னும் ஒரு சங்கம் இருக்கின்றது. அதில் பிள்ளைகளுக்கு வேண்டிய அனுகூலங்கள் அநேகம் அமைக்கப்பட்டிருக்கின்றன. சாப்பாடு, விடுதி, ஆட்டங்கள், உபந்நியாசங்கள், மாணவர் சங்கங்கள், வர்த்தக வியாபாரங்களுக்கும் ஆபீசுகளில் வேலைகளுக்கும் வேண்டிய பல வகை யோக்கியதைகளைக் கற்பிக்கும் பாடங்கள் முதலியன அங்கே ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கத்தார் சரீரப்பயிற்சிக்கேற்ற முறைகளைக் கற்பிப்பதற்கு அதில் தேர்ந்தவர் ஒருவரை நியமிக்கப்போகிறார்களாம். அந்தக் காரியம் நடப்பதற்கு அனுகூலமாகக் கவர்ன்மெண்டார் வருஷம் ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ. 2760-வீதம் 5½-வருஷ காலம் கொடுப்பதற்கு இசைந்திருக்கிறார்கள். பிள்ளைகளுக்குச் சரீரப்பயிற்சி உண்டாகும் பொருட்டுக் கவர்ன்மெண்டார் இந்தச் சங்கத்தின் மூலமாக இவ்வளவு பெரிய தொகை செலவிடவேண்டியது அவசியமோ என்னும் சந்தேகம் அநேகருக்கு உண்டாகின்றது.

* * * * *

நெசவுத் தொழிலை அபிவிருத்திசெய்வதற்காக கவர்ன்மெண்டார் தேர்ந்த தொழிலாளிகள் சிலரைக்கூட்டி, ஊர் ஊராய் அனுப்பி அங்கங்கே உள்ளவர்களுக்குப் புது மாதிரியான வேலைகளைக் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இப்பொழுது தமிழ் ஜில்லாக்களில் அப்படிப்பட்ட நெசவு ஜமா ஒன்று சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அது போலவே தெலுங்கு ஜில்லாக்களில் சஞ்சரிப்பதற்கு ஒரு ஜமா அமைக்க வேண்டுமென்று கைத்தொழில் டைரக்டர் அவர்கள் சொல்லியதைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜமாவில் ரூ. 75 சம்பளமுள்ள சூப்ரென்டென்ட் 1, ரூ. 30 உள்ள மேஸ்திரி 1, ரூ. 20 உள்ள கூலி நெசவுக்காரன் 1, ரூ. 8 உள்ள சேவகன் 1, இருப்பார்கள். இங்

தப் பிரயத்தனத்தால் நம் நாட்டுக் கைத்தொழில்களுள் முக்கியமானதாகிய நெசவுத் தொழில் அபிவிருத்தியாகுமென்று நம்புகிறோம்.

* * * *

நம் நாட்டு மேல் கரையில் மாப்பிள்ளைமார் என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலார் வர்த்தகர்களாகவும் போர் வீரர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் படிப்பு அதிகமாக இல்லை. அந்த ஜாதிப் பிள்ளைகளுக்குக் கல்வித் திறமை உண்டாக்க வேண்டுமென்று பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டாருடைய முயற்சிக்கு அந்தச் சாதியார்களும் துணை செய்கிறார்கள். இப்பொழுது சில நாளைக்குமுன், கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு) என்னும்ஊரிலுள்ள பெரிய வர்த்தகர்களுள் ஒருவராகிய எம்-குன் ஹாமட் என்பவர் அவ்வூரிலுள்ள குட்டிச்சிரை மாப்பிள்ளைப் பள்ளிக்கூடத்திற்கு ரூ. 5000 செலவிட்டு ஒரு பெரிய கட்டடம் கட்டிக் கொடுத்தார். இப்படிப்பட்ட நற்காரியங்கள் செய்வதற்கு நம்மவர்கள் சமயம் வாய்த்த போதெல்லாம் முன் வருவார்கள் என்று நம்புகிறோம். கல்விப் பயிற்சிக்கு வேண்டிய சாதனங்களைச் செய்பவர்கள் நமது நாட்டுக்குப் பேருபகாரங்கள் செய்தவர்களாவார்கள்.

* * * * *

தமிழின் தற்கால நிலைமையைப் பற்றி டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தில் ஓர் உபந்நியாசம் செய்தார். அந்த உபந்நியாசம் நம்மவருக்கு இனிமையாகவும் ஆறுதல் பயக்கத்தக்கதாகவும் இருந்தது. ஆதிகாலம் தொடங்கித் தமிழ் இலக்கியங்களின் அபிவிருத்தியைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிக்கொண்டு வந்து, இக்காலத்திலும் தமிழ் நூல்கள் செழித்திருக்கின்றன என்றும் அவர் சொன்னார். உரைநடை மலிந்திருக்கிறது, ஆனால் நல்ல செய்யுள்கள் அரியனவாய் இருக்கின்றன என்பது அவருடைய கொள்கை. உரை நடைப் புத்தகங்கள் செழித்திருக்கின்றனவென்று அவர் கூறியது உண்மையே. ஆனால், நாம் கண்ட அளவில் அப்படிச் செழித்திருக்கும் புத்தகங்கள் பெரும்பாலும் நாவல்கள் என்னும் மாதிரியில் எழுதப்பட்டிருக்கின்றன. நாவல்களிலும், இளைஞர்கள் சிறுவர் சிறுமியர் படித்துக் குணங்கெட்டு நடைமாறித் தடுமாறுவதற்கு வழி காட்டத்தக்க அதமமான நாவல்கள் மலிந்திருக்கின்றன. தமிழ் நூல்கள் செறிந்திருப்பதற்கு இது அடையாளமாகாது. கலாசாலைச் சங்கத்தார் தமிழ்ப் பயிற்சிக்கு உதவி செய்யா விட்டாலும் தமிழ் இலக்கியங்கள் வளர்ந்தோங்குவது நிச்சயமென்றும், இனி 50 வருஷத்திற்குப் பிறகு இப்போது இருப்பதைவிட, தமிழ்ப் பாஷையும் இலக்கியமும் சிறந்து விளங்குமென்றும் அவர் கூறி



னார். மற்றும் பணப்பிரயோசனத்தைக் கருதாமல் தமிழ்ப் பாஷையின்மீது அபிமானங்கொண்டு தமிழர்கள் அந்தப் பாஷையைப் படித்து அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றுஞ் சொன்னார். அப்படிச் செய்தாலன்றி நமது பாஷை அபிவிருத்தி யாகுமென்று சொல்வதற்கு இடமில்லை. ஆனால், ஏழை ஜனங்கள் பாஷையின்மீது அபிமானம் பூண்டு அதை அபிவிருத்தி செய்ய முயலுவார்களா? அன்ன விசாரமில்லாத தமிழர்கள் அவசியமாய்ச் செய்யத்தக்க காரியம் பாஷா அபிவிருத்தியே.

* * * * *

சைதாப்பேட்டையிலுள்ள உபாத்தியாயர் கலாசாலையுடன் சேர்ந்த ஹைஸ்கூல் வகுப்புகளில் பாடஞ் சொல்வதற்கு, இதுவரையில் இருந்தது போல் அல்லாமல் பிரத்தியேகமான உபாத்தியாயர்களை நிலையாய் நியமித்திருக்கிறார்கள். இதனால் மாணவர்களுக்கு இதுவரையில் இருந்த அனனுகூலங்கள் நீங்கி நன்மை உண்டாகும். உபாத்தியாயர் கலாசாலையிலும் நல்ல சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள்; பௌதிக் சாஸ்திரங்களைக் கற்பிப்பதற்குச் சிறந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அந்தச் சாஸ்திரங்களைக்கற்று அவைகளை அனுபவமான விவகார வகைகளில் திருப்புவதற்கு வேண்டிய மாதிரியாக அந்தச் சாஸ்திரங்களில் உபாத்தியாயர்களுக்கு இனிப் பயிற்சி உண்டாகுமென்று நம்புகிறோம்.

* * * * *

ஸ்திரீகளுக்குக் கலாசாலைப் படிப்பு கொடுப்பிக்கும் பொருட்டு கவர்ன்மெண்டார் ஸ்திரீகள் கலாசாலை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் இப்பொழுது 40 மாதர்கள் படித்து வருகிறார்கள். இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய இந்தப் பாஷைகளெல்லாம் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் அங்கேயே இருந்து வாசிப்பதற்கு அனுகூலமாக அவர்களுக்குச்சாப்பாடும் விடுதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்தச் சாதியாருடைய ஆசாரப்படி சாப்பாடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஜூனியர் இண்டர் மீடியட் வகுப்பு மாத்திரம் இருக்கிறது. அதிலுள்ளவர்கள் தேறி வரவர பி. ஏ. வகுப்பு ஏற்படும். மேற் சொல்லிய மாணவர்களுள் இந்துக்கள் (பிராமணர் முதலானவர்கள்) சுதேச கிறிஸ்தவர்கள், மலையாளிகள், யுரேஷியர்கள் ஆகிய இவர்கள் இருக்கிறார்கள்.

* * * *

# THE MANUAL METHOD
# பிரத்தியக்ஷப் பிரமாணம்

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

இது வரையும் பிரத்தியக்ஷப் பிரமாணம் என்னும் விஷயத்தைப்பற்றிய சித்தாந்தத்தை எடுத்துச் சொன்னோம். இப்பொழுது அந்தச் சித்தாந்தத்தை விளக்குவதற்குச் சில உதாரணங்களை எடுத்துக்காட்டுவோம். அந்த உதாரணங்களைப் பள்ளிக்கூடங்களில் வழக்கமாய் இருக்கிற விஷயங்களிலிருந்து எடுத்துக்கொள்ளுவோம். எண்கணக்கையும் (Number work) இடக்கணக்கையும் (Space work) இவ்விடத்தில் எடுத்து விவரிப்போம். இந்தச் சமயத்தில் பள்ளிக்கூடத்துப் பாடமுறைகளை (Syllabus)ப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது. 37-ம் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிற மூன்று வகையான உதாரணங்களும் பள்ளிக்கூடத்துப் பாடமுறைகளில் இடம்பெற வேண்டுமல்லவா? பள்ளிக்கூடத்துக் கீழ் வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாதலால், முக்கியமாய் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியது அநுபவ கணிதமே (Practical arithmetic).

அநுபவ கணிதமாவது என்ன? அநுபவ கணிதமென்பது (1) பிள்ளைகளுக்குச் சிரத்தை உண்டாக்கக்கூடிய விஷயங்களைக் குறித்ததாயும், தினந்தோறும் விவகாரத்தில் அவர்களுக்கு எதிர்ப்படுகிற லாப நஷ்டங்களுக்குச் சம்பந்தப்பட்டதாயும் இருக்கவேண்டும்.

(2.) கட்டடவேலையும் அதில் அடங்கியிருக்கவேண்டும். அல்லது, ஏதாவது ஒரு விதமான படம் எழுதும் வேலை அதில் அடங்கியிருக்கவேண்டும்.



(3.) அந்தப் படிப்பு முறை கொஞ்சம் மட்டும் விஷயப் பொது உள்ளதாய் (Concentric) இருக்கவேண்டும். அதாவது, ஒவ்வொரு வகுப்புப் பிள்ளைகளுக்கும் போதிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் விஷயங்கள் ஒரேமாதிரியாய் இருக்கவேண்டும். முதல் வகுப்பில் ஒரு விஷயத்தையும், இரண்டாம் வகுப்பில் வேறுவிஷயத்தையும், இப்படியே வேறு வேறு வகுப்புக்களில் வேறு வேறு விஷயங்களையும் கொண்டு கற்பித்தால் பிள்ளைகளுக்கு ஒரு விஷயமும் நன்றாய்த்தெரியாமற் போம். ஆகையால் முதல் வகுப்பில் ஒரு விஷயத்தைப்பற்றிச் சில பொதுவான விஷயங்களைச் சொல்லவேண்டும்; இரண்டாம் வகுப்பில் அதே விஷயத்தைப் பற்றிச் சில அம்சங்கள் அதிகமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்படியே மேலே போகப்போக அந்த விஷயத்தைப் பற்றியே அதிகமாகச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்தால், பிள்ளைகளுக்கு அவைகளைக் கேட்பதற்குப் பிரியமுண்டாகும். அவர்கள் அந்த விஷயத்தைப்பற்றி அநேக அம்சங்களைத் தெரிந்துகொண்டு தேர்ச்சி அடைவார்கள். அந்த விஷயத்தைப்பற்றிய குணதோஷங்களையெல்லாம் பொதுப்படச்சேர்த்து ஆலோசிப்பதற்கு இடம் உண்டாகும். இப்படிச் செய்தாலல்லாமல் பிள்ளைகளுக்குக் கணக்கில் சிரத்தையும் தேர்ச்சியும் உண்டாகா.

ஒரு வருஷம் முழுதும் பிள்ளைகளுக்கு, கூட்டல் கழித்தலையே சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால் அது அவர்களுக்கு இனிமையாய் இருக்குமா? விவகாரத்தில் லாபநஷ்டங்களைத் தெரிந்து கொள்ளுவதற்குப் போதுமான அநுகூலங்கள் அந்தக் கூட்டல் கணக்கினாலேயே மாத்திரம் உண்டாகாவாதலால், அதில் பிள்ளைகளுக்குச் சிரத்தைவாராது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்னும் நான்கு விதமான செய்கைகளையும் ஒரே காலத்தில் அவர்களுக்குப் போதித்து அவைகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளுக்கு எவ்வளவு உதவியாயிருக்கிற

தென்பதையும், ஒன்று இல்லாவிட்டால் மற்றொன்று மாத்திரம் விவகாரத்தில் பயன் படாதென்பதையும் அவர்களுக்கு முதன் முதலிலேயே எடுத்துக்காட்டவேண்டும். அப்படிச் செய்வதனால் கணிதசாஸ்திரம் பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கு நாம் போடும் அஸ்திபாரம் விசாலமாய் இருக்கும்; தினந்தோறும் விவகாரத்தில் அவர்களுக்குத் தோன்றுகிற லாப நஷ்டக் கணக்குகளை அவர்களே செய்துபார்த்துக்கொள்ள பிரயத்தனப் படக்கூடும். மேற்சொல்லிய நான்கு பிரதம விதிகளையும் முதலிலேயே அவர்களுக்குக் கற்பிப்பதனால் அவர்கள் கணக்குச் செய்யப்பழகுவதற்கு அதிக அவகாசம் உண்டு. அப்படியில்லாவிட்டால், கணிதசாஸ்திரமென்பது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாமற்போம். அது அவர்களுடைய விவகாரத்திற்கு உபயோகப்படாது; அவர்கள் குருட்டுத் தனமாக எண்களைப்போட்டுக் கணக்குச் செய்து காலங் கழிப்பார்கள்.

இடக் கணக்கும் (Space work) மேலே சொல்லியபடியே விஷயப் பொது முறைப்படி (Concentrically) கற்பிக்கவேண்டும். அதாவது, இடக்கணக்குகள் சொல்லிக் கொடுப்பதிலும் அந்தந்த வகுப்புப் பிள்ளைகளுக்குத் தகுந்தபடி அதிகமான சங்கதிகளையும் உபயோகங்களையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். முதல் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதும், நான்காம் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதும், இடக்கணக்கே யென்றுசொன்ன போதிலும், அந்தக் கணக்கின் விவரங்களும் உபயோகங்களும் முதல் வகுப்புப் பிள்ளைகளுக்கு உபாயமாய்ச் சொல்லவேண்டும், நான்காம் வகுப்புப் பிள்ளைகளுக்கு அதிகமாய்ச் சொல்லவேண்டும்.

எண் கணக்குடன் (Number work) கூடவே இடக் கணக்கையும் (Space work) கற்பிக்கவேண்டும். எண் கணக்கை வேறாகவும் கற்பிக்கக் கூடாது. ஏனென்றால், போதக சிகாமணியாகிய



புரோபெல் என்பவர் சொல்லியதுபோல, இட சம்பந்தமான எண்ணங்களும் ஒன்றோடொன்று இணை பிரியாமல் இசைந்திருக்கின்றன; அவைகள் இரண்டையுஞ் சேர்த்தே பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும்.

கணக்கில் விவகரிக்கப்படும் எண்களெல்லாம் பெரும்பாலும் நாம் கண்ணால் பார்த்துக் கையினால் தொட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய கெட்டியான வஸ்துக்களாகவே இருக்கின்றன. அவை இருப்பதற்கும் இடம் வேண்டுமல்லவா? அந்த வஸ்துக்கள் இருப்பதற்கும், அவைகளை வைப்பதற்கும் கையாளுவதற்கும் இவ்வளவு இடம் வேண்டும் என்று பிள்ளைகள் தெரிந்து கொள்ளுவதனால், அவர்களுக்கு அந்த வஸ்துக்களைப்பற்றித் தெளிவான எண்ணங்கள் உண்டாகுமல்லவா? இடக்கணக்கும் எண் கணக்கும் தெரியாவிட்டால் பிள்ளைகளுக்கு எதைப்பற்றியும் திட்டமான அறிவு ஏற்படாது. எண்கணக்கு மாத்திரமே யல்லாமல் இடக்கணக்கிலும் அவர்கள் கொஞ்சமாவது பழக்கப்பட்டிருக்க வேண்டும்.

கணக்குச் செய்கையில் உபயோகிக்கும் எண்களினால் குறிக்கப்படும் வஸ்துக்களைப் பற்றி பிள்ளைகளுக்குத் திட்டமான அபிப்பிராயம் இருக்க வேண்டியது முக்கியம். அந்த வஸ்துக்களின் பரிமாணமும், அவைகளுக்கு வேண்டிய இடம் இவ்வளவென்பதும் பிள்ளைகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். இடக்கணக்கு தெளிவாய் மனதில் பதிந்திருக்கும் பிள்ளைகள் எண் கணக்கைச் சரியாய்ச் செய்வார்கள். இதன் உண்மை சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். எச். தாம்ஸன், பி. ஏ.,

# STORY-TELLING

## கதை சொல்லல்

(2-வது சஞ்சிகை 48-ம் பக்கத்திலுள்ள வினாக்களுக்கு விடை.)

1. கதை சொல்லும்போது உபாத்தியாயர்கள் இடையிடையே கேள்விகள் கேட்கலாகாது. கதையை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்களா வென்று பார்ப்பதற்குச் சிலர் கேள்விகள் கேட்கிறார்கள். கதை சொல்லும்போது உற்சாகத்தோடும் அபிநயத்தோடும் சொல்லுவதினாலேயே கதையை ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்கள். அவ்வாறு இல்லாமல் சாதாரணமாய்ச் சொல்வதினால் கதையைப் பிள்ளைகள் கவனியாதிருப்பார்கள், அதன் பிறகு கேள்விகள் கேட்டால் தெரியாமல், அப்பாடத்தில் வெறுப்புறுவார்கள்.

2. சுமார் 8-9 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்குச் சிறிய கதைகளும், மேலே குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்குச் சற்றுப் பெரிய கதைகளுமாய்ச் சொல்லலாம். ஏனெனில், குறிப்பிட்ட வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்குப் பெரிய கதைகளைச் சில நிமிஷங்கள் அதிகமாய்ச் சொல்வதினால் சலிப்புண்டாகி வேறு ஏதாவதொரு விஷயத்தைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். சிறு கதைகளைச் சொன்னால் ஆவலோடு கேட்டு ஆநந்திப்பார்கள். குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்குச் சிறிய கதைகளைச் சொன்னால் அலக்ஷியமா யெண்ணி, "என்ன ஸார், இது ஒரு கதையென்று சொல்லுகிறீர்கள். இன்னும் சற்றுப் பெரிய கதை சொல்லுங்கள்" என்று சொல்வதைப் பார்க்கலாம். ஆதலால் வயதிற்குத் தகுந்தபடி கதைகள் சிறியதாயும் பெரியதாயும் இருத்தல் நலம். இதிலும் இந்துதேச சரித்திரக் கதைகளையும், இந்துமதப் பிள்ளைகளாயிருந்தால் இராமாயணம், பாரதம் முதலியவைகளிலுள்ள (ஆரியமத உபாக்கியானம்) நீதிக் கதைகளையும் சொல்வது உசிதம்.

3. ஒரு விஷயமடங்கிய கதையாயிருந்தால் அவ்வொரு விஷயத்தில் அறிவைச் செலுத்தித் தங்கள் மனமாகிய நிலத்தில் விஷயமாகிய விதையை ஊன்ற வைப்பார்கள். பல விஷயங்களடங்கிய கதையைச் சொன்னால் பல விஷயங்களிலும் அறிவு ஈடுபட்டு இன்ன விஷயத்தைத் தான் மனதில் வைப்பதென்பது தோன்றாமல் சொற்ப மூளையினாலுண்டாகிய சொற்ப அறிவானது குழப்பத்தை அடைந்து விடும்.



4. வர்ணனைகள் நேரேயிருக்கும் பொருள்களைப் பார்த்துச் சொல்லாததாலும், சிறுவர்களுக்கு எந்த விஷயத்தையும் பொருளைக் காட்டாமல் சொல்வதைவிட, காட்டிச் சொல்வதால் விஷயத்தை நன்றாய்க் கவனிப்பாராதலாலும் ஏற்றதல்ல.

5. மங்களம், உற்சாகம், சந்தோஷம் கொடுக்கும்படியான முடிவுடைய கதைகளா யிருந்தால் பிள்ளைகள் ஆனந்தமாய் மேலும் மேலும் கதைகேட்கப் பிரியப்படுவார்கள். முடிவில் துயரத்தை யுண்டுபண்ணும்படியான கதைகளைச் சொன்னால் பிள்ளைகளும் துயரத்தை யடைந்து உற்சாகமின்றி அடுத்து நடக்கும் பாடங்களைக் கவனிக்காமலிருக்கவும் நேரிடும்.

6. சுமார் 10-வயதுள்ள ஒரு சிறுமியைக் கதை சொல்லச் சொன்னதில், அச்சிறுமிக்கு யான் கதைகள் போதித்திராவிடினும் சொல்லச் சொன்னவுடன் சாதாரணமாகப் பேசுவதைவிட மெதுவான குரலோடு கதையைச் சுருக்கமாய் முக்கிய அம்சங்களை மட்டும், நிறுத்தியும் தெளிவாகவும் கூறினாள். ஆனால் அதன் முடிவைக் கூறாமல் கதையை முடிக்க, யான் அக்கதையின் முடிவைச்சிறிது எடுத்துரைக்கப் பிறகு தானே கதையைப் பூர்த்திசெய்தனள்.

[illegible] இவைகள் எனது அபிப்பிராயமாகும். ஏனைய ஆசிரிய நண்பர்களின் அபிப்பிராயத்தையும் எதிர் பார்க்கின்றேன்.

P. பரிமணப்பல்லவராய்,
[illegible] உபாத்தியாயர்
போர்டு கேர்ல்ஸ் ஸ்கூல்,
மண்ணச்சநல்லூர்
திருச்சி தாலூகா.

குறிப்பு:—இவ்விடைகளைப் பற்றியதோர் ஆராய்ச்சி அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

# STORIES FOR THE YOUNG

# சிறுவருக்கான கதைகள்

## 1. TAMING OF THE SHREW

### பிடாரியைப் பெண்டு கொண்டது.

---

ஷேக்ஸ்பியர் இயற்றிய "டேமிங் அவ் தி ஷ்ரூ" என்னும் நாடகத்தின் சுருக்கமான வசனம்.

ஐரோப்பாக் கண்டத்தின் தெற்கே இற்றலியெனும் தேசத்தில், பாடுவா யென்ற நகரத்தில் பாப்டிஸ்டா எனவொரு தனவந்தன் இருந்தான். அவனுடைய மூத்த குமாரத்திக்குக் காதரீன் என்று பெயர். அவள் வெகு கோபிஷ்டி; வாய் பெரியது; ஒருவருக்கும் அடங்காதவள்; இதரர்களைத் தூஷிக்கும் சக்தியில் நிகரற்றவள். இவ்வித லக்ஷணங்களமைந்த பிடாரியைத் தகுந்த ஸ்திதியிலிருக்கும் ஸ்ரீமான் எவன் விவாகம் செய்ய ஸம்மதிப்பான்?

இந்தக் குணவதிக்குத் தங்கை யொருத்தி யிருந்தாள். அவள் பெயர் பியாற்றிஸ் தமக்கைக்கு அவள் நேர் விரோதம். அழகில் ரம்பை; கடுஞ்சொல்லென்பது அவள் வாயில் வராது; ஸதா குளிர்ந்த புன்னகையோடு கூடிய முகம்; அடக்கம் ஒடுக்கம் அதிகம்; தன்னை நாடி வந்தவர்களிடத்தில் அதிக உபசாரம். இவளைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்படாதவரில்லை. ஆனால், மூத்தவளான காதரீனுக்கு விவாகம் ஏற்பட்டாலொழிய பியாற்றிஸைக் கலியாணம் செய்து கொடுப்பதில் பிதா ஸம்மதிப்பதில்லை.

காதரீனும் அழகுதான். தவிர, அவளுக்கு நிறைய ஸ்ரீதனம் கொடுப்பதாகவும் தகப்பன் சொன்னான். இவ்வளவிருந்தும், வாலிபர்களுக்கு அவள் மேல் ஆசை ஒரு சிறிதும் இல்லை. இப்படி யிருக்குங்காலத்தில், பெட்ரூகியோ என்று ஒரு பெரிய மனுஷன் அவளைவிவாகஞ் செய்ய உடன்பட்டான். அவன் வெகு திடபுத்தியுள்ளவன்; தமாஷாய்ப் பேசுவான்; கோபமென்பது ஸாதாரணமாய் அவனுக்கு உண்டாவதில்லை; மிகபுத்திசாலி; நிதான முள்ளவன்.

பெட்ரூகியோ, பாப்டிஸ்டா வண்டை போய், அவளுடைய நல்ல மாதிரி, அடக்கம் ஒடுக்கம், சற்குணம், சாந்தம், நயம், கோசாபுத்தி எல்லாம்



கேட்டிருப்பதாயும், அதனால் அவளைக் கலியாணம் செய்துகொள்ளத் தமக்கு ஸம்மதமென்றும் சொன்னான். பிதா பெண்ணை விவாகம் செய்துகொடுக்க எவ்வளவு ஆசைப்பட்டவனாயினும், தப்பு அபிப்பிராயத்துடன் அவளைக் கலியாணம் செய்தால் அதனால் பின் அதிகமாகக் கஷ்டம் உண்டாகுமென்று பயந்து, அவளுடைய இயல்பான குணத்தை எடுத்து அவனிடத்தில் விஸ்தரித்தான். அதே ஸமயத்தில், காதரினுக்குச் சங்கீதம் கற்பித்துக் கொண்டிருந்தவர் அவர்கள் மத்தியில் ஓடி வந்து, தான் காதரின் பாடிய பாட்டில் பிசகு கண்டு பிடித்ததாகவும், அது பிசகல்லவென்று சொல்லி வாத்தியத்தால் தன் தலையில் அவள் மோதிக் காயப்படுத்திவிட்ட தாகவும் கூறிக் கோவென்று முறையிட்டான். பெட்ரூகியோ, இதைக்கேட்டு சந்தோஷித்து "ஸபாஷ், இவள் தான் ஸ்திரீ, ஆடுமாதிரி எதற்கும் தலையசைப்பதுதான் அழகோ? ஒரு பெண் பாட்டுப்பாடும்போது, கொஞ்சமும் மரியாதையில்லாமல், அவள் பாட்டில் பிசகு கண்டு பிடிக்கும் காட்டாளை என்ன தான் செய்யக்கூடாது? இவளுடைய குணாதிசயங்களைக் கேட்கக் கேட்க, அவள்மேல் எனக்கு ஆசை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அவளுடன் பேச ஆவலுறுகிறேன். நான் பணக்காரன்; என் ஸொத்துக்கு நானே எஜமானன்; உம்முடைய கன்னிகையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்பதின் பொருட்டு அடிக்கடிவர எனக்கு அவகாசமில்லை. நான் அவளைக் கலியாணம் செய்துகொண்டால், என்ன ஸ்ரீதனம் நீர் கொடுப்பீர்? என்று கேட்டான்.

இந்த அவசரம் பாப்டிஸ்டாவுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் அல்லவா? இவரைப் போகவிட்டால், காதரினைக் கலியாணம் செய்துகொள்ள யமன்தான் வரவேண்டும்! இதனை நன்றாய்த் தெரிந்தவனாதலால், பிதா தான் உடனே ஐயாயிரம் பவுன் கொடுப்பதாகவும், தன்னுடைய மரண காலத்தில் தன் ஆஸ்தியில் பாதி அவனுக்குக் கொடுப்பதாகவும், சொன்னான். பெட்ரூகியோ இதற்குச் சம்மதிக்க, தகப்பன் பெண்ணண்டைபோய் நடந்த வர்த்தமானத்தை யெல்லாம் சொன்னான்

இதற்குள் பெட்ரூகியோ தனக்குள் "இனி இவளைச் சரியாய் ஸமாளிக்க வேண்டுவது தான் பாக்கி. அதற்கு வெகு யுக்தி வேண்டும், வந்தவுடன் அவள் கோபித்துப் பேசினால், குயில்போலப் பாடுகிறாயே என்று சொல்லு

வேன். அவள் முகத்தைச் சிணுக்கினால், பனி விழுந்த ரோஜா மலர்போலிருக்கிறாயே என்பேன்; ஒன்றும் பேசாமலிருந்தால், பேச்சில் இவ்வளவு கெட்டிக்காரியா என்பேன்; என்னை விட்டுப்போ என்றால், கோபமே இல்லாமல் ஒருவார காலம் அவளுடன் இருக்கச் சொன்னால் எவ்விதம் சந்தோஷிப்பேனோ அப்படியே சிரித்துக் கொண்டிருப்பேன்" என்று சொல்லிக் கொண்டான்.

இப்படிப் பெட்ரூகியோ ஆலோசித்துக் கொண்டிருந்தபோது, காதரின் வெகு கெம்பீரமாய் வந்தாள்.

**பெட்ரூகியோ:**—உன்னைப் பார்க்க வெகு ஆசைப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறேன், கேட். அதுதான் உன் பெயர் என்று கேள்விப்படுகிறேன்''

கேட் என்பது அவளுடைய செல்வப் பெயர். அதிகப் பழக்கமாயிருப்பவர்கள் அந்தப் பெயர் சொல்லி அழைக்கலாம். புதிதாய் வந்த மனிதன், வருகிறதற்குள், இவ்வளவு ஸ்வாதீனமாய்ப் பேசவாரம்பித்தால், நாளாக நாளாக என்னதான் செய்வானோ? இப்படி அவளை அழைத்தது அவளுக்கு வருத்தமாய் இருந்தது.

**காதரின்:**—என்னுடன் பேசுகிறவர்கள் காதரின் என்றுதான் சொல்வார்கள்.

**பெட்ரூகியோ:**—நீ சொல்வது பொய். கேட் என்றும், செல்ல கேட் என்றும், கேட் பிடாரி என்றும் பலவிதமாய் உன்னை அழைக்கிறார்கள். நான் உன்னை சௌந்தர்யக் கேட் என்பேன். என்னை விவாகம் செய்து கொள்வாயா?

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் பெண்ணுடைய தகப்பன் வந்துகொண்டிருந்தான். அதன்மேல்,

**பெட்ரூகியோ:**—என் அருமைக் காதரின், நம்முடைய விவாகத்துக்கு உன் பிதா சம்மதித்துவிட்டார். ஸ்ரீதனம் இவ்வளவு கொடுப்பேனென்றும் சொல்லிவிட்டார்.—உன் மனஸு எப்படியிருந்தாலும், நான் உன் புருஷன், நீ என்னுடைய மனைவி. நீ மறுத்துப் பேசுவதில் பிரயோஜனமில்லை. நீ கெட்டிக்காரி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தச் சமர்த்தை இப்போது காட்டி உன் ஸம்மதத்தைச் சொல்.



**பெட்ரூகியோ:**—(பாப்டிஸ்டாவை நோக்கி) மாமா, உம்முடைய பெண் என்னிடத்தில் அதிகப் பிரியமாயிருக்கிறாள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தம் வைத்துவிட வேண்டுமென்று வெகுவாய்க் கேட்டுக் கொள்ளுகிறாள்.

**காதரின்:**—அப்பா, இவர் சொல்லுவது அஸத்தியம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை இவரை நான் கலியாணம் செய்து கொள்வதைவிட, இவரைத் தூக்கிக் கொலை புரிந்தால் எனக்குச் சந்தோஷமாயிருக்கும். இந்தப் பைத்தியக் காரனையோ எனக்குப் புருஷனாகத் தேடுகிறீர்?

**பெட்ரூகியோ:**—மாமா, காதரினுடைய கோபத்தை லக்ஷியஞ் செய்ய வேண்டாம். உமக்கு எதிரே அவள் ஸம்மதிப்பதுபோல் இருக்கமாட்டாளாம். தனியாய் இருக்கும்போது, எவ்வளவு கொஞ்சி என்மேல் ஆசையாயிருக்கிறாள். ஸ்திரீகளுக்குள் இவள் மாற்றில்லாத் தங்கம், விலையில்லா மாணிக்கம்.

**பெட்ரூகியோ:**—(காதரினை நோக்கி) கேட், நான் வெனிஸ் பட்டணத்துக்குப்போய் உன் அந்தஸ்து, அழகு, குணம், மேன்மை எதற்கும் தகுந்தபடி உயர்ந்த உடுப்புகள் வாங்கி வருகிறேன்.

**பெட்ரூகியோ:**—(பாப்டிஸ்டாவை நோக்கி) மாமா, கலியாணப் பத்திரிகை சீக்கிரம் எல்லாருக்கும் எழுதிவிடும்.

இப்படிச் சொல்லிவிட்டுப் பெட்ரூகியோ போய்விட்டான்.

(இன்னும் வரும்)

S. V. Rangaswami Iyengar B. A.,
Late Vice-Principal, Zamorin's College, Calicut.

குறிப்பு:—ஷேக்ஸ்பியர் கதைகள் எல்லோருக்கும் பெரும்பயனை விளைக்கும் என்னும் அபிப்பிராயத்தினால் இக்கதை வெளியிடலாயிற்று.

# NEW INDIA & SADGURU

## நியூ இந்தியாவும் சற்குருவும்

## NEW INDIA DATED 9TH SEPTEMBER 1914.

*The Sadguru, a high class Tamil monthly for Elementary School-masters, edited by Mr. C. Somasundaram, Tamil Pandit, St.Bede's High School. (N. Venkatarayalu and Son, 87, Ramasawmy Street, Madras. Annual subscription Re. 1. Postage free.)*

We have to hand the first two numbers (July and August) of the above mentioned journal. Judging from their contents, the "Sadguru" ought to prove a great boon to those for whom it is intended, as it aims before all things at stimulating thought, by providing certain facilities for the exchange of ideas between teachers. Educational notes and news, not only of Indian, but also of foreign elementary education, besides reviews of books, will form a special feature of the journal. The fact that **Mr. M. S. H. Thompson, B. A.,** Assistant Inspector of European and Training Schools—an excellent Tamil Scholar—is a contributor to the "**Sadguru**" shows what is presented in this new monthly.................. We wish the little journal every success.

இந்தியாவில் கல்விப் பயிற்சிக்காகத் தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே ஒப்புவித்து உழைத்துவரும் சாரதையின் திருவருள் பெற்றுள்ள **ஆனிபெஸண்டு** அம்மை (Mrs. Annie Besant) நடத்திவரும் "**நியூ இந்தியா**" என்னும் தினவர்த்தமான பத்திரிகையில் நமது 'சற்குரு'வைப்பற்றி 1914 செப்டம்பர் 9-ஆம் தேதியில் அவ்வம்மை பின்வரும் அபிப்பிராயத்தைப் பிரசுரித்திருக்கிறார்கள்:—

"......இது எவர்களுக்காகப் பிரசுரிக்கப்படுகிறதோ அவர்களுக்குப் பெரிய சாதனமாயிருக்கும். ஏனெனில், அதனாலுண்டாகும்நன்மைகள் பலவற்றுள், உபாத்தியாயர்கள் கல்வி கற்பிக்கும் முறைகளைப் பற்றி அவர்கள் ஆலோசிக்கும்படி செய்வதல்லாமல், அவரவர்களுடைய அபிப்பிராயங்களை மற்றவர்கள் தெரிந்துகொண்டு நன்மை யடைவதற்கும் இடங் கொடுக்கின்றது. இது உபாத்தியாயர்களுக்கு முக்கியமான சகாயம். மற்றப் பத்திரிகைகளில்இல்லாத விசேஷ விஷயமொன்று இந்தப் பத்திரிகையில் காணப்படுகின்றது. அதாவது, எலிமெண்டரி படிப்புச் சம்பந்தமாய் இந்தியாவில் நடக்கும் விஷயங்களையும் அன்னிய தேசங்களில் நடக்கும் விஷயங்களையும் இந்தப் பத்திரிகை எடுத்துத் தொகுத்துத் தெரிவிக்கின்றது. அதுவுமல்லாமல் அப்போதைக்கப்போது பிரசுரமாகும் புத்தகங்களை ஆராய்ந்து அவைகளிலடங்கிய விஷயங்களை விளக்குகின்றது. யுரோப்பியன் ட்ரெயினிங் ஸ்கூல்களுக்கு அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டராகிய எம். எஸ். எச். தாம்ஸன் துரையவர்கள் இந்தப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்து வருவதனாலேயே இதில் எப்படிப்பட்ட விஷயங்கள் வெளிவரும் என்பது தெளிவாகின்றது. அவர் தமிழில் வல்லவரென்பது எல்லாருக்குந் தெரிந்தேயிருக்கிறது. ......இந்தப் பத்திரிகை செழித்து வளர்ந்தோங்குமாக."

# DICTIONARY DRILL

## அகராதி பார்க்கப் பழகல்

அகராதி, நிகண்டு, அபிதானகோசம் முதலியவற்றைப் பார்ப்பதற்குத் தமிழ் நெடுங்கணக்கில் (Tamil alphabet) உள்ள எழுத்துக்களின் முறைவைப்பினை அதாவது வரிசைக் கிரமத்தினை அறிந்திருப்பது அதிக அனுகூலத்தைத் தரும். அகராதியில் வார்த்தைகளெல்லாம், எழுத்துக்களின் ஒழுங்கினுக் கேற்பக் கிரமப்பிரகாரம் அடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை அறிவிப்பதோடு ஒவ்வொரு வார்த்தையும் அகராதி செய்யப்பட்டிருக்கின்றது என்பதனையும் சிறுவர்களுக்கு அறிவிக்கவேண்டும். உதாரணமாக, அகராதியில் 'அரசன்' என்னும் பதத்திற்குப் பிறகு 'ஆடு' என்னும் பதமும், 'ஆடு' என்னும் பதத்திற்குப் பின் 'இலை' என்னும் பதமும் அடுக்கப்படவேண்டியது கிரமமேயானாலும் 'அரசன்' என்னும் பதத்திற்குப் பின் வரும் பதங்களில் 'அரசாட்சி,' 'அரசி' 'அரசு' என்னும் பதங்களை நம்மனம்போல் அடுக்கலாகாது. 'அரசன்' என்பதற்குப்பின் 'அரசாட்சி' என்னும் பதமும், அதற்குப் பிறகு 'அரசி' என்னும் மொழியும், அதற்குக் கீழே 'அரசு' என்னும் வார்த்தையுமே வரல்வேண்டும். முதல் 'அரசன்' இரண்டாவது 'அரசு,' மூன்றாவது 'அரசாட்சி,' நான்காவது 'அரசி' என்றாவது வேறு விதமாகவாவது அடுக்கக்கூடாது. இப்படி அடுக்கக்கூடாது என்பதற்குக் காரணமும் மேலே சொன்னபடி தான் அடுக்கப்படவேண்டும் என்பதற்குக் காரணமும் அவ்வார்த்தைகளின் இரண்டாவது மூன்றாவது நான்காவது என்னும் எழுத்துக்களைக் கூர்ந்து நோக்கத் தெரியவரும்.

சிறுவர்கள் தாம்விரும்பிய பதங்களைக் காலதாமதமின்றிக் கண்டு பிடிக்க, அதற்குரிய மார்க்கத்தினை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். அகராதி பார்க்கப் பழகுஞ் சிறுவர்களுக்கு எழுத்துகளின் முறைவைப்பு (Arrangement) நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் அம்முறைவைப்பினை நன்கறிந்திருப்பார்களாகில் நினைத்த வார்த்தையைப் பார்ப்பதில் அதிகக் காலக்கழிவு உண்டாகாது என்பது திண்ணம்.

முறை:—‘அ’ கரம் முதல் ‘ஔ’ காரம் வரையிலுள்ள எழுத்துக்களை ஒப்பிக்கச் செய்தல். மறுபடியும் அவைகளைத் தலைகீழாக ஒப்பிக்கச் செய்தல். அப்படியே ‘க’ கரம், ‘ங’ கரம், ‘ச’ கரம், ‘ஞ’ கரம் முதலியவற்றை ‘கௌ,’ ‘ஙௌ,’ ‘சௌ,’ ‘ஞௌ’ வரையில் ஒப்பிக்கச் செய்வதும் அவைகளைத் தலைகீழாக உரைக்கக் கேட்பதும்.

சிறுவர்கள் அம்முறையினை அறிந்திருக்கும் நிலைமையினைக் கண்டுபிடிக்கப் பின் வருமாறு கேள்விகள் கேட்கலாம்; அக்கேள்விகள் விரைவாக அறிந்து பதில் சொல்லுந் தன்மையை யுண்டுபண்ணும்.

‘தே’ க்குப் பிந்தியதெது? முந்தியதெது? அதற்கு முன்னெழுத்தெது? ‘மை’ ‘போ’ என்பவற்றில் எது முன்னிருக்க வேண்டியது? எது பின்னிருக்க வேண்டியது? எந்தெந்த வெழுத்துகளுக்கிடையில் ‘ஞை’ இருக்கிறது?

பிறகு அடியிலிருக்கும் அட்டவணையைக் காட்டி, தடித்துக்காணப்படாத சிறு எழுத்துக்கள் வார்த்தைகளில் முதலெழுத்தாக வரமாட்டா; அவைகளை முதலெழுத்தாகக்கொண்டு வார்த்தைகள் தோன்றமாட்டா என்றறிவிக்கவேண்டும். பின்னர், தடித்துக் காணப்படும் எழுத்துக்களை யெல்லாம் எண்ணும்படி செய்ய வேண்டும். எண்ணியான பிறகு 104-எழுத்துக்கள் தாம் முதலெழுத்துக்களாக நின்று வார்த்தைகளை உண்டு பண்ணுபவை என்றும், அந்த 104-எழுத்துக்களை முதலாகக்கொண்ட வார்த்தைகளுக்குத் தான் அகராதியில் இடமுண்டு என்றும் அவர்கள் ஒருவாறு உணரும்படி செய்யவேண்டும். சிறிதாகக் காணப்படும் எழுத்துக்களைக் கொண்ட வார்த்தைகள் இல்லையென்பது அவர்கள் மனத்தில் நன்றாகப் பதிவதற்கு ‘டம்’ ‘பம்,’ ‘லட்டு,’ ‘லாடம்’ முதலிய தமிழ்ப் பதமல்லாப் பதங்களைச் சொல்லி அவைகள் அகராதியில் இல்லை என்று அகராதியைத் திறந்து காட்டி உண்மைப்படுத்தவேண்டும். மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் 104-என்பதையும் முதலாகாத எழுத்துக்கள் 143-என்பதையும், சிறுவர்களுக்குப்போதிக்கு முன்னர் உபாத்தியாயர் நன்கறிந்திருக்க வேண்டும். அவை சிறிது கடினமாகவே காணப்படும். உபாத்தியாயர் சற்று ஊக்கத்துடனும் தெளிவுற்ற மனத்துடனும் கவனிப்பாராயின் நன்கு புலப்படும். புலப்பட்டபிறகு மொழிக்கு முதலில் வாராத எழுத்துக்களும் உண்டு என்னும் அளவுக்குச் சிறுவரறிய உபாத்தியாயர் சற்று ஊக்கத்துடன் போதிப்பாராயின் அப்போதனையினால் அவர்கள் பெறும் உணர்ச்சி வெகு சிறந்ததாகப் பின்னர் அவர்களுக்குக் காணப்படும்.



**1. உயிர் எழுத்துக்கள் 12:—**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

**2. மெய் எழுத்துக்கள் 18:—**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

**3. உயிர்மெய் எழுத்துக்கள் 216:—**

---

**மகம்மதியருக்கு உதவிச் சம்பளம்.** நான்காம் வகுப்பிலிருந்து எழாம் வகுப்பு வரையில் 133 ஸ்காலர்ஷிப் மகம்மதிய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும்படியாய் கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள். அவ்வுபகாரச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு Rs. 12-8-0 வீதம் அமையும். நான்கு வருடத்திற்குப் பிறகு அவ்வுதவி பெற்றவரைக் கணக்கிட்டால் 532 மகம்மதியரென்று ஏற்படும். இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்குச் செலவு வருடம் ஒன்றுக்கு 80,000 ஆகும் போலத் தெரிகிறது.

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | ற | ள | ழ | வ | ல | ர | ய | ம | ப | ந | த | ண | ட | ஞ | ச | ங | க |
| னா | றா | ளா | ழா | வா | லா | ரா | யா | மா | பா | நா | தா | ணா | டா | ஞா | சா | ஙா | கா |
| னி | றி | ளி | ழி | வி | லி | ரி | யி | மி | பி | நி | தி | ணி | டி | ஞி | சி | ஙி | கி |
| னீ | றீ | ளீ | ழீ | வீ | லீ | ரீ | யீ | மீ | பீ | நீ | தீ | ணீ | டீ | ஞீ | சீ | ஙீ | கீ |
| னு | று | ளு | ழு | வு | லு | ரு | யு | மு | பு | நு | து | ணு | டு | ஞு | சு | ஙு | கு |
| னூ | றூ | ளூ | ழூ | வூ | லூ | ரூ | யூ | மூ | பூ | நூ | தூ | ணூ | டூ | ஞூ | சூ | ஙூ | கூ |
| னெ | றெ | ளெ | ழெ | வெ | லெ | ரெ | யெ | மெ | பெ | நெ | தெ | ணெ | டெ | ஞெ | செ | ஙெ | கெ |
| னே | றே | ளே | ழே | வே | லே | ரே | யே | மே | பே | நே | தே | ணே | டே | ஞே | சே | ஙே | கே |
| னை | றை | ளை | ழை | வை | லை | ரை | யை | மை | பை | நை | தை | ணை | டை | ஞை | சை | ஙை | கை |
| னொ | றொ | ளொ | ழொ | வொ | லொ | ரொ | யொ | மொ | பொ | நொ | தொ | ணொ | டொ | ஞொ | சொ | ஙொ | கொ |
| னோ | றோ | ளோ | ழோ | வோ | லோ | ரோ | யோ | மோ | போ | நோ | தோ | ணோ | டோ | ஞோ | சோ | ஙோ | கோ |
| னௌ | றௌ | ளௌ | ழௌ | வௌ | லௌ | ரௌ | யௌ | மௌ | பௌ | நௌ | தௌ | ணௌ | டௌ | ஞௌ | சௌ | ஙௌ | கௌ |



## 4. ஆய்தவெழுத்து;-1—ஃ

அட்டவணையில் இருக்கும் எழுத்துக்களில் வார்த்தைக்கு முதலாக நிற்கும் எழுத்துக்களைப் பிள்ளைகள் ஒருவாறு உணர்ந்த பின்னர் சில வார்த்தைகளைக் கொடுத்து அவைகளை அகராதி செய்யும்படி சொல்லவேண்டும்.

அப்பியாசத்திற்காகக் கொடுக்கப்படும் வார்த்தைகள் முறைவைப்பினை அனுசரித்திருக்கப்படாது. அதற்கு மாறாகவே இருக்கவேண்டும் என்பதற்கு அடியிலுள்ள பட்டியில் வார்த்தைகள் அடுக்கப்பட்டிருக்கும் விதமே திருஷ்டாந்தமாகும்:—

| | |
|---|---|
| கொடை | வெற்றி |
| ஒப்பு | படம் |
| ஒழிவு | நா |
| உருக்கம் | திரு |
| தகுதி | மதகு |

**முதன் முதல் செய்யவேண்டிய விஷயம்:**—மேலே சொன்ன வார்த்தைகளில் முன்னிற்கும் எழுத்து இன்னது என்று கவனிப்பதும், இன்ன எழுத்தினையுடைய வார்த்தையின்பின் இன்ன எழுத்தினையுடைய வார்த்தையிருக்கவேண்டும் என்று தீர்மானிப்பதும் அதன்படி அடுக்குவதுமே.

**இரண்டாவதாகச் செய்யவேண்டிய காரியம்:**—முதலெழுத்தை நோக்கி அடுக்கப்பட்ட வார்த்தைகளை, மறுபடியும் இரண்டாவது மூன்றாவது நான்காவது என்னும் எழுத்துக்களின் கிரமத்தை நோக்கி அடுக்குவதே.

**புத்தகத்தினை ஆளுமுறை:**—புத்தகத்தின் நடுவினைத் திறந்து காட்டவேண்டும். பிறகு முதலுக்கும் நடுவுக்கும் உள்ள பக்கங்களில் ஒன்றினைப் பிரித்துக் காட்டவேண்டும். அதன்பின் நடுவுக்கும் கடைக்கும் உள்ள பக்கங்களில் ஒன்றினைத் திறந்து காட்டவேண்டும். அப்படிக் காட்டுகையில் அங்குள்ள எழுத்துக்களைக் கவனிக்கும்படி செய்யவேண்டும்.

பிள்ளைகள் எழுத்துக்களைக் கண்டு பிடிக்கும் விதத்தினைத் தெரிந்துகொண்டதும் 'தி' என்பதற்கு முன்னெழுத்தெது? பின்னெழுத்தெது? என்று கேட்டுவிட்டு அவ்வெழுத்துக்களைத் திறந்து காட்டும்படி செய்யவேண்டும்.

திரட்சி
சுவர்
துரும்பு
இளமை

என்பனபோன்ற சில பதங்களைச் சொல்லி எது முதலில் இருக்கவேண்டிய வார்த்தை? எது இரண்டாவதாக இருக்கவேண்டிய பதம்? எது மூன்றாவதென மொழிய வேண்டிய மொழி? எது நான்காவதென நவிலவேண்டிய சொல்? என்று கேட்டறிய வேண்டும்.

**வரிசைக்கிரமம்:**—அகராதியின் தலைப்பில் குறித்திருக்கும் 'முடிமொழி' யையும் 'கடை மொழி' யையும் விளக்கவேண்டும். 'முடிமொழி' அல்லது 'தலைமொழி' என்பது அகராதியின் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள இவ்விரண்டு வரிசைகளில் முதல் வரிசையில் முதலாயிருக்கும் பதமாம். 'கடைமொழி' அல்லது 'வால்மொழி' என்பது அகராதியின் ஒவ்வொரு பக்கத்திலுள்ள இவ்விரண்டு வரிசைகளில், இரண்டாவது வரிசையின் இறுதியில் (கடைசியில்) நிற்கும் வார்த்தையாம். அகராதியின் ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் இவ்விரண்டு பதங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இப்பதங்கள் இன்ன பதந் தொடங்கி இன்ன பதம் வரையில் உள்ள வார்த்தைகளை இப்பக்கம் கொண்டிருக்கிறது என்பதைக் குறிக்கும். 'தோய்தல்' என்பது முடி மொழியாயும் 'தோய்ச்சல்' என்பது கடைமொழியாயும் குறிக்கப்பட்டிருப்பின் இவ்விரண்டு பதங்களுக்கிடையில்,

'தோய்தல்,' 'தோய்த்தல்,' 'தோய் பனி,' 'தோய்ப்பன்,' 'தோய்வு,' முதலிய 60 அல்லது 70 பதங்கள் அடங்கியிருக்கின்றன என்றுணர வேண்டும்.

'தோய்வு' என்னும் பதம் 'தோல்வி' என்னும் வார்த்தைக்கு முன்னிருக்கவேண்டிய காரணத்தை விளக்க வேண்டும்.

விளக்கியான பின்னர் சில பதங்களைக் கொடுத்து எழுத்துக்களின் முறைப்படி அடுக்கும்படி செய்யவேண்டும்.

பிறகு 'தொய்யல்' என்னும் முடிமொழியையும் 'தொளை' என்னும் கடைமொழியையுஞ் சொல்லி இவற்றிற்கிடையி லிருக்கவேண்டிய பதங்களிற் சிலவற்றைக் கூறும்படி கேட்க வேண்டும்.

'தப்பவைத்தல்' என்னும் முடிமொழியும், 'தமிழ் நாடன்' என்னுங் கடைமொழியும் அகராதியின் ஒரு பக்கத்துத் தலைப்பில் குறிக்கப்பட்டிருக்குமாயின் அவ்விரண்டிற் கிடையில் அதாவது இவ்விரண்டினைக் கொண்ட அப்பக்கத்தில் 'தம்பிக்கை' என்னும் பதம் இருக்குமோ? ஏன் இருக்கவேண்டும்? காரணத்தைச் சொல் என்று கேள்விகள் கேட்கவேண்டும்.

அதன் பின்,

தமயன் சிமிழ்
தயாளம் குயில்
நரி உரல்



முதலிய பதங்களைச்சொல்லிப் பிள்ளைகளின் கையில் அகராதியை மூடிக் கொடுத்து அவ்வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி சொல்லவேண்டும். சரியாகத் தேடிப்பார்த்துச் சொல்பவர்களை மெச்சவேண்டும்.

**உச்சரிப்பு:**—பிள்ளைகளுக்கு 'ர' கரத்திற்கும், 'ற' கரத்திற்கும், 'ண' கரத்திற்கும், 'ன' கரத்திற்கும் உள்ள பேதங்களை உபாத்தியாயர் உதாரண முகத்தால் விளக்கிக்காட்டவேண்டும்.

'அருகு,' 'அறுகு;' 'கருப்பு,' 'கறுப்பு;' 'கூரை,' 'கூறை;'

'மணம்,' 'மனம்;' 'கணம்,' 'கனம்;' 'காண்,' 'கான்' முதலிய பதங்களைச் சொல்லி எழுத்து பேதத்தால் பொருள் பேதப்படுவதை விளக்கிக்காட்டிச் சொல்லக் கேட்பவர் சரியான பொருளை அறிதற்குச் சரியான உச்சரிப்பு அத்தியாவசிகம் என்பதை எடுத்துரைக்கவேண்டும்.

உபாத்தியாயர் கடின பதங்களுக்குப் பொருள் பார்க்கும்படி பிள்ளைகளை ஏவிப் பின் அவர்கள் பார்த்த பதங்களால் ஒவ்வொரு வாக்கியம் எழுதும்படியுஞ் செய்யலாம். அவர்கள் அப்பதங்களைச் சரியாகப் பொருள்படும்படி உபயோகித்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டியது உபாத்தியாயருடைய முக்கிய கடமையாகும்.

**முடிவுரை:**—'அகராதி' என்னும் புத்தகமானது எல்லோருக்கும் ஒரு பொக்கிஷம் போன்றது. நம்மிடத்தில் ஒரு பணப் பொக்கிஷம் இருந்தால் நமக்குப் பணம் வேண்டிய போதெல்லாம் அதிலிருந்து எப்படியெடுத்துச் செலவிடுவேமோ அத்தன்மையே போல் நமக்கு ஒருவார்த்தையின் பொருள் தெரியாத காலத்தும், ஒரு வார்த்தையினை உபயோகிக்க வேண்டிய காலத்தும் நாம் அகராதியைக் கையாடுவோமாயின் மனம் களிப்பினை அடையும். அப்படிக் களிப்பினைத்தரும் அகராதியினை நாம் அடிக்கடி கையாடுவதனால் பல சொற்களையும், சொற்பொருள்களையும், பிறவிஷயங்களையும் அறிய இடமுண்டு. ஆதலால் அறிவினை வளர்க்கும் அகராதியினை ஒவ்வொரு உபாத்தியாயரும், ஒவ்வொரு பள்ளிக்கூடமும், ஒவ்வொரு உபாத்தியாயர் சங்கமும் உடைத்தா யிருக்கவேண்டியது அவசியமான காரியமே. அகராதிகளில் பேரகராதி (20 Century Dictionary) யும், நமச்சிவாய முதலியார் வெளிப்படுத்தியிருக்கும் கதிரைவேற்பிள்ளை அகராதியுமே அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்து அகராதியும் அதிக சிலாக்கியமுள்ளது.

## FOREIGN NEWS

## பிறதேச வர்த்தமானம்

**லண்டன் மாநகரத்து எலிமென்டரி பிள்ளைகள்**

லண்டன் மாநகரத்தில் 7,47,237 எலிமென்டரி பிள்ளைகள் இருக்கிறார்களாம். அவர்களில் வாண்டஸ்-ஒர்த்தார் தான் அதிகம் என்றும், அவர்களுடைய எண் 37,627 ஆகிறதென்றும், பட்டணத்துப் பிள்ளைகள் கொஞ்சம் என்றும் அவர்களுடைய எண் 1,716 ஆகிற தென்றும் தெரிகிறது. 747,237 எலிமெண்டெரி பிள்ளைகளில் ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் எத்தனைபேர் என்று கணக்கிட்டுப் பார்த்ததில் 54,429-பேர் இருப்பதாக விளங்குகிறது.

70-மைல் விஸ்தீரணமுள்ள லண்டன் நகரில் 7,47,237 பிள்ளைகள் 1912-வருஷத்தில் இருந்ததாகத் தெரிய வந்ததல்லவா? 27-மைல் விஸ்தீரணமுள்ள நம்முடைய சென்னப்பட்டணம் ஜில்லாவில் எத்தனை பிள்ளைகள் 1912 - வருஷத்தில் இருந்தார்களென்று ஆராய்ச்சி செய்தால், 34, 648 பிள்ளைகள் என்று தெரியவருகிறது.

**ஏழைச் சிறுவர்களுக்கு அன்னமிட்டது.**

லண்டன்மா நகரத்தில் 1912 வருஷத்தில் 92,50,000 சாப்பாடு ஏழைச் சிறுவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாம். சராசரிக் கணக்குப் பார்க்கையில் ஒவ்வொருவனும் அவ்வருடத்தில் 509 வேளைச் சாப்பாடு சாப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

**லண்டன்பட்டணத்து ஜனனுகூல கலாநிதியம்.**

லண்டன் பட்டணத்து ஜனனுகூல கலாநிதியங்(Public Libraries) களிலிருந்து 75,00,000 புத்தகங்கள் வாசிப்பதற்காக ஒரு வருஷத்தில் கொடுக்கப்பட்டன. புத்தகங்கள் வாங்கி வாசித்தவர்களில் சிறுவர்களின் எண் 10,00,000-க்கு அதிகப்படுகின்றது. அப்புத்தகங்களில் கதைப் புத்தகங்கள் மாத்திரம் 5,00,000 இருக்குமென்றும், அவைகள்தான் அதிகமாக வாசிக்கப்பட்டன என்றும் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

நமது எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் Library உண்டோ? அந்த Libraryகளில் சிறுவர்களுக்கேற்ற கதைகளுண்டோ? மூன்றும் நான்காம் வகுப்புச் சிறுவர்கள் வாசிக்கத் தக்க கதை நமது நாட்டில் பத்துக்கணக்காக இருக்குமோ அல்லது நூற்றுக்கணக்காக இருக்குமோ? உபாத்தியாயர்கள் இது விஷயத்தில் தமது ஞாபகத்தைச் செலுத்துவார்களானால் புத்தகங்கள் ஆயிரக்கணக்காக வெளிவருமல்லவா?

REGISTRAR ... 5 - DEC 1914 ... OFFICE ... MADRAS.

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" —தமிழ்மறை

| தொகுதி—க | 1914 ஞு நவம்பர் மீ | பகுதி—ரு |
| --- | --- | --- |

## NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

மகம்மதியர்களுடைய கல்விப் பயிற்சியைக் கவனிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் மகாசபையின் ஏழாவது சங்கம் புனா நகரத்தில் சில நாளைக்கு முன் கூட்டப்பட்டது. அந்தச் சங்கத்திற் பேசியபொழுது பம்பாய் கவர்னர் அவர்கள் அங்கே கூடியிருந்த மகம்மதியக் கனவான்களை நோக்கி, "பிரைமெரிப் பாடசாலைகளில் உருதுபாஷையே முக்கிய மாகக்கொண்டு, அந்தப் பாஷையின் மூலமாகவே சிறுவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்பது உங்களுடைய அபிப்பிராயமானால், அதைத் தீர்க்கமாக ஆலோசித்துத் தெரிவியுங்கள். சென்ற வருஷத்தில் நீங்கள் தெரிவித்த அபிப்பிராயத்தை அனுசரித்துப் பிரைமெரிப் பள்ளிக்கூடங்களில் உருதுவே முக்கியமான பாஷையாய் இருப்பதற்கு ஏற்றபடி பாடங்களைத் திருத்தி அமைத்திருக்

கிறோம். அந்த விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயத்தை ஈடேற்றுவதற்குத் துரைத்தனத்தார் வேண்டிய முயற்சிகள் செய்வார்கள்'' என்று கூறினார்.

* * * *

பம்பாய் யூனிவர்சிடியின் ஸிண்டிகேட் என்னும் விவகாரச் சபையார் பொருள்நூல் புலவர் ஒருவரை நியமித்து இந்தியர்களுக்கு அந்த நூலில் பயிற்சி உண்டாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சொல்லை அந்த யூனிவர்சிடியின் செனட் என்னும் மகா சபையார் ஒப்புக்கொள்வார்களானால் சில நாளையில் பொருணூற் புலவர் ஒருவர் நியமிக்கப்படுவார். அந்தப் புலவர் M. A. பரீக்ஷைக்குப் படிக்கும மாணவர்களுக்கு அந்த நூலைப் போதிப்பதல்லாமல், B. A. பரீக்ஷையில் தேறிய பிறகு உலகத்திற்கு உபயோகமான விஷயம் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற விரும்பி அந்தநூலைப்பயின்று அதன் நுட்பங்களை ஆராயவேண்டி உழைப்பவர்களுக்கும் அனுகூலங்கள் செய்வார். இந்தியர்கள் பொருள்நூல் முறைகளைக் கற்றுத் தேறுவதனால் இந்தியாவுக்குப் பெருநன்மை விளையும். ஆதலால் அந்த விஷயத்தைப்படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் நம்முடைய கிராச்சுவேட்டுகளுக்கு ஆசையை உண்டாக்கத்தக்க திறமை உடையவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, மேற்சொல்லிய புலமை நடத்துவதற்கு, நியமிப்பார்களென்று நம்புகிறோம்.

* * * *

வருஷந்தோறும் தசராபண்டிகையில் மைசூர் ஸ்தானத்தில் குடிகளுடைய மகா சபை யொன்று கூடுவது வழக்கம். அப்பொழுது துரைத்தன விவகாரங்களைப்பற்றி அந்த ராஜ்யத்து திவான் விஸ்தாரமாக உபந்நியாசிப்பது உண்டு. இந்த வருஷம் அந்த மகான் சபையில் திவான் செய்த உபந்நியாசத்தில் அந்தத் துரைத்தனத்தார் கல்விப் பயிற்சியைக் குறித்துக் கொண்டிருக்கும் கொள்கைகளையும், செய்திருக்கும் சீர்திருத்தங்களையும், இனி நிறைவேற்றக் கொண்டிருக்கும் நோக்கங்களையும் விவரித்துக் கூறினார். சென்ற வருஷத்தில் கலாசாலைகளின் படிப்பு முறைகளில் சீர்திருத்தங்கள் செய்திருப்பதல்லாமல், எலிமென்டெரி படிப்பை பலப்படுத்துவதே அந்தக் கல்வியிலாகா அதிகாரிகளுடைய முக்கியமான நோக்கமாயிருந்ததென்று அவர் சொன்னார். துரைத்தனத்தார் திரவியரூபமாகவோ வேறெந்த வகையிலோ செய்யும் சகாயம் ஒரு பங்கு இருக்க, அந்தந்தக் கிராமத்துக் குடிகளும் எலிமென்டெரி படிப்பை அபிவிருத்தி செய்வதற்கு உற்சாகங்கொண்டு தம்மால் இயன்ற உதவி செய்யவேண்டும்; இப்படித் துரைத்தனத்



OFFICE 5 DEC 1914 MADRAS.

தாரும் குடிகளும் சேர்ந்து உபாத்தியாயர்களைச் செவ்வையான நிலைமையில் வைக்கவேண்டும்; உபாத்தியாயர் எவரும் மாதம் ஒன்றுக்கு 10-ரூபாய்க்குக் குறைந்த வரும்படியில் வருந்தாமல் செய்யவேண்டும்; குறைந்தபக்ஷம் 10-ரூபாயாவது உபாத்தியாயருக்குக் கிடைக்கும்படியான முயற்சிசெய்ய வேண்டும் என்பதே மைசூர் துரைத்தனத்தாருடைய கொள்கையாம். இதுவே சரியான கொள்கை. துரைத்தனத்தார் செய்யும் பிரயத்தனங்களில் விசுவாசமும் உற்சாகமுங்கொண்டு குடிகள் அவர்களுடன் ஒத்து அமைவார்களாக.

* * * *

செப்டெம்பர் மாசத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் கூடிய ஸ்ரீமூலம் மகாசபையில் எலிமென்டெரி படிப்பைப்பற்றி விவாதம் மும்முரமாய் நடந்தது. ஒவ்வொரு குழந்தையையும் கட்டாயமாய்ப் படிப்பிக்க வேண்டும் எனச்சட்டம் செய்யவேண்டுமென்று கேசவப்பிள்ளை என்பவர் ஒரு மசோதா கொண்டுவந்தார். அந்த மகா சபையில் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் அதிகமாய் இருந்ததனால் அந்த மசோதா அங்கீகரிக்கப்படவில்லை. நாட்டிலுள்ள குழந்தைகளை யெல்லாம் கட்டாயமாய்ப் படிப்பிப்பது நாட்டாருக்கு மிக்க நன்மை விளைக்கும். ஆனால், அப்படிச் செய்வதற்குத் துரைத்தனத்தார் ஏராளமான பணம் செலவிட வேண்டிவரும்.

* * * *

திருவாங்கூர் திவான் கட்டாயப் படிப்பு மசோதாவை அங்கீகரிக்காததற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது, இதுவரையில் படிப்பு விஷயத்திற்காக திருவாங்கூர் துரைத்தனத்தார் செலவிடுவது அவர்களுடைய மொத்த வரும்படியில் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் ஆகின்றது. மற்ற இந்திய ராஜாங்கங்களில் எங்கும் அவ்வளவு செலவிடுவதில்லை யென்று தெரிகின்றது. அதைவிட அதிகமான பணம் படிப்பு விஷயத்திற்குச் செலவிடவேண்டுமானால் துரைத்தனத்தார் புதியவரி ஒன்று ஏற்படுத்த வேண்டியதாகும். இரண்டாவது, திருவாங்கூர் சமஸ்தானத்தில் குழந்தைகளை கட்டாயப்படுத்திப் படிப்பிக்கவேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

* * * *

பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி பெற்றோர்களுக்குப் போதிப்பது கஷ்டமில்லை; ஆனால் வருகிற பிள்ளைகளுக்கெல்லாம் வேண்டிய இடம் பள்ளிக்கூடங்களில் அமைப்பது கஷ்டமாயிருக்கின்றது. இடம் போதாததனால் வருஷந்தோறும் அநேகம் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில்

161995

சேர்த்துக்கொள்ளமுடியாமல் வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிடுகிறோம்; வருஷந்தோறும் துரைத்தனத்தார் புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி வருகிறார்கள்; இந்த வருஷத்தில் புதிதாய் நூறு எலிமென்டெரி பாடசாலைகள் வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று திவான் சொல்லுகின்றார்.

* * * *

திவான் சொல்லுகிறபடியே இருந்தால் திருவாங்கூர் துரைத்தனத்தார் தமக்குப் பணம் போதாதென்று சொல்வதற்கு இடமில்லை. படிப்புக்கு அதிகப்பணம் செலவழிக்கும் பொருட்டு வேறு இலாகாக்களிலுள்ள செலவுகளை அவர்கள் குறைக்க முடியாதெனில், புதியவரிகளாவது போடவேண்டும், புதிய கடனாவது வாங்கவேண்டும். புதியவரி போடுவதே சரியான வழி. எப்படியாவது எல்லோரையும் படிப்பாளிகளாக்குவதே நாட்டுக்கு நன்மை

* * * *

பெங்களூர் சென்டிரல் கலாசாலையில் உபாத்திமை நடத்திவரும் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் என்பவரை சென்னை யூனிவர் சிடியார் பூர்வத்து இந்திய சரித்திரவிஷயமாய் உபந்நியாசங்கள் செய்வதற்கு நியமித்திருக்கிறார்கள். பண்டைக்காலத்து இந்தியாவின் சரித்திரத்தைப்பற்றி நெடுங்காலமாக அய்யங்கார் அவர்கள் பிரியாசைப்பட்டு ஆராய்ந்து வருகிறார்கள். அவர் முக்கியமாய் தென் இந்தியாவின் பூர்வசரித்திரங்களைத்தேடி உழைத்து வந்திருக்கிறார். அவர் ஆராய்ந்தமட்டில் விஷயங்களைத் தொகுத்துப் புத்தகங்களும் எழுதியிருக்கிறார். இவருக்கு முன்னால் தென் இந்திய சரித்திரத்தைப்பற்றி வெங்கய்யா, கனகசபைப்பிள்ளை, டாக்டர் ஹல்ஷ் (Hultzch) டாக்டர் பிளீட் (Fleet) ரெவரன்ட் கால்ட்வெல் (Rev. Caldwell) என்பவர்கள் மிக உழைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பின் பயன்களை மேற்கொண்டு கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் பின்னும் பொறுமையுடன் சோதித்துத் தென் இந்திய சரித்திரத்தைத் தொகுத்திருக்கின்றார். இப்பொழுது அவர் பண்டைச் சரித்திர உபந்நியாசகராக நியமிக்கப்பட்டிருப்பதனால் சரித்திர ஆராய்ச்சி விஷயத்தில் இந்நாட்டு இளைஞர்களுக்கு ஊக்கத்தையும் ஆசையையும் அவர் ஊட்டுவாரென்று நம்பிச் சந்தோஷிக்கிறோம்.

* * * *

161995

# THE MANUAL METHOD
# பிரத்தியக்ஷப் பிரமாணம்

(81-ம் பக்கத் தொடர்ச்சி)

வஸ்துக்களை அளந்து பார்த்து வழக்கப்பட்டிருக்கிற பையன் எவனாவது $5\frac{1}{2}$ கஜம் × $2 = 10\frac{1}{4}$ கஜம் என்று சொல்லுவானோ? $\frac{1}{2} + \frac{1}{4} = 1$ என்று சொல்லுவானோ? உத்தேசக் கணக்குகள் செய்வதில் பெரும்பாலும் இடத்தைப் பற்றிப்பிள்ளைகளுக்குத்தெளிவான எண்ணம் இல்லாமையினாலே கலக்கம் உண்டாகின்றது.

இங்கிலீஷ் போர்டு ஸ்கூல்களில் எலிமென்டரி மாத்தமாட்டிக்ஸ் சொல்லிக் கொடுக்கும் விதத்தில் வித்தியாசம் நன்றாய்த் தெரிகின்றது. அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிற கணிதங்களெல்லாம் அனுபவத்தில் உபயோகிக்கக் கூடியவைகளாய் இருக்கின்றன. அதனால் அந்தப் பிள்ளைகளுக்குத் தெளிவான அபிப்பிராயங்கள் ஏற்படுகின்றன; அவர்கள் குருட்டுத் தனமாய் எண்களைப் போடுவதில்லை. தச்சன் தன் அடிக்கோலை அடிக்கடி உபயோகிப்பதனால் அவனுக்கு எவ்வளவு தெளிவான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்று கவனித்துப் பாருங்கள். அவன் ஒரு சாமான் செய்யவேண்டுமானால் அதன் அங்கங்களையெல்லாம் மனத்தினாலேயே திட்டமாய் ஏற்படுத்திக்கொண்டு சீக்கிரமாகவும் நன்றாகவும் செய்துவிடுகிறான்; ஒவ்வொரு அங்கமும் இவ்வளவு அகலமும் நீளமுமுள்ளதா யிருக்கவேண்டுமென்பது அவனுடைய மனத்தில் நன்றாய்ப் பதிந்திருக்கிறது. இடத்தைப்பற்றித் தெளிவான அபிப்பிராயங்கள் அனுப்பியிருப்பதனால் அவன் உத்தேசித்த உருப்படி செய்வதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் அவனுடைய மனத்தில் சித்தமாய் இருக்கின்றன.

எடைக் கல்களை ஒரு குழந்தை பார்த்து வழக்கப்பட்டிருந்தால், அந்தக் குழந்தை ஒரு வஸ்துவின் எடையைப் பவுண்டு கணக்கில் சொல்லுவது போல அவுன்ஸ் கணக்கிலும் சொல்வது அதற்கு எளிதாயிருக்கும்; அப்படிச் சொல்லுவது வித்தியாசமாகவாவது, விபரீதமாகவாவது, தவறாகவாவது, அந்தக் குழந்தைக்குத் தோன்றாது. நாம் எப்பொழுதும் அனுபவத்தையொட்டியே கணக்குகள் செய்யவேண்டுமேயல்லாமல் இயற்கையான நடவடிக்கைகளுக்கு விரோதமான செயற்கை வழிகளில் பழக்கக்கூடாது; தினந்தோறும் நாம்செய்யும் விவகாரங்களுக்கு எவ்வளவு தூரம் ஒத்திருக்கக்கூடுமோ அவ்வளவு தூரம் ஒத்திருக்கவேண்டும்.

ஆனால், இடக்கணக்கு என்பது என்ன? இடக்கணக்கென்பது இடத்தைப்பற்றிய சாஸ்திரம்; அதாவது க்ஷேத்திர கணிதம். ஆனால், அந்த க்ஷேத்திரக் கணிதத்தை சாஸ்திர முறைப்படி அகலம் நீளம் முதலியவைகளைக் கோடுகளாகக் குறித்துக் கணக்கிடாமல் அனுபவத்தை ஒட்டிக் கணக்கிட்டு, அதனை அளவு நூலாக எண் கணிதத்திற் சேர்த்து விவகரிக்கிறோம்.

ஸ்காட்லாந்து தேசத்து வித்தியா பரிபாலக சபையார் இடக்கணக்கைப்பற்றி எழுதியுள்ள யாதாஸ்தில், அதற்கு க்ஷேத்திரகணிதமும் அளவு நூலும் என்று தலைப்பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய கொள்கையின்படி, அந்தக் கணக்கில் முக்கியமான உத்தேசங்களாவன:—

(1) "நீளம், பரப்பு, பருமன் ஆகிய இவைகளைப்பற்றிப் பிள்ளைகளுக்கு அனுபவப்பூர்வகமான வழக்கம் உண்டாக்க வேண்டும்.

(2) அதன் பொருட்டு, உருவப்படங்களைத் திட்டமாக வரைவதற்கும் அளவுகளைக் கணக்கின்படி எடுத்துக்கொள்வதற்கும் அவர்களைப் பழக்க வேண்டும்.



(3) அப்படிப்பட்ட நீள அளவுகளைச் சரியாகத் தெரிந்துகொள்ளுவதற்கு அவர்களுக்கு அவசியமாய் இருக்கிற க்ஷேத்திர கணித விஷயங்களையும் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்."

இதை 'இடக்கணக்கு' என்று சொல்லுவானேன்? க்ஷேத்திர கணிதத்திற்கு முதற்பாதமாயுள்ள அனுபவவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறதென்றும், இனி பிரத்தியக்ஷப் பிரமாணமான கை வேலைகளை எடுத்துக் கணக்கிட வேண்டுமென்றும், இது 'கைத் தொழில்' களுக்குக் கின்டர் கார்ட்டன் போன்றதென்றும் தெரிவிக்கும் பொருட்டு, இதை 'இடக்கணக்கு' என்று சொல்லுகிறோம்.

ஆனால் நம்முடைய உத்தேசம் இன்னதென்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பிள்ளைகளெல்லோரும் கைத்தொழிலாளிகளாய் விடுவார்கள்; நாம் உத்தேசித்தபடி க்ஷேத்திர கணித சம்பந்தமான விஷயங்களை உணர்ந்த பிள்ளைகள் ஆகமாட்டார்கள். அதாவது க்ஷேத்திர கணிதசம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதற்குப் பதிலாகப் பிள்ளைகள் கைத்தொழில் கற்றுக்கொள்ளுகிறவர்களாவார்கள்.

யூக்கிலிட் என்பவனுடைய க்ஷேத்திரகணிதத்தைப் போன்ற அனுமித க்ஷேத்திரகணிதம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க முயல்கிறோம் என்று நாம் எண்ணிப் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்ல வேண்டும். க்ஷேத்திரகணிதத்திற்குரிய பொதுவான விதிகளைத் தெரிந்துகொண்டு, க்ஷேத்திரகணித சம்பந்தமான கணக்குகளைச் செய்வதே அனுமிதக்ஷேத்திர கணிதமாகும்.

சமயம் வாய்த்த போதெல்லாம் அந்த மாதிரியான சிறிய அனுமித கணக்குகளைப் பிள்ளைகளுக்குக்கொடுத்து, அவர்கள் கற்றிருக்கும் சாமான்னிய க்ஷேத்திரகணிதப் பொது விதிகளை உபயோகித்து அவர்கள் அந்தக் கணக்குகளைச் செய்யும்படி பண்ணு

வது உபாத்தியாயர்களுடைய கடமை. இப்படிச் செய்வதனால், பிள்ளைகளுக்குத் தேர்ச்சி உண்டாவதோடு கூடப் பகுத்தறிவும் அதிகப்படும். ஒரு நியாயத்தையும், விதியையும் உபயோகித்து விவரிக்கத் தெரிந்தால், ஊகையினால் பொதுவிதிகளைப் பொருத்தக் கணக்கிடுஞ் சக்தி பிள்ளைகளுக்கு உண்டாகும்.

ஒரு முக்கோணத்தின் இரண்டு புஜங்களும் சேர்ந்தால் மூன்றாவது புஜத்தைவிடப் பெரிதாய் இருக்குமென்பது சாமான்ய க்ஷேத்திரகணிதத்தின் பொதுவிதி. இந்த விதியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விவகாரத்தில் கணக்கிடும் பொழுது இதை உபயோகித்துக் கணக்கு முடிப்பது அனுமித க்ஷேத்திர கணிதமாகும். அப்படி உபயோகிக்கும் திறமை உண்டானால், பகுத்தறிவும் ஊகையும் பிள்ளைகளுக்கு அதிகமாய் இருக்கின்றனவென்று நாம் நம்பலாமல்லவா?

உபாத்தியாயர்கள் இந்த நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு தங்களுடைய பாடமுறைகளை (Syllabus) அப்போதைக்கப்போது பரீக்ஷித்துப் பார்ப்பார்களாக. உருவப்படங்களை வரைவதே முக்கியமான காரியமென்று எண்ணிக்கொண்டு பிள்ளைகள் அந்தக் காரியத்திலேயே அமர்ந்திராமல், அதற்குரிய க்ஷேத்திர கணிதப் பொதுவிதிகளை உபயோகித்துக் கணக்கிடுவதற்குச் சக்தி பெற்றார்களாவென்று பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

அவசியமானால், இந்தப் பத்திரிகையின் அடுத்த சஞ்சிகையில் நாம் ஒருபாட முறையை உதாரணமாக எழுதிக்காட்டுவோம். இப்பொழுது அதன் நோக்கத்தை மாத்திரம் பொதுவாக இங்கே குறிப்பிடுவோம். ஆயினும் 37,38-ஆம் பக்கங்களில் சொல்லியிருக்கிற விஷயங்களை அனுசரித்து, இடக்கணக்கில் விஷயப் பொதுவான பாடமுறை (Concentric syllabus) இன்னது என்பதைக் கொஞ்சம் விவரித்துக்காட்டுவோம்.



பரப்பளவை எடுத்துக்கொள்ளுங்கள். அனுபவப் பரம்பரையாகக் கற்பிக்கும் (1. Empirical) கட்டத்தில் பிள்ளைகளுக்கு வஸ்துக்களின் மேற்பரப்புக்களைக்காட்டி அவைகளில் எதில் அதிகமான இடம் இருக்கிறதென்று சொல்லும்படி அவர்களைக் கேட்கிறோம்; அவைகளைப் பார்த்து அவர்கள் ஆவலுடன் பதில் சொல்லுகிறார்கள். வரவரப் பரப்பின் வடிவத்தைக் கஷ்டப்பட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதாக்குக; அதாவது மூலைகளையும், முடுக்குகளையும், வளைவுகளையும் அதிகமாக்கி அந்த உருவத்தைச் சிக்குப்படுத்துக. பிறகு அந்தப் பரப்பின்மீது பிள்ளைகளைக் கொண்டு வேலைகள் செய்விக்கலாம்; வேறுவிதமான வேலைகளையுஞ் செய்விக்கலாம். இப்படி இடத்தைப்பற்றிய அநேகவிதமான அபிப்பிராயங்கள் அவர்களுடைய மனத்தில் பதியும்.

அந்தப் பயிற்சியில் அவர்கள் தேர்ந்தால், வேறு வேறு பரப்புகளை ஒப்பிட்டுப்பார்க்குஞ் சக்தி அவர்களுக்கு உண்டாகும். அப்பொழுது அவர்கள் இயற்கை உணர்வுக்கு ஏற்றவாறு அமைவது (2. Intuitional) என்னும் கட்டத்திற்கு வந்தவர்கள் ஆவார்கள்.

பிறகு, இடக்கணக்குக்குரிய யூனிட்டை அவர்களுக்குக் கற்பிக்கலாம்; அதாவது, சதுர அங்குலம் இன்னதென்றாவது சதுர அடி இன்னதென்றாவது சொல்லிக்கொடுத்து, நெல் அளப்பதுபோல, இடத்தைப் பிள்ளைகள் அளக்கும்படி செய்யலாம்.

முடிவில் வருவது பகுத்தறிவுக்கு ஏற்றவாறு அமையும் (3. Rational) கட்டமாகும். அதில் அவர்கள் பரப்பளவுகளைக் கணக்கிடலாம். அப்பொழுது, ஆறங்குலம் நீளமும், நாலங்குல அகலமுமுள்ள பரப்பில் 24-சதுர அங்குலமே சரியாக அமைந்திருக்க வேண்டிய காரணம் என்னவென்று அவர்கள் கணக்கிட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.




அடுத்த முறை, இடக்கணக்கும் எண்கணக்கும் கற்பிப்பதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தில் ஓர் உதாரணத்தை எடுத்து விவரித்துக் காட்டுவோம்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். எச். தாம்ஸன், பி. ஏ.,

---

**சென்னை விநோதப் பொருட்காட்சி சாலை.**

சென்ற செப்டம்பர் மாதத்தில் விநோதப் பொருட்காட்சி சாலைக்குப்போய்ப் பார்த்தவர்களுடைய சங்கியை வருமாறு:—

இயற்கைப்பொருள்கள் வைக்கப்பட்டிருக்குஞ் சாலைக்குப்போயிருந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் சராசரி 879 பேர், மற்றநாட்களில் சராசரி 819. சித்திரவஸ்துக்கள் வைத்திருக்குஞ் சாலைக்குப்போயிருந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் சராசரி 1115, மற்றநாட்களில் சராசரி 762.

மேற்சொல்லிய சங்கியைகளைப் பார்க்கும்பொழுது நமக்கு என்ன தோன்றுகிறது? இயற்கைப்பொருள்களையும், சித்திரவிசித்திரமான கைத்தொழிற்பொருள்களையுஞ் சேர்த்து கௌதுகசாலையொன்று ஏற்படுத்திவைத்தால், பலர் நாள்தோறும் அந்தப்பொருள்களை வந்துபார்த்துக் களிப்படைவதோடு அநேகவிஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்றும் தெரிய வருகிறது. ஆதலால், அப்படிப்பட்ட பொருள்கள் அறிவையூட்டும் சாதனங்கள் என்றும், அவைகளின் மூலமாகப் பிள்ளைகளுக்கு அநேக விஷயங்களை எளிதில் கற்பிக்கலாமென்றும் எண்ணித் தேர்ந்து நமது எலிமெண்டரி உபாத்தியாயர்கள் தங்கள் தங்களுடைய சக்திக்கும் அனுகூலங்களுக்கும் தக்கபடி சிறியகௌதுகசாலைகள் ஏற்படுத்துவார்களாக.

# FOREIGN NEWS

## பிறதேச வர்த்தமானம்

---

**அமெரிக்கன் பள்ளி வாய் மொழி வாக்கிய போதனை.**

அமெரிக்கா தேசத்து ஐக்கிய மாகாணங்களில் வாய்மொழியாக வாக்கியங்களை அமைக்கும் திறமை பிள்ளைகள் பெறுவதற்காக முயற்சிசெய்கிறார்கள். அந்த விஷயத்தை மிகுதியாய்க் கவனித்து வருகிறார்கள். அந்தப் பயிற்சியினால் தெளிவாக ஆலோசிப்பதற்கும் தாராளமாகப் பேசுவதற்கும் அனுகூலமாய் இருக்கிறதாம். அதுவல்லாமல், பிறகு வாக்கியங்களில் எழுதப்பழகுவதற்கும் நல்ல சாதனமாய் இருக்கிறதாம்.

**பள்ளிக்கூடங்களுக்கான படங்கள்.**

அழகிய படங்களினால் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு முயற்சி செய்யும் சங்கம் ஒன்று இங்கிலாந்தில் இருக்கின்றது. பிரசித்தமான படங்களுக்கு அநேக பிரதிகளை அச்சிட்டு இங்கிலாந்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் குடியேற்ற நாடுகளிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் அந்தச் சங்கத்தவர்கள் அனுப்புகிறார்கள். எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு வேண்டிய படங்களைப் பற்றி டிபார்ட் மெண்டார் பெரிய சந்தடி செய்கிறார்கள் என்று நமது தேசத்து உபாத்தியாயர்கள் பெரும்பாலும் நினைக்கிறார்கள் அல்லவா? அந்த விஷயத்தைப்பற்றி மற்றவர்களுக்குள்ள நம்பிக்கை எப்படி யிருக்கிறதென்று இவர்கள் தெரிந்து கொள்ளுவது நன்று. சித்திரப்படங்கள் எழுதுவதற்குத் தொடங்கிய உபாத்தியாயர்கள் அநேகர் தங்களுடைய ஸ்கூல்களை ரெகக்னைஸ் செய்யவேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எழுதி முடித்திருக்கும் படம் ஒழுங்காய் இராவிட்டாலும், அதனால் உண்டாகத்தக்க நல்ல எண்ணங்களும் பெரிய எண்ணங்களும் உண்டாகிக் கொண்டே யிருக்கின்றன. அநேக பள்ளிக்கூடங்கள் கிராமச் சாவடிகளிலும் சத்திரங்களிலும் நடந்துவருகின்றன அல்லவா? அந்தச் சாவடிகளின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் படங்களைக்கொண்டு பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதற்கு எந்த உபாத்தியாயரேனும் பிரயத்தனப் பட்டிருக்கிறார்?

அந்தச் சித்திரங்களினால் விளக்கப்படும் கதைகளைப் பிள்ளைகள் தெரிந்துகொள்வது நல்ல தல்லவா? அதனால், பிள்ளைகளுக்குப் பெரிய கிரந்தங்களின் விஷயப்பழக்கமும், சித்திர கலையில் ஆசையும் அதிகமாய் உண்டாகு மல்லவா?

**லங்கா ஷையரில் மூலாதாரப் படிப்பு.**

இங்கிலாந்திலுள்ள லங்கா ஷையர் மாகாணத்துக் கல்விக் கமிட்டியார் தங்களுடைய ஆட்சியில் இருக்கும் பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகள் எலிமென்டரி வகுப்புக்களில் படித்துத் தேர்ந்த பிறகும் சாதாரணமாய் எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் திறமை இல்லாதவர்களாய் இருக்கிறார்கள் என்று கண்டார்கள். இந்தக் காலத்தில் ஏற்பட்டிருக்கிற புது மாதிரியான புஸ்தகங்களைப் புது முறைப்படி சொல்லிக் கொடுப்பதற்குச் சக்தியற்றவர்களாய் இருப்பதனால், மேற்சொல்லியவாறு பிள்ளைகளுக்குப் பயிற்சியில்லாமற் போகின்றது. அந்தப் புதிய பாடங்களில் படித்துக்கொண்டு போவதில் உபாத்தியாயருக்குக் காலம் அதிகமாய்ச் செலவழிகிற படியால் மேற்சொல்லிய முக்கிய விஷயங்களில் பிள்ளைகளுக்குப் பயிற்சி போதாமற் போகின்றது. ஆகையால் சையன்ஸ், நேச்சர்ஸ்டடி, கலர் டிராயிங் என்னும் இவைகளைக் கற்றுக் கொடுக்கக்கூடிய திறமையுள்ள உபாத்தியாயர் ஒருவராவது இருக்கிற பள்ளிக்கூடங்களை மாத்திரம் அந்தப் பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்று அந்தச் சபையார் விதித்திருக்கிறார்கள். நம் நாட்டில் பழைய விதிகளின்படி டிரெயினிங் ஆன உபாத்தியாயர்கள் மேற்சொல்லிய விதியொன்று ஏற்பட்டிருக்கிறதென்று கேள்விப்பட்டால் அவர்கள் மிகச் சந்தோஷிப்பார்களென்று நம்புகிறோம் தங்களுக்கும் அந்த மாதிரியான அனுகூலங்கள் வருமென்று.

# READING

## வாசகம்

கல்லாதவர்களுக்கும் கற்றவர்களுக்கும் நல்ல அறிவு உண்டாகும் பொருட்டும், அவர்களுடைய காலம் நல்வழியிற் செல்லும் பொருட்டும், அவர்களுடைய மனம் ஒரு வழிப்படும் பொருட்டும் நமது பெரியோர்கள் புராணப் பிரசங்கம் செய்விப்பதும், இராமாயணக் கதை, மாபாரதக் கதை முதலிய நற்கதைகளைச் சொல்லுவிப்பதும் ஆகிய இவ்வழக்கத்தினை மேற்கொண்டிருப்பது நமக்குத் தெரிந்த காரியம் அல்லவா?

ஒரு புராணிகர் இன்றையதினம் திருவிளையாடற் புராணத்தில் 'பழியஞ்சின படலம்' பிரசங்கஞ் செய்வதாகப் பத்திரிகைகளில் பார்த்துப் புராணப் பிரசங்கம் நடக்கும் மடத்திற்கு நாம் போயிருந்ததாக எண்ணிக் கொள்வோம். புராணிகர் வந்ததும் என்ன செய்தார்? சில தோத்திரங்களைச் சொன்னார். அதன் பிறகு என்ன நடந்தது? அவருடன் வந்திருந்த கையேட்டுத் தம்பிரான் சபையாருக்கு இனிமை தோன்றவும் புராணிகருக்குப் பொருள் தோன்றவும், புத்தகத்தைப் பிரித்து அப்படலத்தின் முதற் செய்யுளை முற்றும் முதலிற் படித்தார். பிறகு படித்த செய்யுளின் முதலடியை மற்றுமொரு முறை வாசித்தார். கையேட்டுத் தம்பிரான் வாசித்த அடிக்குப் புராணிகர் பொருள் சொன்னார். அதன் பின் அப்படியே இரண்டாம் அடி, மூன்றாம் அடி, நான்காம் அடி படிக்கப்பட்டுப் பொருள் சொல்லப்பட்டன.

இப்பொழுது கையேட்டுத் தம்பிரானுடைய வேலையைப்பற்றிச் சற்று ஆராய்வோம். அவருடைய வேலை பாடல்களைப் படிப்பதாக மாத்திரம் தெரிய வந்த போதிலும் அது சற்றுக் கடினமான வேலையாகவே காணப்படுகிறது. கேட்பவர் செவிக்கு இனிமை பயக்கவும், பிரசங்கம் செய்பவருக்குப் பொருள் விளங்கவும் படிப்பது அருமையான காரிய மல்லவா? இனிமை தோன்ற வாசிப்பது எல்லோராலுஞ் செய்யக்கூடிய காரியமல்லவே.

இராமாயணக் கதை, மாபாரதக் கதை படிப்பவர்களுடைய வேலையும் அப்படியே. அவர்களும் செவ்வையாக வாசித்தால் தான் கேட்பவர்களுக்குப் பிரியந்தோன்றும்; கதையில் உற்சாகம் பிறக்கும். செவ்வையாக வாசியாமல் அழுவதுபோலவும், நாய் குரைப்பது போலவும். வாசிப்பவர்களுடைய

வாசிப்பைக் கேட்க எவர்க்குத் தான் பிடிக்கும்? செய்யுளைப் பாடவேண்டிய முறைப்படி பாடினால் தான் நயந்தோன்றும். வாசகத்தை வாசிக்க வேண்டிய ஒழுங்கின்படி வாசித்தால் தான் இனிமை பிறக்கும்.

புல்லாங்குழல் என்னும் பொள்ளங் குழலின் ஓசையைக்கேட்டு நாகங்களும் பசுக்களும் அசையாமல் ஓரிடத்தில் தங்குகின்றன என்று நூல்கள் முறையிடக் கேட்டிருக்கிறோம். அதுவுமல்லாமல் சோமசுந்தர பாண்டியன்

“விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரசாய் மதுரை அமர்ந்தான் என்னே!
அரசாய் மதுரை அமர்ந்தான் அவன்என்
புரைசார் மனனும் புகுந்தான் என்னே!”

என்னுஞ் செய்யுளையும் மற்றிரண்டு செய்யுளையும் பாடிய காலத்து அப்பாடலிசையைக் கேட்டோரெல்லாம் எழுது சித்திரம்போல் இருந்ததாகவும் நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

இப்படியெல்லாம் நூல்கள் வெளிப்படுத்துவதனால் இசையுடன் பாடுவதன் பயன் இன்னது என்பது வெளியாகின்றதல்லவா? அப்படியே,

“கலையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன் மரம்”

என்னுஞ் செய்யுளால் வாசகத்தினை வாசிக்க உணர்ந்தவனுடைய பெருமை விளங்குகிறது. ஆனால் அவ்விதப் பெருமைக்கு ஆதாரமாயிருக்கும் வாசகம் ஒரு நாளையில் வரக்கூடியதோ? ‘செந்தமிழும் நாப்பழக்கம்’ என்றபடி பழக்கத்தினாலன்றோ வரவேண்டும்? அவ்விதப் பழக்கம் நம்முடைய சிறுவர்களுக்கு உண்டோ என்று இங்கு ஆராய்வோம்.

பிள்ளைகளுக்கு ‘வாசகபாடம்’ வெகு அருமையாகப் போதிக்கப் படுகின்றது. அப்பாடத்தின் நோக்கம் இன்னது என்பது உபாத்தியாயருக்கே தெரியாது. அப்படித் தெரியாமையினால் அவர்கள் அப்பாடத்தினைச் சரியாகப் போதிப்பதில்லை; பிள்ளைகளே அப்பாடத்தினைக் கற்றுணரவேண்டியிருக்கிறது. உபாத்தியாயருடைய உதவியின்றி மாணவன் கற்பதனால் எவ்வளவு பயன் பெறக்கூடும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். உபாத்தியாயரும் என்ன செய்வார்? பாவம்! அவருக்குத் தொடர் முறைப்



போதனை என்னும் பகைவன் தோன்றி வாசகபாடத்தினை நடத்தவொட்டாமல் அவர் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறான். தொடர் முறைப்படி போதிக்கப்படாத பாடம், பாடம் என்று அழைக்கப்படாதாம். அதனால் உபாத்தியாயர் (1) ஒரு கதையின் அல்லது ஒரு பாடத்தின் ஒரு பாராவினை (Paragraph) வாசித்துக் காட்டுகிறார். அதன்படி ஒருபையன் வாசிக்கிறான். (2) பிறகு உபாத்தியாயர் வாசித்த பாகத்திலுள்ள விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுகிறார். அதனால், புழுவானது குளவியாக மாறுதல் அடைவதுபோல வாசகபாடம் வஸ்து பாடமாக மாறுகின்றது. பையனுடைய அறிவு வாசகபாடத்தை மறந்து விட்டு விட்டு பொருட் பாடத்திற்கு ஓடோடிச் செல்கின்றது. (3) அதன் பின் உபாத்தியாயர் அந்தப் பகுதியில் காணப்பட்ட ‘முகில்,’ ‘பயக்கும்’ முதலிய கடின பதங்களுக்குப் பொருளினைக் கரும்பலகையில், முகில்-மேகம், பயக்கும்-கொடுக்கும் என்று எழுதுகிறார். (4) பிறகு வேறொரு மாருதந்தோன்றி அவரை மற்றொரு பாராவிற்கு-பகுதிக்கு இழுத்துக்கொண்டு போகின்றது. அம்மாருதத்தினால் அவர் முதற் பாராவை அல்லது முதற் பகுதியைப்பற்றி மறந்து விடுகிறார். பையன் எப்படி வாசித்தான் என்று எண்ணுகிறதுமில்லை. நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி வாசித்தானா என்று நிறுத்துப் பார்க்கிறதுமில்லை. தூக்கி வாசிக்கவேண்டிய இடத்தில் தூக்கி வாசித்தானா என்று தூக்கிப் பார்க்கிறதுமில்லை. தாழ்த்தி வாசிக்கவேண்டிய இடத்தில் தாழ்த்தி வாசித்தானா என்று ஆழ்ந்து பார்க்கிறதுமில்லை. வலிந்து கூறவேண்டிய இடத்தில் வலிந்து கூறினானா என்றும் நலிந்து கூறவேண்டிய இடத்தில் நலிந்து கூறினானா என்றும் கவனிக்கிறதுமில்லை.

இப்படியெல்லாம் கவனிப்பதை விட்டு, ஒரு நாடக ஆசிரியன் ஒருவனுக்கு அரச வேடமும், அதன் பின் பெண் வேடமும், அதன் பின் ஒரு தவமுனிவர் வேடமும், அதன் பின் ஆண்டிவேடமும் ஆகப் பல வேடந்தரிப்பது போல, உபாத்தியாயர் வாசகபாடத்தினைப் பொருட்பாடமாகவும், அதன் பின் இலக்கண பாடமாகவும், அதன் பின் வியாச பாடமாகவும் மாற்றுகின்றனர். பிள்ளைகளுக்கு வாசக பாடத்தில் உணர்ச்சியையுண்டு பண்ணவேண்டிய அவர் அதைவிட்டு மற்றைய பாடங்களில் அறிவினை வளர்க்க முயல்வது ‘மொச்சைக்கொட்டையுண்டோ செட்டியாரே?’ என்று கேட்ட ஒருவனுக்கு அவர் பச்சைப்பயிறு கொடுக்க வந்தது போலவும், ‘தேவாரத்திருப்பதிகம்’ ஒன்று சொல்லுமின் என்ற கேட்டவனுக்குப் பண்ணின்

தன்மையையும், இசையின் தன்மையையும், இவ்விரண்டினையுந்தரும் மிடற்றின் தன்மையையும் கூறினது போலவும் இருக்கிறது.

ஆதலால் 'வாசகபாடம்' கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் அப்பாடம் நடத்துகையில் பிறிதொரு விஷயத்திலும் தம்மனத்தினைச் செல்லவிடாது அப்பாடத்தினையே செவ்வையாக நடத்துதல் வேண்டும்.

மற்றைய பாடங்களைப்போல அவ்வளவு சிரமப்படவேண்டிய பாடமல்ல இவ்வாசகபாடம். நாளையதினம் வகுப்பில் நடக்கவேண்டிய பாடத்தினைப் பிள்ளைகள் இன்றையதினமே வீட்டில் இரண்டொரு முறை பார்க்கவேண்டும். கடினமான பதங்களுக்குப் பொருள் அறியவேண்டும். இவ்வாறு பிள்ளைகள் செய்து கொண்டு வந்த பின்னர் உபாத்தியாயர் வாசகபாடத்தில் ஒரு பாராவினைப் (பகுதியினைப்) படித்துக்காட்டி, அதன்படி ஒரு பையனைப் படிக்கும்படி சொல்லலாம். அப்படியே மற்றப் பகுதிகளையும் படித்துக் காட்டி அப்பிள்ளையை வாசிக்கச் செய்யலாம்; அல்லது தனக்கு விருப்பமான பிள்ளைகள் பல பாராக்களை (பகுதிகளைப்) படிக்கக் கேட்கலாம். ஆனால் இது அவ்வளவு தகுதியான முறையன்று.

உபாத்தியாயர் வாசகபாடத்தினை வாசித்துக் காட்டுகையில் அவர் தெளிவாகவும், பொருள்விளங்கும்படியும் சொற்றொடர்களை வாசிப்பதனோடு உயர்த்தியும் தாழ்த்தியும் வலிந்தும் மெலிந்தும் கூறவேண்டிய இடங்களில் அந்தந்த முறைமைப்படியும் வாசித்துக்காட்டவேண்டும். பிள்ளைகளுக்கு அவ்வாசிப்பில் உற்சாகம் உண்டாகும்படி செய்யவேண்டும். அவர்கள் புத்தகத்தைக் கையில் பற்றி வாசிக்கையில், தாம் தம்முடைய நண்பரோடு பேசுங் காலத்து உண்டாகும் பெருமகிழ்ச்சியினை அவர்கள் அடையவேண்டும்.

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்றபடி அவர்கள் பாடம் அவர்களுக்கு இனிப்பைத் தந்தால் அல்லது அப்பாடத்தாற் பிரயோசனம் இல்லை.

வாசகபாடத்தினைக் கற்பித்தானபிறகு அப்பாடத்திலுள்ள விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்கலாம்.



பிள்ளைகளுக்கு வாசகபாடத்திலிருக்கும் உணர்ச்சியைப் பின் வரும் மூன்று முறைகளால் பரிசோதிக்கலாம்:—

1. வாசக வேகம்
2. கேள்விகளுக்கு அவர்கள் தரும் விடைகளின் அளவு
3. விடைகளின் தன்மை.

(1) இரண்டு பிள்ளைகளைத் தனித்தனியே ஐந்துஐந்து நிமிஷம் வாசிக்கச் சொன்னதில் முதலாவான் அந்த ஐந்து நிமிஷத்துள் வாசித்ததைவிட இரண்டாவது பையன் அந்த ஐந்து நிமிஷத்துள் அதிகபாகம் வாசித்துக்காட்டுவானாயின் இரண்டாவது பையனுக்கு வாசிக்கும் ஆற்றல் அதிகம் என்று நிச்சயிப்பது ஒருமுறையாகும்.

(2) இரண்டுபேரும் அந்த ஐந்து நிமிஷத்துள் சமத்துவமாகப் படிக்குந் திறமை வாய்ந்திருப்பார்களானால் வாசித்தபாகத்துள் இருக்கும் விஷயத்தை மிகுதியாக எவன் எடுத்துரைக்கின்றானோ அவனே மற்றவனைவிடச் சமர்த்தன் என்று நிச்சயிப்பது மற்றொருமுறையாகும்.

3. மேற்கூறிய வாசகவேக அளவும் விஷயத்தொகுதியினை எடுத்துரைக்கும் ஆற்றலும் இருவருக்கும் சமத்துவமாக இருப்பின், அப்பொழுது எப்படி அவர்கள் புத்திகோசரத்தை அறிவது என்று வினவினால், வாசித்தபாகத்துள்ள நுண்பொருள்களின் தன்மை யுணர்ந்து எவனொருவன் உரைக்கின்றானோ அவனே மேம்பாடுற்றவன் என்றறியவேண்டும். இது மூன்றாம் முறையாம்.

இப்படிப் பலவகைகளில் புத்தி நுட்பத்தை அறிய இடந்தரும் வாசகபாடத்தினை நாகரிகமுள்ள பாடமாகப் பாவித்து நம்முடைய பாட அட்டவணையில் அதற்கு இடந்தரவேண்டும். நாம் இசைத்தமிழுக்குத்தரும் அளவு மரியாதையினை வாசகத்தமிழுக்கும் தரல்வேண்டும். நம் அறிவை வளர்த்தற்குரிய கருவியாகவே அதனைக் கொள்ளல்வேண்டும்.

நம்மை நாளடைவில் கதாப்பிரசங்கிகளாகவும், புராணப்பிரசங்கிகளாகவும், கையேட்டுத்தம்பிரான்களாகவும் செய்யக்கூடிய வாசகபாடத்தினை நாம் அவமதித்திருப்பது பெருந்தவறல்லவா?

(வரும்)

பத்திராதிபர்

# PRELIMINARY EXAMINATION FOR TEACHERS' CERTIFICATES.

## 1914 வருஷத்து டீச்சர் சர்டிபிகேட் பிரிலிமினெரி பரீக்ஷை.

இந்தப் பரீக்ஷையின் பலாபலன்கள் 13-10-14 போர்ட்செண்ட்ஜார்ஜ் கெசட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்பரீக்ஷையில் தேறினவர்கள் பெரும்பாலும் லோயர்பிரைமெரி உடையவர்களே. அவர்களில் அத்தனைபேர் தேறி யிருப்பது வியக்கத்தக்கதே. இவர்களில், செஷனல்ஸ்கூல்களில் படித்துப் பரீக்ஷைக்கு வந்த அநேகர் நன்றாய்த் தேறி இருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷப்படவேண்டியிருக்கிறது. ஏனென்றால் செஷனல் ஸ்கூல்களில் படித்துவரும் டீச்சர்களுக்குப் போதுமான கல்விப்பயிற்சி யிராதென்று எல்லாரும் எளிதில் எளனஞ்செய்வது வழக்கம். செஷனல் ஸ்கூல்களில் படித்துவருகிறவர்கள் நல்லயோக்கியதையையும் போதுமான கல்வியையும் பெறுகிறார்கள் என்பது இந்தப்பரீக்ஷையின் பலாபலங்களினால் நன்றாய்த்தெரிகின்றது. பரீக்ஷைப்பாடங்களுள் தேர்ச்சி அருமையாகக் காண்பது கணிதம் ஒன்றிலேயே. கெசட்டில் ஒருபக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் பெயர்களில் எல்லாரும் பரீக்ஷையில் தேறுவதற்கு வேண்டிய அளவு மார்க்குகள் வாங்கினவர்களே யானபோதிலும், இரண்டொருவர் மாத்திரமே கணிதத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதாகக் காண்கிறோம்.

உபாத்தியாயர்களுக்காக இந்தப்பரீக்ஷையில் கொடுத்த கணிதக் கேள்விகளைப்பற்றி நமது செப்டம்பர் மாதத்து "சற்குரு" பத்திரிகையில் விவரித்துப் பேசியிருக்கிறோம். முதற்பாஷையாகிய தமிழில் அநேகர் நன்றாய்த் தேறியிருக்கிறார்கள் என்று இந்த கெசட்டால் அறிந்து மிகவும் திருப்தியடைகிறோம். வேறு எந்த சுதேசபாஷையிலும் இத்தனைபேர் தேர்ச்சிபெறவில்லை யென்று தெரியவருகிறது.

---

# VOCATIONAL TRAINING.

## தொழிலுக் கேற்ற பயிற்சி.

இந்த நாளில், தொழிலுக்கேற்ற பயிற்சி வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; அது மிகவும் முக்கியமானதென்று நினைக்கிறார்கள். பிள்ளைகளெல்லோரும் 14-வயது ஆகிறவரையில் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டுமென்று இங்கிலாந்திற் சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தின்படி எல்லாப் பிள்ளைகளும் 14-வயது வரையில் பள்ளிக்கூடத்திற் படித்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் படிக்கும் படிப்பு ஒரு தொழிலுக்கும் சம்பந்தப்பட்டதன்று. அந்தப் படிப்புப் படிப்பதனால் அவர்கள் பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு தொழில் தெரியாத கூலிக்காரர்களாக மாத்திரமே உழைக்க வேண்டியதாகும். அப்படிப்பட்ட கூலிவேலையில் அவர்கள் அமர்வதனால், அதற்கு மேலான காரியங்கள் செய்வதற்கு அவர்களுக்கு வழி யில்லாமற் போகின்றது. ஏனெனில் தொழிலுக்கேற்ற கல்விப் பயிற்சி இருந்தால் அல்லாமல் அந்தத் தொழிலில் அபிவிருத்தி அடைவதற்கு வழியில்லை யல்லவா? தொழிலுக் கேற்றபடி ஆதியில் பயிற்சி இல்லாவிட்டால் எப்பொழுதும் கூலியாளாக உழைக்க வேண்டியதே யொழிய மேன்மையடைவதற்கு வழியில்லை என்று இப்பொழுது உள்ள பள்ளிக்கூடத்துப்படிப்பை நிந்திக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்திற் கற்கும் பொதுவான அறிவினால் பயன் ஒன்றும் விளைவதில்லை யென்றும், பிறகு மேற்கொள்ளும் தொழிலில் மேன்மையை அடைவதற்கு அது சாதனமாவதில்லை யென்றும் சொல்லுகிறார்கள். ஆனால், அந்தப்படிப்பை நிந்திப்பது சரியென்று தோன்றவில்லை. ஏனெனில், பள்ளிக்கூடத்தில் நன்றாகப்படித்துப் பழகி அறிவுமேற்கொண்டவன் அப்படிப் படிக்காமல் மூடனாய் இருப்பவனைவிட மேலானவன் அல்லவா? மூடனாய் இருப்பவன் கூலி வேலையிற் புகுந்தால் எப்பொழுதும் அந்த வேலை செய்தே காலங்கழிக்கவேண்டும். அதற்குமேல் ஏறுவதற்குப் போதுமான அறிவு அவனுக்கு இல்லை. பள்ளிக்கூடத்திற் படித்துப் பழகினவனோ அப்படியன்று; கூலி யாளைவிட அதிகமான புத்தி யுடையவன். ஆதலால் அதைவிட

மேலான வேலைகள் செய்வதற்கு அவன் வெகு சீக்கிரத்தில் பழகிக் கூலி வேலையைவிட்டுத் தேர்ந்த தொழிலாளி யாவது சாத்தியமாகும். அவன் அப்படிச் செய்வதற்குச் சாதனமாய் இருக்கும் பொருட்டே "Continuation Schools" "தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்கள்" அங்கங்கே ஏற்பட்டிருக்கின்றன: அவைகளைப் புலப்படுத்தி மும்முரமாய் நடத்தி வருகிறார்கள்.

மேற்சொல்லிய தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் சாதாரணமாய் சாயங்காலம் 6-மணி முதல் இரவில் 8-அல்லது 9-மணி வரையில் படித்து வருகிறார்கள். கூலிவேலை செய்பவர்கள் தொழிலுக் கேற்ற கல்வியைக் கற்பதனால் தொழிற்சாலை அதிகாரிகளுக்கு நன்மை அதிகம் அல்லவா? சாமானியமான கூலிவேலை செய்கிறவன் தொழில் தெரிந்து பெரியவேலை செய்வதற்குத் திறமையுடையவன் ஆவதனால், அவனைக்கொண்டு எஜமானன் அதிகலாபம் சம்பாதிப்பதற்காகும். இந்த எண்ணங்கொண்டு தொழிற்சாலையதிகாரிகள் தங்களிடத்தில் வேலைசெய்யும் பிள்ளைகளைத் தினந்தோறும் இரண்டுமணி நேரம் மேற்சொல்லிய தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப விரும்பி முன் வருகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்கள் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டவை; துரைத்தனத்தார் அவைகளுக்குப் பணவுதவிசெய்து ஆதரித்து வருகிறார்கள்.

தொழில் தெரிந்த வேலைக்காரர்களை வைத்து வேலை வாங்குவதனால் மிகுந்த அனுகூலங்கள் இருக்கின்றன என்பதை கவர்ன்மெண்டாரும் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். தேசத்தில் அநேக ஜனங்கள் வேலையில்லாமல் தவித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சில நாளைக்கு முன் கவர்ன்மெண்டார் அவர்கள் பிழைக்க வழி உண்டாக்குவது எப்படி யென்று ஆலோசித்துச் சங்கடப்பட வேண்டியதாயிற்று. சிறு பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலே தொழில் பயிலுவதற்குச் சாதனமாய் கல்வியைக் கற்பிப்பதனால் அவர் பெரியவர்களாகி ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு ஜீவித்துவருவார்களாதலால் இனி பிழைப்பதற்கு வேலையில்லை யென்று தவிக்கிற ஜனங்கள் இது வரையில் இருந்ததுபோல ஏராளமாக மிக மாட்டார்களென்று கவர்ன்மெண்டார் நம்பி இந்த மாதிரியான பள்ளிக்கூடங்களை ஆதரித்து வருகிறார்கள்.

நமது இந்தியா தேசமானது முக்கியமாகப் பயிர்த்தொழிலினால் ஜீவிக்கும் தேசமேயல்லாமல், கைத்தொழிலினால் ஜீவிக்கும் தேசமென்று இன்



னுஞ் சொல்வதற்கில்லை. ஆனபோதிலும் இந்த ராஜதானியில் நெசவுத் தொழில் அதிகமாய் நடந்துவரும் கிராமங்களில் மேற்சொல்லிய கஷ்டத்தைப் போன்ற கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. எப்படியெனில், பிரைமெரி படிப்புப் படித்துக்கொள்ள வேண்டும் என்னும் ஆசை அந்த நெசவுக்காரர்களுக்கு இருக்கின்றது. அவர்களுக்கு அந்த ஆசை இருப்பது கொண்டாடத் தக்கதே. ஆனால் அவர்களுடைய தொழில் எப்படிப் பட்டதென்றால், மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டிய தொழிலாய் இருக்கின்றது; அவர்கள் தங்கள் தொழிலையே கவனிக்கவேண்டியதாய் இருக்கிறது. அப்படி இரவும் பகலும் உழைக்காவிட்டால் அவர்களுடைய தொழில் ஈடேறுவதில்லை. ஆகையால் மேற்சொல்லிய தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களுக்குப் போய் அவர்கள் படிக்கமுடியாது; எவ்விதமான படிப்புப் படிப்பதற்கும் அவர்களுக்கு ஓய்வு கிடைக்கிறதில்லை.

ஆகையால், இப்போது உள்ள இரவுப் பள்ளிக்கூடங்கள், அவை இருக்க வேண்டிய விதிப்படி இருக்கவில்லை யென்று சொல்ல வேண்டி இருக்கிறது. பகற் பள்ளிக்கூடங்கள் அல்லாமல் இரவுப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டு நடந்து வருவது நல்ல காரியமே; அந்தக் காரியத்தைச் சாதித்திருப்பது பெருமையே. ஆனால், அவைகளை உபயோகமுள்ள பள்ளிக்கூடங்களாக ஆக்குவதற்கு ஆய்ந்து தேர்ந்து அமைதியாகவும் ஊக்கமாகவும் முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தாலன்றி மேற்சொல்லிய கஷ்டம் நீங்காது. அப்படிப்பட்ட முயற்சி செய்யும்படி ஜனங்களைத் தூண்டுவது உபாத்தியாயர்களுடைய காரியம். முதலாளிகள் கல்வி கற்க வேண்டியது அவசியம் என்றும், அதனால் அவர்களுக்கு நன்மை உண்டென்றும் உபாத்தியாயர்கள் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்; இந்த விஷயங்களை யெல்லாம் தெளிவாக விவரிக்கக்கூடிய வியாசம் ஒன்றை வினாவிடை ரூபமாக எழுதி அவர்கள் தங்களுடைய கிராமத்துச் சாவடியில் பையல்களைக்கொண்டு வினாவிடை வடிவமான அந்தச் சம்பாஷணையை ஜனங்களுக்கு எதிரில் நடப்பிக்கவேண்டும்.

சேலம் ஜில்லாவில் ஒரு உபாத்தியாயர் இந்தமாதிரியாகச் செய்ததனால், அவருடைய பள்ளிக்கூடத்தில் பலர் வந்து சேர்ந்துபடிக்கிறார்கள். புத்திசாலியான வேலைக்காரனாக வேண்டுமானால் ஒருவருக்கு எலிமெண்டரி படிப்பாவது இருக்கவேண்டியது அவசியம் என்பதை ஜனங்களுக்கு வற்புறுத்திக்

காட்டவேண்டுமென்பதை எடுத்துக்காட்டலாம். தொழிலுக்கேற்ற படிப்புக் கொடுப்பதற்கு இப்பொழுது புதிதாய் ஏற்பட்டுள்ள கைத்தொழில் இலாகா அதிகாரிகள் ஏற்பாடுசெய்து வருகிறார்கள்.

நெசவுத்தொழிலாளிகளுக்குக் கல்விப்பயிற்சி உண்டாக்கும் விஷயத்தில் நமது கவர்ன்மெண்டார் மிகுந்த அக்கறைகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் படிப்பில்லாததனால் அவர்களுடைய தொழிலை அபிவிருத்திசெய்வதற்கும் செலவையும் சிரமத்தையும் குறைக்கக்கூடிய புதிய முறைகளை அவர்களுக்குக் கற்பிப்பதற்கும் முடியாமற் போகிறதென்று அறிந்து கவர்ன்மெண்டார் மூன்றுவருஷத்திற்கு முன்னால் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களுக்கு ஓர் உத்தரவு அனுப்பினார்கள். நெசவுக்காரர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு எவ்வளவு அனுகூலங்கள் செய்யக்கூடுமோ, அவ்வளவும் இன்ஸ்பெக்டர்கள் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் மேற் சொல்லிய உத்தரவில் கூறியிருக்கிறார்கள்.

---

மைசூர் யுவராஜரவர்கள் ஆரிய பாலிகா பாடசாலையில் செப்டெம்பர் மாசம் 8-ந் தேதி ஒரு பிரசங்கஞ் செய்தார். ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கு எவ்வளவு முயற்சிகளும் சகாயமும் செய்யக்கூடுமோ அவ்வளவும் எல்லாருஞ் செய்யவேண்டும். ஸ்திரீகளுக்குக் கல்விப் பயிற்சியுண்டானால் நம்முடைய லோக விவகாரங்களில் நமக்கு ஏற்பட்டிருக்கும் அநேக தொல்லைகளும் ஒழிந்துபோம். பாலிகைகளுக்கு எவ்வளவு அறிவூட்டலாமோ அவ்வளவு அறிவும் அவர்களுக்குப் பெற்றோர்கள் ஊட்டினால்நமது தேசம் முற்பட்டு க்ஷேமமடையும். அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் மேற்குச் சீமை வழக்கங்களிலும் கொள்கைகளிலும் உத்தமமாய் இருக்கிறவைகளை மாத்திரம் கைக்கொண்டு, நமது அபிவிருத்திக்கும் க்ஷேமத்திற்கும் ஒவ்வாதவைகளை யெல்லாம் நீக்கி, நமது தேசாசாரங்களையும் ஜாதீயக்கொள்கைகளையும் அவர்களுக்கு நன்றாய்ப் புகட்டவேண்டியது அவசியம்; அதுவே நமது நாடு முன்னுக்கு வரும்வழி என்று அவர் கூறினார். அவர் கூறியதே சரியான முறை. மேற்குச் சீமையாரிடத்து உத்தமமாய்க்காணும் கொள்கைகளைக் கைக்கொள்ளுவதுடன் நமக்கு அநேக காலப் பரம்பரையாக வந்திருக்கும் கொள்கைகளுள் உத்தமமானவைகளைத் தெரிந்தெடுத்துக் கைக்கொள்ளுவதே மாதர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைகளில் சிறந்தது.

# BOOK REVIEWS

# புத்தக விமரிசனை

*பொன் பறவை:*—இது பம்பாய் சென்னை என்னும் இரண்டிடத்திலுமுள்ள ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரெஸ் என்னும் பெரும் புத்தக வியாபாரிகளால் வெளியிடப்பட்டதொரு கதைப் புத்தகம். இது எலிமென்டரி பள்ளிக்கூடத்துச் சிறுவருக்கெனவே எளிய நடையில், இனிமையான தமிழில் எழுதப்பெற்றிருக்கிறது. கதை வாசிப்பதற்குத் தகுதியானது. கைக்கு அழகு பிறக்கும்படியான விதமாய் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு நீல அட்டையால் பயிண்டு செய்யப்பட்டுள்ளது. இப்பெயருடன் விளங்கும் இப்புத்தகத்து "வானவில்லும் புதையற்பாணமும்" என்னும் வேறொரு கதையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விலை அணா $1\frac{1}{4}$.

*நந்தனும் மோகனாங்கியும்:*—இதுவும் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரெஸ்காரரால் பிரசுரிக்கப்பட்ட தனிக்கதைப் புத்தகம். இது 28-பக்கம் கொண்டது. விலை அணா 0—1—3. இப்படிக் குறைந்தவிலைக்கு ஏற்றபடி அச்சிடப் பெறாமல், நல்ல அழகிய காகிதத்தில் அச்சிடப்பெற்றுக் கண்ணைக் கவரத்தகுந்த அட்டையால் பயிண்டு செய்யப் பட்டிருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாகவே யிருக்கிறது. இவ்விதமான கதைப் புத்தகங்களை வாங்கிப் படிக்கச் சிறுவர்கள் பின்னிடார்கள் என்பதிற் சந்தேகம் இல்லை. இக்கதையின் நோக்கும் 'முயற்சி திருவினையாக்கும்' 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்னும் ஆன்றோர் வாக்குகளின் நோக்கத்தை அனுசரிக்க இக்கதையெழுதினோர் எடுத்துரைத்திருப்பது மிகவும் மெச்சத் தகுந்

தந்தே. இப்படியே பல கதைகள் தோன்ற எலிமென்டரி பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் இவ்வரிசைக் கதைப் புத்தகங்களை ஆதரிப்பது அவசியமாகும்.

வீ-ஞ:—இக்கதைப் புத்தகத்தினை வெளியிட்டவர் ஸ்ரீமாக்-தி-சா-வேணுநாதம் என்பவர். அவருடைய முன்னுரையால் இதனை எழுதினோர் அருளானந்த போஸ் என்னும் பெயருடையார் என்பது புலப்படுகிறது. அவர் தனக்குச் சம்பவித்த சம்பவங்களைக் கதைரூபமாக வெளியிட்டிருக்கின்றார். முன்னுரையிற் கூறியபடியே சரிதையிற் சுவையும் ஆச்சரியமும் ததும்பியே நிற்கின்றன. இத்தகைய அரிய கதைகளை—அல்வழிப் பிரயோகங்கள் பொருந்தப்பெறாச் சரிதைகளைச் சிறுவரும், சிறுமியரும், ஏனையோரும் களிப்புடன் வாங்கி வாசிக்கவேண்டும் என்பது எமது கொள்கை. இக்கதைப் புத்தகத்தின் விலை அணா 4 இது சென்னை, பார்க்டவுன் நட்டான் பஜார்ரோட் 22 வீடாகிய "ஆர்ட்னன்ஸ்வியூ" என்னும் இடத்திற் கிடைக்கும்.

* * * * *

Madras: Printed at the Jyotishmati Press, and Published by N. Venkatarayalu & Son, 87 Ramaswamy St., Madras.

OFFICE OF THE REGISTRAR ... 5 - DEC 1914 MADRAS

# சற்குரு

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| | | |
|---|---|---|
| தொகுதி—க | 1914 ௵ டிசம்பர் ௴ | பகுதி—௫ |

## NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

சென்னை ராஜதானியில் எலிமென்டெரிப் படிப்பை அபிவிருத்தி செய்வதற்காகத் துரைத்தனத்தார் ரூ.11,85,921 கொடுத்து உதவப்போகிறார்கள். இந்தத் தொகையில், 1911-14 வருஷங்களில் டிஸ்டிரிக்ட் போர்டார்களும் முனிஸிபாலிடியார்களும் புதிதாய் ஏற்படுத்திய எலிமென்டரி பாடசாலைகளை ஆதரிப்பதற்காக ரூ. 759,391 செலவிடப்படும்; உபாத்தியாயர்களுக்குக் கொடுத்துவரும் சம்மானத்தை அதிகப்படுத்துவதற்காக ரூ 1,14,300உம், உபாத்தியாயர்களுடைய சம்பளத்தை 8 ரூபாயிலிருந்து 10 ரூபாய் ஆக்கியதனால் உண்டாகும் அதிகச்செலவுக்காக ரூ. 99,900 உம் செலவிடப்படும்; லோயர் எலிமென்டரிப் பாடசாலைகளில் அதிக உபாத்தியாயர்களை நியமிப்பதற்காக ரூ. 56,466 செலவிடப்படும்; 1912-14 வருஷங்களில் ஏற்படுத்திய செஷன்

ஸ்கூல்களை ஆதரிப்பதற்காக டிஸ்டிரிக்ட்போர்டுகளுக்கு ரூ. 61,337 கொடுக்கப்படும்; சிலசெகண்டரி ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் உள்ள ஜெனரல் வேலைக்காரர்களுக்குச் சம்பளம் அதிகப்படுத்துவதற்காக சில டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் ரூ. 94,525 கொடுக்கப்படும்.

* * * *

பாலிகா பாடசாலைகளின் உபாத்தியாயினிகள் வசிப்பதற்குத் துரைத்தனத்தார் சில ஊர்களில் சர்க்கார் விடுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த விடுதிகளில் உபாத்தியாயினிகள் 'தனியே' வசிக்கவேண்டுமென்று துரைத்தனத்தார் விதித்திருக்கிறார்கள். அந்தத் துரைத்தனக் கட்டளையில் 'தனியே' என்னும் பதத்திற்கு அர்த்தம் என்னவென்று ஆசாம் மாகாணத்திலுள்ள உபாத்தியாயினி ஒருத்தி ஸ்கூல் இன்ஸ்பெக்டருக்கு எழுதிக்கேட்டாள். 'தனியே' என்றால் "கணவனுடன் அன்று, கணவனல்லாத வேறு ஆண்பிள்ளையின் ஆதரவிலையில் என்று அர்த்தம்" என அந்த இன்ஸ்பெக்டரஸ் உபாத்தியாயினிக்குப் பதில் எழுதியிருக்கிறாள்.

* * * *

உபாத்தியாயினிகள் கணவனுடன் சர்க்கார்க் கட்டடத்தில் வசிக்கக்கூடாது; ஆனால் அவர்களைப் பாதுகாப்பதற்கு ஏற்பட்டிருக்கும் வேறு புருஷத் துணையுடன் அங்கே வசிக்கலாம் என்று சொல்வதனால் பிரம்மமதத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் அநேகர் உபாத்தியாயினி வேலையை ஒப்புக்கொள்ள முடியாமற் போகும். வங்காளத்தில் பிரம்மமதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். அந்த ஸ்திரீகள் படிப்பிலும் பயிற்சியிலும் தேர்ந்திருக்கிறார்கள். அநேகமாய் உபாத்திமைத் தொழில் நடத்துகிறவர்கள் அவர்களே. அவர்கள் பெரும்பாலும் கலியாணஞ்செய்து கொண்டவர்களாகவே இருப்பதனால், கணவர்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் உபாத்திமை வேலையை மேற்கொள்ள மாட்டார்கள்.

* * * *

மேற்சொல்லியபடி துரைத்தனக் கட்டளை ஏற்பட்டிருப்பது நன்மை அல்லவென்று தோன்றுகிறது. நமது நாட்டில் கல்விப்பயிற்சி அதிகமாய் இல்லை. அதிலும் பெண்பிள்ளைகளுக்குக் கல்விப்பயிற்சி மிகவும் குறைவாய் இருக்கின்றது. பெண்பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கத் தக்க உபாத்தியாயினிகள் போதுமான தொகை இந்தியாவில் இப்பொழுது கிடைப்பதில்லையென்று முறையிட்டுக் கொண்டிருக்க, கலியாணஞ் செய்து கொண்டு கணவனுடன் வசிக்கும் ஸ்திரீகள் உபாத்திச்சிகளாய் முன்வருவதற்கு வங்காளத் துரைத்தனத்தார் ஒருவாறு தடைசெய்திருப்பது சரியன்று.



* * * *

பம்பாய் ராஜதானியிலுள்ள கலாசாலைகளில் படித்துத்தேறிய இந்திய மாதர்களைப்பற்றி ரெவரண்ட் டாக்டர் D. மாக்கின்சான் (Rev. Dr. D. Mackichan) என்பவர் இந்திகிராபிக் (Hindi Graphic) என்னும் பத்திரிகையில் விவரமாய் எழுதியிருக்கிறார். பம்பாய் ஸ்திரீகளுக்கு உயர்தரக் கல்வி கற்பிப்பதன் பயன்களை அவர் கண்டறிந்த வரையில் சொல்லுகிறார். நாள் ஏற ஏற, கலாசாலைகளில் ஸ்திரீகள் அதிகமாய் வந்து சேருகிறார்களென்றும் அவர்களெல்லாரும் மிகவும் நன்றாய்ப் படித்துத் தேறுகிறார்களென்றுஞ் சொல்லுகிறார். உயர்தரக் கல்வியினால் அவர்களுக்கு உண்டாகிற அளவு மனப்பயிற்சி புருஷர்களுக்கு உண்டாகிறதில்லையென்று அவர் தம் அநுபவத்தில் கண்டறிந்திருக்கிறார். மாதர்களுக்குரிய மென்மை, அடக்கம், ஒடுக்கம் முதலிய நற்குணங்களுடன் முதிர்ந்த மனப்பயிற்சியும் இவ்வளவு அழகாய்க் கூடியிருக்குங்காட்சி வேறெந்தத் தேசத்திலும் காணமுடியாதென்று அவர் சொல்லுகிறார். இப்பொழுது சென்னையில் ஸ்திரீகளுக்காகத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கிற கலாசாலையிலும் இப்படிப்பட்ட நற்பயிற்சி உண்டாகி நமது ராஜதானியுஞ் சிறப்புப் பெறுமென்று நம்புகிறோம்.

* * * *

சென்னை ராஜதானியில் பற்பல தொழில்களுக்குரிய டெக்னிகல் படிப்பைப்பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியாருடைய அபிப்பிராயத்தில் இப்பொழுது நடந்துவரும் டெக்னிகல் பரீக்ஷைகள் போதாவாம்; புது மாதிரியான பரீக்ஷைகள் ஏற்பாடு செய்யவேண்டுமாம். பரீக்ஷிக்கிறவர்கள் அந்தந்தத் தொழில்களில் வேலை செய்கிறவர்களாகவே இருக்கவேண்டுமாம். பரீக்ஷகர்களைத் தெரிந்தெடுப்பதற்கு ஒரு போர்டார் இருக்கவேண்டுமாம். அந்த போர்டுக்கு டைரக்டர் அவ் இன்டஸ்டிரியஸ் தலைவராக இருக்கவேண்டுமாம்.

* * * *

கடப்பையில் மூன்றாவது ஜில்லா மகா சபை செப்டெம்பர் மாசம் 11-ந் தேதி நடந்தபோது கனம் கிருஷ்ணராவ் என்பவர் அக்கிராசனபதியாய் இருந்தார். அவர் பிரசங்கித்தபொழுது, நமது தேசத்திலுள்ள தீமைகளுக்

கெல்லாம் ஒரே மருந்து இருக்கிறதென்று அவர் கூறினார். படிப்பின்மை என்பதைத் தொலைத்து எல்லோரையும் படிப்பாளிகளாக்கினால் நமது தேசம் சிறந்து ஓங்குவதற்கு இடம் உண்டாகும், நமது கஷ்டங்களெல்லாம் தீரும் என்று அவர் கூறினார். படிப்பின்மையைப் போக்கும் பொருட்டு எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாய்க் கல்வி கற்பிக்கவேண்டுமென்று அவர் சொன்னார். கட்டாயமாய் எலிமென்டெரிப் படிப்பு கற்பிக்கும் விஷயத்தைப் பற்றிச் சட்ட நிர்மாண சபை மெம்பர்கள் அந்தச் சபையில் அடிக்கடி எடுத்துப் பேசி அதன் நன்மைகளை விளக்குவதனால், அந்த விஷயத்தில் சீக்கிரத்திலே துரைத்தனச் சட்டம் ஏற்படக்கூடும்.

* * * *

நெல்லூரிலுள்ள தீசாபிகல் சங்கத்து மெம்பர்கள் சிலர்கூடி பெரிய காரியங்கள் செய்து வருகிறார்கள்:—(1) ஒரு சமஸ்கிருத பாடசாலை வைத்து நடத்தி வருகிறார்கள். அந்தப் பாடசாலைக்குத் துரைத்தனத்தார் வருஷவாரி யில் பண வுதவிசெய்து வருகிறார்கள். (2) தாழ்ந்த ஜாதியார்களைப் படிப்பிப்பதற்கு ஒரு பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள். (3) இதற்குக் கிளையாக ஸ்டோன் ஹவுஸ் பேட்டையிலும் மற்றொரு பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள். மற்ற ஊர்களிலுள்ள தீசாபிகல் சங்கத்தவர்களும் இப்படிப்பட்ட நற்காரியங்களில் ஊக்கங் கொள்வார்களாக.

* * * *

**ஸ்கூல்களைப் பற்றிய ரிப்போர்ட்டுகள்.**

எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடத்தையும், அந்த இடத்திற் குரிய விசேஷங்களையும், அவ்விடத்து ஜனங்களின் சந்தர்ப்பங்களையும், அவ்விடத்துப் பிள்ளைகளின் நிலைமைகளையும், அவ்விடத்தவருக்கு அவசியமாய்ச் செய்யவேண்டிய நன்மைகளையும், அந்த நன்மைகளைச் செய்வதற்குப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களாகிய நாம் செய்யும் முயற்சிகளையும் பற்றி எங்களுக்குச் சுருக்கமாய் எழுதி அனுப்பினால், எல்லா ஊராரும் தெரிந்து பயன்பெறக் கூடிய பொதுவான விஷயங்களை இந்தப் பத்திரிகையில் நாங்கள் பிரசுரிப்பதற்காகும். எலிமென்டரி ஸ்கூல் மாஸ்டர்கள் மேற்சொல்லியபடி தங்கள் தங்களுடைய பள்ளிக்கூடத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சுருக்கமாக எழுதி எங்களுக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறோம். இப்படிச் செய்வதனால், எலிமென்டரி படிப்பு அபிவிருத்தியடைவதற்கு அவர்கள் பெரிய உபகாரஞ் செய்தவர்களாவார்கள்.

* * * *

# HIGHER & LOWER ELEMENTARY TEACHERS

## ஹையர் எலிமென்டரி டீச்சர்களும் லோயர் எலிமென்டரி டீச்சர்களும்

டிரெயினிங் ஸ்கூல்களில் படித்துத்தேறும் உபாத்தியாயர்கள் ஹையர் எலிமென்டரி டீச்சர்களென்றும், லோயர் எலிமென்டரி டீச்சர்களென்றும் இரண்டு விதமாக இருக்கிறார்கள். மூன்றும் பாரம் வரையில் படித்தவர்களும் நான்காம் ஸ்டாண்டர்டு வரையில் படித்தவர்களும் எலிமென்டரி ஸ்கூல் மாஸ்டராக வேண்டுமென்று டிரெயினிங் ஸ்கூலுக்கு வந்து சேருகிறார்கள். மேற்சொல்லிய இரண்டு திறத்தாரும் டிரெயினிங் ஸ்கூலில் படித்துத்தேறி எலிமென்டரி ஸ்கூல் மாஸ்டர் எனப் பெயர்பெற்ற போதிலும், அவர்கள் இருவருக்கும் வித்தியாசம் இருக்கின்றதல்லவா? மூன்றாவது பாரம் வரையில் படித்தவனுக்கும் நான்காம் ஸ்டாண்டர்ட் வரையில் படித்தவனுக்கும் வித்தியாசம் இருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ? மூன்றும் பாரம் வரையில் கஷ்டப்பட்டுப் படித்தவனுக்கு அறிவு அதிகமாய் இருக்கும். அவன் பட்ட கஷ்டத்திற்கும் பெற்ற அறிவிற்கும் தக்கபடி அவனை உயர்வாகக் கொண்டாட வேண்டாமோ? அவனும் எலிமென்டரி ஸ்கூல் மாஸ்டர், நான்காம் ஸ்டாண்டர்டு வரையில் படித்து டிரெயினிங் ஸ்கூலில் சேர்ந்து தேறினவனும் எலிமென்டரி ஸ்கூல் மாஸ்டரே என்று பொதுவாகச் சொல்லிவிட்டால், அவர்கள் இருவருக்கும் வித்தியாசம் இல்லாமற் போகுமே. அப்படி வித்தியாசமில்லாமல் இருப்பது சரியன்று. ஆகையால் அதிகப்படிப்புப்படித்து டிரெயினிங் ஆனவனை ஹையர் எலிமென்டரி டீச்சர் என்றும், குறைவானபடிப்பினைப் படித்து டிரெயினிங் ஆனவனை லோயர் எலிமென்டரி டீச்சர் என்றும் வழங்கி வருகிறோம்.

ஹையர் எலிமென்டரி டீச்சருக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுத்து வருகிறோம்; அப்போதைக்கப்போது பிரமோஷன் செய்வதிலும் லோயர் எலிமென்டரி டீச்சர்களைவிட அவனுக்கு அதிக நன்மைசெய்கிறோம். இப்படி

இந்த இரண்டு திறத்தாரையும் வேறு வேறாகவே பாவித்து விவகரித்து வருகிறோம். ஆனால் அதிகப் படிப்புள்ளவர்களுடைய அந்தஸ்துவேறு. குறைந்த படிப்புள்ளவர்களுடைய அந்தஸ்து வேறு என்று தெளிவாய் ஏற்படுத்தாவிட்டால், அதிகப் படிப்புள்ளவர்களுக்கு அதிகச் சம்பளங்கொடுத்து அதிக நன்மை செய்யும் பொழுது மற்றவர்களுக்கு வயிற்றெரிச்சல் உண்டாகும். ஆதலால், அவர்கள் இருவரையும் வேறு வேறு தரகதிகளாகவே பிரித்துவிடுவது நல்லது. நடவடிக்கையில் இப்பொழுது இந்த வித்தியாசம் ஏற்பட்டே இருக்கின்றது. இந்த வித்தியாசத்தை நன்றாய் எடுத்துக்காட்டுவது நலம். அதற்காக நமக்குத் தோன்றுகிற உபாயம் என்னவென்றால், டிரெயினிங் ஸ்கூலில் படித்துத்தேறினதற்கு டிரெயினிங் சர்டிபிகேட் கொடுக்கும்பொழுதும் அந்தச்சர்டிபிகேட்டில் ஹையர் எலிமெண்டரி டீச்சிங் சர்டிபிகேட் என்றும், லோயர் எலிமெண்டரி டீச்சிங் சர்டிபிகேட் என்றும் தெளிவாக எழுதிவிடவேண்டும். இப்படிச் செய்தால் ஹையர்எலிமெண்டரி டீச்சர் தரகதியும், லோயர் எலிமெண்டரி டீச்சர் தரகதியும் வேறுவேறாக ஏற்பட்டுப்போம், அதனால் விவகாரத்தில் மனஸ்தாபம் வராது. இப்பொழுது டிரெயினிங் ஸ்கூல் நடவடிக்கைகளில் புதிய முறைகள் ஏற்படுத்தப் போகிறார்கள். ஆதலால், இந்த மாறுபாட்டையும் புதிய முறைகளிற் சேர்த்து, டிரெயினிங் சர்டிபிகேட்டுகளில் உயர்தரகதி டீச்சர்களென்றும் தாழ்ந்த தரகதி டீச்சர்களென்றும் குறிப்பிடுவது நன்மையென்று தோன்றுகிறது.

***

## NOTES OF LESSONS
## பாடக் குறிப்பு

பள்ளிக்கூடத்தில் பாடஞ்சொல்லும் பொழுது சில பாடங்களைப் பிள்ளைகளுக்கு மனதில் பதியும்படி கற்பிப்பது கஷ்டமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட பாடங்களை எப்படிக் கற்பிக்க வேண்டுமென்று சிற்சில குறிப்புகள் இந்தப் பத்திரிகையில் கொடுத்து வருவோம். உபாத்தியாயர்களுக்கு என்ன விதமான கஷ்டங்கள் தோன்றுகின்றனவோ அவைகளை அவர்கள் எங்களுக்குத் தெரிவிக்கக் கோருகிறோம். இதில் யாம் கொடுக்கும் குறிப்புகளல்லாமல் வேறு நல்ல முறையான குறிப்புகள் அவர்களுக்குத் தோன்றினாலும் அவைகளை அவர்கள் எழுதி எங்களுக்கு அனுப்பக்கோருகிறோம். இந்த விஷயத்தில் கஷ்டமான பாடங்களை பிள்ளைகளுடைய மனதில் நன்றாய்ப் புகட்டுவதற்கு எம்மால் இயன்ற உதவி செய்யச் சித்தமாய் இருக்கிறோம்.

ஆனால், வழக்கம்போலப் பாடக்குறிப்புகளை முற்றும் இங்கே நாங்கள் எழுதப் போகிறதில்லை. பாடக்குறிப்புகள் எப்படிச் செய்துகொள்ள வேண்டுமென்று காட்டுவது எங்களுடைய கருத்தேயல்லாமல் பாடக்குறிப்புகளையே எழுதிக்கொடுப்பது எங்களுடைய கருத்தன்று. நாங்கள் இதில் எழுதும் பாடக் குறிப்புகளில் காலத்தையும் குறிக்க மாட்டோம், எந்த வகுப்புக்குச் சொல்லும் பாடமென்றும் குறிக்கமாட்டோம்.

### 1. To multiply by 10
### 10-ஆல் பெருக்கக் கற்பித்தல்

**நோக்கம்:**—இது வரையில் ஸ்தானங்களைப்பற்றிச் சொல்லி வந்தோம். இப்பொழுது அந்த ஸ்தானங்களைப்பற்றித் தெரிந்த

விஷயங்களின் உதவியைக் கொண்டு ஓர் எண்ணை 10-ஆல் பெருக்குவதற்கு வழிகாட்டுவோம்.

ஆரம்பம்:—பிள்ளைகளை வரிசையாய் நிறுத்தி, ஒருவனைக் கொண்டு மற்றவர்களுடைய கைவிரல்களை எண்ணச் சொல்லுக. அவன் அவர்களுடைய விரல்களை ஒவ்வொன்றாய் எண்ணிக் கொண்டு வருவான். பிறகு, அவனை கிளாசுக்கு அனுப்பி, "இப்பொழுது நீ எண்ணியதைவிடச் சீக்கிரமாய் எண்ணமுடியாதோ?" என்று கேட்க. பத்துப்பத்தாய் எண்ணினால் சீக்கிரமாய்க் கணக்கிடக் கூடுமென்று அவனே பதில் சொல்லும்படியாகச் செய்க.

கற்பித்தல்:—(i) ஆகையால், 5-பிள்ளைகளுக்கு எத்தனை விரல்கள்? ஐந்து பத்துவிரல்கள், அல்லது 50-விரல்கள். எட்டு பேருக்கு எத்தனை விரல்கள்? எட்டு பத்துவிரல்கள், அல்லது 80-விரல்கள்.

(ii) மேற்சொல்லியதைக் கரும்பலகையில் எழுதுவோம்:—

| | பத்து | ஒன்று |
|---|---|---|
| 5-பிள்ளைகளுக்கு விரல்கள் ... ... | 5 | 0 |
| 8-பிள்ளைகளுக்கு விரல்கள் ... ... | 8 | 0 |

ஒன்றாம் ஸ்தானத்தில் பூஜ்யம் போட வேண்டுமென்று பிள்ளைகள் சொல்லும்படியாய்ச் செய்து கொள்க.

அப்படியானால் 12-பிள்ளைகளுக்கு எத்தனை விரல்கள்? இந்த வகுப்பில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்? 23-பேர். இந்த 23-பேருக்குஞ் சேர்த்து விரல்கள் எத்தனை? எழுதிப் பார்ப்போம்:—

| | பத்து | ஒன்று |
|---|---|---|
| 12-பிள்ளைகளுக்கு விரல்கள் ... ... | 12 | 0 |
| 23 ,, ,, ... ... | 23 | 0 |

120-230 என்னும் இவ்வெண்களை வாசிக்க.

அதோ நிற்கிற 12-பிள்ளைகளின் கைவிரல்களை எண்ணிப் பார். நமது கணக்குச் சரியாய் இருக்கிறதா?



இங்கே இருக்கிற 23-பிள்ளைகளின் கைவிரல்களையெல்லாம் எண்ணிப்பார். இரண்டு மூன்று பிள்ளைகளைக்கொண்டு எண்ணிப் பார்க்கச்சொல்லி, ஒவ்வொருவன் எண்ணின வரையில் எண்களை எடுத்துக் கூட்டித் தொகை 230-ஆகிறதென்று காட்டலாம். பிறகு $23=2\times10+3$ என்று காட்டி,

10-க்கு 100

∴ 20-க்கு 200

3-க்கு 30

∴ 23-க்கு 230 என்று பிள்ளைகள் சொல்லும்படியாகச் செய்யலாம்.

(iii) அதே விதமாகப் பின்வரும் கணக்குகளைப் போடலாம்:—

$231\times10=$

$500\times10=$

231-பத்துக்கள் 2,310 ஆகின்றன.

500 ,, 5,000 ,,

விதி கண்டுபிடித்தல்:—மேற்குறித்த கணக்குகளில் நாம் எந்த எண்களைக்கொண்டு பத்தைப் பெருக்கினோமோ அந்த எண்களுக்கும், அப்படிப் பெருக்கி வந்த தொகைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அவைகளை ஒன்றின் பக்கத்தில் ஒன்றாய் எழுதிப்பார்ப்போம்.

| பெருக்கு எண் | பெருக்குத்தொகை |
|---|---|
| 5 | 50 |
| 8 | 80 |
| 12 | 120 |
| 23 | 230 |
| 231 | 2310 |
| 500 | 5000 |

ஒவ்வொரு வரியில் நேராகக்காணும் பெருக்கு எண்ணுக்கும் பெருக்குத் தொகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? பூஜ்யத்தைத் தவிர வேறு வித்தியாச மில்லை. ஆகையால் ஓர் எண்ணை 10-ஆல் பெருக்க வேண்டுமானால், அதன் வலப்புறத்தில் ஒரு பூஜ்யம் சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்த்த பிறகு ஒன்றும் ஸ்தானம், 10-ஆம் ஸ்தானம் நேராக எண்ணிக் கொண்டு, அந்த எண்ணை எண் குறிப்பு முறைப்படி வாசிக்க வேண்டும்.

குறிப்பு:—முதலில் இந்தப் பாடத்தில் பிள்ளைகளுக்கு ஒரு விதமான கஷ்டம் தோன்றும்படி செய்கிறோம். பிறகு அந்தக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கே உற்சாகம் உண்டாகும்படி செய்கிறோம். தோன்றிய கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ளுவது எப்படியென்று பிள்ளைகள் தெரிந்துகொண்ட பிறகு, பிரத்தியக்ஷமான பொருள்களைக்கொண்டு (அதாவது கைவிரல்களைக் கொண்டு) அந்தக் கணக்கை உதாகரித்துக் காட்டுகிறோம். அப்படிக் கணக்குப் பார்த்ததில் இருந்து ஒரு விதியை ஏற்படுத்துகிறோம். அந்த விதி இன்னதென்று பிள்ளைகளே ஊகித்துச் சொல்லும்படி செய்கிறோம். பிள்ளைகள் இது போலத் தங்களுடைய சொந்த புத்தியைக்கொண்டு ஆலோசித்துப் பார்த்துக் கணக்கிடக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஒரு விஷயத்தினைத்தெரிந்து கொண்டோமானால், அதை மறந்து போகாமலிருக்கும்பொருட்டு அந்த விஷயத்தை அடிக்கடி ஞாபகப் படுத்திக்கொண்டு உபயோகிக்கவேண்டும். அதுவே பயிற்சியெனப்படும். பயிற்சி இல்லாமல் அறிவு நிலைப்படாது. ஆகையால், மேற்குறித்த பாடத்திற்கு அடுத்த பாடமாக நமது சந்தாதாரரில் எவரேனும் பயிற்சிப்பாடங்கள் (அப்பியாசங்கள் Exercises) எழுதி அனுப்புவார்களானால், அந்தப் பயிற்சிப் பாடங்களை அவருடைய பெயருடன் இந்தப் பத்திரிகையில் பிரசுரிப்போம்.

---

## FOREIGN NEWS
## பிறதேச வர்த்தமானம்

**நீந்துதல்**
**Swimming**

பட்டணங்களில் இருப்பவர்களிற் பெரும்பாலாருக்குத் தண்ணீரைக் கண்டால் பெரும்பயம் உண்டு. அவர்கள் குளங்களிலும், ஆறுகளிலும், ஓடைகளிலும் இறங்க அஞ்சுவார்கள். பட்டணம் நீங்கலாக மற்றைய இடங்களில் இருப்பவர்களோ அப்படி அஞ்சுதல் இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் நீந்தக் கற்றிருத்தலே.

இந்தக் கல்வியை இங்கிலாந்தில் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். அச்சிறுவர்களில் நீந்துந் திறமை நன்றாய்ப் பொருந்தப் பெற்றவர்களுக்குத், தண்ணீரில் வீழ்ந்து மூழ்கினவர்களை அதனின்றும் எடுத்து அவர்கள் உயிரினைப்பாதுகாக்கும் வகையினையும் போதிக்கிறார்கள். இவ்வித்தையில் அவ்விடத்துச் சிறுவர்களுக்கு அதிகப்பிரியம் இருப்பதாகத் தெரியவருகிறது. அவர்கள் இவ்வித்தையை அபிவிருத்தி செய்யப் பலசங்கங்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அச்சங்கங்களுக்கு "நீச்சாளிகள் சங்கம்" என்று பெயர்.

இங்கிலாந்தில் கற்பிக்கப்படுவது போலவே நமது இந்தியாவிலும், சில பெரிய ஐரோப்பிய பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. கற்பவர்களும் அதிக ஊக்கத்துடன் கற்பதாகவும் தெரிய வருகிறது. சென்னையிலும் ஒரு 'தண்ணீர்த் தொட்டி' (Swimming Bath) நீச்சுக் கல்வியின் பொருட்டுக் கட்டுவிக்க ஆலோசனை நடக்கின்றது. நமது எலிமெண்டரிப் பிள்ளைகளுக்கு, அவ்வித்தையைக் கற்றுணரப் பெரிதும் ஆவல் இருக்கும் என்று நம்புகிறோம்.

ஆனால் அவ்வித்தையின் பயன் இன்னதென உபாத்தியாயர்களுக்குத் தெரியாமையினாலே அவர்களுக்கு அதிற்பிரியம் ஜனிக்க ஏதுவில்லை. அது தேகாரோக்கியத்தை விருத்திசெய்யும் வித்தைகளில் அல்லது அப்பியாசங்களில் ஒன்று என்பது அவர்கள் மனதில் பதியுமாயின் அப்பொழுது அவர்களுக்குச் சிரத்தையுண்டாகும் போலும்.

* * * *

**இராஜாங்க முறை நூற் போதனை**
**The Teaching of Civics**

இங்கிலாந்திலுள்ள உபாத்திமைச் சங்கத்தின் அக்கிராசனபதியானவர் சில தினங்கட்கு முன்னே இராஜாங்க முறைநூற் போதனையைப்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்தார். அப்பிரசங்கத்திற் கொண்ட விஷயங்களோ கேட்பதற்கு மிகுந்த ஆனந்தத்தை உண்டு பண்ணக் கூடியவைகளாயிருந்தன. அவர் தமது பிரசங்கத்தில்,

இராஜாங்க முறைநூலினை, பால்மணம் நீங்காத வாயினையுடைய செல்வச் சிறுவர்களாகிய எலிமெண்டரிப் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படாதென்றும், இராப்பள்ளிக் கூடங்களில் படிக்கும் 15-வயதுக்கு மீசுரப்பட்ட சிறுவருக்கே அது கற்பிக்கப் படவேண்டுமென்றும் தாம் கருதுவதாக வெளியிட்டார்.

இராஜாங்க முறைநூற் போதனையை வியக்கவும், அந்நூலிற் கூறியிருக்கும் குடிகளின் கடமையாகிய தம்முடைய கடமையை யறியவும், தமக்கும் தம்மையாளும் அரசருக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களை உய்த்துணரவும் எலிமெண்டரிப் பிள்ளைகளுக்கு ஆற்றல் நிரம்பாமையினாலே அவர்களுக்கு அந்நூலினைப் போதிப்பதாற் பயன் இல்லையென்று கருதுகிறார். விஷயங்களைத் தூக்கிப்பார்த்து ஆனந்திக்கத் தக்க வயது வந்தகாலத் தல்லது மற்றக் காலத்தில் அதனைப் போதிக்கப் படாதென்று எண்ணுகிறார்.

இது விஷயத்தில் நமது எலிமெண்டரி உபாத்தியாயர்களும் பிறரும் தாம் கருதும் அபிப்பிராயத்தினை எமக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறோம்.

* * * *

**அமெரிக்கா உபாத்திகளுக்கு உண்டான, புதிய அரிய ஆற்றல்.**

**A New Qualification in American Teachers**

சென்ற மாதத்துப் பத்திரிகையில் அமெரிக்கர் தங்கள் பள்ளிக்கூடங்களில் வாய்மொழியால் வாக்கிய போதனை (Oral Composition) செய்து வருவதைப் பற்றி எடுத்துரைத்தோ மல்லவா? அவர்கள் வாய்மொழி வாக்கிய போதனையில் அதிக ஊக்கம் உடையராய் இருப்பதனாலே அவர்களுக்குப் பேசுந்திறமை நன்றாக அமைந்திருக்கிறது என்பதிற் சந்தேகம் இல்லை. அப்படிப் பட்டவர்களுக்கு மற்றோரனுகூலம் கிடைத்திருக்கிறதாம். அதாவது:— ஜான்ஸ் ஆப்கின்ஸ் யூனிவர்ஸிடியார் (John Hopkins University) நன்றாக வாசிக்கவும், பேசவும், பிரசங்கிக்கவும் தமது பிள்ளை உபாத்திகளுக்குப் போதித்து அவர்களைத் திறமையுடையவர்களாகச் செய்கிறார்களாம். அவர்கள் இப்படிச் செய்வதைக் கேட்க நிரம்ப சந்தோஷமாக விருக்கிறது.

அமெரிக்கர் அங்கு அப்பாடங்களை நடத்தி அவைகளில் தமது பிள்ளை உபாத்திகளைத் திறமையாக்குவதுபோலவே நமது டிரெயினிங் ஸ்கூல்களில் நடத்துவதற்கு இவ்வூர் டிரெயினிங் பாடசாலைச் சட்டம் இடந்தருமாயின் மிகவும் மகிழ்ச்சியாக விருக்கும். ஆனால்; இவ்வூர்ப் பாடசாலை உபாத்திகளின் அறிவும், கல்வியும், கற்றதை விருத்திசெய்யும் முயற்சியும் மிகக்குறைவான படியினாலே சட்டம் இடந்தந்தாலும் மேற்கூறியவைகள் இடந்தாராமற் போனால் என்செய்வது என்பது தான் எமது யோசனை. ஒவ்வொருவரும் தமது மரண பரியந்தம் கல்வியைக் கற்கவேண்டும் என்றும் அப்படிச் செய்வதில் விளையும் ஆனந்தத்தைவிட வேறு ஆனந்தம் இல்லை என்றும் கருதுவாராயின் எதுவும் கைகூடாமற் போகாது.

# DIAGRAMS

## சித்திரங்கள்

இந்தக் காலத்துப் படிப்பு முறைகளில் சித்திரங்களைப் பெரிய சாதனமாகக் கொண்டாடுகிறோம். சித்திரங்களின் உபயோகம் மற்றைய பாடங்களில் தெரிகிறதைவிட பூ விவரண (Geography) பாடத்தில் நன்றாய் விளங்குகிறது. பாடங்கற்பிப்பதிற் சித்திரங்கள் அவ்வளவு உபயோகமுள்ளவைகளாய் இருப்பதற்குக்காரணம் என்ன என்று நாம் விசாரித்தறிய வேண்டும். இல்லாவிட்டால், சித்திரங்கள் முக்கியமான சாதனங்கள் என்று மூடபக்தியினால் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமே யல்லாமல் அதன் விசேஷத்தைத் தெரிந்து சொல்லுகிறவர்களாகமாட்டோம். பூ விவரணப் புத்தகம் ஒன்றை எடுத்துப்பார்த்து, அதில் வரிப்படங்கள் (Sketch maps) அதிகமாய் இருந்தால் அது நல்ல புஸ்தகமென்று நினைத்து அதற்கு அதிகவிலை வைத்து விற்கிற புத்தக வியாபாரியும், நாமும் சமானமாவோம்; கிரந்த கர்த்தன் ஒருவன் எழுதிய புத்தகத்தில் சித்திரப்படங்கள் நிரம்பியில்லாவிட்டால் அந்தப் புத்தகம் நல்லதன்று என்று நினைத்து அதைப் பிரசுரிக்கமாட்டேனென்று சொல்லுகிற பப்ளிஷரும் நாமும் சமானமாவோம்.

ஆகையால், சித்திரங்களின் உபயோகம் என்ன? அவை எவ்வளவு சகாயஞ் செய்கின்றன என்னும் விஷயங்களை நாம் ஆராய்ந்து அறியவேண்டும்.

சித்திரம் எத்தனையோ விதமாக உபயோகப்படும் என்பது ஒருவாறிருக்க முக்கியமாக இரண்டு காரியங்களைச் செய்கிறதென்று சொல்லலாம். அவை யாவன.—

(1) கண்ணினாற் பார்த்து அறியக்கூடாத விஷயங்களை ஒருவிதமாகக் கண்ணுக்குப் புலப்படுத்திச் சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றது.

(2) அப்படித்தெரிந்து கொண்ட விஷயங்கள் மனதில் நன்றாய்ப்பதியும் படி செய்கின்றது.

நாம் அறிவூட்டுந் தொழிலில் அமர்ந்திருக்கிறோம். ஆதலால் நாம் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் விஷயங்களை அவர்கள் சீக்கிரத்தில் மறக்கக்கூடாதென்று விரும்புகிறோம். அவைகளை அவர்கள் மறவாமல்

மனத்தில் பதித்து வைத்துக்கொள்வதற்கு என்ன உபாயஞ் செய்யலாம் என்று தேடுகிறோம்.

விஷயங்களைப் பிள்ளைகள் மறவாமல் இருக்கும்படி செய்யும்பொருட்டு அந்த விஷயங்களை நாம் கூடியவரையில் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும். விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதென்றால், அதிலுள்ள சாராம்சங்களைச் சுருக்கமாக எடுத்துச் சொல்வதேயாம்: அதைவிட வேறு நல்ல உபாயம் கிடையாது.

ஒருவன் நல்ல உபந்நியாசம் ஒன்று செய்கிறான். அவன் சொல்லுகிற விஷயங்களெல்லாம் நன்றாய் இருக்கின்றனவென்று அந்த வேளையில் நாம் சந்தோஷப்பட்ட போதிலும், அந்த உபந்நியாசத்தில் அடங்கிய முக்கியமான அம்சங்களை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடிகிறதில்லை. ஆனால், அந்த உபந்நியாசஞ் செய்யுங்காலத்தில் அக்கிராசனம் வகிப்பவர் கெட்டிக்காரராய் இருந்து, அந்த உபந்நியாசத்தில் அடங்கிய விஷயங்களையெல்லாம் சுருக்கமாய் எடுத்துக் கூறுவாரானால், உபந்நியாசகன் சொல்லிய விஷயங்களில் முக்கியமானவை இன்னவையென்று நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு அனுகூலமாயிருக்கும்; அந்த உபந்நியாசத்தைக்கேட்டு வந்ததற்குப் பிரயோசனமும் உண்டு.

அப்படிப்பட்ட கருத்துரைகளின் பெருமை இந்தியாவில் முக்காலத்தில் மிகவாய்க் கொண்டாடப்பட்டு வந்தது என்பது இந்நாட்டில் வழங்கும் ஒவ்வொரு பாஷையிலும் உள்ள சூத்திரங்கள் என்னும் கிரந்தங்களினால் விளங்குகின்றது. கணக்கு முதலிய எல்லாப்பாடங்களுக்கும் இந்தியாவில் சூத்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சூத்திரங்கள் என்பவை முக்கியமான சாராம்சங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு உதவியாயிருக்குஞ் சிறு வாக்கியங்கள்.

விஷயங்களைச் சுருக்கிச் சொல்வதில் அநேகருக்குச் சித்திரங்கள் நன்றாய் மனதிற் பதிகின்றன. அவை கண்களின் மூலமாய் அவர்களுடைய மனதில், 'பசுமரத்தில் ஆணி அறைந்தாற்போல' நன்றாகப் பதிகின்றன. எந்த விஷயத்தைப் போதிக்கவேண்டுமோ அதைச் சுருக்கிக் காட்டுவதல்லாமல் சித்திரம் அந்த அறிவையும் நம்முடைய மனதில் நன்றாய்ப் பதிப்பிக்கின்றது. ஏனெனில், காதினால் கேட்டிருக்கும் விஷயத்தைவிடக் கண்ணினால் பார்த்திருக்கும் விஷயத்தை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறோமல்லவா?



எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்களுக்கு உபயோகமாயிருக்கத்தக்க சித்திரங்களை இந்தப் பத்திரிகையில் அப்போதைக்கப்போது பிரசுரிக்கக்கருத்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் சித்திரங்களை எந்தச் சமயத்தில் உபயோகித்தால் அவை பிள்ளைகளுக்குப் பயன்படும் என்று எடுத்துக்காட்டுவோம். நாங்கள் கொடுக்கும் சித்திரங்களை உபயோகிக்கும் உபாத்தியாயர்கள் அந்தச் சித்திரங்களினால் அவர்களுக்கு ஏதாவது சகாயம் ஏற்படுவதையும் ஏற்படாமற்போவதையும் எங்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## 1. Geographical Diagrams

## ௧. பூவிவரணச் சித்திரங்கள்

---

முதலில் பூவிவரணச்சித்திரங்களை எடுத்துக்கொள்வோம். நிலத்தையும் நீரையும்பற்றிப் பாடஞ் சொல்லுகிறோம். உலகத்திலுள்ள பெரிய தரைப்பாகங்களையும், ஏராளமான நீர்ப்பரப்புகளையும், பற்பலவிதமாக வர்ணித்துச் சொல்லுகிறோம். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவதற்கு எத்தனைநேரம் ஆகும் என்று பிள்ளைகளை ஆலோசித்துப் பார்க்கச்சொல்லுகிறோம். பூமியின் விஸ்தாரம் இவ்வளவென்று அவர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டு எத்தனையோவிதமாக யுக்திகள்செய்து பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லுகிறோம். பிறகு, பள்ளிக்கூடத்தில் வைத்திருக்கும் பூமண்டலத்தை (Globe) க்காட்டுகிறோம். பூமண்டலத்தில் நிலத்தைவிட நீரே மிகவும் அதிகமாய் இருக்கிறதென்று பிள்ளைகள் உடனே தெரிந்துகொள்ளுகிறார்கள். எவ்வளவு அதிகமாய் இருக்கிறதென்று கேட்டால், அவர்கள் ஒருவேளை சரியானபதிலே சொல்லக்கூடும். ஆனால் நிலத்தைவிட நீரே அதிகமாய் இருக்கிறதென்றும் விஷயத்தைப் பிள்ளைகளின் மனதில் பதிப்பிப்பது எப்படி? பள்ளிக்கூடத்தில் இருக்கிற பூமண்டலம் (Globe) அதற்குச் சாதனமாகாது. ஏனென்றால், அந்த விஷயம் தெளிவாகப் புலப்படுகிறதில்லை. அதைத் தெளிவாகக் காட்டுவதற்கு ஒரு சித்திரம் வேண்டியிருக்கிறது.

அடியிற் குறித்த சித்திரத்தை உபயோகிக்கலாமென்று எங்களுக்குத் தோன்றுகிறது.




நிலத்தைவிட நீர் மூன்றுமடங்கு அதிகமாய் இருக்கிறதென்பது இந்தச் சித்திரத்தினால் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்காகும்.

நீர்ப்பாகங்களை நீலமாகவும், நிலப்பாகத்தை பழுப்பாகவும் வர்ணித்துக்காட்டினால் அந்த வித்தியாசம் எத்தனை மடங்கென்பது மிகவும் நன்றாய்ப் புலப்படும்.

பிறகு பூ கண்டங்களைப்பற்றிச் சொல்லுகையில். அவைகளின் பரப்பளவுகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தச் சங்கியைகளினால் நமக்கு அர்த்தம் ஒன்றும் ஆகிறதில்லை. அவைகளின் பரப்பளவுகளைப்பற்றி நமக்குஞ் சரியான அபிப்பிராயம் உண்டானதாக நாம் விவகரிக்க முடிகிறதுமில்லை.

அந்தப் பரப்பளவுகளைக் கட்டமிட்ட கடிதத்தில் அளவெடுத்துக் குறிக்கிறோம். அப்பொழுது அந்தச் சங்கியைகள் ஒருவாறு நமது மனத்தில் பதிகின்றன; அந்தப் பரப்பளவுகளிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை நாம் தெரிந்துகொண்டதாக விவகரிப்பதற்கும் அது சாதனமாகின்றது. ஆனால் அப்படிக் கண்டுபிடித்த விஷயங்களைப் பிள்ளைகளின் மனதில் பதிப்பிப்பதற்கு ஒருவிதமான பசைவேண்டியிருக்கிறது.

அடியிற் குறித்திருக்குஞ் சித்திரம் அதற்கு நல்ல சாதனமாய் இருக்குமென்று நினைக்கிறோம். பரப்பளவு கணக்குகளிலுள்ள வித்தியாசங்களை இந்தச் சித்திரம் நன்றாக எடுத்துக்காட்டும் என்று நினைக்கிறோம்.

நிலபாகம்




பிறகு, பூகோளப்படத்தை எடுத்துக் கொள்ளுகிறோம். பற்பல பூகண்டங்களையும் ஜலகண்டங்களையும் அவைகளுக்குள்ள தாரதன்மையங்களையும் பிள்ளைகளின் மனதில் பதிப்பிப்பதற்குச் சுலபமான உபாயம் ஒன்று வேண்டியிருக்கிறது. இந்த முக்கியமான விஷயங்கள் மனதில் பதிந்த பிறகு



பெரிய பூகோளப்படத்தையாவது பள்ளிக்கூடத்திலிருக்கும் பூமண்டலத்தை (Globe) யாவது பிள்ளைகள் ஆராய்ந்து உற்றுப் பார்த்து நுட்பமான விஷயங்களைத்தெரிந்து கொள்வதற்காகும். அவைகளில் சிக்குகள் அநேகம் இருப்பதனால், மூலாதாரமான விஷயங்களைத் தெரிந்துகொண்டபிறகு அவைகளை எடுத்துப் பார்க்கவேண்டும். அடியிற் குறித்திருக்குஞ் சித்திரம் அதற்கு நல்ல உபாயமென்று நம்புகிறோம்:—




1. வட அமெரிக்கா
2. தென் அமெரிக்கா
3. ஐரோப்பா
4. ஆப்பிரிக்கா
5. ஆசியா
6. ஆஸ்ட்ரேலியா
7. பஸிபிக் கடல்
8. அட்லான்டிக்கடல்
9. வடகடல்
10. தென்கடல்
11. இந்தியக்கடல்
12. நிரக்ஷரேகை
13. மெரிடியன்

## RAMA & RAVANA

## இராமரும் இராவணனும்

## மிதிலைக்காட்சி

(59 - ம் பக்கத்தொடர்ச்சி.)

பொன்மதிள் விளங்கும் நகரத்துக்குள் ஸ்ரீராமபிரான் மற்றையோருடன் பிரவேசித்தார். அவர் பிரவேசிக்கையில் மதில்களின் மீதுள்ள கொடிகள் (flags) காற்றினால் அசைந்தன. அவ்வாறு அசைந்த தோற்றமானது "தாமரை மலரைவிட்டுத் திருமகளானவள், என்னிடத்தில் வந்திருக்கிறாள்; நீர் இங்கேவாரும்" என்று மிதிலை என்னும் பெண் தன்கைகளை (கொடிகளை) நீட்டி அழைப்பது போன்றிருந்தது.

நகரத்துட் பிரவேசித்த ஸ்ரீராமபிரான் முதலியோர் இராசவீதிவழியே சென்றனர். செல்லுகையில் நாடகசாலையைக் கண்டனர்; ஊசலினிடத்து மாதர்கள் ஆடுவதைக் கண்டனர்; மேலோர் நட்பினைப்போல இடையே நீங்காது மட்கலம் வனையும் திகிரிபோல வட்டமாகவும், ஞானிகளுடைய உணர்வானது பிரமத்தைச்சாரும் தன்மைபோல ஓரே ஒழுங்காகவும் விரைவாகவும் ஓடும் குதிரைகளைக் கண்டனர். பிறகு, பெண்கள் பந்தாடும் இடங்களையும், சூதாடும் இடங்களையும், நீராடும் பல தடாகங்களையும், சோலைகளையும், சனகராசனது கோயிலைச்சூழ்ந்த அகழியையும் பார்த்துக்கொண்டே போயினர்.

அப்படிப் பார்த்துக்கொண்டே போகையில் சீதையைக் கண்டனர். கண்ட சீதையைப் புகழ்ந்து சொல்வதற்கு யாரை உவமித்துக்கூறலாம்? தேவலோகத்துப் பெண்களில் ஒருத்தியையேனும் இப்பூவுலகமாதரில் ஒருத்தியையேனும் வர்ணித்துக் கூறநேரிட்டால் அவள் திருமகளைப்போல அழகாக இருக்கிறாள் என்போம் அல்லவா? அப்படிப்பட்ட திருமகளே சீதையாக இங்கு வந்திருக்கையில் ஒப்பிட வேறுயாவர் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை. இவ்வாறு இணையற்ற சீதையானவள்



"தந்நேரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே, தேனே, ஆரமிர்தே என்றடி போற்ற
முன்னே முன்னே மொய்ம்மலர்தூவி முறைசால
பொன்னே சூழும் பூவினொதுங்கிப் பொலிகின்றாள்."

அச்சமயத்து ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரை உருவநோக்கினார், அவளும் அவரை நோக்கினாள். பிறகு அவள் "இவர் என்ன கடலோ, மழையோ, பெரியநீலமலையோ, காசாம்பூவோ!" என்று தியங்கிக்கொண்டிருந்தாள். அவளது மின்னலைப்போன்ற திருமேனியைக்கண்டும் விசுவாமித்திரர் பின்னே அவரது நிழலைப்போலத் தொடர்ந்து தம்பியுடன் சென்றார்.

அவ்வாறு சென்று சனகராசனைக்கண்டு அவ்வரசன் மனக்களிப்புடன் எதிர்கொண்டு அழைக்கப்போய் ஒரு திருமாளிகையில் தங்கினர். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்திற்கு அகலிகையின் புத்திரராகிய சதானந்தமுனிவர் வந்தனர். அவரிடத்தில் விசுவாமித்திரர் ஸ்ரீராமனுடைய ஆற்றலைப்பற்றிப் பெரிதும் எடுத்துரைத்தார். அதன்பின் சதானந்தர் ஸ்ரீராமனிடத்தில் விசுவாமித்திரருடைய வரலாற்றைக்கூறினார். பிறகு எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு தத்தம் விடுதியை யடைந்து முறைப்படி மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு உணவருந்திச் சிறிது நேரத்திற்கெல்லாம் பள்ளியையும் அடைந்தனர்.

மறுநாள் காலையில் அனுஷ்டான முதலியவை முடித்துக்கொண்டு விசுவாமித்திரரும் தம்பியுந்தொடர சனகராசனுடைய அத்தாணி மண்டபத்திற்கு ஸ்ரீராமன் எழுந்தருளினான். அப்பொழுது சனகன் முனிவரரைப் பார்த்து "இக்காளையர்யாவர்? என்று கேட்டனன். அதற்கு அவர், "இவர்கள் உன் விருந்தினர்; உன்யாகத்தைக் காணவந்தனர், திரியம்பகம் என்னும் வில்லின் வலியையும் காண்பார்கள். இவர்கள் தயரதனுடைய அருமந்த மக்கள்" என்று சொல்லித் தயரதன் இவர்களைப்பெற்றெடுத்த விதத்தினையும், வளர்த்த விதத்தினையும், தான் அவர்கள் உதவியை நாடின தன்மையினையும், அவர்கள் தாடகையைக் கொன்ற ஆற்றலையும், ஸ்ரீராமபிரான் திருவடித்துகளால் அகலிகை சாபம்விமோசனமான திறத்தையும் எடுத்துரைத்தார்.

## வில்லையொடித்தல்.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சனகன் "இவன் அவ் வில்லை நாண் ஏற்றுவானாயின் எம்மைத் துன்பக்கடலினின்றும் கரையேற்றுவான்" என்று சொல்லித் தன்னெதிரே நின்றவரை நோக்கி வில்லைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். பலர் ஓடிச்சென்று கொண்டுவந்து வைத்தனர். அந்நகரத்தார் வில் லிறுத்தலைக் காணவந்தனர். அவர்களிற் சிலர் "இவ்வில்லைத் தீண்டத் திருமாலே யருகரல்லது வேறு ஒருவன் எங்குளன்?" என்றனர். "இவ்வில்லை யேற்றின் சீதையின் திருமணம் முடியும்" என்றனர் வேறு சிலர். "இவ்வில்லை முன்வளைத்து எய்தவன் யாவனோ?" என்று வினவினர் சிலர். "இதை எதன் பொருட்டாகக் கொண்டுவரக் கட்டளையிட்டான் இச்சனகன்? இவனை விட மதிகெட்டவர் இல்லை. ஆனால் முன்னை ஊழ்வினையினால் முடிக்கலாம்" என்றுரைத்தார் மற்றுஞ் சிலர். அங்கிருந்த அரசர்களோ "இதை வளைப்பவர் யாரோ? ஒருவருமில்லை" என்று கைவிரித்து நின்றனர். இது இவ்வாறாக, ஸ்ரீ ராமபிரான் முக மலர்ச்சிகண்டும், தீமையை விளைக்கும் வில்லினைக் கண்டும் சீதையின் மணவினையைக் குறித்தே கருத்தைப்போக்கும் சனகனது கருத்தினை நோக்கிய சதானந்தன், "பரமசிவனது போர்க்குரிய இவ்வில்லை வளைத்தவனுக்கே இம்மங்கை மணமகளாவாள் என்று உறுதியாகச் சொல்லியிருந்தோம். அதைக்கேட்டுப் பல அரசர் வந்து இவ்வலிய வில்லை வளைப்பதற்கு வலியற்றுப் போயினர்.

'அன்று முதல் இன்றளவும் ஆரும் இந்தச் சிலையருகு
சென்று மிலர் போய் ஒளித்தார் தேர் வேந்தர் திரிந்துமிலர்
என்றும் இனி மணமுமிலை என்றிருந்தேம் இவனேற்றின்
நன்று மலர்க் குழற் சீதை நலம்பழு தாகாது" என்றான்.

சதானந்தமுனி சொல்லி முடித்ததும், அவர் நினைந்ததையும் சொன்னதையும் முறையே நன்று யெண்ணி, விசுவாமித்திர முனிவரர் ஸ்ரீ ராமனது திருமுகத்தை நோக்கித் தமது குறிப்பினை விளக்கினார். ஸ்ரீராமனும் அவர் எண்ணியவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து அந்த வில்லினருகே போய்ப் பார்க்கத் துணிந்தனர்.



அச்சமயத்திற் சிலர், "வில்லானது கால்வலியை யுடையது" என்றனர். சிலர் "சனகன் சீதைக்குத் திருக்கலியாணத்தை விரும்பினவனானால் இப்புருஷோத்தமனுக்குச் சீதையைக் கொடுப்பதை விட்டுவிட்டுச் சிவபெருமானுடைய வில்லையெடுத்து இப் பிள்ளை முன்வைத்தது அறியாமையே" என்றனர். வேறு சிலர், "வில்லுக்கென்றே இப்பிள்ளையை அழைத்துவந்த ஞானியாகிய விசுவாமித்திரருக்கு நாணம் இல்லையோ?" என்றனர். மற்றுஞ் சிலர், "இச்சனகனைப் பார்க்கிலும் கொடியவர் இல்லை" என்றனர்.

இப்படிப் பலவிதமாக அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் சீதைக்குச் சூட்ட மாலையை எடுப்பதுபோல, ஸ்ரீராமபிரான் அநாயாசமாகவே அப் பெரியவில்லைத் தன் இடக் கையாலேயே எடுத்தான். பிறகு தன் திருவடியின் பெருவிரலால் அவ்விற்குதையை மிதித்ததையும், நாணினை நுனியில் பூட்டியதையும், அங்கிருந்தோரெல்லாம், செய்கையின் வேகத்தினால் கண்ணினாற் காணவுமில்லை, அறிவினால் அறியவுமில்லை; கையால் வில் எடுத்ததைப் பார்த்தார்கள், அது முறிகையில் உண்டான ஓசையைக் கேட்டார்கள். அவ்வில் முறிந்த ஓசையினால் சனக மகாராஜன் வியப்படைந்து, முனிவரரை நோக்கி, "எம் பெருமானே, உன் மகனாகிய ஸ்ரீராமபிரானுக்கு விவாகத்தை விரைவாக இவ் வொருநாளிலே முடிக்க எண்ணமோ? அல்லது, அந்தத் தசரத சக்கரவர்த்தியையும் வருவித்து முடிக்க எண்ணமோ? தயைசெய்து சொல்லும்" என்று வினவினான்.

அதைக்கேட்ட முனிவரர் "இம்மிதிலைக்குச் சக்கரவர்த்தியும் வந்து சேர்வதே நன்று" என்று கூறினார்.

அதன்பின் சனகன் மகிழ்ச்சியுடன் நடந்த வரலாற்றை யெல்லாஞ் சொல்லவேண்டும் என்று சொல்லித் திருமுகத்துடன் தூதுவரை அனுப்பினான்.

பத்திராதிபர்.

# BOOK REVIEWS

# புத்தகவிமரிசனை.

பெரும்புயல், ஸோறுபாய், மர்லினும் விவியனும்: — இம்மூன்று கதைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸ்காரர் வெளியிட்டுள்ளனர். இம் மூன்று கதைகளும் மிக இனிமையான கதைகளே. எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றவைகளே. இவைகள் சிறுவர்களுக்கு மாத்திரம் ஏற்றவை யென்று சொல்ல எமக்குச் சம்மதம் இல்லை. கதைசொல்லுந் திறமையைப்பெற விரும்பும் ஒவ்வொரு உபாத்தியாயரும் இப் புத்தகத்தினையும் "நந்தனும் மோகனாங்கியும்" "பொன்பறவை" என்னும் மற்றைய புத்தகங்களையும் வாங்கிக் கதை போகும் போக்கினையும், இக்கதைகளை எழுதினோர் இனிமை தோன்றக் கூறும் விதத்தினையும் கவனிக்கவேண்டும் என்பதே எமது விருப்பு. கதைசொல்லுந் திறமை எல்லோருக்கும் பொருந்தக்கூடிய தன்று. அந்த விசேஷகுணம் இக்கதைகளை எழுதினவரிடத்து நன்றாக அமைந்திருக்கிறது என்று கூற யாம் பின்னிடையமாட்டோம். சாதத்திலும் கல்லிருப்பதுபோல இக்கதைகளிற் சில எழுத்துப் பிழைகள் உண்டு; அவைகளைக் களைந்து வாசிக்க வேண்டியது அறிவுடையோர் கடனாகும்.

மேற்கூறிய மூன்று கதைகளும் ஒன்றாகப் பிரயங்
கிக்கப்பட்ட புத்தகத்தின் விலை அணா. 0—1—3

விலாசம்.

மானேஜர்,
ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடிபிரஸ்,
சங்குராமச்செட்டித்தெரு,
சென்னை.

---

# THE HINDU NESAN & SADGURU

## இந்துநேசனும் சற்குருவும்

### The Hindu Nesan dated 10th November, 1914.

சற்குரு:—இஃதோர் உயர்ந்த மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. இஃது உபாத்தியாயர்க்கென்றே இச்சென்னையில் உலவி வருவது. இப்பத்திரிகையின் நான்கு மாதச் சஞ்சிகைகள் ஸமீபத்தில் வரப் பெற்றோம். இதன் கருத்து என்னவென்றால், ஒருவருடைய அபிப்பிராயத்தை மற்றவர் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய அனுகூலங்களை அமைத்துக் கொடுப்பதுதான். இந்தக் கருத்தை நிறைவேற்றும் பொருட்டு எலிமென்டரி உபாத்தியாயர்கள் தம் அபிப்பிராயங்களை எழுதி இந்தப் பத்திரிகையின் வாயிலாக வெளியிட்டு வருகிறார்கள். பாலசிக்ஷைக்கு உரிய விஷயங்களும், அநுகூலங்களும், பிரதிகூலங்களும் அந்தக் காரியத்தில் அமர்ந்திருக்கும் எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கே நன்றாகத் தெரியுமாதலால், அப்படிப் பட்டவர்கள் அந்த விஷயங்களைக் குறித்துச் சர்ச்சிப்பதற்கு இடம் அமைக்கும் பொருட்டு இந்தப் பத்திரிகை வெளிவந்திருப்பது சாலவும் நன்று. விஷயங்களை நன்றாக ஆலோசித்துச் சொந்த அபிப்பிராயங்கள் அமைத்துக்கொண்டிருக்கும் எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் எலிமென்டரி பாடசாலையின் சம்பந்தமாகப் பற்பல இடங்களில் நடக்கும் சங்கதிகளையும், வித்தியா விஷயங்களைப்பற்றி உபாத்தியாயர்கள் விஸ்தாரமாய் ஆலோசிப்பதற்கு அநுகூலமாகப் பிற தேசத்துக் கல்வி முறைகளையும், மற்றும் அரிய விஷயங்களைப் போதிக்கத்தக்க வியாசங்களையும் இந்தப் பத்திரிகையில் முதன்மையாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் எழுதிவருவது மிகவும் உபயோகமாகு மென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. மற்றும் அங்கங்கே பிரசுரமாகும் நல்ல புத்தகங்களையும், படங்கள் முதலிய வற்றையும் அப்போதைக் கப்போது தெரிவித்து, அவைகளை விமரிசனை செய்வதுடன், ஒவ்வொரு உபாத்தியாயரும் இந்தப் பத்திரிகையைத் தனித்தனியே எளிதில் வாங்கிப் படிப்பதற்கும், உபாத்தியாய சங்கத்தவர் வாங்கித் தம் படனசாலையில் வைப்பதற்கும் அனுகூலமாக இருக்கும் பொருட்டு இந்தப்பத்திரிகையைத் தபாற்கூலி உட்பட வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்குக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதும் எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குப் பெரிதும் நன்மை பயக்குமாதலால், அவர்கள் இந்தப் பத்திரிகையை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். பத்திராதிபர் ஸ்ரீமத் பண்டிதர் சே - சோமசுந்தரமாவர். சென்னை ராமசாமிவீதி, 87-ம் நம்பரிலிருக்கும் மெஸர்சு என். வேங்கடராயலு அண்டு சன்சே இதனைப் பிரிண்டு செய்து பிரகரிப்போராவார்.

# வைத்தியகலாநிதி

## ஓர் சுகாதார வைத்திய பத்திரிகை

தமிழருக்கு—அதிலும் தமிழ் வைத்தியருக்கு ஆரோக்கிய மார்க்கங்களையும் புதிய புதிய வைத்தியானுபவ முறைகளையும் அறிவிக்க வல்ல பத்திரிகை இது ஒன்றே.

[1913, செப்டம்பர் (ப்ரமாதீசஹ ஆவணிமீ) முதல் பிரசுரிக்கப் படுகிறது.]

பத்திராதிபர்: ஆயுர்வேத பூஷண, பண்டித எம். துரைஸ்வாமிஐயங்கார், Dr. S. K. P. D. ஆஸ்பிடல்; சென்னை ஆயுர்வேத காலேஜ் ப்ரொபஸர்; ஔஷத யோகவிதி - காதம்பரீ - மேகஸங்தேசம் முதலிய நூல்களியற்றியவர்; வைத்தியசாஸ்திர ஸம்பந்தமான டிப்ளோமா- என்னும் அதிகாரப்பத்திரம் பெற்றவர்.

ஆரோக்கியமார்க்கம், சரீரதத்துவம், ஔஷதமுறைகள் ஆயுர்வேத - யூனனி - ஆங்கிலம் முதலிய வைத்திய முறைகளைப்பற்றிய புதிது புதிதான விஷயங்கள் இவையெல்லாம் இப்பத்திரிகையின் மூலமாய்ப் படித்தறியக் கூடியவை. இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் வெளியாகும் வைத்தியப் பத்திரிகைகளிலுள்ள அநேக அரிய வியாஸங்களும் குறிப்புகளும் மொழி பெயர்த்து வைத்திய கலாநிதியில் மாதந் தோறும் பிரசுரிக்கப்படும். தேர்ச்சி பெற்ற அநேக ஆயுர்வேத ஆங்கில வைத்தியர் முதலியவர்கள் எழுதும் வியாஸங்கள் பிரதிமாதமும் இதில் வெளியாகும். 40 பக்கங்களுக்குக் குறையாமல் டபுல் கிரௌன் என்கிற விசாலமான கனத்த காகிதத்தில் வைத்தியகலாநிதி மாதந்தோறும் போடப்படும் 5 - வது 6 - வது பாரங்களில் சார்ங்கதர ஸம்ஹிதை என்கிற ஸம்ஸ்கிருத ஆயுர்வேத க்ரந்தம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா வெகு குறைவு ரூபா. | 3 | 12 | 0 | தபாற்செலவு கிடையாது. |
| ஆறுமாதத்திற்கு ரூபாய். | 2 | 0 | 0 | |
| வெளி நாடுகளுக்கு ரூபாய். | 5 | 0 | 0 | |

தனியாக ஒரு காபியின் விலை அணா 6. தபால் சார்ஜ வேறு.

[முக்கியகுறிப்பு:—வைத்திய கலாநிதியின் முதல் வருஷத்திய (12 - ஸஞ்சிகைகள் சேர்ந்த) முழுப் புஸ்தகம் சிறந்த காலிகோ பைண்ட் செய்து தங்க எழுத்துக்களிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. (அதில் சார்ங்கதர ஸம்ஹிதை அடங்கவில்லை) அவ்வழகிய புஸ்தகம் விலை ரூ. 3-14-0, தபால் சார்ஜ 6-அணா. வைத்திய கலாநிதியின் சந்தாதாரர்களுக்கு மட்டும் தபால்சார்ஜ இல்லை.]

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
மிண்டு பில்டிங்ஸ், சென்னை.


ஸ்ரீ





உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| | | |
|---|---|---|
| தொகுதி—க | 1915ஹ ஜனவரிமீ | பகுதி—எ |


NOTES OF THE MONTH

# மாதாந்தரக் குறிப்புகள்

போர்ட்நோவா மகம்மதிய எலிமெண்டரி பாடசாலை
Muhammadan Elementary School, Port Novo

சிதம்பரம் தாலுக் போர்டார் போர்ட் நோவாவில் உள்ள மகம்மதிய வகுப்பாருக்காகப் பள்ளிக்கூடம் ஒன்றை அமைத்தார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தினை ஜில்லா கலெக்டராகிய கான்பகதூர் - எம் - அஸீஸுடீன் சாயப் பகதூர் என்பவர் 25 - 11-14 இல் ஸ்தாபித்தார். அந்தச்சமயத்தில் தாலுக்போர்ட் நான் அபிஷல் பிரஸிடென்ட் (Non - official President) ஆகிய திவான் பகதூர் இராமசாமிச்செட்டியார் அவர்களும் வந்திருந்தார்கள். தமது ஜில்லாவிலுள்ள மகம்மதியருடைய நன்மைக்காகப் பள்ளிக்கூடம் ஒன்றினை அமைக்க, கனந்தங்கிய செட்டியா

ரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காகக் கலெக்டரவர்கள் பெரிதும் மனமுவந்து வந்தனமளித்தனர்.

*　*　*　*　*　*

**மைசூரில் பிரைமரிக் கல்வி**
**Primary Education in Mysore**

சென்ற அபிஷேல் வருஷத்தில் (1912 - 13) மைசூர் கவர்ன்மெண்டார் பிரைமரி படிப்பின் விருத்திசெய்வதன் பொருட்டு லக்ஷரூபாய் கொடுத்தார்கள். அதனால் கவர்ன்மெண்ட் பிரைமரிப் பள்ளிக்கூடங்கள் 91 தோன்றின; பிரைவேற்பள்ளிக்கூடங்களில், அதாவது ஊராரால் பரிபாலிக்கப்படும் பள்ளிக்கூடங்களில் 68 மறைந்தன. தோன்றின பள்ளிக்கூடங்களைக் கவனிக்கையில் எண் அதிகமாக இருப்பதுபோல் காணப்படுகின்றது. தோன்றினதையும் மறைந்ததையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தோன்றின பள்ளிக்கூடங்கள் அதிகமென்றும், பிரைமெரி படிப்பு அத்தொகைக்கேற்ப அதிக விருத்தியையடைந்தது என்றுஞ் சொல்ல இடமில்லை.

*　*　*　*　*　*

**மைசூர் கிராம பாடசாலைச் சங்கம்**
**Village School Committees in Mysore**

மைசூரில் கிராம பாடசாலைச் சங்கம் என்னும் பெயருடைய சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கத்தார் பள்ளிக் கூடங்களிலுள்ள உபாத்தியாயர்கள் செய்யும் தவறுகளையும், அவர்கள் பள்ளிக்கூடத்தில் இருப்பது போற் பாவனைகாட்டிப் பாடசாலையில் இல்லாதிருத்தலாகிய குற்றத்தினையும் பரீக்ஷாதிகாரிகளுடைய சமுகத்திற்குத் தெரிவித்து அவர்களை (உபாத்தியாயர்களை)ப் பெரிதும் திருத்துகிறார்கள். சங்கத்தார் குற்றம் கண்டுபிடித்தலாகிய இக் காரியத்தினை தானோ செய்கிறார்கள் என்று கேட்டால் அப்படியன்று; அவர்கள் மிகப் பெரிய நன்மைகளையுஞ் செய்கிறார்கள். பள்ளிக்கூடத்து மாளிகைகளை ரிபேர் செய்வதிலும், பள்ளிக்கூடத்திற்கெனப் புதிய கட்டடம் சம்பாதிப்பதிலும் அதிக ஊக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். பெங்களூர், கோலார், மைசூர் என்னும் இடங்களிலுள்ள சவுகார்கள் பள்ளிக்கூடங்களுக்காகச் சில வீடுகள் கட்டுவித்தார்களாம்.

கிராம பாடசாலைச் சங்கத்தாரால் இப்படி அரிய பெரிய நன்மைகள் விளைவதை அறிந்தும், அத்தகைய சங்கத்தினைப்பற்றி நமது மதராஸ் கவர்ன்மெண்டார் வேறுவிதமாக எண்ணுகிறார்கள். அவ்விதச் சங்கம் நமது சென்னை இராஜதானியில் இருக்குமாகில் பரீக்ஷாதிகாரிகளுக்கும் அவர்களைச் சேர்ந்த



வர்களுக்கும் அச்சங்கத்தவர் அனாவசியமாகத் தொந்தரை உண்டுபண்ணுவார்களென்று அபிப்பிராயப் படுகிறார்கள்போலும். ஒவ்வொரு கிராமவாசியும் தத்தம் சிறுவர்கள் செவ்வையாக வாசிக்கவேண்டும் என்றும், அவர்கள் வாசிக்கும் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்றும், விரும்புவாராகையால் தவறான எண்ணத்துடன் கெடுதல்செய்ய நாடமாட்டாரே.

*　*　*　*　*　*

**பஞ்சாப்பில் பிரைமரி படிப்பின் ஏற்றம்**
**Progress of Primary Education in the Punjab**

இந்தியாவிலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் பஞ்சாப்பே பிரைமரி படிப்பிலும் செகன்டரி படிப்பிலும் உச்சம் பெற்றிருக்கிறது. இப்படிப்பிற்காக 1912 - 13 வருஷத்தில் செலவான தொகை $84\frac{1}{2}$ லக்ஷம். 1911 - 12 ஐ விட 1912 - 13 இல் $15\frac{1}{2}$ லக்ஷம் அதிகச் செலவு நேரிட்டிருக்கிறது. அப்படி அதிகமாக இருதரப் படிப்பிற்கும் செலவு நேரிட்ட போதிலும் 445 கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களும் 561 குடிகள் பாடசாலைகளும் (private institutions) அதிகமாகத் தோன்றினமையை நினைக்கத் திருப்திகரமாயிருக்கின்றது. ஆரிய சமாஜத்தாருடைய முயற்சியினாலும் சீக் ஜாதியாருடைய ஊக்கத்தினாலுமே இந்த 561 பாடசாலைகள் தோன்றின என்று சொல்லுதல் வேண்டும்.

பஞ்சாப் கவர்ன்மெண்டாருடைய பிரைமரி பாடசாலைகளில் உபாத்திகளுக்கு மிகவும் திருப்திகரமான சம்பளம் கொடுக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் ரூ. 12 இலிருந்து ரூ. 30 வரையில் சம்பளம் பெறுகிறார்கள். இவ்வித நல்ல ஆதரவு வேறெந்த ஜில்லாக்களிலும் கிடையாது. மைசூரிலும் நமது சென்னையிலுமுள்ள பிரைமரி உபாத்திகள் பெறும் உயர்ந்த சம்பளமாகிய 10 ரூபாயினையும் பஞ்சாப் மாகாணத்து உபாத்திகள் பெறும் சம்பளத்தையும் ஒத்திட்டுப்பார்க்க நமக்கு மனமும் எழுகின்றதோ? பஞ்சாப் உபாத்திகளுக்குச் சம்பளம்மாத்திரம் அதிகம் என்று எண்ணவேண்டாம். அவர்களுக்கு வேறு சில சௌகரியங்களும் உண்டு. பிராவிடென்ட் பண்டு உதவியும் போஸ்டல் அலவன்ஸ் உதவியும் அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. இவ்வித சௌகரியங்களும் நன்மைகளும், உயர்ந்த சம்பளமும் உபாத்தி வேலைக்கு அவ்விடத்தில் அதிக கௌரவத்தைத் தேடித் தருகின்றன.

*　*　*　*　*　*

*　*　*　*　*　*

**வங்காளத்துப் போர்ட் பாடசாலைகள்**
**Board Schools in Bengal**

பிரைமரிக் கல்வி விருத்தியாவதற்குப் போர்ட் பள்ளிக் கூடங்களை விருத்தி செய்யவேண்டுமென்றும் போர்ட் பள்ளிக்கூடங்களை விருத்திசெய்து பரிபாலிக்கப் பணக்குறைவு உண்டான காலத்து, கவர்ன்மெண்ட் உதவியை அவாவிநிற்கும் ஊர்ப் பாடசாலைகளுக்கு (Aided Schools) உதவிபுரிந்து அவற்றை விருத்தியாக்க வேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் பிறப்பித்த கட்டளை எல்லோருக்கும் தெரிந்ததே. இந்தக் கோட்பாட்டை வங்காளக் கவர்ன்மெண்டார் அனுசரித்து வருகிறார்கள். கீழ் வங்காளத்தாரோ இதைப் பெரிதும் கையாடுகிறார்கள். 1912 - 1913 ம் வருஷத்து ஆரம்பத்தில் கீழ் வங்காளத்தில் 1300 போர்ட் பள்ளிக்கூடங்கள் இருந்தன. 1913 - 14 இன் இறுதியில் 608 போர்ட் பாடசாலைகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. மேல் வங்காள ஜில்லாக்களில் அதிகமாக இக் கொள்கையை அனுசரிப்பதாகத் தெரியவரவில்லை. 1913 - 14 இல் அவ்வூர்களில் 290 போர்ட் பாடசாலைகளே ஸ்தாபிக்கப்பட்டன.

*　　*　　*　　*　　*　　*

**1882 வருஷத்திய கல்விச் சங்கத்தார்**
**Education Commission — 1882**

போர்ட் பாடசாலைகளை ஸ்தாபிப்பதன் கருத்து பிரைவேற் பாடசாலைகளும் பப்ளிக்பாடசாலைகளாக மாறவேண்டு மென்பதே. அதனால் பல பிரைவேற்பாடசாலைகள் அப்படி மாறின. இக்கருத்தும் கொள்கையும் 1882 வருஷத்திய கல்விச் சங்கத்தாருக்கு (Education Commission) உடன்பாடாகத் தெரியவில்லை. அந்தச் சங்கத்தாரின் கருத்தோ எலிமெண்டரிப் படிப்பை விருத்திசெய்யப் பிரைவேற் பள்ளிக்கூடங்களுக்கு உதவிசெய்வதே தகுதியானவழி என்பதே. அப்படிக் கருதியே உபகாரநிதியையும் (Grants in aid) விருத்திசெய்தனர்.

அந்தக் கமிஷன் செய்த ஏற்பாடே ஒருவாறு தகுதியானது என்று சொல்லலாம். பிரைவேற் பள்ளிக்கூடங்களுக்கு கிரான்ட் உதவிபுரிவதாலும் அவற்றிற்குத் தகுந்த விசாரணைக்கர்த்தர்கள் ஏற்படுத்துவதாலுமே கல்வி நன்றாகப் பரவக் கூடும். கல்வி விருத்தியடைய கவர்ன்மெண்டாருடைய முயற்சி இருப்பதனோடு ஊராருடைய முயற்சியும் உதவியும் இருந்தால் நன்மையல்லவா? கல்வியின் விருத்தியை நாடும் நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் ஊர்ப்பள்ளிகளைக் குறைப்பார்களாயின் கல்வியின் விருத்தி குறைந்துவிடுமே.

*　　*　　*　　*　　*　　*



**போர்ட் பாடசாலைகளோ அல்லது கவர்ன்மெண்ட் உதவியை நாடும் ஊர்ப்பாடசாலைகளோ நிலைபெற வேண்டியவை?**
**Board or Aided Schools?**

போர்ட் பாடசாலைகளைப் பரிபாலிக்க அதிகப்பணச் செலவும் உண்டாகின்றது. ஒருபோர்ட் பிரைமரிப்பாடசாலையைப் பரிபாலிக்க மாதம் ஒன்றுக்கு 18 ரூபாய் வீதம் செலவழிகிறது. ஊர்ப்பாடசாலைக்கோ 7 ரூபாய் தான் செலவு. வங்காளத்தில் ஒரு பிரைவேற் பள்ளிக்கூடத்திற்குக் கட்டடம் அமைக்க 200 - ரூபாய் இருந்தாற்போதும். போர்ட் பாடசாலைக்கோ 1000 ரூபாய் பிடிக்கும். இப்படி அதிகப்பணச்செலவு நேரிடுவதால் நிதியிலுள்ள கல்விப்பணம், சீக்கிரத்தில், சில போர்ட் பாடசாலைகளாலேயே, வறண்டுபோகலாம். இப்பாடசாலைகளால் பணம் வறண்டுபோவதல்லாமல் அக்கம் பக்கங்களிலுள்ள பிரைவேற்பள்ளிகளும் ஒழிகின்றனவே. பிரைவேற் பாடசாலைகள் குறைந்தன மறைந்தன வென்றால், படிக்கின்ற பிள்ளைகளும் குறைந்தார்கள் என்றல்லவோ எண்ணவேண்டும். பிள்ளைகள் குறைந்தார்களென்றால் படிப்பும் குறைந்தது என்றே தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. ஆனபடியினால் நிலைபெறவேண்டியவை பிரைவேற் பள்ளிகளே யல்லாமல் போர்ட் பள்ளிகளன்று. பிரைவேற்பள்ளிகளுக்குக் கவர்ன்மெண்டார் செய்யும் உதவிகள் அதிகப்பட அதிகப்பட கல்வியும் அதிகப்பட்டதென்றே உறுதியாகச் சொல்லலாம். இதைப் பற்றி நமது சந்தாதாரர்கள் தத்தம் அபிப்பிராயங்களை எழுதிப் பத்திராதிபருக்கு அனுப்புவார்களாக.

*　　*　　*　　*　　*　　*

---

M. R. Ry. C. R. Namasivaya Mudaliar, Editor, The Trained Teacher & Tamil Pandit Madras Women's College writes as follows :—

'காவேரியகம்' 130, கோவிந்தப்ப நாய்கன்வீதி. சென்னை. கி.

'சற்குரு' என்னும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் சில பிரதிகளைப் பார்வையிட்டேன். விஷயங்கள் பலப்பட எளிய செந்தமிழ் நடையில் இயன்று வருகின்றன. வேண்டிய இடங்களில் திருஷ்டாந்தப் படங்களும் செறிந்து விளங்குகின்றன. முறையேவரும், இராமாயணம் போன்ற சில கதைகள் படிப்பார்க்கு இன்பம் பயப்பனவாம். பிரகாட்டு விஷயங்களும் பிறங்குகின்றன. எலிமெண்ட்டெரிப்பாடசாலை உபாத்தியாயர்க்கு இது பெரிதும் பயன்படும்.

(Sd.) கா. நமச்சிவாயன்
18—12—14

## COMMON FAULTS IN METHOD

## பாடஞ் சொல்லுவதில் நேருந் தவறுகளிற் சில.

தாம் சொல்வதைத் தமது மாணவர் கிரகிக்கிறார்களா அல்லது கிரகியாமல் இல்லிக்குடத்தைப் போல ஒழுக விடுகிறார்களா என்று கவனித்த வண்ணமாய்ப் போதிப்பவர் எவரோ அவரே போதகர் (=உபாத்தியாயர்) ஆவார். அவருக்கே அப்பெயர் உரியதுமாகும். எப்பொழுதும் பேசிக்கொண்டே பாடஞ் சொல்லுதல் அதிக இலேசான காரியமாயிருத்தலினால் சில உபாத்தியாயர் பேசுந்தொழிலை மேற்கொண்டு தம்தொண்டை நோகப் பாடங் கற்பிக்கிறார்கள். இவ்வளவு சிரமத்துடன் கற்பிக்கப்படும் பாடம் பயன்படுகிறதோ அல்லது ஆற்றிற்கரைத்த புளியே போல் பயனற்றதாகின்றதோ என்று அவர்கள் பார்க்கவேண்டியது அவசியமல்லவா?

இங்கிலீஷ் உபாத்திமாரோ பிரசங்கரூபமாகப் பாடஞ்சொல்லார். அவர்களுள் பெரும்பாலார் தாம் கற்பிக்க வேண்டுவனவற்றை யெல்லாம் வினாவிடையாகவே கற்பிக்கிறார்கள். அப்படி வினாக்கள் கேட்டு விடைகள் பெறுவதால் விஷயம் பிள்ளைகளின் மனத்தில் நன்றாகப் பதிகின்றது. ஆதலினால் வினாவிடை முறையைக் கைப்பற்றுதலே நலமெனத் தோன்றுகிறது. வினாக்களைக் கேட்பதிலும் முறையுண்டென்பது ஞாபகத்தில் இருக்க வேண்டும். வரிசையாய்க் கேள்விகளைக் கேட்டுவந்தால் தமக்கு வரும் கேள்விகள் இவை யென்று தெரிந்து கொண்டு சில மாணவர்கள் தமக்குவரும் கேள்விகள்போக மற்றக்கேள்விகளைக் கவனிப்பதில்லை. ஒருவகுப்பில் 40 - பிள்ளைகள் இருப்பதாக எண்ணிக் கொள்வோம். தலைக்கு ஒரு கேள்வி வீதம் கேட்பதானாலும் 40- கேள்விகள் உபாத்தியாயர் கேட்க வேண்டும் அல்லவா? அந்நாற்பது கேள்விகளையும் பிள்ளைகள் கவனித்தாற் பலனுண்டு. அதற்கு மாறாக ஒவ்வொரு பிள்ளையும் தத்தமக்கு வரும் கேள்வியை மாத்திரம் கவனித்து ஏனைய முப்பத்தொன்பது கேள்விகளுக்குஞ் செவிகொடாது விடின் உபாத்தியாயர் கேள்விகள் கேட்டலால் அவ்வகுப்பு அடையும் பலன்யாது? ஒன்றுமில்லை. ஆனபடியினாலே உபாத்தியாயர் கேள்விகள் கேட்கையில் கேள்விக்குரியவன் இவனென்று விரலாற்சுட்டிக் காட்டாமலும் கண்ணினாற் குறித்து நோக்காமலும் இருக்கவேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு மாணவனும் கற்பிப்பதைக் கவனமாய்க் கேட்டுக் கிரகித்துக் கொள்வான். மேலும், முழுமூடனான பையலைக் கடினமான கேள்வி கேட்கப்படாது. ஒவ்வொருவனுடைய யோக்கியதைக்குத் தகுந்த கேள்விகளைக் கேட்கவேண்டும். தாம் கேட்கும் கேள்வியானது விஷயத்தைப் புகுட்டுவதற்குரிய கேள்வியானபடியினால் அதற்கு விடை சுருக்கமா யிருக்க வேண்டும். இல்லாவிடின் நாம் படிப்படியாய்ப் பாடத்தைப் போதித்து வர முடியாது; உற்சாகமும் ஜனிக்காது. உபாத்தியாயர் தாம் கற்பிக்கப்போகும் விஷயம் இன்னதென்பதனை தெளிவுற முன்னர்க் குறித்துக்கொண்டா லன்றி விஷய ஒழுங்கை அனுசரித்துக் கேள்விகளைக் கேட்க இயலாது. ஆகையினால் பிரதிதினமும் பாடக்குறிப்புகளைச் சுருக்கமாய் எழுதிவரல் நலமென்று தோன்றுகிறது. அருமையான விஷயங்களைப் பெரும்பாலும் வினாவிடைரூபமாய்க் கற்பிக்கலாம். பிள்ளைகளுக்குப் பிரியமான பாடங்களை இம்முறைப்பிரகாரம் கற்பிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவர்கள் தமது கவனத்தைப் பாடத்தின்வழி தாமே செலுத்துவார்கள். கதைப்பாடத்தை நடத்துகையில் உபாத்தியாயர் கேள்வி கேட்கின் கதையின் இனிமை மாறிப்போம்.

“பிள்ளைகளே, இன்னொரு முறை சொல்லுகிறேன், கவனியுங்கள்” என்று எத்தனையோ உபாத்தியாயர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம். இது ஒரு பெருங்குற்றம். உபாத்தியாயர் முதலிற் சொல்லியதை இரண்டாம் முறை சொல்வதனால் அவர் ஒவ்வொரு விஷயத்தையும் இரண்டு முறை சொல்லுவார் என்னும் நம்பிக்கை பிள்ளைகளுக்கு உண்டாகிறது. உபாத்தியாயர் முதன்முறை கூறியதை மாணவர்கள் கவனியாமலு மிருக்கிறார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் இருமுறை எடுத்துக்கூறுவது பிள்ளைகளைக் கவனியாம லிருக்கப் பழக்குவதுபோ லன்றோ?

(இன்னும் வரும்)

# SPREADING ELEMENTARY EDUCATION IN (QUEENSLAND—AUSTRALIA)

## குயின்ஸ்லான்ட் மாகாணத்திற் பரவிய எலிமென்டரிப் படிப்பு.

குயின்ஸ்லான்ட் மாகாணமானது ஆஸ்திரேலியா கண்டத்துள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும் அல்லவா? அம் மாகாணத்தின் பரப்போ 670,500 சதுரமைலாகும். நமது சென்னை யிராஜதானியிலுள்ள ஜில்லாக்களைப்போல அம்மாகாணத்தை வகுத்தால் சற்றேறக்குறைய 7000 மைல் கொண்ட 95 ஜில்லாக்களாக வகுக்கலாம். 670, 500 சதுரமைல் கொண்ட அம் மாகாணத்தின் ஜனத்தொகையோ 656, 224 ஆகும். அதாவது சதுர மைல் ஒன்றில் வசிக்கும் ஆள் ஒருவன் என்பதே சராசரிக்கணக்கு. அம் மாகாணத்தில் மைல் ஒன்றுக்கு வசிப்பவர் ஒருவரானால் நம்முடைய ஜில்லாவில் மைல் ஒன்றில் வசிப்பவர் நூற்றைம்பதின்மர் (150) ஆகின்றனர். பிரைமரி பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் பிள்ளைகளின் எண்ணோ 138,551 என்று கணக்கிடப் படுகின்றது.

மூலைக்கு ஒருவராயிருக்கும் இம் மாகாணத்தாருக்குக் கல்வி எவ்வாறு கற்பிக்கப் படுகின்றது என்பது ஒரு பெருங்கேள்வியல்லவா? அவ்விடத்தில் போதிக்கப்படும் போதனையோ மிகவும் வியக்கத்தகுந்த விதமாயிருக்கிறது.

பாடசாலைக்குப் போகத்தக்கவர்கள் என்று கணிக்கப்படுபவருள் அதாவது ஐந்துக்குமேல் பதினைந்துக்குக் கீழ்ப்பட்ட வயதுடையவர்களுள், வாசிக்குந்திறமை வாய்ந்தவர், அவ்விடத்து, நூற்றுக்குத் தொண்ணூற்று மூவர் என்று தெரியவருகிறது.

சரியான பாதைகள் புகைவண்டிகள், வண்டிகள் முதலிய பலவித சௌகரியங்களுமுள்ள நம்முடைய ஜில்லாக்களிலோ பாடசாலைக்குப் போகிறவர்களும் வாசிப்பவர்களும் நூற்றுக்கு இருபத்தேழே என்று அறிகிறோம். மூலைக்கு ஒருவராகச் சிதறுண்டிருக்கும் அம்மாகாணத்தில் வாசிப்பவர் நூற்றுக்கு 93 - பேர் இருக்க நம் ஜில்லாக்களில் 27 - இருப்பது மிகுந்த குறைவென்றும், அதை விருத்திசெய்ய வேண்டும் என்றும் எண்ணம் பூண்டு நமது எலிமென்டரி உபாத்தியாயர்கள் உழைப்பார்களாயின் அவர்கள் முயற்சியும் வீணாகுமோ? நம்முடைய ஊர்களிலும், கிராமங்களி



லும் வாசிக்கும் பிள்ளைகள் நூற்றுக்குத் தொண்ணூற்றுமூவராக மாறார்களோ?

அப்படி நமது எலிமென்டரி உபாத்திகள் பிள்ளைகளின் எண்ணினை விருத்திசெய்வதற்காக, ஆஸ்டிரேலியாவில் கல்வியினைப் பரவச்செய்யும் விதத்தினை ஒருவாறு இங்கு எடுத்துரைப்போம். ஆஸ்டிரேலியாவிலுள்ள பட்டணங்களில் சாதாரண பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. பட்டணத்திற்குப் புறமாகிய ஊர்களில் சனிவாரப் பள்ளிகளும் (Saturday Schools) ரெயில்வே பாடசாலைகளும் உண்டு. இவற்றோடு குடும்பிகள் வித்தியாசாலைகளும் (house-to-house schools) உண்டு. குடும்பிகள் பாடசாலையென்பது ஒரு கிராமத்தில் இருக்கும் ஏழு அல்லது எட்டு வீடுகளில் உள்ள பிள்ளைகள் வாசிப்பதற்காக, அவ்வீடுகளொன்றில் மற்றைய வீட்டுப் பிள்ளைகளையும் தருவித்துப் பாடங்களைக் கற்பிப்பது. இவ்வாறு கற்பிப்பது மல்லாமல் ஒவ்வொரு வீட்டிற்கும் உபாத்தியாயர் தனித்தனியே சென்று கல்வியறிவு ஊட்டுதலும் உண்டு.

சனிவாரப் பள்ளிகளிலும், ரெயில்வே பாடசாலைகளிலும், குடும்பிகள் வித்தியாசாலைகளிலும் பாடம் போதிப்பவர்க்கு யாத்திராசிரியர் (Travelling Teachers) என்று பெயர். இம் மாகாணத்தார் 1913 இல் இப்படிப்பட்ட யாத்திராசிரியர் பதினெழுவரை ஏற்படுத்தினார்கள். அவர்கள் தங்கள் வேலையைச் சரிவரச்செய்து முடிக்க 60,438 மைல் தூரம் யாத்திரை செய்தார்கள். இவர்கள் 60,438 மைல்தூரம், எப்படி யாத்திரை செய்கிறார்களோ தெரியவில்லை. அவர்களுக்குப் புகைவண்டிச் சௌகரியங்களும் டிராம்வண்டி அனுகூலங்களும் மிகக் குறைவே. அப்படி யிருந்தும் அவர்கள் செய்யும் யாத்திரை மிகப் பெரிதும் வியக்கத்தக்கதா யிருக்கிறது. அவர்கள் நம்முடைய உபாத்திகளைப்போலச் சிரத்தையற்றவர்களாயும், நம் நாடுகளில் மாதத்திற்கொருமுறை கூடும் உபாத்திமைச் சங்கத்தாரின் கூட்டத்திற்குப் பத்துமைல் நடக்கப் பின்னிடையும் நம்முடைய உபாத்திகளைப்போன்றவர்களாயு மிருந்தால் அவர் நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றுமூவர் வாசிக்கும் யோக்கியதையை எப்படிப் பெறுவார்கள்?

இந்த யாத்திராசிரியர்கள் வருடத்தில் நாலு முறைக்குக் குறைவில்லாமல், படிக்க விரும்பும் ஒவ்வொரு குடும்பத்தினரையும் போய்ப் பார்த்து வருகிறார்கள். பார்க்கச் செல்லும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு குடும்பிகள் வீட்டிலும் பல நாள் தங்கி அவர்களுடைய மூத்தபெண்களுக்குப் பாடங்களைக் கற்பித்தும் கற்பித்த பாடங்களில் கேள்விகேட்டு அவர்கள் உணர்ச்சியை விருத்திசெய்தும், அவர்களுக்கு வேண்டிய ஏனைய விஷயங்களை எடுத்துரைத்தும், அறிவு புகட்டியும், ஆலோசனை கூறியும் வருகிறார்கள். அவ்விடத்தில் குடும்பங்களிலிருக்கும் மூத்த பெண்களே சிறுவர்களுக்குப் பாடம் கற்பிப்பவரா யிருக்கிறபடியினால் இவ் வாசிரியர்கள் அவர்களுக்கு முக்கியமாய்ப் பாடம் கற்பிக்கிறார்கள்.

இவ் வாசிரியர்கள், யாத்திரை செல்லுகையில் சிறுவர்களுக்கும், குமரர்களுக்கும், விருத்தர்களுக்கும் உபயோகமாகும் பாடசாலைப் புத்தகங்களையும், கதைப் புத்தகங்களையும், அறிவு நூல்களையும், உலக நூல்களையும் தம்மோடு தமக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் வண்டியிலேற்றி எடுத்துக்கொண்டு ஊர் ஊராகவும், நகர் நகராகவும், நாடு நாடாகவுஞ் சென்று, நுழையாத இடங்களி லெல்லாம் நுழைந்து, அவைகளை அங்குள்ளவர்களுக்கு வாசிக்கும்படி கொடுத்துக் கல்வியை அபிவிருத்தி செய்கிறார்கள்.

இவர்கள் செய்கை அருமையினும் அருமையன்றோ? இதை எண்ண எண்ண இனிக்க வில்லையோ? உன்ன உன்ன உள்ளம் உவப்படைய வில்லையோ? நம்முடைய சூபர்வைஸர்களும் அவர்களைப்போல ஊர் ஊராகத் திரிந்து பாடசாலைக்காரியங்களைப் பார்த்து வருகிறார்கள்; கல்வி அபிவிருத்தியாவதைப்பற்றி முயற்சி செய்தும் வருகிறார்கள். ஆனால் அம்மாகாணத்தார்க்கு நம்மவர்க்குள்ள பற்றைவிட அதிகப்பற்று கல்வியின்மீது உண்டு. அதனால் அவ்விடத்தில் கல்வி செழித்தோங்கி வளர்கின்றது.

உலகநீதி நூலுடையார் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று நம்மூரார்க்குச் சொல்லியிருப்பதுபோல, அவ்விடத்திய முதியோருள் யாவரோ "பள்ளியில்லாவூரில் படித்திருக்கவேண்டாம்" என்று அவர்களுக்குப் போதித்திருக்கிறார்கள். அதனால் அவ்விடத்திய குடிகளுள் பெரும்பாலார் பாடசாலை இருக்கும் இடங்களையும் கல்வியறிவினைப் பெறுதற்குரிய சௌகரியங்கள் பொருந்தியுள்ள இடங்களையும் தேடிப்போய் வதிகிறார்கள். அவர்கள் அப்படிச்செய்வதை அவ்வூர்க் கவர்ன்மெண்டார் அறிந்து, அவர்கள் கல்வியறிவினை எளிதில் பெறக்கூடிய மார்க்கங்களை யெல்லாம் ஆராய்ந்து அவர்களுக்குச் செய்து தருகின்றார்கள்.

ஆஸ்டிரேலியர் ஊக்கத்துடன் சற்கவிரும்பும் கல்வியை, நமக்கு என்றும் உறுதுணையாயிருக்கும் கல்வியை, மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் கல்வியை நமது பிள்ளைகள் பெறவேண்டும் என்னும் எண்ணத்தோடு நம்மூர் உபாத்திகள் இடைவிடாது முயற்சி செய்வார்களாயின் அவர்கள் முயற்சியும் அவலமாமோ? ஆஸ்டிரேலிய சிறுவர்களின் எண்ணைப்போல நம்மூர்ச் சிறுவர்களின் எண்ணும் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்றாக ஆகாமற் போமோ? எண்ணை விருத்திசெய்யும் ஆற்றல் அவர்களிடத்து அமைந்திருப்பதால் அவர்கள், 'தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக' என்னும் முதியோர் வாக்கைக் கடைப்பிடித்து நமது பிள்ளைகளை யெல்லாம் தென்னம்பிள்ளை, அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை போன்ற பிள்ளைகளாக மாற்றாமல் அறிவுள்ள பிள்ளைகளாக மாற்ற மனங் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

# HOW TO OBTAIN A TEACHERS' CERTIFICATE OF HIGHER GRADE THAN ONE'S PRESENT CERTIFICATE

## பெற்றிருக்கும் உபாத்திமைச் சர்டிபிகேற்றைவிட உயர்தரகதி சர்டிபிகேற்றினைப் பெறுவது எப்படி?

1914ஞ அக்டோபர்மீ 3உ யன்று அங்கீகரிக்கப்பட்ட கவர்ன்மெண்ட் வித்தியா இலாகா ஆர்டர் நம்பர் 1137 ஆனது சென்னை வித்தியாவிதியில் செய்யவேண்டிய ஒருமுக்கிய மாறுதலை அறிவிக்கின்றது: அந்த ஆர்டர் குறிக்கும் மாறுதலாவது ஒரு உபாத்தியாயர் டிரெயினிங்கான சாதாரண தரகதியைவிட மேல்தரகதியில் சாதாரண கல்வியில் (General Education test) தேறினால், அவர் பின்னால் தேறின சாதாரணகல்வியின் மேல்தரகதியை யனுசரித்து அவருக்கு உயர்தரகதி சர்டிபிகேற் கொடுக்கலாம் என்பதே. அதாவது எலிமெண்டரி பயிற்சியான உபாத்தியாயர் (Elementary Trained Teacher) ஒருவர் ஸ்கூல் கடைசி பரீக்ஷை (School Final Examination) யில் ஆவது, அதற்குச் சரியான வேறு பரீக்ஷையிலாவது தேறினால் அவரை செகண்டரி கிரேட் சர்டிபிகேற் பெற்றவராக எண்ணலாம் என்பதே.

இந்தப் புதுவிதியினை உபாத்தியாயர்கள் முன்னரே அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுள் பலர்க்கு அந்தப்புதிய உயர்தரகதி சர்டிபிகேற்றினைப் பெறும் மார்க்கம் தெரியாமையினால் அதனைப் பெறும் மார்க்கத்தினை அடியிற்குறிக்கின்றோம். அவர்கள், யாம் குறிக்கப்போவதைக் கவனிப்பார்களாக:—

1. மேலே சொன்ன புது சர்டிபிகேற்றினைப் பெறவிரும்புவோர் தம்முடைய ஜில்லா இன்ஸ்பெக்டர் (Circle Inspector) சிபார்சு அடங்கிய மனுவினைத் தகுந்த துவாராவாக அனுப்பவேண்டும். தாமே நேராக டிரெயினிங் ஸ்கூல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புதல் கூடாது.

2. செகன்டரி ஸர்டிபிகேற்றுக்கு உரித்தான உபாத்தியாயர்களுக்கு மாத்திரம் புது ஸர்டிபிகேற் கொடுக்கப்படுகிறது. இந்த உபாத்தியாயர், இன்ன இன்ன பரீக்ஷையில் தேறினார் என்று, உரிய ஸர்கில் இன்ஸ்பெக்டர் சிபார்சு செய்யுங் காரணத்தினால், இவர் செகன்டரி கிரேட் சர்டிபிகேற் உள்ளவராக எண்ணப்படுகிறார் என அந்தப் புது சர்டிபிகேற் அறிவிக்கிறது. எலிமென்டரி உயர்தரகதி சர்டிபிகேற் (Higher Elementary grade Certificate) பெற அபேக்ஷிக்கும் எலிமென்டரி கீழ்தரகதி உபாத்தியாயர்களுக்கு (Teacher of the Lower Elementary grade) இந்தச் சட்டம் இடம் தரவில்லை. அவர்களுக்குப் புது சர்டிபிகேற் கொடுக்கப்படமாட்டாது. தற்காலச் சட்டப்படி இருதரகதிகளுக்கும் (Lower Elementary Grade and Higher Elementary Grade) கொடுக்கப்பட்டு வரும் சர்டிபிகேற் ஒரே விதமானதே. அவ்விரண்டில் வித்தியாசம் இல்லை. கீழ்தரகதி உபாத்தியாயர் மேல்தரகதி உபாத்திக்குரிய சாதாரண படிப்பின் தன்மை (அதாவது குறைந்தபட்சம் மூன்றும் பாரம் வரையிலாவது வாசித்திருத்தல்) பெறுவாரானால் அவர் முன்னர்ப்பெற்றுள்ள சர்டிபிகேற்றில் புதிதாகப்பெற்ற சாதாரண படிப்பின் தன்மை குறிக்கப்படும் செகண்டரி உபாத்திகளுக்குக் கொடுப்பது போன்ற புது சர்டிபிகேட் கொடுக்கப்படமாட்டாது. பொதுப்படிப்பின் தன்மையை மாற்றுவதற்கும் ஸர்கில் இன்ஸ்பெக்டர் துவாராவாகவே மனுசெய்து கொள்ளவேண்டும்.

டைரக்டராக விளங்கும் கனம் மிஸ்டர். J. H. ஸ்டோன் துரையவர்களுடைய பெருங்கருணையால் விளைந்த இம்மாறுதலுக்காக எல்லா உபாத்தியாயர்களும் நன்றி பாராட்டுகிறார்கள். நாம் டிஸம்பர் மாதத்திய சஞ்சிகையில் விரும்பியபடி எலிமென்டரி உபாத்திகளுக்குத் தனித்தனியே உயர்தரகதி டிரெயினிங் ஸர்டிபிகேட்டும் கீழ்தரகதி சர்டிபிகேட்டும் அளிக்கவேண்டும் என்று இன்னும் வேண்டுகிறோம். ஆயினும், இம்மாறுதல் எலிமென்டரி உபாத்திகட்கும் எலிமென்டரி படிப்பிற்கும் அதிக நன்மையை உண்டு பண்ணுதலால், நாம் மனமாரக் கல்வியிலாகா அதிகாரிகளுக்கு வந்தனம் புரிகின்றோம்.

# FOREIGN NOTES

## பிறதேச வர்த்தமானம்

**உபாத்திகட்காக உலவும் பத்திரிகை Teachers' Journals**

அமெரிகா கண்டத்து ஐக்கிய மாகாணத்தில் (United States) கல்வியின் அபிவிருத்தியைக் குறித்த மாதாந்தரப் பத்திரிகை (Education periodicals) என்று வெளிவரும்பத்திரிகை 112 இருப்பதாகத் தெரிய வருகிறது. அவைகளெல்லாம் கல்வியறிவூட்டுவதைப் பற்றியே போதிப்பனவல்ல. சில, இன்பம் பயக்கும் பலவிஷயங்களையும் தம்முட்கொண்டு வெளிவரும். அப்படி யிருந்தபோதிலும் அவ்விடத்தில் 112 பத்திரிகைகள் (periodicals) வெளிவருவது, பெரிய ஆச்சரியமான காரியமல்லவா? நம்முடைய இந்திய தேசத்தில், அந்த எண்ணில் மூன்றி லொன்றான 38 மாதாந்தப் பத்திரிகைகள் கூட உண்டோ தெரியவில்லை. நம்முடைய தேசம் அம்மாகாணத்தின் பரப்பளவில் மூன்றி லொருபகுதி யளவாக இருந்த போதிலும் ஜனத்தொகைமாத்திரம் அம்மாகாணத்தைவிட நான்கு மடங்கு அதிகமாக விருக்கிறது. இருந்தும் கல்வி யபிவிருத்திக்குரிய மாதாந்தப்பத்திரிகைகளை வெளியேற்றச் செய்யும் முயற்சி அதிகமாக இல்லைபோற் காணப்படுகிறது. முயற்சி அதிகரித்துக் கல்வியைக்குறித்த பத்திரிகைகள் அதிகரிப்பின், கல்வியும் அதிகரிக்கு மல்லவா?

*　　*　　*　　*　　*　　*

**சாஸ்திரானுபவவுணர்ச்சி The Scientific Spirit**

பத்திரிகை என்று வெளிவருவனவற்றுட் சில மனிதர் க்ஷேமத்திற்கு வேண்டும் அனுகூலங்களைப் போதிப்பனவாயிருக்கின்றன. சில சமாசாரங்களை அறிவிப்பனவாய் விளங்குகின்றன. சில தத்துவ உபதேசங்களை உரைக்கின்றனவாய்ப் பிறங்குகின்றன. சில செவிக்கினிய கதைகளைக் கவின்பெறக் கூறுகின்றனவா யிருக்கின்றன. இப்படிப் பற்பல விஷயங்களைப் போதித்தபோதிலும் அவைகளை யாம் பத்திரிகை என்று கூறமாட்டோம். எப்பத்திரிகை மனிதர் தம் உள்ளங்களிற் சுயமாகத் தோன்றும் அபிப்பிராயங்களை ஒருவருக்கொருவர் அறிவித்துத் தர்க்கித்துத் தெளிதற்கும் தெளிந்தபடி அனுஷ்டித்துப்பயன் அடைதற்கும் கருவியாக விளங்குகிறதோ அதனையே பத்திரிகை என்று அழைப்போம். அப்படிப்பட்ட சுயமான விஷயங்களை ஆராய்ச்சி செய்யும் பத்திரிகைகள்

அமெரிகாவிலும் வெகு சில என்றே நமக்குமேலே சொன்ன எண்களை அறிவித்த பத்திரிகை முறையிடுகிறது. அது முறையிடுவது நியாயமே. ஆராய்ச்சிக்கு ஒவ்வொரு பத்திரிகையும் இடந்தரவேண்டியது அவசியமே. ஒவ்வொரு பத்திரிகையிலும் உண்மையாக ஆராயப்பட்ட விஷயம் வெளிவர வேண்டியது கிரமமே. ஆராய்ச்சியற்ற விஷயங்களையும், சமாசாரங்களையும், போதனைகளையும் எடுத்துரைப்பதனைவிட பத்திரிகைகள் வாளாவிருக்கலாம். ஆராய்ச்சிக்குரிய விஷயங்களை எடுத்துரைக்குந் திறமையுடையவரும், எடுத்துரைப்பதற்கு அனுகூலங்கள் பொருந்தப்பெற்றவரும், சாஸ்திரானுபவ வுணர்ச்சியுடையவரும் உபாத்தியாயர்களே. அவர்களே ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்களும், ஆராய்ச்சிக்குரிய விஷயங்களை எடுத்துரைக்க வேண்டியவர்களுமா யிருத்தலினால் அவர்கள் தமது உள்ளங்களில் சுயம்புவாகத் தோன்றும் விஷயங்களையும் தமது சாஸ்திரானுபவங்களையும் நமது பத்திரிகைக்கு எழுதி அதனைக் கௌரவப்படுத்தும்படி வேண்டுகிறோம்.

* * * * * *

**தெருப்பள்ளிகள்**
**Open air Schools**

பண்டைக்காலத்தில் நமது தேசத்தில் நியாயத் தலங்களும் பாடசாலைகளும் பசுமரத்தடியில் இருந்தன என்று சங்கநூல்களெல்லாம் எடுத்து உரைக்கின்றன. அவ்வாறு அக்காலத்தவர் மன்றங்களையும் (நியாயஸ்தலங்களையும்) பாடசாலைகளையும் மரத்தடியில் வைத்திருந்ததற்குக் காரணம் ஜனங்களுடைய தேகசுகமும் பிள்ளைகளுடைய தேகாரோக்கியமும் கெடாமல் வளரவேண்டும் என்பதே. இந்தக் காரணத்தை யறியாது அநேகர் இப்பொழுதும் தெருப்பள்ளிகள் வைத்திருக்கக் காண்கிறோம். அவ்விதப்பள்ளிகள் இங்கிலாந்திலும் அமெரிகாவிலும் இப்பொழுது பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் வாசிப்பவர்கள் வியாபாரம் கைத்தொழில் முதலியவை அதிகமாக நடைபெறும் பாகத்துப்பிள்ளைகள். அவர்கள் நமக்கு, நமது காலத்தைக் கழிக்கவேண்டிய முறையைப் போதிக்கும் நிலையில் இருக்கின்றனர்.

நமது வித்தியாவிதி மாநிழலில் பாடசாலையைவைத்து நடத்த இடந்தருமாயின், சூரியனும் (—வெளிச்சமும்) வாயுவும் (—காற்றும்) நுழையாதபடி காவல்வைத்திருக்கும் இருட்டறைப் பள்ளிகளில் வாசிக்கும் பிள்ளைகளுக்குத் தேகசுகம் விருத்தியாகி, அவர்கள் "கலங்கல் செய் பிணியின்றி நோயின்றி இயன்ற யாக்கையராய் (—சரீரமுடையவராய்)க் கல்வியங் கடல் கடந்தவர்" ஆவாரன்றோ?

* * * * * *



**ரீடிங்பட்டணம்**
**Reading**

சிலருக்குக் காலையுணவாகவும், சிலருக்கு மாலையுணவாகவும், சிலருக்குப் பகலுணவாகவும், பிணியாளருக்குப் பிரியமான பேருணவாகவும் விளங்குவது எது என்று கேட்டால், இப்படியெல்லாம் உதவுவது பிஸ்கற்றே என்று சொல்லத்தெரியாத குழந்தைகளும் உண்டோ? இல்லை. அப்படிப்பட்ட பிஸ்கற்றினை நந்தேயத்திற்குச் செய்தனுப்புஞ் சீர்வாய்ந்த ரீடிங் பட்டணமானது கல்வியிலும் செம்மை படைத்ததாகவே காணப்படுகிறது. அப்பட்டணத்து ஜனத்தொகை 80,000 என்று கணிக்கப்படுகிறது. அப்பட்டணத்தில் கல்விபோதிக்கும் முறைகளில் ஒரு புதுமையிருப்பதாகத் தெரிய வருகிறது. அங்குள்ள பள்ளிகளில் 'பெரிய பள்ளிகள்' (Senior Schools) என்று அழைக்கப்படுவன மூன்று உண்டு. இப்பள்ளிகளிற் சேரும் பிள்ளைகள் சாதாரண எலிமென்டரி பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளே. அவர்கள் எலிமென்டரிப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பிலாவது ஆறாம் வகுப்பிலாவது படித்தவர்களாக இருக்கவேண்டுமாம். அப்படிப் படித்து வந்தபிள்ளைகளையும் பெண்களையும் பரீக்ஷைசெய்து பெரிய பள்ளியிற் சேர்க்கிறார்களாம். பெரிய பள்ளியிற்சேர விரும்புவோருடைய வயது $12\frac{1}{2}$-க்குக் குறைந்ததாக இருக்கவேண்டுமாம். அவர்களுடைய பெற்றோர் தமது பிள்ளைகள் இரண்டு வருஷத்திற்குக் குறையாமல் பெரிய பள்ளியில் வாசிப்பார்கள் என்று வாக்களிக்க வேண்டுமாம். இப்படிப்பட்ட நிபந்தனையுடன் பிள்ளைகளைக் கூட்டும் 'பெரிய பள்ளிகள்' என்ன காரியஞ்செய்கின்றன என்று விசாரிப்போமாயின் அவற்றில் ஒன்று வியாபாரத்தொழிலுக்கு உரிய போதனையைப் போதிக்கின்றது. நாளடைவில் வியாபாரியாக்கும் அப்பள்ளி 1905 இல் ஸ்தாபிக்கப்பட்டது. 1912 இல் நிலைநிறுத்தப்பட்ட இரண்டாவது பெரிய பள்ளி சிற்பசாஸ்திரம் (Engineering) கட்டட சாஸ்திரம், கூட்டுவியாபாரம் (allied trades) முதலியவற்றைக் கற்பிக்கின்றது. பெண்களுக்கோ இல்லாண்மையை இயல்பெற எடுத்துரைக்கின்றது. மூன்றாவது வித்தியாசாலையோ அறிவிலும் தேகத்திலும் வலிவற்ற சிறுவருக்கெனத் தோன்றியிருக்கிறது. எண்ணாயிரம் ஜனத்தொகையினையுடைய ரீடிங் பட்டணத்தைப்போலப் பாண்டித்தியத்தில் பெருமை பாராட்டத்தக்க, 80,000 குடிகளையுடைய பட்டணங்கள் நமது இந்தியாவில் எத்தனை யுண்டோ தெரியவில்லை.

* * * * * *

## RAMA & RAVANA

## இராமரும் இராவணனும்

## தசரதன் எழுச்சி

சனகனும் விசுவாமித்திர முனிவரும் தந்த திரு முகத்துடன் சென்ற தூதுவர் வேகமாகச் சென்று, அயோத்திநகரையடைந்து, தசரதச் சக்கரவர்த்தியை முறையுடன் பணிந்து, தாம் கொண்டு வந்த திருமுகத்தை நீட்டினர். அப்பொழுது அச்சக்கரவர்த்தியின் அருகிலிருந்த புலவன் அதனை வாங்கி அதிலடங்கிய விஷயத்தை வாசித்துக்காட்டினான். அதைக்கேட்டு அச்சக்கரவர்த்தி மிகவும் மகிழ்ச்சியடைந்து அவ்விஷயத்தை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி உத்தரவு செய்தான். அதனோடு சேனைகளும் அரசர்களும் தமக்கு முன்னே செல்லும்படி பறையறைவிக்கவும் கட்டளை யிட்டான்.

அரசன் உத்தரவின்படி யறையப்பட்ட பறையொலியைக் கேட்ட நகரத்தார் • திரண்டு கடல்போல ஆரவாரித்துக்கொண்டு போயினர். இவ்வாறு புறப்பட்டுப்போகையில் அவர்கள்கையில் விளங்கும் குடைகள் அன்னப்பறவைகள் போலிருந்தன. மெய்யிலிருந்த ஆபரணங்கள் இளஞ்சூரியனைப்போற் பிரகாசித்தன. வில்லையுடைய புருஷரும், வாளையுடைய ஆடவரும், பூமாலை மணம்வீசுஞ் சிகையையுடைய காளையரும், தத்தம் மனைவியருடன் உலாவுங்காட்சி களிற்றியானை பிடியானையுடன் உலவுவது போன்றிருந்தது. குதிரைகள் பந்திபந்தியாகச் செல்லுகையில் அவைகள், தெய்வத்தன்மை போலவும், புறத்தில் அன்புகாட்டி அகத்தில் அன்பிலாத மாதர்போலவும் தமது கால்களைப்பூமியிற் படியவையாமல் தாவித்தாவிச் சென்றன. ஒரு புருஷன் ஒரு மாதின் ][ விழியை நோக்கினான், பிறகு தன்கையிலிருந்த வாளை நோக்கினான், "அவை என்வாளைவிட மிகக்கூர்மையானவை"



என்று மொழிந்தான். வேறொருவன் ஒருதலைவியின் எல்லா உறுப்புக்களையும் பார்த்து, அவளைவிளித்து "எல்லா உறுப்புக்களும் ஒருமிக்க இருக்கின்றனவே; இடையை மாத்திரம் எங்கே மறந்து வைத்தீர்?" என்று கேட்டான். இப்படி நகரமாந்தரிற் பலர் களித்து வழிக்கொண்டு முன்னடந்தனர்.

அவர்களின் பிறகே சக்கரவர்த்தி தன் பத்தினிமாருடனும் பரிவாரங்களுடனும் சங்கமுழக்கத்துடனும், மற்றவாத்திய முழக்கங்களுடனும் புறப்பட்டுச் சந்திரசைலம் என்னும் மலையை யணுகினான். அங்கு சேனைகள் இளைப்பாறத்தங்கின.

## மலைக்காட்சி

சேனைகளும், அங்குவந்து தங்கியிருக்கும் அரசரும், அவ்வரசர் மனைவியரும், அரசிளங்குமாரும் குமரிகளும் அம்மலையின் வனப்பினைக் காணச்சென்றனர். அங்குக் குறத்தியர் வெறுத்து நீக்கின மணிமாலைகளையும் முத்துமாலைகளையும் மர்மரங்களிலிருக்கும் கடுவன் என்னும் ஆண்குரங்கு தரித்துக்கொள்வதை மந்தியென்னும் பெட்டைக்குரங்கு பார்த்துக் களிப்பதனைக்கண்டார். பாம்புகளென்று அஞ்சி மாதர்கள் தம்கண்ணிணைகளைப் பொத்திக்கொள்ளும்படி மலரும் காந்தள் மலரினைக்கண்டனர். நெய்ப்பினையுடைய வயிரக்கல்லினிடத்தில் தோன்றும் நிழலாகிய பூக்களை, உண்மையான மலர்கள் என்றெண்ணி அவைகளைக்கொய்து தரும்படி தங்கணவரை வேண்டினர் சிலர்.

இப்படி அங்குள்ள காட்சிகளைக்கண்டு களித்துக்கொண்டிருக்கையில் சூரியன் மேல்கடலிற் குளிக்கச்சென்றான். யானைக்கூட்டம்போல மிக்க இருள் உலகம் முழுதும் பரவிற்று. பிறகு, வெண்மணற் பரப்பிலே முத்துக்களை ஈன்று விளங்கும் வெண்மையான சங்கு தவழ்வதுபோல, விண்மதியானது நக்ஷத்திரங்கள்

புடைசூழக் கடலினின்றும் தவழ்ந்து வெளிவந்தது. அலையையுடைய சமுத்திரம் சந்திரனைப் பெற்றதனைக்கண்டு சேனாசமுத்திரம் பல சந்திரரைப்பெற்றதோ என்று அதிசயிக்கும்படி பல மங்கையர்கூடிப் பாடிக்கொண்டிருந்தனர்.

## பூக்கொய்தல்

சூரியோதயமானதும் அரசன் நித்தியக்கடமைகளை முடித்துக்கொண்டு தேர்மீதேறிப் பலமன்னர் சூழப்போயினான். சேனாசமுத்திரமும் அவனைப்பிரியாமற் சென்று சோணையாற்றை யடைந்தது. அப்பொழுது சூரியனும் ஆகாயத்தின் நடுவில்வந்து நின்றான். அரசரும் அரசிளங்குமாரரும் தம்மனைவியருடன் நீராடக் குளங்களையுடைய சோலையைச் சார்ந்தனர். அங்கிருந்த கிளிகள் பெண்களின் பேச்சினைக்கேட்டுப் பறந்தன; குயில்கள்பேச நாணின. அவர்கள் பூங்கொம்புகளைத் தொட்டனர், உடனே அவைகள் தாழ்ந்து பூக்களைச் சொரிந்தன; சில துவண்டு வளைந்தன. ஒருத்தி அங்கு மலர்பறித்துக்கொண்டிருந்த தன் நாயகனுடைய கண்ணினைப்பொத்தினாள். பொத்தலும் அவன் "இவ்வாறுசெய்தவர் யாவர்?" என்று கேட்டனன். அதற்கு அவள், "தமக்குப் பல மனைவியருண்டோ? தம்மோடு விளையாடும் உரிமையுடையோர் பலர் உண்டோ?" என்று கேட்டுக்கோபித்தாள். வேறொருத்தி, புன்னைமரத்தில் ஏறிய தன் கணவன் மனத்திற் சென்று ஏறினாள். இப்படிப் பல இயற்கை அமைந்தவர்கள் சோலையில் அடர்ந்த பூக்களைக்கொய்து, அணிந்து, பிறகு நீராடலை விரும்பினார்கள்.



## நீர் விளையாடல்

ஆடவரும் மாதரும் மலர்ச்சோலையிலுள்ள நீர்நிலையை நெருங்கினர். அங்கு கருங்குவளை மலர்கள் கண்மலர் போலப் பூத்திருந்தன. செந்தாமரை மலரெல்லாம் அவரது முகமே போல மலர்ந்திருந்தன. அந்நீர் நிலையில் குளிக்க இறங்கிய பெண்களில் ஒருத்தி, அந்நீரிற் றோன்றும் தனது நிழலைக்கண்டு, "இப்பெண் யான் சிரிக்கத் தானுஞ் சிரிக்கின்றனள்; இவள் என் பாங்கியோ?" என்று மயங்கினாள். ஒருத்தி நீரில் மூழ்கித் தாமரை மலர்கள் அடர்ந்திருக்கும் ஓரிடத்திலே மறைந்தனள். அவள் கணவனோ இது தாமரை மலரென்றும் இது முகமென்றும் துணியாது சந்தேகத்தோடு கூடிய மனத்துடன் விழித்துக்கொண்டிருந்தான். பேரழகுடைய மாதொருத்தி, நீரில் மூழ்கினாள்; அவள் முகம் மேலே பிரகாசித்துக் கொண்டிருந்தது. அப்படியிருந்த தோற்றமானது சந்திரனுடைய நிழல் தண்ணீரிற் றோன்றுவதை யொத்திருந்தது.

கல்விநிறைந்த பெரியாரோடு பிரியாது பயின்றவர் பேரறிவு படைத்துத் தோன்றுதல்போல, அம்மாதர்கள், மூழ்கிய மடுவிற்பொருந்திய மீன்கள் கத்தூரிமணத்தோடும் அகிற்புகைமணத்தோடும் பரிமளித்தன. இப்படி மீன்களெல்லாம் பரிமளிக்கும்படி நீராடிக் கரைசேர்ந்து ஆடையணிகளையணிந்து கொண்டனர், அரசிளங்குமாரர்களும் குமரிகளும். சூரியனோ, இவர்கள் நீராடியதைக்கண்டு தானும் நீராடத் தொடங்கினான்போல மேல் கடலில் மூழ்கினான். தோல்வியடைந்தும் வெட்கமின்றிப் பின்னும் பின்னும் போருக்கு வரும் அரசரைப்போல, மாதர் முகத்திற்குத் தோற்றொளித்த சந்திரன் மீண்டும்உதயஞ்செய்தான்.

## உண்டாடுதல்

சந்திரன் உதயமானதும் அக்காலவழக்கின்படி புருஷரும் பெண்களும் மதுவையுண்டனர். அவர்களில் ஒருத்தி, தன் கூந்தலும், விழியும், வாயையுடைய முகமும் வள்ளத்திலே (கிண்ணத்

திலே) யுள்ள கள்ளிலேதோன்ற, அதை ஒரு பெண்ணின் முகம் என்றெண்ணி, "அடி பிச்சி (பைத்தியம்பிடித்தவளே), சாடியில் மிகுதியாக மதுவிருக்கிறதே; அதை உண்ணாமல் இந்த எச்சிற் கள்ளைக் குடிக்கின்றாயே" என்று சொல்லிச் சிரித்தாள். யாழுக்கும், பொள்ளங்குழலுக்கும் இனிமையைக் கற்பிக்குஞ் சொல்லினையுடைய வேறொரு மாது, கட்சாடியில் தன் கண்ணின் நிழலைக்கண்டு, அதனை வண்டென்று கருதி ஓட்டி நின்றாள். பூங்கொம்பை யொத்த மாதொருத்தி "பிறப்பும் இறப்பும் என்றும் நிலைமாறும்" என்று தெளிந்து தன் கணவனை மறவாமல், மேகத்தினிடத்துத் தோன்றும் மின்னலைப்போல, அவன் வருகையை நோக்கித் தோன்றுதலும் மறைதலுமாயிருந்தாள்.

இப்படி இருபாலாரும் உண்டாடிக் களித்திருக்கையில், நல்லொழுக்கம் பூரணமாக இல்லாதவருடைய செல்வம் தேய்வதுபோல் சந்திரன் ஒளி குறைந்தான்; சூரியன் கீழ்க்கடலில் உதயமானான்.

## சனகன் எதிர் கொள்ளுதல்

படைகள் சூழச் சக்கரவர்த்தி வருகையில், சனகராசனும் அவன் வருகையினைத் தூதுவரால் அறிந்து, தன்னுடைய நால்வகைச் சேனையும் சூழ்ந்துவரத் தான் எதிர்சென்று அழைக்க வந்தனன். சனகராசனது நகர மாந்தர் எதிர்வந்தனர்.

சக்கரவர்த்தியின் சேனையோடு சனகராசன் சேனைவந்து சேர்ந்தபோது உண்டாகிய ஓசை கடலின்மீது கங்கையாறு பாயும்போது உண்டாகும் ஓசையை யொத்திருந்தது. சக்கரவர்த்திக்கு முன்னே சனகராசனும் வந்துசேர்ந்தனன். உடனே சக்கரவர்த்தி அவனைத் தழுவிக்கொண்டு மிதிலையை நோக்கி நடந்தனன்.

இவ்வாறு இருவரும் போகையில் ஸ்ரீராமபிரான் தன் தம்பியுடன் சனகராசனது நகரினின்றும் புறப்பட்டுச் சக்கரவர்த்தியையடைந்து அவனைப் பணிந்தனன். அவனும் பணிந்த தன் குமாரர்களைத் தழுவிக்களித்தனன். பிறகு அவர்களை அழைத்துக்கொண்டு மிதுலா நகரத்தின்வழியே சென்றனன்.



## மிதிலை யுலா

ஸ்ரீராமபிரான் மிதுலாநகரை நோக்கிச் செல்லுகையில் அவன் அழகினைக்காணப் பலமாதர்கள் நெருங்கினர்.

அவர்களில் ஒருத்தி 'இவனை மணக்க ஜனகி என்ன தவஞ் செய்தனளோ?" என்று ஏங்கினாள். வேறொருத்தி, காற்சிலம்பு கைவளைகளோடு கழன்றுவிழ, "புனிதன் இம்மிதுலா நகரம் அடைந்தது சனகராசன் முன்னைப் பிறவியிற் செய்த தவமே" என்றனள். நீர் துளிக்கும் கண்களையுடைய ஒருமாது, தன் அழகு குறைந்ததற்காக வருந்தினள்; அதன்பின், "நனவினிடத்துக் காண்பதைக் கனவினிடத்துங் காண்டல் வழக்கமேயன்றோ? இந்தச் சீராமபிரானைப் பலர்சூழ இப்பொழுது காண்பதுபோலவே என் கனவினிடத்தும், பலபேர் சூழத் தான் காண்பேனோ அல்லது தனித்துக் காண்பேனோ?" என்று கேட்டனள்.

இப்படிக் கவலையுறுகின்ற மாதரை யெல்லாம் இவ்வாணழகன் சிறிதும் கருத்தாலும் கண்ணாலும் பாராமற் சென்றனன். செல்லுகையில் மென்மொழியுடையாளொருத்தி, கமுக மரத்திற் பூட்டிய ஊஞ்சலில் ஆடுவாரைப்போல, மலரினும் மெல்லிய பாதங்கள் காய்ப்பேற ஸ்ரீராமபிரான் திருத்தேரின் பின் பன்முறை சென்று மீன்றனள்.

இவ்வாறு மாதர்களெல்லாம் நெருங்கிநிற்க, ஸ்ரீராமபிரான் போய் வசிட்டமுனிவரும் விசுவாமித்திர முனிவரும் தங்கியிருக்கும் அத்தாணி மண்டபத்திற்கு அரசர் கூட்டத்தோடுஞ் சேர்ந்தான்.

பின்பு சக்கரவர்த்தி, சேனைக்கடலோடும் தம் உறவினரோடும் போய்ச்சேர்ந்து அங்கு இருந்த முனிவரர்களை வணங்கித் தானொரு சிங்காதனத்தில் வீற்றிருந்தான். அப்போது பலதேசத்தரசரும் தத்தம் மந்திரிமார் முதலியோர் புடைசூழ வந்து நெருங்கியிருந்தனர்.

## BOOK REVIEWS

### புத்தகவிமரிசனை

### CIVICS

### இராஜாங்க முறைநூல்

இப்பெயர் கொண்ட புத்தகம் இரண்டாம் முறை பதிக்கப் பெற்று வெளிவந்திருப்பதைப்பார்க்க அதிகமகிழ்ச்சியாக விருக்கிறது. இது அளவில் பருமனடைந்ததே யொழிய விலையி லொன்றும் மாறுதல் அடையவில்லை. இது ஒவ்வொரு உபாத்தியாயரிடத்திலும் இருக்கவேண்டியதொரு புத்தகம். இதனை எலிமென்டரி உபாத்தியாயருடைய பொக்கிஷமென்றே சொல்லலாம். இப்புத்தகத்துள் சேர்க்கப்பட்ட உள்ளுறை, அதனை ஆராய்தற்குப் பேருதவியா யிருக்கின்றது.

இந்நூலாசிரியராகிய ஐயரவர்கள் மூன்றும்முறை இந்நூலைப் பதிப்பிக்கையில் அரசியற்பாடத்தினை (Civics lesson) ப்போதித்தற்கு வேண்டிய அனுபவக்குறிப்புக்களைச் சேர்த்து வெளியிடுவா ரென்று நம்புகிறோம். அவ்வாறு வெளியிடின் அப்பொழுது அது எல்லோராலும் கொண்டாடப்படு மென்பதற்கு ஐயமில்லை. இதிற் சேர்க்கப்பட்டிருக்கும் "ஐக்கியக்கொடி" ("Union jack") யைப்பற்றிய குறிப்பு எமக்கு மகிழ்ச்சியை யுண்டுபண்ணுமற் போகவில்லை.

---

OFFICE OF THE REGISTRAR OF ... 5-FEB 1915 MADRAS

ஸ்ரீ

# சற்குரு

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| தொகுதி—க | 1915ஹு பிப்ரவரிமீ | பகுதி—அ |
|---|---|---|

## RAMA & RAVANA

## இராமரும் இராவணனும்

## கோலங்காணுதல்

(165-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிங்காசனத்தில் தன்தேவியர் மூவரும் இனிது சூழத் தசரத சக்கரவர்த்தி சிங்காதனத்தில் வீற்றிருக்கையில், சீதையை அழைத்துக்கொண்டுவர, வசிட்ட முனிவர் கட்டளையிட்டார். உடனே மாதர் சானகியாரை உடுத்தி அலங்காரஞ்செய்து ஆபரணங்களை அணிந்தனர். இந்த இடத்திற் கம்பர்,

"அமிழ்திமைத் துணைகள் கண்ணுக்கணியென அமைக்குமாபோல்
உமிழ் சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்பதோரார்
அமிழ்தினைச் சுவைசெய்தென்ன அழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவைஞாலம் ஏழைமை யுடைத்து மாதோ"

என்று கூறுஞ் செய்யுள் கவனிக்கத்தக்கது. இயல்பாக மதுரமுள்ள அமுதத்திற்கு (வேறுபொருள்களால்) இனிமை உண்டாக்குதல்போல, அழகாகிய பொருளுக்கு அம்மாதர்கள் அழகு செய்தார்கள்; சீதைக்குத் தரிக்கும் ஆபரணங்களெல்லாம் அவளுடைய அழகிய உருவத்தினை மறைக்குந் தன்மையை அவர்கள் அறிந்திலர்.

இப்படி அலங்கரித்தானபிறகு அவளை அழைத்து வந்தனர். அவளைக்கண்டவுனே சித்திரப்பதுமைபோல் அசைவற நின்றுவிட்டனர். ஸ்ரீராமபிரான் சானகியாரை எதிர்கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான். தசரத சக்கரவர்த்தி உலகமுழுதும் அரசாண்டு வருபவனாயிருந்தும், சீதாபிராட்டியின் அழகைக்கண்டு, " இவளை மருகியாகப் பெறுதற்கு என்னதவஞ்செய்தேன்!" என்று சொன்னான். வந்த சானகியார் முனிவர்களை முன்னே வணங்கிச் சக்கரவர்த்தியைத் திருவடிதொழுது, தன்தந்தையிடத்தே சென்று அவர் அருகே இட்டிருந்த ஆசனத்தில் தனித்து வீற்றிருந்தாள்.

அச்சமயத்தில் விசுவாமித்திர முனிவரர், சானகியினது மன்றலுக் குரியநாள் நாளை யென்பதாக அறிவித்தனர். அதனைக் கேட்டு அரசரெல்லாம் கைதொழுது எழச் சக்கரவர்த்தி தன் மாளிகையிற் புகுந்தனர். சானகியார் பெயர்ந்து சென்றதும் ஸ்ரீராமபிரான் தன் பொன்மனை புகுந்தான். மற்றை யரசரும் தத்தம் விடுதிகளிற்சென்று சேர்ந்தனர். சுடர்க்கெல்லாம் நாயகனாகிய சூரியனும் மானகிரியில் மறைந்தான்.

## திருமணம்.

மறுநாள் காலையில் சூரியன் அஞ்சனமேனி யழகனுடைய திருமணக் கோலத்தினைக்காணப் புறப்பட்டு வந்தவன்போல இருளைக் கீறிக்கொண்டு உதயகிரியில் உதயமானான். சூரியன் தோன்றவும், அந்நகரமாந்தரிற் சிலர் தோரண நடுவர்; சிலர் வாழையுங் கமுகு நடுவர். வேறு சிலர் இனிய உணவுகளை யமைப்பர்; சிலர் சந்தனத்தால் வீடுகளை மெழுகுவர். சிலர் தம்மை யலங்கரித்துக்கொள்வர். இப்படி யெல்லாம் அலங்கரிக்கப்பெற்ற நகரத்தில் நடக்கும் திருமணத்தினைக்காணச் சிலர் தேர்மேல்வந்தனர்;



சிலர் சிவிகையேறிவந்தனர்; சிலர் வண்டிகளில் ஏறிவந்தனர்; சிலர் காலால் நடந்தேவந்தனர். சக்கரவர்த்தி தன் வெண்கொற்றக்குடை நிலாப்பரப்ப, மணிப்பூண்கள் வெயிலெறிப்ப, குதிரை தன் காலாற்புழுதியெழுப்ப அத்தாணி மண்டபத்திற்குச் சென்றனன். அவனை நெருங்கி மற்றைய அரசருஞ்சென்றனர்; முனிவரரும் முறையாகச்சென்றனர். சனகன் ஓராசனத்தில் அமர்ந்திருந்தான்.

திருமஞ்சனமாடிக் கலவைதரித்து, வெண்பட்டாடை யணிந்து தன்னைத்தானே நிகர்த்த கோலஞ்சமைந்து நின்ற ஸ்ரீராமபிரான் முனிவர்கள் ஆசிகூறவும், இளையவன் பின்னே காத்து நிற்கவும், சத்துருக்கன் சாமரை வீசவும், பரதன் முட்கோல் கைக்கொள்ளவும் தேர்மீதேறிச் சென்றனன். இக்கோலங்கண்ட மனிதரெல்லாம் இமையாநாட்டம் எய்தினர். பிறகு மண்டபத்தை யடைந்து, முனிவர்களைத்தொழுது, பிதாவின் செய்ய தாளை வணங்கி அவனருகே இருக்கையில் சானகியம்மை அம்மண்டபத்தைக் குறுகினாள்.

வசிஷ்ட முனிவரர் தருப்பைகொண்டு அரிசியைப்பரப்பித் தருப்பையைச் சாத்தி, மண்டலத்தை அமைத்து, மலர்சொரிந்து எரியை மூட்டி, வேத மந்திரங்களைச்சொல்லி அக்கலியாணத்திற்குரிய வேள்வியைச் செய்தார். அத்திருமணஞ் செய்யுமிடத்தில் ஸ்ரீராமபிரான் வந்து வீற்றிருக்கவே, சானகிப்பிராட்டியாரும் அங்கு எழுந்தருளினர். அப்போது சனகர்பெருமான் சானகியாரை ஸ்ரீராமபிரான் கையிற்பிடித்தளித்து " இச்சீதையே என் மகள்; தவமும் தருமமும் சரிதமாக உடையாள்" என்று சொல்லித் திருமகளுஞ் செல்வப்பொருளுமென நிலைபெற்றிருக்க என்று தாரைவார்த்தளித்தான். அவ்வாறு அளிக்கவே அந்தணர்கள் ஆசிகூறினர். அந்தணமடவார் பல்லாண்டு கூறினர்.

பின்னர் தசரதராமன் அம்மணவேள்வியில் கலியாணத்திற்குரிய மந்திரங்களைச்சொல்லி யாகுதிசெய்து, அத்தீயின்கண் சங்கற்பஞ்செய்யத் தொடங்கி அதனை வலம்வந்து பொரியிரைத்து, அம்மி மிதித்தலாகிய சத்தபதியை நிறைவேற்றப் பிராட்டியார் காலைத் தூக்கிவைத்து அருந்ததியைக் கண்டு, சக்கரவர்த்தியின் பாதங்களையும் வணங்கிச் சானகிப் பிராட்டியாருடன் திருமாளிகையிற் புகுந்தான்.

சனகராசனோ தன்னுடன்பிறந்த குசத்துவன் பெற்ற மாதர் மூவரையும் ஸ்ரீராமபிரானுக்குப் பின்தோன்றிய பரதன்முதலிய மூவருக்கும் மணஞ்செய்விக்க விரும்பினான். தசரதன் உத்தரவின் பேரில் மாளவி பரதனையும், ஊர்மிளை இளையவனையும், சுருத சேனை சத்துருக்கனையும் மணம்புரிந்தனர். பிறகு சிலநாள் வரையில் சக்கரவர்த்தி அருந் தவத்தவரோடு அம் மிதுலாநகரத்திற் றங்கினான்.

## பரசுராமர் கர்வபங்கம்

சானகியாரும் ஸ்ரீராமபிரானும் ஏனையோரும் இன்ப நலம் அனுபவித்துக்கொண்டு மிதிலை நகரத்தில் இருந்தனர். அப்படியிருக்குங்காலத்தில் சக்கரவர்த்தி, “நாம்வந்து பலநாள் சென்றன; நாம் அயோத்திநகரஞ் செல்லவேண்டும்” என்றுகூறினார். உடனே ஸ்ரீராமபிரான் முதலிய மக்களும், சானகியார் முதலிய மருகிமாரும், கோசலைப்பிராட்டி முதலிய மனைவியரும், சுமந்திரன் முதலிய பலரும், நால்வகைச்சேனையும், வசிஷ்டர் முதலிய முனிவரும் புறப்பட்டனர். இவர்களுடன் சக்கரவர்த்தி செல்லுகையில் மயில் வலமாயிற்று; காகம் இடமாயிற்று. “இது என்ன? தடையை உணர்த்தும் துர்ச்சகுனமாயிருக்கிறதே. இவ்விடத்தில் நமக்கு ஏதோ இடையூறு நிகழ்வதாகக் காணப்படுகிறதே” என்று சொல்லிச் சகுனக்குறியாராய்ச்சியில் வல்லவன் ஒருவனைத் தருவித்துச் சகுனத்தின் பயனைச் சொல்லும்படி வேண்டினான். அவன், முறைப்படி பணிந்து, “அரசே, நமக்கோர் இடையூறுண்டாம்; ஆயினும் அது பின்னே நலம் பயக்கும்” என்று சொன்னான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில், மழுவாளியாகிய **பரசுராமன்** கண்டோர் வெருவிப் பயந்தோடும்படி புருவக்கடை நெரிய, வெவ்விய கண் தீயுக, இடியேறுபோலக் கர்ச்சித்துக் கொண்டு தோன்றி, சக்கரவர்த்தியை விட்டொதுங்கி ஸ்ரீராமனுக்கு எதிரே போகத்துணிந்தான். ஸ்ரீராமபிரான் இவன்யாரோ என்று நினைத்துக்கொண்டிருந்தான். சக்கரவர்த்தி பரசுராமனுக்கு ஆராதனைசெய்ய தமது முடியைத்தாழ்த்து வணங்கினார்.



பரசுராமன், “இராமா, உன் ஆற்றலுக்கு முறிந்துதோற்றுப்போன வில்லின் வலியை யறிவேன். உன் தோளாற்றலைச் சோதிக்கவே இவ்வளவுதூரம் வந்தேன். உங்கள் குலத்தரசர் ஆவியை யெல்லாம் கொள்ளைகொண்ட என் தோளோ தினவு கொள்ளுகிறது” என்று சொன்னான்.

அதைக்கேட்டுச் சக்கரவர்த்தி நடுக்கமுற்று, “உதாரகுணமுடையானே, தேவருமே நினக்கு ஒப்பாவா ரல்லவென்றால், சிறு மனிதரோ ஒருபொருள்? இவனும் என் உயிரும் இனி உன் அபயம். கொலையடைந்தார் கொலையுண்பது தீவினை விரும்பி செய்யும் கொடியாரிடத்திலன்றோ? நல்வினையை விரும்பும் உன்பாலல்லவே.

“ஒளிவாய் மழுவுடையாய், பொரவுரியாரிடை யல்லால்,
எளியாரிடை வலியார்வலி என்னாகுவது?” என்றான்.

இப்படிப்பலவாறாக வெல்லாம் எடுத்துச்சொல்லி தாழ்ந்து வீழ்ந்து வணங்குஞ் சக்கரவர்த்தியைச் சிறிதும் மதியாது ஸ்ரீராமபிரானிடஞ் சென்று, “நீ ஒடித்த வில்லோ சிவபெருமானுடைய கையிலிருந்த ‘**திரியம்பகம்**’ என்னும்வில். அது வலியிகந்தவில். என்கையில் இப்பொழுது இருப்பதோ திருமால் தன் கையிற் பிடித்திருந்த ‘**கோதண்டம்** என்னும் வில். இது என் தந்தையாகிய சமதக்கினி முனிவருக்குக் கிடைத்தது. அவர் எனக்குக் கொடுத்தார். நீ எளிதாக இதை வளைப்பையாயின் அரசர்களில் உன்போற் சிறந்தாரில்லை. யான் எண்ணிவந்த போரையும் குறித்துச் செய்யேன். இவ்வில்லை வளைத்துவிடு பார்ப்போம்” என்று சொன்னான்.

புன்முறுவலுடன் ஸ்ரீராமபிரான் அக்கோதண்டத்தினைக் கேட்டு வாங்கி, நாணேறிட்டு வளைத்து, ஒரு பாணத்தைப்பூட்டி

அவனைநோக்கி, "நீயோ சமதக்கினி முனிவன் மைந்தனாயிருப்பதாலும் தவவேடம் பூண்டனை யாகையாலும் உன்னைக் கொல்லாமல் விடுத்தேன். ஆயினும் என்கையம்பு பழுதாகாது; இதற்கு இலக்குயாது?" என்று கேட்டான்.

அதற்குப் பரசுராமன் பயந்து, "ஸ்ரீராமபிரானே, என்மேற் சினங்கொள்ளாதொழி. அம்பு இடை பழுதாகா வண்ணம் யான் செய் தவமனைத்தும் சிதைக்கக்கடவது" என்று சொல்லி இரண்டு கரங்களையுங் குவித்துக்கொண்டு அக்கணைக்கெதிரே இலக்காக நின்றான். அக்கணையோ அவன் செய்தவமனைத்தும் வாரியுண்டு அம்பறாத்தூணியில் அடங்கிற்று. இதைக்கண்ட பரசுராமன் ஸ்ரீராமபிரானிடம் விடைபெற்றுச்சென்றான்.

அவன் சென்ற பின்னர், தன்தாதையாகிய தசரதனிடஞ் சென்று அவன் திருவடி தொழுது துன்பப் பெருங்கடலினின்றும் கரையேற்றினான். சக்கரவர்த்தி அவனைத்தழுவிப் புகழ்ந்து மகிழ்ந்தனன்.

பிறகு அனைவரும் அயோத்தி சென்றடைந்தனர். அயோத்தி சென்றடைந்ததும் சக்கரவர்த்தி பரதனைநோக்கி, "உன்மாதாமகனாகிய (பாட்டனாகிய) கேகயன் உன்னைக்காண விரும்புகின்றனன். ஆகலின் நீ கேகயநாட்டிற்கு ஏகு" என்று கட்டளையிட்டான். அவன் அக்கட்டளையை யேற்றுத் தந்தையையும் தமையனையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு சத்துருக்கனோடு கேகயநாட்டிற்குச் சென்றனன்.

முதற்புத்தகம் முற்றும்.

OFFICE OF THE REGISTRAR OF ... 5 - FEB 1915 MADRAS.

## இயற்கைப் பாடம்

(24-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

"இயற்கை யென்று நாம் சொல்லும் எல்லாவற்றையும் படைத்தவனாகிய கர்த்தனுடைய அமைப்பின்படி ஒவ்வொன்றும் நன்றாகவே இருக்கின்றது; ஆனால், அது மனிதனுடைய கைபட்டுச் செயற்கைவாசனை பொருந்தப் பொருந்தச் சீர்குலைந்து போகின்றது." இது ரோஸ்ஸோ * என்பவருடைய கொள்கை. இந்தக்கொள்கையை முன்னிட்டே அவர் கல்வியைப்பற்றி ஒரு கிரந்தம் எழுதி யிருக்கிறார். அந்தக் கிரந்தம் வெளிப்பட்டதுமுதல் தலைமுறை தலைமுறையாக எல்லாருடைய மனதிலும் இந்த அபிப்பிராயம் முன்னின்று போராடி வருகின்றது; இந்த அபிப்பிராயமே சரியென்று எல்லாரும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், எல்லாருக்கும் இந்தச் சங்கை ஏற்பட்டிருக்கின்றது.

அங்கிலக் கவிச்சிரேட்டர் ஒருவர் † இயற்கையைப்பற்றி எழுதுமளவில் "தர்மானுரூபமான ஸதாசாரங்களை எனக்கு ஊட்டி வளர்த்ததாய்" என்று வர்ணித்தார்.

பிள்ளைகள் இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கிக் கவனிக்கவேண்டுமென்று நாம் முயற்சி செய்வதன் முக்கியமான கருத்து என்னவெனில், அதனால் அவர்கள் நற்குணங்கள் மேற்கொண்டு சீலம் மிகுந்தவர்களாவார்கள் என்பதே. அது வல்லாமல், அவர்களுக்கு அதனால் மனப்பயிற்சி உண்டாகின்

* ஜான்ஜக்ரூஸோ (Jean Jacques Rousseau) என்னும் பிரெஞ்சுக்காரர் 1712 - ஆம் வருஷத்தில் பிறந்தவர். 1750 - ஆம் வருஷத்தில் அவர் நாகரிகத்தைக் குறித்து ஒரு புஸ்தகம் எழுதினார். "ஜனசார நிபந்தனை"யைப் பற்றி அவர் எழுதிய புத்தகம் 1762-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மனிதன் எவனும் இயற்கையில் நல்லவனென்றும், செயற்கைச் சட்டங்களினால் அவன் கெட்டவனாகிறானென்றும் அந்தப் புத்தகத்தில் அவர் உரைத்திருக்கிறார். கல்வியைப்பற்றி அவர் எழுதிய நூல் எமீல் Emile) எனப்படும்.

† இவர் வில்லியம் வர்ட்ஸ்வர்த்து (William Wordsworth). 1770-இல் பிறந்தார். பல காவியங்களும், பற்பல சிறிய பாடல்களும் இயற்றினார். உரைநடையிலும் சில நூல்கள் இயற்றினார். 1843-இல் அங்கில ராஜாங்கத்து ஆஸ்தான கவியானார். 1850-இல் பரலோகஞ் சேர்ந்தார்.

றது. ஆனால், இயற்கைப் பொருள்களைக் கவனிக்கச் சொல்வது மனப்பயிற்சி யடையும் பொருட்டன்று; சீலம் பொருந்தும் பொருட்டேயாகும். மனப் பயிற்சி இடையிலே வந்து எய்தும்.

கோவிலுக்குப்போனால், அங்கே நமக்குப் பக்தியும், ஒருவிதமான ஆச் சரியமும், கடவுளின் பெருமையும், நல்ல எண்ணங்களும் தோன்றுகின்றன. அப்படியே, ஒரு பெரிய ஆசாரியரை வணங்கி, அவருடைய முன்னிலையில் வீற்றிருக்கையில் நமக்கு நல்ல எண்ணங்களும் தூய்மையான சங்கற்பங்க ளும் உண்டாகின்றன. அடிக்கடி மகானுபாவர்களுடைய ஸஹவாஸம் செய் வதனால் நம்முடைய குணங்கள் நல்வழிப்பட்டு, நாம் அவர்களைப்போலச் சீல முடையவர்களாகிறோம். அதுபோலவே, இயற்கையுடன் ஸஹவாஸஞ் செய் வதனால், நம்முடைய ஆத்மா பரிசுத்தமாகின்றது: நல்ல எண்ணங்களும், மேன்மையான நோக்கங்களும், தூய்மையான ஒழுக்கங்களும் நமக்கு உண் டாகின்றன. இதனால், இயற்கை என்பது நமக்கு நற்போதம் செய்யும் பெரிய ஆசான் ஆகும். ஆசான்களுக்கெல்லாம் ஆசான் மௌனகுரு அல்ல வா? அந்த மௌனகுருவே இயற்கை என்பதாம்.

இயற்கையுடன் பழகுவதனால் இவ்வளவு நன்மைகள் உண்டாகின்றன வென்று நாம் சொல்லுவது சிலருக்கு விளங்காதிருக்கக்கூடும். ஆனால், இயற் கைப்பொருள்களைக் கவனித்துப்பார்த்துப் பழகி வரும் பிள்ளைகளுடைய நட வடிக்கைகளில் சீலமும் தர்மமும் மிகுந்திருக்கின்றனவென்பதை அநேகர் கவ னித்திருக்கக்கூடும். அந்தப் பழக்கமுள்ள சிறுவர்கள் ஜீவகாருணியமுடை யவர்களாயும், பாவதோஷங்களுக்குப் பயப்பட்டவர்களாயும், பக்தியுள்ளவர்க ளாயும், நான் என்னும் அகந்தை குறைந்தவர்களாயும், தான் கற்றது கைம் மண் அளவு, கல்லாதது உலகளவு என்னும் அடக்கமுடையவர்களாயும், அன்பு மிகுந்தவர்களாயும் வளர்கிறார்கள் என்பதை ஊகித்தறிந்தவர்களெல்லாரும் இயற்கைப் பொருட்பாடம் அவசியமானதென்பதை ஒப்புக்கொள்வார்கள்.

அங்கில கிரந்த கர்த்தர்களிலும் தீர்க்காலோசனை யுள்ளவர்களிலும் பெரி யவரெனப் பெயர்பெற்றவர் ‡ ஒருவர் "இயற்கையுடன் சம்பந்தப்படாத படிப்பு படிப்பன்று" என்று சொன்னார். அவர் சொல்லியது உண்மையே யென்று நாம் பிள்ளைகளுடைய நடவடிக்கைகளிற் காணும் அநுபவத்தினால் திடமாகக் கூறுவோமல்லவா?

‡ இவர் ஜான் ரஸ்கின் (John Ruskin), 1819-இல் பிறந்தார். பலநூல் கள் இயற்றினார். கலைஞானத்திலும் செல்வ நூற்புலமையிலும் சிறந்து விளங்கினார்.



"இயற்கைப் பாடம்" என்றால் என்ன? அந்தப்பாடம் படிப்பது எப்படி?

மனோராஜ்யமாகப் பேசாமல், விவகார ரீதியாக இந்த விஷயத்தைக் கவ னிப்போம். இயற்கைப்பொருட் பாடம் படிப்பதற்கு உயிருள்ள பொருள்களை வைத்துக்கொண்டே படிக்கவேண்டுமென்று இதுவரையில் அநேகர் சொல் லிக்கொண்டிருக்கிறார்களல்லவா? இயற்கையைத் தெரிந்துகொள்ளவேண்டு மானால், இயற்கைப் பொருள்களைப் பார்த்துப் படிக்கவேண்டுமே யல்லாமல், அந்தப்பொருள்களைப்போல எழுதிய வரி வடிவங்களைப்பார்த்துப் படிக்க முடியாதென்பது நன்றாய் விளங்குகின்றது.

ஆனால், இயற்கைப்பொருள்களை உள்ளபடி ஆராய்ந்து பார்த்துப் படிப் பதற்குப் பலவகையான பெரிய கஷ்டங்கள் இருக்கின்றனவென்று, நாம் பள்ளிக்கூடங்களுடனும் உபாத்தியாயர்களுடனும் இவ்வளவு காலம் பழகிய அனுபவத்தினால், அறிகிறோம். இயற்கைப்பொருட் பாடம் கற்பிப்பதற்கு அந்த விஷயத்தைப் படித்துத் தேர்ந்த தனி உபாத்தியாயர் வேண்டுமென்று சில அதிகாரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அதை இந்தப் பத்திரிகையின் 1914-ஆம் நவம்பர் மாதத்துப் பகுதி, 108-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக் கிறோம்.

இப்பொழுது இருக்கும் உபாத்தியாயர்களில் பெரும்பாலார், நூற்றுக்கு அறுபதுபேர், இயற்கைப்பொருட் பாடம் கற்பிப்பதற்குப் போதுமான திற மையில்லாதிருக்கிறார்கள் என்று நமக்கு நிச்சயமாய்த்தோன்றுகிறது. அத ற்கு வேண்டிய சாஸ்திர முறையான பயிற்சி அவர்களுக்கு இல்லை. அநேகம் டிரெயினிங் ஸ்கூல்களிலும், வித்து முளையிடுவது ஒன்றே பாடமாயிருக்கி றது. பிள்ளைகள் டிரெயினிங் ஸ்கூலில் படிக்கிற வருஷத்திற்கெல்லாம் இந் தப் பாடம் ஒன்றையே அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய்க் காட்டிக்கொடுத் திருக்கிறார்கள். உண்மையான இயற்கைப் பொருட்பாடம் வேறு ஒன்றும் பிள்ளைகள் காண்பதில்லை.

இப்படி யிருப்பதனால், உள்ள நிலைமையை ஏன் வெளிப்படையாக எடுத் துரைக்கக்கூடாது? நமக்கு இருக்கும் கஷ்டம் இன்னதென்று தெரிந்து, அதைப்போக்குவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது? இப்படிச் செய்யாத தனால், இயற்கைப்பாடம் என்னும் பெயருடன் விளங்கும் இதனால் ஏதுமறி யாச் சிறுபிள்ளைகள் அநியாயமாகக் கெடுகிறார்கள்.

இந்தக்கஷ்டத்தைப் போக்குவதற்கு எமக்குத் தோன்றும் உபாயம் என்னவெனில்,—இயற்கைப் பொருட்பாடம் கற்பிப்பதற்குப் போதுமான

பயிற்சியில்லாத உபாத்தியாயர்கள், கற்பிக்கக்கூடியதைக் கற்பிக்கட்டும். அப்படிக் கற்பிக்கும் விஷயம் இகழ்ச்சிக்குரியதா யிராதபடி நாம் கவனிக்க வேண்டும். அதாவது, இயற்கைப் பொருட்பாடம் கற்பிப்பதற்குப் பதிலாக அவர்கள் இயற்கைப் பொருள்களைப்பற்றிச் சாமானியமான அறிவைப் பிள்ளைகளுக்கு ஊட்டட்டும். பிரபஞ்சத்தில் காணக்கூடிய அதிசயங்களையும், படைப்பின் பெருமையையும் விளக்கக்கூடிய விஷயங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கலாமே.

உலகத்துப் பிராணிகளுள் விசித்திரமாயும் அருமையான படைப்பாயுமுள்ளவைகள் சிலவற்றைக் குறித்து இனிமையாய்ப் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை யெடுத்துத் தொகுத்து எளிதில் ஒரு புத்தகம் உண்டாக்கலாம். இப்படிப்பட்ட புத்தகங்கள் இங்கிலீஷ் பாஷையில் எத்தனையோ இருக்கின்றன. அவைகளைச் சிறுபிள்ளைகளும் பெண்களும் ஆவலுடன் படித்து வருகிறார்கள். தமிழில் அதற்கேற்ற புத்தகம் தொகுப்பது கஷ்டமன்று; அதிலடங்கிய விஷயங்களைப் போதிப்பதும் கஷ்டமாகாது. அவைகளுக்கு ஏற்ற படங்களும் அந்தப் புத்தகத்திலே சேர்த்து அமைத்துவிட்டால், அந்த விஷயங்களைப் பிள்ளைகளுக்கு எளிதில் புகட்டலாம்.

அப்படிப்பட்ட புத்தகம் ஏற்பட்டால், இப்போது உள்ள புத்தகங்களில் அகப்படும் விஷயங்களைவிட நல்லவைகள் பிள்ளைகளுக்குப் போதிக்கக்கூடும். இப்போது போதிக்கப்படுவன "விஷயங்கள்" எனப்படா. தெருப் புழுதிக்குச் சமானமான விஷயங்களாகிய—பசுவுக்குக் கால்கள் நான்கு, வெள்ளாட்டுக்குக் காதுகள் இரண்டு என்பவை. இவை பிள்ளைகளுக்குப் புதிய விஷயங்களாகுமோ? ஓர் உபாத்தியாயர் அசதிமறதியாய் ஆலோசனையின்றி ஒருபொழுது "நாய்க்குக் கொம்புகள் இரண்டு" என்று பிள்ளைகளுக்குப் போதித்தார்! இப்படிப்பட்ட ஆபாசங்கள் ஒழிந்துபோம். கற்பிக்கும் விஷயங்கள் பிறகு பூவிவரண சாஸ்திரம் (Geography) படிக்கையில் மிக்க பயன்படத் தக்கவைகளா யிருக்கும்.

உண்மையான இயற்கைப் பொருட்பாடமே கூடாதென்று நாம் சொல்லவரவில்லை. அதைக் கிரமமாய்க் கற்பிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் அந்தப்பாடம் நடக்கட்டும். பள்ளிக்கூடங்களில் என்ன பாடங்கள் கற்பிக்க வேண்டுமென்னும் விஷயத்தில் கல்வியிலாகாச் சட்டங்கள் மிகுந்த நிர்ப்பந்தப்படுத்தக் காணேம்; உபாத்தியாயர்கள் தங்களுடைய அனுகூலத்திற்கேற்றபடி பாடங்களை நிர்ணயித்துக் கொள்வதற்கு இடமிருக்கின்றது. சட்டங்களில் இப்படி இடங்கொடுத்திருப்பது கல்விப் பயிற்சி அனுகூலங்களுக்கு ஏற்றபடி



அபிவிருத்தியடையும் பொருட்டே என்று நாமெல்லோரும் ஒப்புக்கொள்ளல்வேண்டும். ஆகையால், சட்டங்களினால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அனுகூலத்தை இனித் தாமதியாமல் கைக்கொண்டு கடைத்தேறவேண்டுவது நம்முடைய கடமையாகும்.

1914-ஆு செப்டெம்பர் மாதத்து "சற்குரு"வில் (பக்கங்கள் 60-62) சாமானிய ஆராய்ச்சிப் பாடங்களை நடத்துவதற்குச் சில குறிப்புகள் கொடுத்தோம். அப்பாடங்களை நடத்துவதற்கு விசேஷமான சாஸ்திரப் பயிற்சி வேண்டியதில்லை. இனி யொரு மாதத்தில், மேற்குறித்த இயற்கைப்பொருள் விஷயமான (இயற்கைப் பொருள்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய அருமையான விஷயங்களைப் போதிக்கிற) பாடம் கற்பிக்கும் விதத்தை எடுத்துக்காட்டுவோம்.

மேலே விவரித்த அபிப்பிராயங்களைத் தொகுத்து இயற்கைப்பொருட்பாடத்தை நாம் நடத்தவேண்டுமானால், அடியிற் குறித்தவாறு அதைப் பகுத்துக்கொள்ளல் வேண்டும்:—



## COMMON FAULTS IN METHOD

## பாடஞ் சொல்லுவதில் நேருந் தவறுகளிற் சில.

(151 - ம் பக்கத்தொடர்ச்சி)

**மிகுதியாக எடுத்துரைத்தல்** என்பது மற்றொருகுற்றம். ஒரு பாடத்தைப்பற்றி எடுத்து விளக்கவேண்டிய விஷயம் இவ்வளவென்று, பாடத்தினைப் பார்த்தவளவில், சொல்லக்கூடிய உபாத்தியாயரை போதனைமுறையில் கைதேர்ந்தவரொன்றே சொல்லுதல்வேண்டும். அப்படி அந்தமுறையில் முதிர்ச்சி பெற்றவர்களுங் கூட இந்தத் தவறினைச் செய்வதுண்டு. யாம் பலபாடக்குறிப்புக்களைப் பார்த்திருக்கிறோம். அவைகளிற் பெரும்பாலும் காணப்படுங் குற்றம் 'மிகுதியாக எடுத்துரைத்தல்' என்னுங் குற்றமே. ஒரு மாதத்திற்குச் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சிலர் ஒரே பாடத்திற் சொல்லி, தம் திறமையைக்காட்டி முடிக்க யத்தனிக்கின்றனர்.

பல்லாரி ஜில்லாவில் ஒரு உபாத்தியாயர், சில நாட்களுக்கு முந்தி, தம் வகுப்பிற்குப் பூகோளபாடம் கற்பித்துக்கொண் டிருந்தார். அவர் முதலில் ஜில்லாவின் இயற்கை அமைப்பை எடுத்துச் சொல்லிப் பின்னர் சொல்லவேண்டிய விஷயங்க ளெல்லாவற்றையும் சீக்கிரமாகச் சொல்லி முடித்தார். பிறகு பிள்ளைகளின் உணர்ச்சியைப் பரிசோதிக்கும் பொருட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டன. அப்பொழுது அவர்கள் விஷயத்தை மாத்திரம் குருட்டுத்தனமாய் எடுத்துரைத்தார்கள். அதனால் அவர்களுக்கு இயற்கை அமைப்பைப்பற்றிய ஞானம் உதிக்கவில்லையென்று தெரியவந்தது. பெரிய விஷயங்களை நாம் இவ்வாறு மிகுதியாகக் கூறுமிடத்துப் பிள்ளைகளுக்குத் தெளிவான அபிப்பிராயங்கள் உண்டாவதெப்படி? இவ்வாறு மிகுதியாய் ஒவ்வொரு நாளுஞ் சொல்வதனாலன்றோ ஒரு வருஷத்துக்குச் சரிவரப் பாடஞ் சொல்வதற்கு விஷயமில்லாமற் போகிறது?



பகுத்தறியுந் திறமை உபாத்தியாயர்களுக்கு அவசியம். அந்தத்திறமை இல்லாமையால் அநேக உபாத்தியாயர்கள் தாம் சொல்லும் பாடத்தின் நோக்கம் இன்னதென்று சுருக்கமாய் எடுத்துச் சொல்ல முடியாமல் திகைக்கின்றார்கள்.

மேற்குறித்த பாடத்தை மறுபடியும் எடுத்துக் கொள்ளலாம். முதல் முதல் உபாத்தியாயர் தன்னைத்தானே கேட்கவேண்டிய கேள்வி:— "இயற்கை அமைப்பைப்பற்றிய அறிவு எப்படிப் பட்டது?" இந்தக் கேள்விக்கு விடைதெரிந்தாற்றான் நம் பாடங்களின் பொது நோக்கம் தெரியவரும். அந் நோக்கம் தெரிந்தாலன்றி பாடக் கிரமத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. அவ் விடையைத் தெரிந்து கொள்ளும் விதம் வருமாறு:—இயற்கை அமைப்பைப்பற்றி ஞான முள்ளவர்கள் சுற்றுப் புறங்களிலுள்ள சகல இயற்கைக் காட்சிகளைப்பற்றி அறிவார்க ளல்லவா? ஒரு குடியானவனுக்குக் குட்டைகளும் ஏரிகளும் கிணறுகளும் இருக்கும். இடங்கள் தெரியும். எங்கே கிணறு தோண்டலாமென்றும் அவன் அறிவான்.

I. அதுபோல, நாம் முதலிற் சொல்லவேண்டிய பாடங்கள் காட்சிப் பாடங்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் சொல்வது இன்னதென்று பிள்ளைகளுக்குப் புலப்படும்; அல்லாவிடின் சொல்வது கதையோ அல்லது பொய்ம்மையோ என்று அவர்கள் எண்ணினாலும் எண்ணுவார்கள். இக் காட்சிப் பாடத்தினையோ இரண்டு மூன்று பாடங்களாக வகுக்க முடியாது. இயற்கைக் காட்சிகளை நோக்குவதனையே ஒரு தொழிலாய் மேற்கொண்டவர்களிடந் தான் அக்காட்சிகளின் சம்பந்தமாக நாம் சொல்லப்போகிற விஷயங்கள் பலிக்கும். ஆனபடியினால் ஒரு மாதகாலமாவது இந்த உற்று நோக்குந் தொழிலை நம் மாணவர்கள் மேற்கொண்டவர்களா யிருக்கப் பார்த்தல்வேண்டும்.

II. பின்திக் காட்டப்போகும் பெரிய பொருள்களை முந்தி சிறிதாகக் காட்டுந் திறமையைப் பெறவேண்டும். பாடசாலைத்

தோட்டத்தில் பள்ளத்தாக்குகள் போலவும், நதிகள் போலவும், மற்றுமுள்ள இயற்கை அமைப்புகளைப்போலவும் பிரதியக்ஷமாகக் காட்டவேண்டும். ஜில்லாப் படத்தை இயற்கையில் அமைத்த படியே கல்லும் மண்ணுமாய்க் காட்டவேண்டும்.

III. கடைசியாகப் படம் வரைவதைக் கற்பிக்கும் பொருட்டு, படத்தினை வரைய ஆரம்பித்தற்கு முந்தி, சிறிய ஒரு பலகைமேல் களிமண்ணினாலாவது அல்லது அதைப் போன்றதொரு வஸ்துவினாலாவது ஒரு ஜில்லாப் படத்தை வரைந்து, வர்ணம் தடவி பிள்ளைகளுக்குக் காட்டுகிறோமல்லவா? அதற்குப் பிறகு படத்தைவரைந்து, வர்ணம் தடவி, ஒவ்வொரு வர்ணநிறமும் இன்ன விஷயத்தைக் குறிக்கின்றது என்று எடுத்துச்சொல்லி உற்ற விஷயங்களைப்பற்றிப் பிள்ளைகளுக்குத் தகுந்த அப்பியாசங்களைக் கொடுத்து அப்பியசிக்கிறோம்.

இவ்வாறாக ஆய்ந்து, அறிந்து, விஷயத்தைத் தக்கவாறு பகுத்துப், படிப்படியாய் நாம் பாடஞ் சொன்னாலன்றிப் பிள்ளைகளுக்கு ஞானம் உண்டாகாது. அவர்களின் வயதையும் தரத்தையும் கால அளவையும் ஞாபகத்தில் என்றும் வைக்கவேண்டும். கற்பிக்கும் விஷயம் மணலில் ஊற்றப்பட்ட பால்போல் பயனற்றுப் போகக் கூடாது.

பம்பாய் கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல் பிரதம அதிகாரியாகிய (Principal) ஜெ. நெல்ஸன் பிரேஸர் துரை அவர்கள் (J. Nelson Fraser) தாம் பிரசுரிக்கும் ஆங்கில பத்திரிகையாகிய "இந்திய் கல்வி" (Indian Education) என்பதில் 'மிகுதியாக உரைத்தல்' என்னும் இந்தக் குற்றத்தைப்பற்றி நயம்பெறக் கூறியுள்ளார்; தாம் பார்த்தவரையில் இக்குற்றந்தான் மிகக் கொடியதென்றும் அனுபவ பிரமாணமாய்ச் சொல்லியிருக்கிறார்.

(இன்னும் வரும்)

# THE LIFE OF THE ENGLISH CHILD

## வெள்ளைக்காரக் குழந்தையின் வாழ்க்கை

பூவுலகத்தில் கண்டறிந்த மிகப் பெரிய யுத்தங்களி லொன்றில் இங்கிலாந்தும் இந்தியாவும் ஒன்றோடொன்று இணைந்து ஒருமித்து ஆங்கிலதனாத்தனத்துப் பெருமையை நிலைநிறுத்தக் கடும் போர்புரிந்தவரும் இந்நாளில், மேற்சொல்லிய இரண்டு தேசத்தவர்களும் ஒருவரையொருவர் நன்றாய்த் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பே. இந்த விருப்பம் நிறைவேற வேண்டுமானால், ஒருவர் மற்றொருவருடைய வெளிவாழ்க்கையைமாத்திரம் தெரிந்துகொண்டு திருப்தியடையக் கூடாது; பெரியவனாய் வளர்ந்து விவகரிக்கும் ஆளுடைய வாழ்க்கையைமாத்திரம் தெரிந்துகொண்டாலும் போதாது.

அடிப் படையில் ஆரம்பிக்கவேண்டும்; அதாவது, குழந்தையின் வாழ்க்கையிலிருந்து எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த எண்ணங்கொண்டு, வெள்ளைக்காரரென்று இங்கே வழங்குகிற இங்கிலீஷ் காரருடைய குழந்தையின் வாழ்க்கையைப்பற்றி இங்கே ஒரு சிறிய வியாசம் எழுத மேற்கொண்டோம். இங்கே நாம் விவரிப்பது சாமானியமாய் ஜீவிக்கும் நடுத்தரத்தாருடைய வீட்டுக் குழந்தையின் வாழ்க்கை. செல்வவான்களுடைய வீட்டுக் குழந்தையின் வாழ்க்கைக்கும், ஏழைவீட்டுக் குழந்தையின் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்போன்றதாகும். அப்படிப்பட்ட வித்தியாசங்களைப்பற்றிப் பேசுவதற்கு இடம் இதுவன்று.

பள்ளிக்கூடத்துவாழ்க்கை: — இந்தியாவிலுள்ள உபாத்தியாயர்களுக்குப் பழக்கமாயிருக்கக் கூடியது பள்ளிக்கூடத்து வாழ்க்கையே யாதலால், இதையே முதலில் விவரிப்போம்.

குழந்தையின் மூன்றும் வயதிலேயே அதன் பள்ளிக்கூடத்து வாழ்க்கை கிண்டர் கார்ட்டனில் தொடங்குகின்றது. இங்கே அது மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடக் கற்றுக் கொள்கின்றது.—குழந்தையின் இணக்க வாழ்க்கை (social life), மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து விவரிக்கும் வாழ்க்கை இங்கே தொடங்கி விடுகின்றது.

நல்ல பள்ளிக்கூடங்களில் கிண்டர் கார்ட்டன் வகுப்புகள் சிறியவைகளாயிருக்கின்றன. சிறு குழந்தைகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனிக்க வேண்டும்; அவரவர்களுடைய குணத்தையும் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து அறியவேண்டும். வகுப்பில் பிள்ளைகள் அதிகமாயிருந்தால் அப்படிக் கவனிக்க முடியாது.

குழந்தைகள் தங்கள் தங்களுடைய விளையாட்டுப் பண்டங்களைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவருவார்கள். பள்ளிக்கூடத்தாரும் வேறு விளையாட்டுப் பண்டங்கள் அனேகம் வாங்கி வைத்திருப்பார்கள். ஆகையால், பள்ளிக்கூடத்து வகுப்பறை என்பது உண்மையில் விளையாடும் கூடமாகவே இருக்கும். குழந்தைகள் தாங்களே எவ்வளவு காரியம் செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்வதற்கு அங்கே கற்றுக் கொடுக்கிறார்கள். வழிகாட்டிக் கொடுப்பது மாத்திரமே உபாத்தியாயருடைய காரியம்.

ஒரு கிண்டர் கார்ட்டன் வகுப்பில், காலையில் குழந்தைகளுக்கு ஒரு கிண்ணம் பாலும் கொஞ்சம் பிஸ்கோத்தும் வைத்திருந்தார்கள். சிறிய மேஜைகள் போட்டிருந்தார்கள். ஒவ்வொரு மேஜையில் நான்கு குழந்தைகள் உட்கார்ந்தார்கள். சாப்பிட்டபிறகு, ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய தட்டையும் பாத்திரத்தையும் கழுவினது (அந்த அறையில் நீர்க்குழாயும் ஏனமும் இருந்தன); அவைகளைத் துடைத்து, அங்கே இருந்த கோக்காலி (cupboard) யிற் கொண்டுபோய் வைத்துவிட்டது.

குழந்தைகள் வேலைசெய்வதைக் கவனித்துப் பார்த்தால் ஆனந்தமாயிருக்கின்றது. அவர்கள் தங்களுடைய காரியத்தை மிகவும் சிரத்தையாய்ச் செய்கிறார்கள். அவர்கள் மனம் வந்தபடி பேசவும், தோன்றிய விஷயங்களைக்குறித்துத் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தாராளமாய்ச் சொல்லவும் உபாத்தியாயர்கள் அவர்களுக்குத் தைரியமூட்டுகிறார்கள். இதனால் உபாத்தியாயருக்கும் பிள்ளைகளுக்கும் அந்நியோந்நிய நட்பும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன. அதுவுமன்றி, கூச்சப்படாதிருக்கவும் பயப்படாதிருக்கவும் குழந்தைகள் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

சில பள்ளிக்கூடங்களில் எல்லா வகுப்புகளிலும் பையன்களும் பெண்களும் சேர்ந்தே படிக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் பாடங்கள் பெரும்பாலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. தையல்வேலையும் சமையல்வேலையும் மாத்திரம் பெண்களுக்குத் தனியாய் ஏற்பட்டிருக்கின்றன; தச்சுவேலையும் லோஹவேலையும் பையல்களுக்குத் தனியாய் ஏற்பட்டிருக்கின்றன. உணவு பார்க்கும் தொழில் மேற்கொள்ளும் பையல்கள் இப்பொழுது சமையல் வேலையும் கற்றுக்கொள்கிறார்கள்.

சரீரப் பயிற்சியின்பொருட்டுப் பள்ளிக்கூடத்தில் மல்லகசாலையொன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். மல்லாசிரியனா யிருப்பவன் நல்ல தேர்ச்சியுள்ளவன்; இரண்டுமூன்று வருஷம் சிலம்பக் கழகத்தில் பழகித் தேர்ந்தவன். சரீரத்தை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ள வேண்டியது முக்கியமான காரியமென்று உணர்ந்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பெண்களும் பெரியஸ்திரீகளும் மற்பயிற்சியிலும் வெளியாட்டங்களிலும் பழகத் தலைப்பட்டதனால் அவர்களுடைய ஆகிருதி வளர்ச்சிபெற்றிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.



துரைத்தனச் சட்டத்தின்படி பிள்ளைகள் 5 வயதுமுதல் 14 வயதுவரையில் பள்ளிக்கூடத்தில் படித்தே தீரவேண்டும். இந்தச்சட்டம் கூலிவேலைக்காரர்களுக்கே பொருந்தும். ஏனெனில், உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் தங்களுடைய பிள்ளைகளை 14 வயதில் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் நிறுத்தமாட்டார்களல்லவா? அந்தத் தேசத்தில் பாலியவிவாகம் இடையாது. பையன் பள்ளிக்கூடத்தில் ஆனந்தமாகக் காலங்கழிக்கிறான். படிப்பும், விளையாட்டும், தோழர்களுமே ஞாபகமாக இருக்கிறான். கலியாணத்தைப் பற்றிய நினைவே அவனுக்கு உண்டாவதில்லை.

போர்டிங் ஸ்கூல்கள் பெரியசாலைகளாகும். இங்கிலீஷ்காரர்களெல்லாரும் தங்களுடைய தேசத்திலேயே வயிறு வளர்ப்பதற்குப் போதுமான இடம் இங்கிலாந்தில் இல்லை. ஆனதனால், அவர்களில் அனேகர் தங்கள் சீமையைவிட்டு வெளிச் சீமைகளுக்குப்போய் ஜீவனம் தேடவேண்டியிருக்கிறது. ஆனால், அவர்களெல்லாரும் தங்கள் குழந்தைகளைத் தங்களுடைய பழைய நாடாகிய ஸ்வதேசத்திற்கே அனுப்பி விடுகிறார்கள். இங்கிலாந்து தேசத்தினால் எவ்வளவு அனுகூலங்கள் வாய்க்குமோ அவ்வளவும் அந்தக் குழந்தைகள் பெறும்பொருட்டு அவர்களை அத்தேசத்திற்கு அனுப்புகிறார்கள்.

பெற்றோர்கள் வெளித் தேசங்களில் இருப்பதனால், பிள்ளைகள் போர்டிங் ஸ்கூல்களில் படிக்கவேண்டியதாகின்றது. அங்கேபோய்ச் சேரும்பையன் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி நடந்துகொள்ளக் கற்றுக்கொள்கிறான். புதிய பள்ளிக்கூடத்திற்போய்ச் சேர்ந்த முதல்நாள் அவனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். அந்நியர்கள் அனேகருக்கு மத்தியில் ஒரு சிறுபையனாவது பெண்ணாவது போய்ச் சேர்ந்தால் எப்படியிருக்குமென்று ஆலோசித்துப் பாருங்கள். தாங்களே ஆலோசித்துக்கொண்டு நடக்கவேண்டியிருப்பதனாலே அவர்கள் தங்களுக்கு ஒரு நிலை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும். இப்படிப் புதிதாகச் சேருகிற பையன் ஒவ்வொருவனும் தானே ஆலோசித்து, அவ்விடத்திலுள்ள சந்தர்ப்பங்களைக் கவனித்து, மற்றவர்களை அடுத்துச் சிநேகங் கொண்டாடி, தனக்கு வேண்டிய காரியங்களை நடத்திக்கொண்டு, அவர்களைப்போலத் தானும் ஒருவனாக விளங்குவதற்கு முயலவேண்டும்.

இப்படிப்பட்ட பயிற்சி மிகச் சிறப்புடையது. இனி நாட்டாண்மைக்காரர்களாய் வரத்தக்கவர்களெல்லாரும் இவ்விடத்திலே — போர்டிங்ஸ்கூலிலே — ஏற்படுகிறார்கள். ஜனசமூகத்தில் தலைமைவாய்ந்து நடக்கக்கூடியவர்களை ஆக்குமிடம் போர்டிங்ஸ்கூலே. ஸ்வேச்சை, தன் முயற்சி முதலிய குணங்கள் பப்ளிக் ஸ்கூல்களிலே பிறந்து வளர்ந்தோங்குகின்றன; தலைமை வகிக்கும் சக்தியும், அதிகார மேற்கொண்டு மற்றவர்களை ஏவி நடத்தும் திறமையும் பப்ளிக் ஸ்கூல்களிலே பிறந்து வளர்கின்றன.

ஆட்டபாட்டங்கள்:—நற்குணங்கள் அமைவதற்கு, மற்றச் சாதனங்கள் எவ்வளவு அனுகூலங்கள் செய்கின்றனவோ அவ்வளவு, விளையாட்டுகளும்

செய்கின்றன. இங்கிலாந்தில் வெளி விளையாட்டுகளை அதிகமாய்க் கவனிக்கிறார்களென்றும், அவைகளில் அவர்கள் சிரத்தை கொள்ளவேண்டியது அவசியமில்லையென்றும் குற்றஞ் சொல்லுகிறார்கள். வெளியாட்டங்களையே அவர்கள் தொழிலாக மேற்கொள்வதானால், அப்படிக் குற்றஞ் சொல்லலாம். இப்பொழுது நாம் அந்த ஆட்டங்களின் பிரயோஜனம் என்னவென்று விசாரிக்கப் புகுந்தோமே யல்லாமல், அவைகளினால் விளையும் விபரீதங்களைக் கவனிக்கப் புகவில்லை.

கிரிக்கெட்டு என்பதே இங்கிலாந்து தேசத்து ஆட்டம் எனப்படும்; ஆனால், புட்பாலும் (காற்பந்தும்) எல்லாரும் அவ்வளவு பிரீதியாகவே ஆடுகிறார்கள். ஹாக்கி, டென்னிஸ் என்னும் ஆட்டங்களும் இருக்கின்றன. ஹாக்கி என்பது குளிர்காலத்து ஆட்டம். குளிர்மிகுந்து குளங்களும் குட்டைகளும் உறைந்துபோனால் ஸ்கேடிங் (வழுக்கியோடல்) என்னும் ஆட்டம் ஆடுவார்கள். இங்கிலாந்தைவிட ஸ்காத்லாந்தில் குளிர்மிகுதியாகையால், அங்கே ஸ்கேடிங் ஆட்டமும் அதிகம். கால்ப் என்பது ஸ்காத்லாந்து தேசத்து ஆட்டம். அங்கே ஒவ்வொரு குழந்தையும் கால்ப் ஆடும்.

காலஸ்வபாவத்தை அனுசரித்து நடக்கவேண்டியது முக்கியமாகையால், ஆட்டங்களெல்லாம் கோடைக் காலத்திலே நடைபெறும். ஸ்கூல்களில் ஆட்டச் சங்கங்கள் உண்டு. ஆட்டங்களுக்கு ஏற்பட்டிருக்கும் உபாத்தியாயர் அவைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார். கடற்கரையையடுத்த ஊர்களிலுள்ள பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளெல்லாரும் அவர்களுடைய உபாத்தியாயருடன் கடற்கரை மணலில் ஹாக்கி விளையாடுவதற்காவது, நீந்தும் துறைகளில் நீந்துவதற்காவது கூட்டமாகப் போவதை அடிக்கடி பார்க்கலாம்.

கிரிக்கெட்டிலாவது புட்பாலிலாவது ஸ்கூல் பந்தயங்கள் நடக்கும். அப்பொழுது ஒரு பள்ளிக்கூடத்துக்காரர் மற்றொரு பள்ளிக்கூடத்துக் காரரோடு ஆடுவார்கள். ஒரு பள்ளிக்கூடத்துக்காரர் கொஞ்சதூரத்திலிருந்து வருகிறவர்களா யிருந்தால், ஆட்டத்து உற்சாகத்தோடு அவர்களுக்குப் பிரயாணத்து இன்பமும் மனவெழுச்சியும் கூடுகின்றன. இங்கிலீஷ் குழந்தைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அதிகம். இந்நாட்டாரைப்போல நிதானமாகவும் ஒய்யாரமாகவும் கம்பீரமாகவும் நடக்க அவர்களுக்குத் தெரியாது. பள்ளிக்கூடத்துக்குப் போவதற்குச் சுலபமானவழி ஓடுவதும் குதிப்பதுமேயென்று இங்கிலீஷ் குழந்தைகள் கண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அடக்கி ஒழுங்காய் இருக்கச்செய்வது உபாத்தியாயருக்குள்ள கஷ்டமான காரியங்களுள் ஒன்று.

இந்நாளில் பொம்மைக் காட்சிகள் அதிகமாய் நடக்கின்றன. பெரியவர்களும் சிறியவர்களும் அவைகளைப் பார்க்கப் போகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி விசேஷமான தர்க்கம் நடக்கிறது. இன்ன பொம்மைகளைக் காட்டலாம், இன்ன பொம்மைகளைக் காட்டக்கூடாது என்று அவைகளைச் சோதித்துப் பார்த்துக் கண்டிப்பதற்கு அதிகாரி ஒருவரைத் துரைத்தனத்தார்



ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அப்படி யிருந்தும், காட்சிகளில் காட்டும் பொம்மைகளெல்லாம் எப்பொழுதும் விரும்பக் கூடியவைகளா யிருப்பதில்லை. ஆனால், இந்த மாதிரியான வேடிக்கையினால் பிள்ளைகளுக்கு அனேக விஷயங்களைப் போதிக்கலா மென்பதில் சந்தேகமில்லை. கிறிஸ்ட்மஸ் காலத்தில் குழந்தைகளுக்கெனவே நாடகங்கள் ஆடுகிறார்கள். அப்பொழுது நாடகசாலைகளில் குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் நிறைந்திருப்பார்கள்.

கிறிஸ்ட்மஸ் என்பது வருஷத்தில் பெரியபண்டிகை. கிறிஸ்ட்மஸ் காலத்தில் குழந்தைகளெல்லாரும் வெகுமதிகள் எதிர்பார்ப்பார்கள். இரவில் படுக்கைக்குமேலே தலையணையுறைகளையாவது பாதகோசங்களை (Stockings) யாவது தொங்கவிட்டிருப்பார்கள். கிறிஸ்ட்மஸ் தினத்தன்று காலையில் குழந்தைகள் விழித்துக்கொண்டவுடன் கிறிஸ்ட்மஸ் தாதா அவர்களுக்காகக் கொண்டுவந்திருக்கும் விளையாட்டுப்பண்டங்களை, மேலே தொங்கவிட்டிருக்கும் உறைகளில் காண்பார்கள். குழந்தைகளுடைய விருந்துக்கூட்டங்களில் கிறிஸ்ட்மஸ் மரம் என்றொரு மரம் வைத்திருப்பார்கள். தேவதாரு மரத்தையாவது, அதன் பெருங்கிளை யொன்றினையாவது ஒரு பூத்தொட்டியில் நட்டு வைத்திருப்பார்கள்.

கிறிஸ்ட்மஸ் மரத்தை வீட்டுக்குள் கொண்டுவந்து மெழுகுவர்த்திகளினாலும் பளபளப்பான ஆபரணங்களினாலும் அலங்கரித்து, அதில் விளையாட்டுப் பண்டங்களையெல்லாம் தொங்கப்போடுவார்கள். அது சித்தமானவுடனே, அந்த அறையின் கதவுகளைத்திறந்து விடுவார்கள். குழந்தைகளெல்லாரும் அந்த அறைக்குள் ஓடுவார்கள். அப்பொழுது அவர்கள் களிமிகுந்திருப்பார்கள். ஒவ்வொருவரையும் பெயரிட்டழைத்து அந்த வெகுமதிகளை யெடுத்துக் கொடுப்பார்கள். இந்த வேடிக்கையை எல்லாரும் கொண்டாடுவார்கள். குழந்தைகள் குதித்து விளையாடுவார்கள். அந்த விளையாட்டுகளில் பெரியவர்களும் கலந்து அவர்களைக் களிப்பிப்பார்கள். தின்பதற்கு இனிமையான பண்டங்கள் ஏராளமாய் வைக்கப்பட்டிருக்கும். ஸ்திரீகளும் வந்து அந்தக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்வார்கள். அன்றிரவு இங்கிலாந்தில் விளையாடிக் களித்துக் களைப்புற்றிருக்கும் சிறுவர்கள் அனேகர்.

P. F. PARSONS B. A., L. T.

Late Assistant Inspectress of Girls' Schools

Central Circle.

# NOTES OF THE MONTH

# மாதாந்தரக்குறிப்புகள்

மைசூர் பொருளாதாரப் பத்திரிகை
The Mysore Economic journal

மைசூர் கவர்ன்மெண்டாருடைய ஆதரவின்கீழ் வெளிப்பட்டுவரும் இந்தப் பத்திரிகையின் முதற்சஞ்சிகையை மிகுந்த களிப்புடன் வாசித்தோம். அது கல்வி, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளைப்பற்றிய விஷயங்களை வெளியிட முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயங்களெல்லாம் இராச்சியத்திற்கும் தேசத்திற்கும் நன்மையையுண்டு பண்ணக்கூடிய விஷயங்களல்லவா? இவ்விதமான அரியவிஷயங்களைச் சுயமாக எழுதும்படி மற்றைய இலாகாவி லுள்ளவர்களையுங் கூட உற்சாகப்படுத்தித் தூண்டுவதாகவும் தெரியவருகிறது. இப்படி யெல்லாம் செய்ய முன்வந்திருக்கும் இந்தப் 'பொருளாதாரப் பத்திரிகை' குடிகளுக்கு உயிராதாரமாக விருந்து நன்மையையுண்டு பண்ணுமென்று நம்புகிறோம்.

இப்பொழுது கல்வியிலும், வியாபாரத்திலும், இலௌகிகத்திலும் முதிர்ச்சிபெற்றவர்களிற் பலர் தாம் அநுபவத்திற் கண்டுதெளிந்த விஷயங்களை, பிறர் அறிந்து அநுபவித்துச் சுகமடைய விடாமல், "பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்" மானுடர்களைப்போலத் தம்முள்மூடிவைத்து வீணாக்குகின்றன ரல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அறிவினையுண்டுபண்ணி அவர்களிடமிருந்து சுவானுபவ வுணர்ச்சியோடுங்கூடிய விஷயங்களை வாங்கி வெளியிட்டால் நன்மையாக விருக்கும். அப்படி வெளிவரும் விஷயங்களெல்லாம் கூட ஆராய்ச்சிக்கு இடந்தரக்கூடியவைகளா யிருக்க வேண்டு மென்பது எமது அபிப்பிராயம்.

* * * * * *

அநுபவத்திற் கடுத்த விதமாகக் கல்வியைப் போதித்தற்குரிய மார்க்கங்கள்
Methods of making Education more Practical

அப்பியாசஞ் செய்தற்கு உதவும் விதமாகக் கல்வியைக் கற்பிக்கவேண்டு மென்பது தம்முடையகருத்தென்று சொற்ப காலத்திற்குமுன் பம்பாய் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருந் தார்கள். பிள்ளைகள் தாம்காணும் பொருளைக் கவனிப்ப



தற்கும் அப்படிக் கவனித்தவைகளை ஆராய்வதற்கும் உரிய அநுகூலங்களைச் செய்யும்படியாகவும், பிள்ளைகள் தமது கல்வியறிவினை இலௌகிக அறிவோடு பொருத்திப் பார்த்தற்குரிய ஏதுக்களைத் தேடும்படியாகவும் கல்விலாகா உத்தியோகஸ்தர்களுக்குப் பம்பாய் கவர்ன்மெண்டார் மேலேசொன்ன முடிவான நோக்கத்துடன் விண்ணப்பித் திருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்கு விஷயங்களைத் திருஷ்டாந்தப் படுத்திக்காட்டி அறிவினை விருத்தி செய்ய மனங்கொண்டு பம்பாய் கவர்ன்மெண்டார் மாஜிக்லான்டர்ன் (Magic lantern) ஸ்டெரஸ்கோப்ஸ் (Stereoscopes) முதலியவைகளை வாங்குதற்கும், கிராபிக் (Graphic) முதலிய பத்திரிகைகளைத் தருவித்தற்கும் பெரும்பணம் செலவிடுவதாகத் தெரியவருகிறது. இயற்கைப் பொருட்பாடமும் தோட்டத் தொழிற்கல்வியும் நன்றாகப் போதிக்கப்பட வேண்டு மென்பது அவர்களுடைய நோக்கம். இப்பாடங்களில் நல்ல உணர்ச்சிபெறும்பொருட்டும் போதிக்குந் திறமையைப்பெறும்பொருட்டும் உபாத்திகளையும் ஆதரிக்கின்றார்கள்.

இப்படியெல்லாஞ் செய்து வருவதனால், அவர்களுடைய முயற்சி வீணாகாது; விரைவில், அவர்களால் போதிக்கப்படுங் கல்வி கையேட்டுக் கல்வியாய் நில்லாமல் இலௌகிக கல்வியாய் விளங்கி அனைவருக்கும் நற்பயனினைத் தவறாமல் தருமென்று நம்புகிறோம்.

* * * * * *

கல்வியின் விரிவு
Extent of Literacy

ஜனத்தொகையில் 1000 க்கு இத்தனைபேர் இன்ன இன்ன ஊரில் கற்றறிந்தவர்கள், அதாவது வாசிக்கத் தெரிந்தவர்கள், இருக்கிறார்கள் என்பதனை இதனடியிலுள்ள எண்கள் விளக்கிக் காட்டுகின்றன. அவைகளைப் பார்க்க நமது சந்தாதாரர்கள் விரும்புவார்களென்று நம்புகிறோம்:—

| | ஆண். | பெண். |
|---|---|---|
| சென்னை | 360 | 91 |
| கொச்சி | 824 | 45 |
| திருவாங்கூர் | 215 | 31 |
| தஞ்சாவூர் | 203 | 9 |
| மைசூர் | 172 | 80 |
| மலபார் (Malabar) | 89 | 6 |

இந்தியா தேசம் முழுவதிலும் வியாபித்துள்ள ஜனங்களில் கற்றறிந்த புருஷர் நூற்றுக்குச் சற்றேறக்குறைய 10 பேர் இருப்பதாகத்தெரிகிறது.

பள்ளிக்கூடத்திற்குப் போகத்தக்க வயதுடைய சிறுவர்களில் உள்ளபடி பள்ளிக்கூடம் போகிறவர்கள் நூற்றுக்கு 55 பேர் பரோடாவிலும், 50 பேர் திருவாங்கூரிலும், 28. 1 பேர் சென்னையிலும் 18 பேர் மைசூரிலும் இருப்பதாகத் தெரியவருகிறது.

மைசூரில் கட்டாயப்படிப்பு அவசியமாயிருப்பது போலத் திருவாங்கூரில் அவ்வளவு முக்கியமாய் வேண்டியிருப்பதாகக் காணப்படவில்லை. கட்டாயப்படிப்பை வலியுறுத்தப்போகும் பதினைந்து இடங்களை மைசூர் கெஜட் பிரசுரித்திருப்பதாகக் கேள்வியுற்று மகிழ்ச்சி யடைவதனோடு அவைகளைப் பற்றிய ரிபோர்டினையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

*       *       *       *       *       *

**சொல்லல்ல செய்கையே**
**Deeds not words**

ஒருவர் தாம் செய்யப்போகும் உதவியினை வெளியிடாமற் செய்து முடித்தால் அவர்களைப் 'பெரியோர்' களென்றும், செய்வதாக விளம்பரப்படுத்திச் செய்கிறவர்களைச் 'சிறியோர்' களென்றும், செய்வதாக விளம்பரப்படுத்திப் பிறகு செய்யாமல் விடுபவர்களைக் 'கசட' ரென்றும் பெரியோர்கள் சொல்வது எல்லோருக்குந் தெரிந்த விஷயந்தானே? இப்பொழுது மைசூர் மகாராணி காலேஜில் உதவி உபாத்தியாயினியாயிருக்கும் ஸ்ரீமதி பகீரதம்மா அவர்கள் பெண்களுடைய கல்வி அபிவிருத்தி யடையும் பொருட்டு 1000 ரூபாய் கவர்ன்மெண்டாருக்கு உதவிசெய்தார்கள். இந்தத் தொகையை அவர்கள் 29 வருஷகாலமாகச் சேர்த்தார்களாம், இவர்கள் சேர்த்துவந்தமுறை மிகவும் வியக்கத்தகுந்ததே. அந்த அம்மையார், உபாத்தியாயினி வேலையில் தனக்குக்கிடைத்த சம்பளத்திலும், படிக்கையில் தனக்குக்கிடைத்த ஸ்காலர்ஷிப்பிலும் ஒரு காசைய பணத்தைப் 'பெண்கள்கல்வி' க்கென்று எடுத்து ஒருபுறம் ஈட்டி வைத்திருந்தார்களாம். இவ்விதமான அரிய செய்கையை, கல்வி விருத்தியடைய வேண்டும்' 'கல்வி விருத்தியடைய வேண்டும்' என்று மூச்சுவிடாமற்பேசும் ஆண்பாலா ரெல்லாம் செய்ய முன்வருவார்களாகில் கல்வியும் விருத்தியடையாமற்போமோ, சிறுவர்களும் நன்மையடையாமற் போவார்களோ? இப்படிப்பட்ட அரிய பெரிய காரியத்தைச் சொல்லாமற் செய்த இந்த அம்மையாரைப் 'பெரியோர்' என்று சொல்லத் தடையுமுண்டோ?

*       *       *       *       *       *



**ஈரோட்டில் வித்தியா விநோதப்பொருட்காட்சி**
**Educational Exhibition, Erode**

வித்தியாசம்பந்தமான காட்சியை இதுவரையில் கோயம்புத்தூர் ஜில்லாவி லுள்ளவர்கள் கண்டதில்லை. சென்ற டிசம்பரில் கண்டது தான் முதன்முறை. வித்தியாசம்பந்தமான விநோதப்பொருள்களைத் தேடுதற்கும் காண்பித்தற்கும் ஊக்கத்துடன் முன்னின்றவர்களை மிகவும் புகழ்ந்து கொண்டாடுகிறோம். அவ்விடத்தில் உபயோககரமான பிரசங்கங்கள் செய்யப்பட்டன. பொருட்காட்சிச்சபையார் கடைசியாகக் கூடினகாலத்து ரெவனியு டிவிஷனல் ஆபீஸர் (Revenue Divisional Officer) விஜயஞ்செய்தது பெரிதும் கொண்டாடத் தகுந்ததே. 'இந்து பத்திரிகை டிசம்பர் 25ல் வெளியிட்ட பொருட்காட்சி ரிபோர்ட்டில் காட்சிசாலையிற்காட்டிய பொருள்களைப்பற்றி யொன்றும் சொல்லாமல் விடுத்தது மிகவும் விசனிக்கத் தகுந்ததே.

*       *       *       *       *       *

**துலுக்கருடைய கல்விச்சங்கம்.**
**The Moslem Educational Conference**

இச்சங்கம் 1914 இல் ராவல்பண்டியில் கூடினது. அதில், இஸ்லாம் மதக்கோட்பாட்டினை அனுசரித்துச் சில அரியமதப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. மௌல்வி அப்துல் கலம் அஸத் (Moulvi Abdul Kalam Azad) என்பவர் உண்மையான இஸ்லாம் மதக்கோட்பாடுகள் தங்களுடைய இனத்தாருக்குப் பரவவேண்டிய முறையைப்பற்றி உர்து பாஷையில் புளகாங்கிதம் உண்டாகும்படி பிரசங்கமாரி பெய்தனர்.

*       *       *       *       *       *

**பஞ்சாப் மாகாணத்தில் புதிய எலிமென்டரிப் பாடசாலைகள்**
**New Elementary Schools in the Punjab**

பஞ்சாப் மாகாணத்தில் 553 எலிமென்டரிப் பாடசாலைகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன வென்றும் கல்விகற்குஞ் சிறுவர்களின் எண் அதிகப்பட்ட தென்றும் பிரைமரிப் பாடசாலைகளில் 27, 647 சிறுவர் நூதனமாகக் கற்கச் சேர்ந்தார்களென்றும் அதனால் பிரைமரிப் பாடசாலைகளில் படிக்குஞ் சிறுவர்களின் தொகை $2\frac{1}{2}$ லக்ஷத்திற்குச் சற்று அதிகமாகவே இருக்கிற தென்றும் நூதனமாக வெளிவந்த ரிடர்னால் புலப்படுகிறது.

*       *       *       *       *       *

## FOREIGN NEWS
## பிறதேச வர்த்தமானம்.

**Health in Rural schools**
**புறநாட்டுப் பள்ளிப்பிள்ளைகளின் தேகாரோக்கியம்**

*பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் தேகாரோக்கியத்தைக் கண்டறிய நாஷனல் கவுன்ஸிலாரிற்சிலரும் அமெரிக வயித்திய சங்கத்தாரிற் சிலரும் (National Council & American Medical Association) ஒன்றுகூடி விசாரிக்கத்தலைப்பட்டனர். அப்படி விசாரித்ததில் நாட்டுப்பிள்ளைகளும் கிராமத்துப் பிள்ளைகளும் பட்டணத்துப் பிள்ளைகளைவிடத்தேகாரோக்கியத்தில் குறைவுபாடுற் றிருப்பதாகத் தெரியவந்தது. கிராமத்துப்பிள்ளைகளின் உணவும் நாகரீக மற்றதாகவும் போஷணைக் குறைவுற்றதாகவும் இருப்பதாக வெளிவந்தது.*

*இவற்றைக் கண்டறிந்த பின்னர் தேகாரோக்கியத்தை விசாரித்தறியவெழுந்த சங்கத்தார் கிராமப்பள்ளிகளிலிருப்பவர் கவனிக்க வேண்டிய சுகாதார விஷயங்களை அதாவது பாடசாலை நிலைபெற வேண்டிய இடம், அதற்கு அருகிலிருக்க வேண்டிய வீடுகளின் நிலைமை, பருகும் நீரின் தன்மை, சுசியின் முறைமை, கண்ணொளிக்கு அனுகூலந்தரும் விண்ணொளியின் அளவு, சாமான்கள் வைக்கவேண்டிய ஒழுங்கு முதலியவற்றைச் சிறு துண்டுகளில் அச்சிட்டு கிராமப்பள்ளிகளுக்கு அனுப்பி அவர்களுடைய தேகாரோக்கியத்தைப் போற்றத் தீர்மானித்திருக்கின்றனர்.*

**விவாகமான உபாத்தியாயினிகள்**
**Married Women Teachers**

*கேப் கலோனியில் விவாகமான உபாத்தியாயினிகள் வேலையில் இருக்கப்படாதாம். அவர்கள் பள்ளிக்கூடங்களில் உபாத்திமைத் தொழில்செய்ய அவ்வூர்க் கல்விச்சட்டம் இடங்தருவதில்லையாம். ஒரு உபாத்தியாயினி விவாகஞ்செய்து கொண்டால் அவளை வேலையினின்றும் நீக்கப்படும் என்றும் அவளுடைய வேலை விவாகஞ்செய்து கொண்டதினத்தன்றே முடிவுபெற்றதாக போர்டார் எண்ணுவார்க ளென்றும் கேப் கலோனி ஸ்கூல் போர்டார் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனோடு அந்த உபாத்தியாயினி தான் விவாகம் செய்துகொள்ளுதற்கு ஒரு மாதத்திற்கு முந்தி போர்டாருக்கு அறிவிக்க வேண்டு மென்றும், அப்படி அறிவித்தால் ஒருவேளை அவளைச் சொற்பகாலம் போர்டார் வேலையில் வைத்திருந்து பிறகு சிலநாள் கோட்டிலால் வேலையினின்றும் நீக்குவார்களென்றும் அந்த போர்ட்சட்டம் வெளியிடுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி லண்டன் கல்வியிலாகாதிகாரிகள் ஒருவிதத் தீர்மானமுஞ் செய்யவில்லை.*

ஸ்ரீ

OFFICE OF THE ... 8 - MAR 1915 ... MADRAS.

# சற்குரு

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்
**மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை**

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "—*தமிழ்மறை*

| தொகுதி—க | 1915ஞ மார்ச்சுமீ | பகுதி—கூ |
|---|---|---|

## THE LIFE OF THE ENGLISH CHILD
## வெள்ளைக்காரக் குழந்தையின் வாழ்க்கை

(185 - ம் பக்கத்தொடர்ச்சி)

**வீட்டுவாழ்க்கை :**—கிறிஸ்ட்மஸ் கொண்டாட்டங்களை, நாம் " ஆட்டபாட்டங்கள் " என்னும் தலைப்பின்கீழ்ச்சொல்லியபோதிலும், உண்மையில் " வீட்டுவாழ்க்கை " யைச் சேர்ந்தவைகளே ; இப்பொழுது அசல் வீட்டுவாழ்க்கையைப்பற்றிப் பேசுவோம்.

வீட்டில்குழந்தை தன் தாய்தந்தையர்கள் இருவரையுமே சார்ந்திருக்கின்றது. இருவரிடத்தும் சமமாகவே கலந்து பழகுகின்றது. பெற்றோரின் செல்வாக்கு அவரவர்களுடைய குணத்தையும் கௌரவத்தையும் பொறுத்திருக்கின்றது. வாயினால் நீதிபோதிப்பதைவிடத் தன்னுடைய நடவடிக்கையினால் நீதிபோதிப்பது நல்லதல்லவா ? குழந்தை எப்படிப்பட்ட நீதி மண்டலத்தில் வளர்கின்றதோ, அதற்கேற்றபடி அதன் குணம் அமைகின்றது. குழந்தையைச் சூழ்ந்துள்ளவர்களின் நீதியான நடவடிக்கையும் அநீதியான நடவடிக்கையும் குழந்தையின் குணத்தை எப்படி இயக்குகின்றன வென்பது

வெளிப்படையாகப் புலப்படாது. மிகவும் சிறுவயதிலிருந்தே குழந்தை தன்னுடைய காரியங்களைத்தானே செய்யப்பழகுகின்றது. வீட்டில் வேலைக்காரர்கள் அதிகமாயிருக்கமாட்டார்கள். ஆதலால், குழந்தைவீட்டுக்காரியங்களையும் செய்யவேண்டியதாகும். மற்றொருவருக்குக் கடிதமோ செய்தியோ கொண்டு போதல், கடைக்குப்போய் வீட்டுக்கு வேண்டிய சில்லறைச் சாமான்களை வாங்கி வருதல், தமக்குச் சிறிபகுழந்தைகளைக் கவனித்தல் முதலிய காரியங்களையெல்லாம் குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே பழக்குகிறார்கள்.

காலைப்போசனவேளையில் குடும்பத்தவர்களெல்லாரும் சேர்ந்து உண்பார்கள். அனேக வீடுகளில் காலைப்போசனத்திற்கு முன் எல்லாருமாகத் தெய்வப்பிரார்த்தனைகள் செய்வார்கள். காலைப்போசனமும் சாதாரணமாய் அவசரச்சாப்பாடாய் இருக்கும். ஏனெனில், தகப்பனார் தம்முடைய வேலைக்குப்போகவேண்டும், குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும், ரெயில்வண்டிகள் காத்திரா. ஆகையால், அவரவரும் ரெயில்வண்டி புறப்படும் நேரத்திற்குப்போய் அதில் ஏறிக்கொள்ளாவிட்டால், அன்றைக் காரியமெல்லாம் கெட்டுப்போம்.

வேலையும் பள்ளிக்கூடமும் முடிந்தபிறகு மாலையில் குடும்பத்தவர்களெல்லாரும் மறுபடி ஒன்று கூடுவார்கள். அப்பொழுது, அன்றைத்தினத்து வர்த்தமானங்களை யெல்லாம் எடுத்துப்பேசுவார்கள். குழந்தைகள் தாங்கள் செய்தகாரியங்களையும் ஆடிய ஆட்டங்களையும்பற்றிப் பேசுவார்கள். அவர்களுடைய வாய்மொழியைக்கேட்டுப் பெற்றோர்கள் அவர்களுக்குச் சொல்லத்தக்க புத்திமதிகளைச்சொல்லிச் சகாயஞ்செய்வார்கள். பள்ளிக்கூடத்திற் படிக்கும் பெரியபையல்களும் பெண்களும் இப்பொழுது ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தத்தை மிகுந்த கருத்துடன் கவனிக்கிறார்கள். போர்க்களத்துப் படங்களை வைத்துக்கொண்டு கூட்டாளிகளின் நிலைமையையும் சத்துருவின் நிலைமையையும் அந்தந்த் தேசத்தாருடைய கொடிகளைப் படத்தில் நட்டுக் குறிப்பிட்டுக் கொள்வார்கள்.

வெள்ளைக்காரருடைய வீட்டில் எல்லாம் மிக ஒழுங்காயிருக்கும். தினந்தோறும் எல்லாவற்றையும் தட்டிக்கொட்டிச் சுத்தப்படுத்துவதில் விசேஷமான காலம்போகும். அவசியமானவை யென்று அவர்கள் எண்ணுகிறவைகளெல்லாம் இத்தேசத்தில் பெருவாழ்வுக்குரியன வென்று எண்ணப்படும். கௌரவமான தாய்தந்தையர்களுடையபிள்ளை எவனும் அழுக்குடன் பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டான்; அழுக்கான புஸ்தகங்களும் வைத்துக்கொள்ளமாட்டான்.

எந்தப்பண்டத்தையும் தரையில் வைக்கும் பழக்கம் இத்தேசத்தில் இருக்கிறது. எதுவும் அழுக்காவதற்கு இந்த வழக்கமே பெரும்பாலும் காரணமாகும். இந்தியர்களைவிட இங்கிலீஷ்காரர் தம்குழந்தைகளை அதிகமாய்க் கண்டித்து ஒழுங்காய் நடத்துகிறார்கள். இந்திய தந்தையரிடத்தில் அன்பு



ஏராளமாயிருக்கிறது என்பது உண்மையே. ஆனால், தாயாருக்குப் படிப்பும் விவேகமு மில்லாதபோது, அந்த அன்பு மிகுதியினால் குழந்தைக்கு அதிக ஸ்வதந்திரம் ஏற்படுகின்றது. குழந்தை தன் மனம்போனவழியே போக விரும்புகிறான்; அவனை அப்படியே விடுகிறார்கள். முதலில் அடங்கி நடக்கக்கற்றுக் கொள்ளாவிட்டால், அதிகாரத்தன்மையும் நாட்டாண்மையும் தலைமையும் பெறுவது ஒருபோதும் முடியாது.

சாதாரண நாட்களுக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கும் வித்தியாசம் உண்டு. மதப்பற்றுள்ள குடும்பங்களில், குடும்பத்தவர்களெல்லாரும் கோவிலுக்குப் போவார்கள். குழந்தைகள் பெரும்பாலும் ஞாயிற்றுப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். அங்கே அவர்களுக்கு விசேஷமான மதபோதனைகள் செய்யப்படும்.

மற்றவர்கள் விடுமுறைத்தினமாகிய ஞாயிற்றுக்கிழமையில் வெளியில் உலாவப்போவார்கள். ஒருவார மெல்லாம் கச்சேரிகளில் அடைபட்ட அறைகளில் உட்கார்ந்து தினந்தோறும் நெடுநேரம் வேலைசெய்து அலுத்தபிறகு, அமைதியாயிருக்கும் வெளிநிலத்தில் உலாவப்போவது மிகவும் இனிமையாயிருக்கும். பெரியவர்கள் உலாவப்போகையில், அவர்களுடன் குழந்தைகளும் போவார்கள்.

டிராம் வண்டிகளும் ரெயில்வண்டிகளும் மிகவும் அனுகூலமாயிருக்கும். நெடுந்தூரம் போவதற்குக் கொஞ்சம் கூலிகொடுத்தாற்போதும். அந்த அற்பச்செலவு மில்லாமலே உத்தியானங்களுக்குப் போகலாம். அங்கேயுள்ள குட்டைகளிலிருக்கும் வாத்துகளுக்குக் குழந்தைகள் தின்பண்டங்களைப் போடுவார்கள்; புற்றரையில் ஓடி விளையாடுவார்கள்; பாண்டுவாத்தியங்கள் வாசிப்பதைக் கேட்பார்கள். ஞாயிற்றுக்கிழமையில் உத்தியானங்களிலும் வழிநடைகளிலும் ஜனங்கள் எப்பொழுதும் நிறைந்திருப்பார்கள்.

இன்னும் எழுதுவதற்கு இடம் அதிகமாய் வேண்டியிருக்கு மென்று அஞ்சி இம்மட்டோடு நிறுத்துகிறோம். இங்கிலீஷ்காரருடைய குழந்தை வீட்டில் எப்படி வளர்கிற தென்றும், வீட்டிலுள்ள சந்தர்ப்பங்களினால் குழந்தையின் குணமும் நடவடிக்கையும் எப்படி அமைகின்றன வென்றும் எடுத்துக்காட்ட முயன்றோம். புருஷனாவது ஸ்திரீயாவது உலகத்தில் நல்ல விவகாரக் காரராக வரவேண்டுமானால், காலந்தவறாமல் காரியஞ்செய்யும் வழக்கத்தையும் சுறுசுறுப்பையும் அவசியம் உடையராயிருத்தல் வேண்டும். இந்த ஒழுக்கத்தினாலேயே இங்கிலீஷ்காரர் நல்ல நிர்வாகிகளாகிறார்கள். காரியங்களைக் குழந்தைகள் தாமே செய்யப் பழகுவதனால், சிறு வயதிலேயே அவர்கள் தங்களுடைய கைகால்களின் மீதே சார்ந்து விவகரிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். இந்த விஷயங்களெல்லாம் இந்திய உபாத்தியாயர்கள் மறவாமல் கவனிக்கத்தக்கவை.

P. F. PARSONS, B.A., L.T.

# STORY TELLING.
## LOOK BEFORE YOW LEAP.

முன்னொருகாலத்தில், ஒரு பிராமணன் பலநாளாய் வறுமையால் மிகவும் வருந்தி; கடைசியில் இறந்துபோக வேண்டுமென்று ஒருநாள் தீர்மானஞ் செய்து கொண்டான். அந்நாளிரவில், பணத்திற்கு அதிபதியாகிய தெய்வமானது அவனுக்குக்கனவில் தோன்றி, பிராமணா! "இறந்துபோக நினையாதே, ஏன் வருத்தப்படுகிறாய்; பணம் இல்லையே என்று ஏங்கவேண்டாம்; நாளையதினம் நடுப்பகலில் நான் உன்னிடம் சந்நியாசியாய் உருவெடுத்து வருவேன், அப்பொழுது நீ என்னை ஒருதடியால் அடிப்பாயாகில் நான் உடனே பொற்குவியலாய் மாறிவிடுவேன்" என்று சொல்லி மறைந்தது.

உடனே அவன் விழித்துப்பார்த்து ஒன்றும் காணாததால், உண்மையாகவே பணம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று எண்ணியிருந்தான். மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சந்நியாசி உருவமாய் அந்தப்பண தேவதையானது அவன் அருகேவர, அவன் அதை ஒரு தடியாலடிக்க, அது பொற்குவியலாக மாறிவிட்டது. இதைக்கண்ட ஒரு நாவிதன் பண ஆசைமேலிட்டுத்தானும், புத்தியில்லாமல், ஒரு சந்நியாசியைத் தடியால் அடித்தால் அதிக பணம் கிடைக்குமென்று எண்ணிக் கொண்டான். அதேமாதிரி மறுநாள் அந்த நாவிதன் சந்நியாசிகளிருக்குமிடம் தேடிப்போய், அவர்களில் ஒருவரைத் தன் வீட்டிற்கு வரும்படி மிகவும் வேண்டிக்கொண்டான். அந்த நாவிதன் வேண்டுகோளின்படி அவர்களிலொருவர் நாவிதன் வீட்டிற்குவந்தார். வந்ததும் நாவிதன் ஒரு பெரிய தடியால் அவரை அடித்தான். அடித்தவுடன் சந்நியாசியானவர் பொற்குவியலாக மாறவில்லை. களைத்து நிலத்தில் விழுந்தார். இச்சமாசாரம் அந்த ஊரிலுள்ள அனைவருக்கும் தெரிந்தது. தெரியவே, அந்நாட்டரசன் உண்மையை விசாரித்து, நாவிதனுக்குத் தக்க தண்டனை விதித்து, அடிபட்ட சந்நியாசிக்கு வேண்டிய உபசாரம் செய்து அனுப்பினான்.

### நீதி

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தின் உண்மையை அறியாமல் அதில் பிரவேசிக்கக்கூடாது.

K. R. RAMASAWMY AYER,
Secretary Teacher's Association,
Ramapatanam Centre,
Pollachi Post, Coimbatore Dt.

# WHY OUR COUNTRY IS BACKWARD IN EDUCATION?
## நம் நாடு கல்வியுணர்ச்சியில் குறைவுற்றிருத்தற்குக் காரணம் என்ன?

நமது ஜனவரி மாதத்திய 'சற்குரு' வில் குயின்ஸ் லாண்ட் மாகாணத்தில் ஜனங்கள் மூலைக்கொருவராக இருக்கின்றார்களென்றும், 670, 500 சதுர மைல் கொண்ட அம்மாகாணத்தில் இருப்பவர்கள் 656, 224 பேர் என்றும், சராசரிக் கணக்கிட்டுப் பார்க்கையில் மைல் ஒன்றுக்கு வசிக்கும் ஆள் ஒருவனென்றே ஏற்படுகிறதென்றும் கூறி அப்படிப்பட்ட குறைந்த ஜனத்தொகையினையுடைய அவ்விடத்தில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் பிள்ளைகளின் எண் 138, 551 என்று கணிக்கப்படுவதாகவும் கூறினோமல்லவா? குறைந்த ஜனத்தொகையினையுடைய அம்மாகாணத்தில் கல்வி அவ்வளவு அதிகமாகப் பரவவேண்டிய காரணம் என்ன, அதிக ஜனத்தொகையினையுடைய நம்முடைய ஜில்லாக்களில் கல்வி பரவாதிருக்கவேண்டிய காரணம் என்ன என்று சற்று ஆராய்வோம்.

குயின்ஸ் லாண்ட் மாகாணத்தில் ஜனத்தொகை குறைவாயிருந்தும், ஊர்ப்பிரயாணஞ்செய்தற்கு வாகன சௌகரியங்கள் குறைவாயிருந்தும் அவ்விடத்தில் கல்வி அதிகமாகப் பரவவேண்டிய காரணம் என்ன என்று விசாரிக்கையில் அவ்விடத்தார்க்குக் கல்வியின் அருமை அதிகமாகத் தெரிந்திருப்பதும், அவர்கள் தம்மக்களுக்குக் கல்விகற்பிக்க ஊக்கங்கொண்டிருத்தலுமே காரணம் என்று தெரியவருகிறது. அன்றியும் அம்மாகாணத்தார் "தந்தை மகற் காற்றுமுதவி யவையத்து முந்தியிருப்பச் செயல்" என்னும் குறட்பாவின் நோக்கினை நன்குணர்ந் திருக்கிறார்கள் போலும்.

அவ்விடத்தவர் ஊக்கங் கொண்டிருத்தலைப் போலவும், அவ்விடத்தார் அருமையை அறிந்திருத்தல் போலவும் நம்மூரவர், நம்நாட்டவர், நந்தேசத்தவர் ஊக்கங்கொள்ளுதலும் இல்லை, கல்வியின் அருமையை அறிதலுமில்லை. 'கல்விகற்றல்' என்பதற்கு நம்மூர்வாசிகள், படித்துப் பரிக்ஷையிற் றேறுதல், எனப்பொருள் கொள்ளுகிறார்களேயன்றி, தேகாரோக்கியத்தை வளர்ப்பது கல்வி, மனோதத்துவத்தை விருத்திசெய்வது கல்வி, ஞானவுணர்ச்சியை நல்குவது கல்வி, குடும்பத்தினைப் பாதுகாப்பது கல்வி, செல்வத்தினைச் சேகரிப்பது கல்வி, கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றை அபிவிருத்தி செய்வது கல்வி, நல்லமனைவியை நாடுறச்செய்வது கல்வி, நல்ல மக்களை நலமுறப்பெறும்படி செய்வது கல்வி, அனைத்துக்கும் அருந்துணையாயுள்ளது கல்வி என ஆய்ந்தறிந்திலர். எல்லாவற்றிற்கும் மூலதனம்போன்று கல்வியிருத்தலை யறியாமையினால் நம்மவர்கள் தேகாரோக்கியமற்றும், மனோதத்துவங்கெட்டும், ஞானவுணர்ச்சியின்றியும், "புற்றீசல்போலப் புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர், காப்பதற்கும் வகையறியீர், கைவிடவுமாட்டீர்" என்றபடி குடும்பத்தினைக் காக்க வகையறியாதும், செல்

வத்தினைச் சேகரிக்கு முறையினை உணராதும் தடுமாறு கின்றனர். ஒரு குடும்பத்தில் நாயகனும் நாயகியும் கல்வியுணர்ச்சி உடையவர்களா யிருந்தால் அக்குடும்பம் நீங்கா மன மகிழ்ச்சியோடு செழிப்புற்று மிருக்குமல்லவா? அப்படிப் பட்டவர்கள் வயிற்றில் உற்பத்தியாகும் குழந்தையும் தேகவலிவு, மனவலிவு, ஒழுக்கவலிவு ஆகிய இம்மூன்று வலிவினையும் பொருந்தியதாக விருக்குமே. அப்படிப்பட்ட குடும்பங்கள் - பெற்றோர்கள் இல்லாமையினாலன்றோ நம்மவர்கள் சொற்பவாழ்நாளை யுடையவரா யிருத்தலோடு பிணியும் வறுமையும் நீங்காது உறையப்பெற்றவர்களாயு மிருக்கின்றனர். அந்தோ! இது என்ன பேதமை!

இப்படி நமக்கு எல்லாவற்றையும் தரும் கல்வியை நமது பெண்களும் நமது பிள்ளைகளும் பெற என்ன வழியினைச்செய்தோம்? ஒன்றும் இல்லையே. நமது பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பிக்கப்பெரும்பாலும் வகையறியாத நமக்கு என்ன கௌரவம் வேண்டும்? நம்மவர்களில் கற்றறிந்தவர்கள் ஊர் ஊராகச்சென்று, கிராமம் கிராமமாகச்சென்று அங்குள்ள பெரியமனுஷரால் பிரபுவால் எவ்வளவோ பணம் சேகரிக்கலா மல்லவா? அப்படிச் சொல்வதனால் அந்தப் பிரபுக்கள், பணக்காரர், செல்வவான்கள், பெரியமனுஷர் ஆயிரம் ஆயிரமாகக் கொடுக்க நாம்பெறவேண்டு மென்பதுமல்ல; நூறு நூறாகக் கொடுக்க நாம் வாங்கவேண்டு மென்பது மல்ல; அவர்கள் பத்துக்கணக்காகக் கொடுக்க நாம் பற்றவேண்டு மென்பது மல்ல. அவர்கள் தம் வருவாயில் - தமது சம்பளத்தில் பண்டைக்காலத்து வழக்கம்போல ஆறிலொன்றும் கொடுக்கவேண்டியதுமில்லை; அறுபதில் ஒன்றும் கொடுக்கவேண்டியதுமில்லை. தம்மூரவரும் தம்மைப் பின்பற்றும்படி அப்பிரபுக்கள் தம்வருவாயில் ரூபாய்க்குத் தம்படிவீதம் உதவி செய்வார்களானால், இவர்களால் கொடுக்கப்பட்ட தம்படிகள் லக்ஷங்கணக்கான பொன்நாணயங்களாக நாளடைவில் மாறுமே. அப்படித் தம்படிதம்படியாக வந்த தொகையினால் பலதருமபாடசாலைகளை நடத்தலாமே; இராப்பள்ளிகளை இயல்பெற இருத்தலாமே; குடும்ப "மாதர்க்கு" அடுத்த கலாசாலைகளைக் கருத்துற நிறுத்தலாமே.

அறுவடைக் காலங்களில் வேளாளர் கோயிலுக்கென்றும் குருக்களுக்கென்றும் தமது விளைவில் தருமஞ்செய்தல்போலக் கல்விக்கென்று ஒரு பகுதி கொடுத்தால் அவர்களைப் பஞ்சஞ்சூழுமோ? விவாக காலத்திலும் மற்றைய சுபகாரியத்தினை நடத்துகையிலும் அவர்கள் மனமுவந்து தம்மாலியன்றதைக் கல்விக்கெனக் கருதிக்கொடுக்கலாமே. இவ்வாறாகவெல்லாம் பணத்தினைச் சேகரிக்கத் துறைகள் பலவிருந்தும் நம்மவர் யாரும் முயற்சி செய்யாமையினால் உதவ ஒருவரும் முன் வந்திலர்; கல்வியும் நம்மக்களோடும் மனைவியரோடும் உடனுறைய முன்வந்திலது. ஆனபடியினால் நாம் நம்மால் இயன்றவளவு பலர்க்கும்போதித்து, கல்வி கற்றலின் அத்தியாவசிகத்தை எடுத்துரைத்துச் சங்கங்கள் கூட்டிச்செல்வத்தினை முறையோடு சேகரித்து, தருமபாடசாலைகளைப் பற்பலவிடங்களில் ஸ்தாபித்து சிலர்க்கு விவசாயத்தையும்,



சிலர்க்கு வியாபாரத்தினையும், சிலர்க்குக் கைத்தொழிலினையும், சிலர்க்கு சாஸ்திரவுணர்ச்சியினையும் பிறவற்றையும் கொடுத்து நம்முடைய நாடு நாடாக என்றும் இருக்க நாடுதற்கு முன்னிற்கமுயலுவோமாக. 'முயற்சி திருவினையாக்கும்' என்றபடி நம்முடைய முயற்சி திருவினைத்தவறாமல் தேடித்தந்து மனத்துக்கு உற்சாகத்தினை யுண்டுபண்ணும் என்பது திண்ணம் திண்ணமே.

## SCIENCE TEACHING IN INDIA

## இந்தியாவில் சாஸ்திரபோதனை

இந்தியாவில் இப்பொழுது கற்பித்துவருகிற பௌதிக சாஸ்திர பாடங்களினால் விளையும் பயன் என்ன? பள்ளிக்கூடங்களில் சாஸ்திரபாடம் அதிகமாயிருக்கின்றதே. இப்பொழுது கற்பிக்கப்படுவதே உத்தமமானதா? இது சரியான பாடமா? இதைவிடச் சரியானது வேறு இருக்கிறதா? இந்த முயற்சியை வேறுவகையில் திருப்பலாமா? என்னும் இவ்விஷயங்களை ஆலோசித்துப்பார்த்து ரஸாயன சாஸ்திரப்புலவர் ஒருவர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். அது வருமாறு:—

இப்பொழுது கற்பிக்கப்படும் சாஸ்திரபாடத்தினால் உண்மையில் மனப்பயிற்சி உண்டாகாது. இந்தியர்களுக்குக் கற்பிக்கவேண்டியது பௌதிக சாஸ்திரங்களுக்கு மூலாதாரமான சாமானிய விஷயங்களே. பௌதிகசாஸ்திரம் என்பது என்ன, அதனால் விளையும் பயன்கள் என்ன என்னும் விஷயங்களைப் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்கு நன்றாய்ப் போதிக்கவேண்டும். அந்தப்பொதுவான அறிவு ஜனங்களுக்கு உண்டாகாவிட்டால், சாஸ்திரம் என்பது என்ன, அது என்ன நன்மைகள் செய்திருக்கிறது, இனி என்ன நன்மைகள் செய்யக்கூடும், அதனால் தேசத்திற்கு க்ஷேமம் எப்படி உண்டாகும் என்னும் விஷயங்கள் சிறுவர்களுக்குத் தெரியாவிட்டால், கைத்தொழில்களை அபிவிருத்திசெய்வதற்கேற்ற பெரும்பயிற்சியுள்ள சாஸ்திரிகள் ஏற்படமாட்டார்கள். சாஸ்திரங்களினால் ஜனங்களுக்கும் தேசத்திற்கும் என்னவிதமாய் நன்மையுண்டாகுமென்பதை விளக்கிக்காட்டக்கூடிய உபாத்தியாயர்கள் வேண்டும். சாஸ்திரப்பயிற்சி உண்டானால், இம்மையிலும் மறுமையிலும் சுகமுண்டு.

### பூர்ண சந்திரோதயம் 15 January 1915.

சற்குரு என்னும் பெயர்கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை, மைலாப்பூர் சென்ட் பீட்ஸ் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதராகிய, சே. சோமசுந்தரம் பிள்ளையவர்களால் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரஞ்செய்யப்பட்டு வருகிறது. உபாத்தியாயர்களுக்கு உபயோகமான அனேக வர்த்தமானங்களும் கல்வி முறைகளும் ஒவ்வொரு சஞ்சிகையிலும் வெளிவருகின்றன. வருட சாந்தா 1 - ரூபாய்த்தான். இது ஒவ்வொரு எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டிய பத்திரிகை. வேண்டுவோர் பத்திராதிபருக்காவது, மானேஜர், சற்குரு ஆபீஸ், 87, இராமசாமித்தெரு, சென்னை E. என்ற விலாசத்துக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# FOREIGN NEWS

# பிறதேச வர்த்தமானம்

**போர் முகமும் லண்டன் உபாத்திகளும்**
**The War and London Teachers**

மாக்ஷிமை தங்கிய நமது அரசரது பெருஞ்சேனையோடு சென்று போர்முகத்தில் உழைப்பதற்காக எண்ணிறந்த உபாத்திகள் லண்டன் நகரத்தில் போர்வீரராக மாறினார்கள். அதனால் பல ஆண்பிள்ளை உபாத்தியாயருடைய வேலைகள் காலியாக விருக்கின்றன. அவ் வேலைகளுக்கு ஆண்பிள்ளைப் பாடசாலைகளிலும் உபாத்தியாயினிகளை நியமித்து வருகிறார்கள்.

லண்டன் உபாத்திகளெல்லாம் போர்முகத்திற்குச்செல்ல முன்வந்ததற்குக் காரணம் இராஜவிசுவாசமே யன்றோ? அப்படிப்பட்ட குடிகளன்றோ குடிகள்? அப்படி அவர்கள் தங்கள் விசுவாசத்தினைச் செய்கையால் அறிவிப்பதைக்கேட்ட பிறகாவது நம்மவர் தம்மிடத்து நிலைத்திருக்கும் இராஜ விசுவாசத்தினைச் செய்கையால் காட்ட விரைந்து முன்வருவார்களென்று நம்புகிறோம்.

* * * * * *

**பிரான்ஸ் தேசத்துக் கல்வியின் நிலைமை**
**Education in France**

பிரான்ஸ் தேசத்துக்காகச் சண்டையிடும் சைந்நியத்தில் 25,000 துரைத்தன உபாத்திகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இந்த உபாத்திகளின் பட்டிகள் அவ்விடத்திய பரீக்ஷாதிகாரிகளிடம் இருக்கின்றனவாம். அவர்கள், சண்டையில் வெற்றி யடைபவர்கள், உண்மையாக உழைப்பவர்கள், போர்முகத்தில் காயப்படுகிறவர்கள் ஆகிய இவ்வகைப்பட்ட உபாத்திகளை யெல்லாம் குறிக்கின்றார்களாம். யுத்தத்திற்கு முன் நடந்துவந்த தன்மையைப்போலவே பள்ளிக்கூடத்து வேலைகளும் நடைபெற்று வருகின்றனவாம். போர்முகத்துக்குச் சென்ற உபாத்திகளுக்குப் பதிலாக, அவர்களுக்கு முன் அவ்வேலைகளிலிருந்த கிழ உபாத்திகள் மறுபடியும் நியமனம் பெற்றிருக்கிறார்களாம்.

* * * * *



**கேப் கலோனி யுத்தத்தின் பயன்**
**The Effects of War in Cape Colony**

கேப் கலோனி கல்வியிலாகா ஆபீஸ் உத்தியோகஸ்தர்களிற் பதின்மர் (பத்துப்பேர்) தங்களுடைய உத்தியோகத்தை விட்டு நீங்கிச் சண்டைக்காகச் சித்தமாகும் இராணுவப்படையிற் போய்ச் சேர்ந்தார்களாம். பத்துப்பேர் உத்தியோகத்தைவிட்டு விலகின அந்த ஆபீஸில் சற்றேறக்குறைய 40 பேர் தான் இருப்பார்களாம். அவர்களில் 10 பேர் இப்படி மாறுவது வியப்பல்லவா? அவ்வளவோடு நில்லாமல் அந்த இடத்தில் உபாத்திகளிற் பலரும் நகரக்காவற்படை (Citizen Defence Force) யிற் போய்க் கலந்தார்களாம். இவர்களல்லவோ உண்மையான இராஜ விசுவாசிகள்!

* * * * * *

**தந்த சுத்தி**
**Attention to the Teeth**

தந்தசுத்திசெய்வது நம்மவர்க்குக் காலைக்கடமைகளில் ஒன்றல்லவா? அதனைச் செய்யாமல் நாம் எந்தக் காரியத்தையாவது செய்யலாமா? எவருடனேனும் பேசலாமோ? தந்த சுத்தி செய்யாமல் ஒரு காரியத்தையுஞ் செய்யக்கூடாதென்றும் ஒருவருடனும் பேசக்கூடாதென்றும் பெரியோர் ஏற்படுத்திய கட்டளையின் நோக்கமாவது தந்த சுத்தியினை அவசியமாகக் காலையில் செய்யவேண்டும் என்பதல்லவா? தந்த சுத்தி செய்வதற்கு உகந்தபொருள்கள் இவையென்றும், விலக்கான பொருள்கள் இவையென்றும் விதித்திருக்கிறார்களல்லவா? "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்னும் பழமொழியும் உகந்த பொருள்களைக் குறித்துத் தானே எழுந்தது?

மண், சாம்பல், செங்கற்றூள், கரித்தூள் முதலியவை விலக்கப்பட்டதின் காரணம் அவைகளை உபயோகிப்பதால் பற்கள் தேயும் என்பதே. பல்லை விளக்குவதிலும் கிரமம் உண்டு. நடந்துகொண்டும், பேசிக்கொண்டும், படுத்துக்கொண்டும், சாய்ந்துகொண்டும் பல்விளக்கலாகாது; குக்குடாசனமாக (கோழியினிருப்பைப்போல) இருந்துகொண்டு பற்களைச் சுத்தஞ் செய்யல் வேண்டும். இவ்வாறு சொல்வதன்கருத்தும் அதிகநேரம் சளியும் எச்சிலும் ஒழுகும் கோலத்துடன் இருந்துகொண்டு பல்லினை விளக்கவொட்டாமற் றடுப்பதற்காகவே. குக்குடாசனமாகச் சிறிது நேரம் இருந்தாலும் கால் வலிக்கும்; வலியைநோக்கி விளக்கிக்கொண்டு எழமுந்துவர். நடந்துகொண்டு விளக்கலாம் என்னும் நியதி இருக்குமாயின் காலையில் அவ்வேலையை முடிக்காமல் வாயில் குச்சியினைவைத்துக்கொண்டு தெருத்தெருவாகத் திரியநேரிடும்.

பல்விளக்கியானதும் 16 முறை வாயில் ஜலங்கொண்டு கொப்புளிக்கவேண்டும் என்றது பற்களின் இடுக்குகளிலுள்ள அழுக்குகளைப் போக்கவேண்டும் என்னும் கருத்தோடு சொல்லவந்தது என்றறிக.

இவ்வாறு தந்த சுத்திக்காகப் பலநிபந்தனைகளை உண்டுபண்ணினதின் கருத்து இளைஞர்கள் தமது பற்களைச் செவ்வையாகப் பாதுகாத்துக்கொள்வதற்காக என்க. பற்கள் சேதப்படாமலிருந்தாற்றான் ஜீரணசக்தி நன்றாக அமையும். ஜீரணசக்தி நன்றாக விருந்தாற்றான் சரீரம் சுகமடையும். இவ்வளவுக்குங் காரணமாயிருக்கும் பற்களைச் செவ்வையாகப் பாதுகாக்கும்பொருட்டு அமெரிகர் தங்கள் வித்தியாசாலைச் சிறுவர்களுக்கு, "பல்விளக்குநாள்" என்று செப்டம்பர் மாதத்தில் ஒருநாளைக்குறித்து, அன்றையதினம் விடுமுறையுங் கொடுக்கின்றனர். இவ்வாறு செய்வதனோடு ஒவ்வொரு பிள்ளை கையிலும் ஒவ்வொரு துண்டுகடிதத்தினைக் கொடுக்கின்றனர். அக்கடிதத்தில் "என்னிடத்தில் ஒரு பற்குச்சி (Tooth brush) இருக்கிறது; அதனால் இன்றைய காலை தந்த சுத்தி செய்தேன்" என்று அச்சிடப்பெற்றிருக்கிறது. அவ்வாறு அச்சிடப்பெற்றிருக்கும் காகிதத்தில் சிறுவர்கள் கையொப்பமிட வேண்டும்.

* * * * * *

**புதிய பாட அட்டவணை**
**A New Syllabus**

ஆஸ்டிரேலியா கண்டத்து மாகாணங்களில் ஒன்றாகிய குயின்ஸ்லான்ட் மாகாணத்திய கல்வி யிலாகா அதிகாரிகள் புதிதாக ஒரு பாட அட்டவணையைப் பிரசுரித் திருக்கிறார்கள். அவ்வட்டவணை நான்கு நோக்கங்களை உத்தேசித்து எழுதப்பட்டது. அந்நோக்கங்கள் வியக்கத் தகுந்தனவாயிருக்கிற படியினாலே யாம் அவைகளை அடியிற்குறிக்கின்றாம் :—

முதலாவது — வேண்டிய இடங்களில் பாடங்களை யொன்றுக் கொன்று சம்பந்தப்படுத்திப் பட்டியில் அமைத்தல் ;

இரண்டாவது — போதிக்கப்படும் விஷயங்களைக் கிரகிக்கும் அளவிலேயே தம்புத்தியை நிறுத்தாது, முயற்சியினால் மேலும் மேலும் விஷயங்களைத்தாமே புதிதாய்த் தெரிந்துகொள்ளும்படி அத்திறமையையும் விருத்தி செய்தல் ;

மூன்றாவது — பாடசாலையில் தாம் கற்றுக்கொள்ளும் விஷயங்கள் உலக வியாபாரங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளென்று மாணவர் கண்டறியும்



பொருட்டு, அப்பட்டணத்திலோ கிராமத்திலோ நிகழ்வனவற்றையனுசரித்து இயற்கையிலே காணும் அலுவல்களுள் தம் பாடங்களும் ஒன்றெனத்தோன்ற விஷயத்தையோ போதனை முறையையோ தக்கவாறு மாற்றுதல்;

நான்காவது — பலவிஷயங்களைக் கற்பித்தலே முக்கியமான நோக்கமெனக் கொள்ளாது மாணவர்களின் தேக சுகத்தையும் ஞானவிருத்தியையும் நாடி ஆசாரம், நல்லொழுக்கம் முதலியன கற்பித்தல்.

நமது முன்னோர் தவம், ஒழுக்கம் முதலிய விச்சைகளெல்லாம் கற்கப்படும் பொருள்களென்று துணிந்து அவைகளுக்குக் 'கல்வி' என்று பெயரிட்டிருக்கின்றனர். அப்படி முன்னிருந்த பெரியோர்களாலேயே விரும்பப்பட்டும் பழகப்பட்டும் வந்த ஒழுக்கத்தினையும், தேகசுகத்தினை விருத்தி செய்யும் அப்பியாசங்களையும், இல்வாழ்க்கைக்கு ஏற்ற இயல்புகளையும் நம்மவர் இப்பொழுது மறந்துவருகின்றனர்.

மேலேகுறித்த நன்னோக்கங்களைக் கொண்ட அம்மாகாணத்துப் பாட அட்டவணையையும் நம் கிராமத்துப் பள்ளிகளின்பாட அட்டவணையையும், ஒத்து நோக்க அவ்வூர்ப்பாட அட்டவணையின் ஏற்றம் புலப்படுகின்ற தல்லவா? கல்வி கற்பிப்பதன் நோக்கம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாது. கல்வியினைக் கற்பிப்பதனால் பிள்ளைகள் அடையும் பயன் இன்னது, இவ்வளவினது, இன்ன தன்மையினது என்னும் விஷயங்கள் அமெரிக்கருக்கே மிகவதிகமாகத் தெரியும். அவர்களே அதனை ஆராயவும் விவகரிக்கவும் நன்றாகத் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். நமது எலிமென்டரி உபாத்தியாயர்களோ பாட வட்டவணையைப்பற்றி விவகரிக்கவும், ஆராயவும் சக்தியற்றவர்களா யிருப்பதனால் அவ்விஷயத்தினைப்பற்றி மற்றொருமுறை விவகரிப்போம்.

161995
-600 008.

# COMMON FAULTS IN METHOD
## போதனாமுறையில் நேருந் தவறுகளிற் சில

**உபாத்தியாயர் அனைத்தையுந் தாமே கற்பித்தல்** பிசகென்பது பலருடைய அபிப்பிராயம். அப்படி அபிப்பிராயப்படுவோர்க்கு அப்பிசகு நேரிடுங் காரணம் யாதென்று தெரியாது. பிசகு உண்டாவதற்குக் காரணம் இன்னது என்று அறிந்தோர் ஒரு சிலரே. ஆனபடியினால் காரணத்தைச் சற்றுக் கவனிப்பாம்.

கற்பித்தலானது புகட்டுவதும் கிரகிப்பதுமாகிய காரண காரியங்களை யுடையது. நாம் ஒரு விஷயத்தைக் கற்பித்தோமென்றால் அதை மாணவர்கள் கிரகித்துக்கொண்டார்கள், கற்பித்தலின் பயனாகிய கிரகிக்குந்தொழில் அங்கு நிகழ்ந்தது என்பது வெளிப்படை. கற்பிப்பதால் யாதொருகுறைவுங் கிடையாது. அப்படியிருக்கையில் ஒருவர் "அனைத்தையுந் தாமே கற்பிப்பதால்" குற்றம் உண்டாவது எப்படி? ஜர்மனிதேசத்தில் உபாத்தியாயர்கள் தாமே பலவிஷயங்களையும் மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறார்கள்.

இவர்கள் இப்படிப் பலவிஷயங்களைக் கற்பிப்பதனால் மாணவர்களுக்குப் பல சங்கதிகள் தெரியவருகின்றன. இத்தகைய ஞானம் பயனற்றதென்று சொல்வதற்கும் இடமில்லை. பயனுடைத் தென்றால் போதனாமுறைக்கு இழுக்குவருமே. ஆனபடியினால் கைக்கொள்ளவேண்டிய முறையை அடியிற் குறிப்பாம்.

ஜனவரி மாதத்திய சஞ்சிகையில் வினாவிடை ரூபமாகக் கற்பிக்கப்பட்ட பாடம் பயன்தருமென்று சொன்னோம். அதற்குக் காரணம் கற்பிப்பதும் கஷ்டமன்று. நாம் ஒரு கேள்விகேட்ட மாத்திரத்தில் மாணவர்கள் நாம் சொல்வதைக் கவனிக்கிறார்கள். அதனால் விஷயத்தை எளிதில் கிரகிக்கிறார்கள். மாணவர்கள் தாமே தமது கவனத்தைச் செலுத்துவாராயின் கேள்விகள் கேட்க அவசியமிராது. பெரிய காலேஜ்களில் பிரசங்கரூபமாகவன்றோ ஒவ்வொரு பாடமும் நடந்தேறுகின்றது? நமது மாணவர்கள் இளைஞரானபடியினால் அவர்கள் கவனத்தைக் கவரக்கேள்விகள் கேட்கிறோம். உபாத்தியாயர் கேள்விகள் கேளாமல் இளைஞர்களுக்குப் பல விஷயங்களையும் தாமே கற்பிப்பதால் அவர்கள் கவனசக்தி பாடத்தில் நிலைத்திராதென வுணர்ந்தே கற்றறிந்தோர் **"அனைத்தையுந் தாமேகற்பித்தல்"** தவறெனக் கொண்டிருக்கிறார்கள்.



இப்படி அதனைத் தவறெனக் கொள்ளுதற்கு வேறொரு காரணமும் உண்டு. அதுவருமாறு :— வயிரக்கல்லும், பளிங்குக் கல்லும் உருவத்திலும் நிறத்திலும் ஒத்திருந்தபோதிலும் குணத்திலும் விலையிலும் மாறுபட்டே தோன்றுமன்றோ? அத்தன்மையேபோல் பிறர்சொல்லக் கேட்டறிந்த விஷயமும் தாமே தம் சுயவுணர்வால் உழைத்தறிந்த விஷயமும் பயனளித்தலிலும் இன்பந்தருவதிலும் மாறுபாடுற்றே நிற்கும். இதன் உண்மையை யறிய விருப்பம் இருப்பின் அடியிற்கண்டபடி செய்க :—

1. இரண்டுபடி பால் கொள்ளக்கூடிய ஒரு செம்பைவாங்கி, அதைப்பார்த்த வண்ணமாக, "இதில் இரண்டுபடி ஊற்றலாம்" என்று முதலிற் சொல்லுக. பிறகு படியை எடுத்து நீரினை மொண்டு செம்பிலூற்றி அளவினைக் கண்டறியும். இரண்டு வித அறிவிற்கு முள்ள வித்தியாசத்தினை வர்ணியும்.

2. தமக்கு ஒருவிஷயந்தெரிய வேண்டிய அவசரம்நேரிட்டபோது, அதனைப் பிறரைக்கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும், பல புஸ்தகங்களைத்தாமே பார்த்து அறிந்து கொள்வதற்கு முள்ள வித்தியாசத்தினை அனுபவ பிரமாணமாய்க் கண்டறிந்து வர்ணியும்.

3. ஒரு பையலைப் புளியம் விதைகளை மாத்திரம் ஒவ்வொன்றாய், எண்ணச் சொல்லாமல், பல்வேறு பொருள்களை ஒரு நிமிஷநேரங்காட்டி, மறைத்து, பிறகு பல கூறிலுமுள்ள பொருள்களின் தொகையை உத்தேசக் கணக்காய்ச் சொல்லும்படி செய்து அதன் பின்பொருள்களைக் கொடுத்துச் சரியான தொகையைத் தாமே கண்டுபிடிக்கச் செய்வதனால் மாணவர்களுக்கு உண்டாகும் தீர்க்காலோசனையைக் கூடியவரையில் கவனித்த வண்ணமாய் வர்ணியும்.

இவைபோன்ற பரிசோதனைகளினால், ஒருவன்சொல்லக்கேட்டுத் தெரிந்து கொண்ட அறிவிற்கும் தாமே ஒருவாறு உழைத்துணர்ந்த அறிவிற்கு முள்ள வித்தியாசத்தினைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். அறிந்து கொள்வதனால் "அனைத்தையும் தாமே கற்பித்தலாகிய" குற்றம் தம்மை விட்டகலும். அகல அவர், சகல போதனாமுறைகளின் சாரத்தைப் பிழிந்தெடுத்த சாஸ்திரியைப் போன்று சிறந்து விளங்குவர்.

புதிய போதனா முறையென்பது இவ்வளவுதான்.

## THE HON. MR. G. K. GOKHALE

## கனம் மிஸ்டர் கோகலே

இந்தியாவுக்கு இதுவரையில் நேர்ந்திராத பரமதுக்கம் இப்பொழுது பிரஸ்தமா யிருக்கின்றது. இந்தியர்கள் ஒருமைப்பட்டு ராஜரிக விஷயத்தில் ஒரேநாட்டாராய் விளங்கவும், தேசாசாரங்களை ஒருவழிப்படுத்தி இந்தியர்கள் மேன்மையடைந்து இக்காலத்து நாகரிக தேசத்தார்களைப்போலப் பலவகைகளிலும் பெருமையும், கீர்த்தியும், சௌக்கியமும் வாய்ந்து அபிவிருத்தி யடையவும் வேண்டிய ஸாதனங்களையமைத்து இந்தியர்களுக் கெல்லாம் தலைவரெனப் புகழ்படைத்துத்தம் ஆயுள் வித்தம் முதலிய யாவையும் இந்தியாவின் க்ஷேமத்தின் பொருட்டே செலவழித்துவந்த கோபால கிருஷ்ண கோகலே என்னும் மஹான் பிப்ரவரி மாதம் 19 - ந் தேதி வெள்ளிக்கிழமை ராத்திரி சுமார் 10 - 30 மணிக்குப் பரகதியடைந்தா ரென்ற வர்த்தமானம் எட்டியவுடனே இந்தியர்க ளனைவரும் துக்கக் கடலில் ஆழ்ந்தி அயர்ந்தார்கள்.

அவருடைய ஜீவித சரித்திரத்தை நம்மவர்க ளெல்லாரும் நன்றாய்ப் படித்து அவரைப்போல அறிவுடையராக விளங்குவார்களாக.

எல்லா க்ஷேமத்திற்கும் மூலகாரணமாயுள்ளது கல்வியேயாதலின் இந்தியா முழுமையிலும் எழுதப்படிக்கத் தெரியாதவர் ஒருவரும் இருக்கக்கூடா தென்று எண்ணி துரைத்தனத்தார் எல்லாக் கிராமங்களிலு முள்ள சிறுவர்களுக்கும் எலிமெண்ட்ரி படிப்பு கட்டாயமாய்க் கொடுக்கவேண்டு மென்று சட்டம் செய்வதற்கு அவர் பிரயத்தனப்பட்டார். அந்தப் பிரயத்தனம் இப்பொழுதே பலிக்காவிட்டாலும் வெகுசீக்கிரத்தில் நற்பயன் தருமென்பதற்கு வேண்டிய சூசனைகள் அகப்படுகின்றன. இந்தியாவுக்கு அவர் செய்துள்ள பற்பல நன்மைகளுள் எலிமெண்ட்ரி படிப்பு பரவச்செய்வதற்காக அவர் பண்ணின பிரயத்தனங்களை மாத்திரமே இவ்விடத்தில் எடுத்துச்சொன்னோம்.



இந்தியாவின் க்ஷேமத்திற்கு உழைப்பதற்காக யோக்யமானவர்களைச்சேர்த்து இந்திய ஊழியக்காரர் சங்கம் (Servants of India society) என்றொன்று ஏற்படுத்தியிருக்கிறார். அந்தச் சங்கத்தவர்கள் பலவகைகளில் இந்தியாவின் நன்மைக்காக உழைத்து வருகிறார்கள்.

தென் ஆப்ரிகாவிலுள்ள இந்தியர்களின் நன்மைக்காக அவர் பாடுபட்டதை இந்தியர்கள் ஒருபோதும் மறவார்கள்.

## READING

## வாசகம்

சென்ற நவம்பர் மாதத்திய சற்குருவில் வெளிவந்த "வாசகம்" என்னும் விஷயத்தினைக்குறித்து நமது சந்தாநேயருள் ஒருவரான ம-௱-௱-ஸ்ரீ பரிமணப் பல்லவராயர் என்பவர் எழுதியனுப்பிய, அடியிற்குறித்துள்ள, ஆராய்ச்சி எமக்குப் பெரிதும் மகிழ்ச்சியினைத் தருகின்றது. அவர் எழுதிய ஆராய்ச்சியானது, இரண்டாம் முறையாக யாம் பின்னர் வெளியிட எண்ணியிருந்த விஷயங்களை ஒருவாறு உடனே வெளியிடும்படி தூண்டி நின்றது. அதனால் அவருடைய நல்லாராய்ச்சியை அடியிற்குறித்து அதன் கீழ் எமது புல்லாராய்ச்சியையும் வெளியிடுகின்றோம்.

ம-௱-௱-ஸ்ரீ, P. பரிமணப் பல்லவராயர் அவர்களுடைய ஆராய்ச்சி வருமாறு :—

"சகோதர ஆசிரியர்களே!

நமது சற்குரு பத்திராதிபர் 5 - ம் சஞ்சிகையின் 109 - ம் பக்கத்தில் எழுதிய வாசகமென்னும் வியாசத்தில் எமக்கோர் அபிப்பிராயந் தோன்றுகின்றது. அதாவது.—

வாசகம் கற்பிப்பது என்றால் வாசிக்கவேண்டிய முறையைக் கற்றுக்கொடுத்தலென்பது யாவர்க்கும் தெளிவுறத் தெரிந்ததே.

இவ்வாறே ஆசிரியர்கள் நடத்திவந்த போதிலும், போதனா முறைப் பாடசாலையில் புதிதாகப் பயின்றவர்கள் தொடர்முறைப்போதனையை அனுசரிக்கவேண்டி யிருக்கின்றது. அப்பாடசாலையில் போதனைமுறை கற்பித்த ஆசிரியர்கள், இப்பாடத்தை வாசித்துக்கொண்டே போனால் பிள்ளைகளுக்கு அதன் விஷயம் எப்படிப்புலப்படும்? அவன் விஷயத்தைக் கவனியாமலே, வாசிக்க வேண்டு மென்னும் நோக்கத்தோடு வாசிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தி வாசிக்க வேண்டிய விதத்தினை அனுசரித்து, ஒவ்வொரு பாராவாக வாசித்துக்காட்டி; ஒவ்வொரு பாராவாக வாசிக்கச்செய்து அதன் விஷயத்தை அவன் அறியுமாறு விளக்குதல் வேண்டுமென வற்புறுத்தி அம்முறையையே அனுஷ்டிக்கும்படி செய்கிறார்கள். ஆதலால் வாசிக்கவேண்டிய முறையைக் கற்றுக் கொடுப்பதை விட்டுவிடவில்லை. இதையும் அனுசரித்தே வருகின்றார்கள். தத்தம் பாடசாலையில் வாசகபாடத்தைக் கற்பிக்கும் உபாத்தியாய நண்பர்கள் இம்முறையை அனுஷ்டித்து வருவார்களென்று நம்புகிறேன். புதுமுறைப்படி வாசகத்தில் ஒரு பாடம் நடந்தால் அதேபாடத்தின் சம்பந்தமான விஷயங்களையே அன்று முழுதும் நடத்தும் மற்றப்பாடங்களுடன் சம்பந்தப்படுத்தல் வேண்டுமென, போதனாமுறைபயிலும் போது அவ்வாசிரியர்களும் நமது பாடசாலைகளில் இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்களும் வற்புறுத்துகிறார்க ளன்றோ? இது பிள்ளைகளுக் குண்டாக்கும் உற்சாகமே. ஒரேபாடத்தைக் கொண்டு மற்றப்பாடங்களையும் நடத்தினால், இந்த ஒருபாடத்தில் எவ்வளவு விஷயங்கள் அடங்கி யிருக்கின்றனவென்று ஆச்சரியமுற்று அவாவுறுகின்றார்களன்றோ நமது பிள்ளைகள்? நாம் கற்பிக்கும் பாடங்களை அவர்கள் அவாவுடன் கற்றுக்கொள்வதற்கே இத்தொடர்முறைப் போதனையை நடத்த வேண்டுமென்பது போதனாமுறை உபாத்தியாயர்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் முக்கிய நோக்கமாகும். நாம் பிள்ளைகளை அடித்தும் திட்டியும் உற்சாகமில்லாமலும் அதிகக்கஷ்டப்பட்டுக் கொண்டு போதிப்பதைவிட, அடிக்காமலும் உற்சாகத்தோடும் கஷ்டப்படுத்தாமலும் கற்பிக்க அவர்கள் கற்றுக்கொண்டால் நமக்கு எவ்வளவு நன்மை. மேன்மேலும் அவர்களுக்குப்பாடம் போதிக்க நமக்கும் அதிக அவாவுண்டாகுமன்றோ? வாசகபாடம் ஒவ்வொரு பாராவாய் வாசிக்கச்செய்து கேள்வி கேட்பதினால், வாசகபாடம் வஸ்துபாட (பொருள்பாடம்) மாக மாறுகின்றதென்னும்



நமது பத்திராதிபரின் அபிப்பிராயம் உண்மையா யிருக்கலாம். காரணம், பிள்ளைகளை வாசிக்கச்செய்து கேள்விகேட்கும் போது, விஷயங்களின் தன்மை முதலிய பொருட் பாட சம்பந்தமான கேள்விகள் கேட்பதே. வாசித்ததின் விஷயங்களைமட்டும் கேள்வி கேட்டு வருவித்தல் வேண்டும். பொருட்பாட சம்பந்தமான கேள்விகளை அப்பாடம் நடக்கும்போது இவ்வாசக சம்பந்தமாகக் கேட்க வேண்டும். அவ்வப்பாடங்கள் நடத்தும்போது இவ்வாசக பாடத்தை சம்பந்தப்படுத்தலே முறையாகும். வாசகபாடத்தை ஒவ்வொரு பாராவாக வாசித்துக்காட்டி, அதை வாசிக்கச்செய்து அதன் விஷயங்களைக் கேள்விகள் மூலமாக பிள்ளைகளிடமிருந்து வருவித்தல் என்னும் புதுமுறைப்படி நடத்துவதில், வாசகத்தை வாசிக்கவேண்டிய விதத்தினை முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டுவது வாசகத்தின் முக்கியநோக்கமாகும். வாசக பாடம் முழுதும் வாசித்தானபிறகு, அதைப்பற்றி கேள்விகள் கேட்பது, பழையபோதனா முறைபயின்றவர்கள் செய்து வந்தார்கள். அப்போது அர்த்த புஸ்தகம் வாங்கிக்கொடுத்து அதை மனப்பாடஞ் செய்வித்து, வாசகபாடத்தின் விஷயங்களை உணர்த்தி வந்தார்கள். மற்றப்பாடங்களையும் தம் மனம்போன வாறு நடத்திவந்தார்கள். இப்போதைய தொடர் முறைப் போதனை பிள்ளைகளின் உற்சாகத்திற்கும் இலகுவில் பாடங்களைப் படித்தற்கேயாம்.

இது எமது அபிப்பிராயமாகும். இதைக் கண்ணுறும் ஏனைய ஆசிரிய நண்பர்களினதும் நமது பத்திராதிபரினதும் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கின்றேன்.

P. பரிமணப் பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர்,
போர்டு கேர்ல்ஸ் ஸ்கூல்,
மகாதானபுரம்,
குளித்தலைதாலுகா.

## ஆராய்ச்சிக்கோர் ஆராய்ச்சி:—

நமது பரிமணப் பல்லவராயரவர்களுடைய 'ஆராய்ச்சி' யால், நாம் 'வாசகம்' என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப் புகுந்ததை அவர் அறிந்து கொண்டிருப்பதாக விளங்குகிறது. அதனோடு, யாம் வாசக பாடத்து அடங்கிய விஷயங்களில் ஞாபகத்தினைச் செலுத்தா திருக்கிறோம் என்று கண்டறிந்து, அவ்வாறு செலுத்தாதது தவறு என்று அபிப்பிராயப் படுவதாகவும் புலப்படுகின்றது.

நாம் எடுத்துக்கொண்ட விஷயமோ, செந்தமிழினை அள்ளிக்கேட்போர் செவிக்கு விருந்திடுவதுபோல வளம்பட வாசிக்கப்பழகும் விச்சையைக் குறித்ததேயன்றி வேறொன்றினைக்குறித்ததன்று. எம்மால் எடுத்துக்கொள்ளப்பட்ட, அந்த அரிய வித்தையினிடத்து நமது நண்பருக்கு அதிக ஊக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் அவ்வாசகத்தின் அருமையை ஒருவாறு எழுதி வெளியிடவந்த இந்தத் தறுவாயில் அப்பாடத்தின்மீது சிறவாய்ந்த அமெரிக்கருக்கிருக்கும் விருப்பினையும் அவர்கள் செய்யும் செயல்களையும் சுருக்கியேனுங் கூறுவது அவசிய மெனத் தோன்று கின்றது. அவ்விடத்தில் வாய் வேலைகளில் - பேசுந் தொழிலிலும் வாசிக்கும் முறையிலும் அதிகசிரத்தை கொண்டிருக்கிறார்கள். அவ்விடத்திய பாடசாலைகளில் வாசகபாடம் எப்படி நடக்கிறது என்று எண்ணுகிறீர்கள்? வாசகபாடம் நடக்கும் வகுப்பில் ஒருபையன் புத்தகத்தினைக் கையிலேந்தி வாசிப்பான், மற்றையோ ரெல்லாம் அவன் வாசிப்பதைக்கேட்டு ஆனந்திப்பார்கள். வாசிக்கும் ஒருவன் மாத்திரம் ஏன் புத்தகத்தினை ஏந்த வேண்டும், மற்றையோ ரெல்லாம் ஏன் புத்தகமின்றி யிருக்க வேண்டும்? நிற்க.

2. "போதனா முறை கற்பித்த ஆசிரியர்கள், இப்பாடத்தை வாசித்துக்கொண்டே போனால் பிள்ளைகளுக்கு அதன் விஷயம் எப்படிப் புலப்படும்?" என்பது நமது நண்பருடைய கேள்வி.

பாடத்து ளடங்கிய விஷயத்தின்மீது எமக்குக் கவனமும் உண்டு; விஷயத்தையும் பிள்ளைகளுக்கு எடுத்து உரைக்கின்



றோம்; பிள்ளைகளும் அவைகளை யுணர்கின்றார்கள். இவைகளெல்லாம் எப்பொழுது நடந்தேறு கின்றன வெனில் யாம் விஷயத்தைப் போதிக்கையில் தான். யாம் "வாசகத்தினை" க் கற்பிக்கையில் எம்முடைய முழுநோக்க மெல்லாம் அந்த வாசிப்பில் தானே, மற்றொன்றிலுங் கிடையாது. அதிலுள்ள சுகத்தை யனுபவிப்பதும், அனுபவிக்கக் கற்பிப்பதுமே எம்முடைய தொழில்; விஷயபோதனையின்மீது கவனத்தை நாட்டுவது எம்முடைய தொழிலன்று.

"ஒரேபாடத்தைக்கொண்டு மற்றப்பாடங்களையும் நடத்தினால் இந்த ஒரு பாடத்தில் எவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன வென்று ஆச்சரியமுற்று அவா வுறுகின்றார்களன்றோ?" என்கின்றார் நமது நண்பர்.

அவர் சொல்வதுபோல விஷயங்க ளடங்கியதும், விளக்கங்கள் வேண்டப்படுவது மாகிய வாசக புத்தகங்கள் வாசகத்திற்குரிய புத்தகங்கள் என்று சொல்லப்படா. அப்படிப்பட்டவைகளை யாம் வாசித்து மகிழ்ச்சியடையக் கருதோம். வாசித்து ஆனந்தித்தற்குரிய தருணத்தில் அகராதி தேடத்துணியோம். தேவாரத்தினைப் பண்ணோடு ஒருவர் பாடுகையில் அதைக்கேட்டு ஆனந்திப்போர் அப்பாடலுக்கு விருத்தி யுரைசெய்வதில் எண்ணங்கொள்ளுவரோ? கொள்ளார்.

ஐரோப்பிய பாடசாலைகளி லெல்லாம் வாசகபாடம் கற்பிக்கின்றார்கள். அப்பாடத்திற்கெனத் தனியே புத்தகங்களுண்டு. அவைகளுக்குப் பதவுரை முதலிய பலவுரைகள் வேண்டியதில்லை. அவைகளில் கடினபதம் என்பதே கிடையாது. விஷயத்தினை எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்தினை அப்புத்தகங்கள் உபாத்தியாயருக்குத் தருவதில்லை. அவ்வகுப்பிற் சேர்ந்தவைகள் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸ்காரருடைய ஆங்கில வாசகபுத்தகங்களும் உபாத்தியாயர் புத்தகங்களும். இவைகளை நமது நண்பர் பார்த்திருந் திருப்பாரே யாகில் அவைகள் எழுதப் பட்டதின் நோக்கம் இன்ன தென்பதனை அவர் அறிய இடமிருக்கும்.

பிள்ளைகள் ஆச்சரிய முறுவதற்கு இடந்தருவதும், உபாத்தியாயர் கேள்விகள் கேட்க இடங்கொடுப்பதுமான விஷயங்கள் பாட சம்பந்தமான விஷயங்களோ அல்லது வாசக சம்பந்தமான விஷயங்களோ? வாசக பாடத்தில் அனுபவிக்க வேண்டியது விஷயத்தையோ அல்லது ஆனந்தத்தையோ? வாசக பாடத்தை யனுபவிக்க உடம்பு முழுவதும் காதுகளன்றோ வேண்டியவை. இந்தச்சுகம் அனுபவிக்கும் முறையை யுணராமையினால் நமது நண்பர் ‘புதுமுறை’ ‘பழையமுறை’ என முறைகள் கூறிப் பழையமுறையையே உறுதியாகவும் பிடித்து நிற்கின்றார். இதுதான் அவர் செய்முறையின் விசேஷம்.

அவரை விடாது தொடர்ந்து நிற்கும் ‘தொடர்முறைப் போதனை’ யைப்பற்றி ஏதாவது சொல்லலாம் என்றாலோ அது இரண்டொரு பக்கத்திலாவது இரண்டொரு சஞ்சிகையிலாவது முடியக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை. ஆயினும் இரண்டொரு வார்த்தையிற் சுருக்கிக்கூறுவாம். நாம் மேல்வகுப்புகளை ஆளச் செல்லச்செல்ல நம்மைத் தொடர்போதனை என்னுந்தொடக்கு மெல்லமெல்ல விடவேண்டியதே. கீழ்வகுப்புகளுக்குத்தான் தொடர்முறைப்போதனை பெரிதும் வேண்டப்பட்டு நிற்கின்றது. நமது பல்லவராயர் அவர்கள் எழுதியனுப்பிய முறைப்படி (இடம் இன்மையால் இவ்விடத்தில் அது அச்சிடாது விடப்பட்டது) தொடர்முறைப்போதனை நான்காம் வகுப்பிற்கு அவசியமாமோ?

வாசகபாடம் நடத்துவது ஆனந்தத்தினை யனுபவிக்கும் பொருட்டு என்பதுதான் எமது அபிப்பிராயமே யல்லாது விஷயத்தின்மீதும், உரைநூல்களிலுள்ள குறிப்புகளின்மீதும் அறிவினைச் செலுத்தவேண்டுமென்பது எமது அபிப்பிராயமன்று. எமது அறிவு ஆனந்தத்தினை யனுபவிப்பதற்கு மாறாக அப்படி அவைகளின்மீது செல்லுமேயாகில் அது, விருந்துண்கையில் பதார்த்தங்களுடைய சுவைகளின்மீது செல்லவேண்டிய மனம் அப்படிச் சுவையை யனுபவியாது ஒருவகைப்பட்ட சுவையைத் தரும் புளியின்மீதும் அதனைத் தந்த மரத்தின்மீதும் அதிலிருந்த பேயின்மீதும், அது முயன்றுகொண்டுவந்து தந்த எள்ளின்மீதும் எண்ணெய்யின்மீதுஞ் சென்றால் எப்படி யிருக்குமோ அத்தன்மைபோன்றிருக்கும்.



நமது நண்பரால் பெரிதும் புகழ்ந்துரைக்கப்படும் தொடர் முறைப் போதனையினாலன்றோ நமது எலிமென்டரி பள்ளிகளில் வாசகபாடம் வெகுசிறிது நடத்தப் படுகின்றது? அதனாற்றானே நான்காம் வகுப்புச் சிறுவர்களிடத்துங்கூட தமிழ்மணம் அதிகமாகப் பரிமளிக்கா திருக்கின்றது? சாஸ்திரம், விவசாயம், தாவரம் முதலியவைகளைத் தம்மிடம் பொருந்தப்பெறாத இனிய செந்தமிழ்ப் புத்தகங்களையும், எளிய செந்தமிழ் நடைப் புத்தகங்களையும் எண்ணிக்கை யில்லாமல் வாங்கி நமது பிள்ளைகள் வாசிக்க வேண்டு மென்பதே எமது கோரிக்கை.

சமாசாரப் பத்திரிகை வாசிக்கையில் ஒவ்வொரு வாக்கியத்திற்குப் பின்னும் கடின பதங்களுக்குப் பொருளறிய அகராதியைப் பிரித்துத்தேட விரும்புகிறீரோ என்றும் கடின பதங்களுக்குப் பொருளென்ன என்று நும் மனத்தொடு உசாவுகின்றீரோ என்றும் நமது நண்பரைக் கேட்போமாகில் அவர், அப்படிச் செய்யும் வழக்கம் இல்லையென்று திட்டமாகச் சொல்வாரல்லவா? அப்படித்தான் ஐயா, வாசகபாடம் நடத்துகையிலும் கேள்விகள் கேட்கலாகாது என்று சொன்னால் அவர் மகிழாமலும் அதனைக் கொள்ளாமலும் போவாரோ?

பிரைமரி கல்விக்குரிய விஷயங்கள் சந்தேகம் விபரீதம் அற வெளிவர வேண்டுமென்பது எமது கருத்தாதலால், மேலே குறித்துள்ள குறிப்புகளைப்பற்றி அறிவிற்சிறந்த பெரியோர்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களைத் தவறாமல் எழுதி யனுப்பும்படி மிகவும் வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

## LIEUTENANT STONE

## லெப்டினண்ட் ஸ்டோன்

லெப்டினண்ட் ஸ்டோன் என்பவர் நமது ராஜதானியில் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டராய் இருக்கும் கனம் மிஸ்டர் ஜே. எச். ஸ்டோன் என்பவருடைய மூத்த குமாரர். இவருக்கு வயது 27; இவர்தீரம் மிகுந்தவர். இப்பொழுது ஐரோப்பாக் கண்டத்தில் நடந்துவரும் பிரமாதமான யுத்தத்தில் ஒருபடையில் லெப்டினண்டாக வெகுவல்லமையுடன் போர்செய்துவந்தார். சென்ற மாதத்தில் அவர் வீரசொர்க்கம் எய்தினாரென்றும் வர்த்தமானம் பிப்ரவரிமாதம் 25-ஆம் தேதி ஹிந்து பத்திரிகையினால் நமக்குத் தெரியவந்தது. தேசாபிமானமும் தீரமும் மிகுந்த ராஜ்யத்தின் க்ஷேமத்திற்காகச் சத்துருக்களுடன் போர்செய்து அவர் கீர்த்தியுடன் நற்கதி அடைந்தாரெனினும், மூத்த குமாரனை இழந்த பெற்றோர்களுக்கும் நண்பர்களான மற்றோர்களுக்கும் இது மிகவும் வியசனகரமான சங்கதியாய் இருக்கின்றது. புத்தர சோகமென்பது தீராத்துயரம்; நெருப்பு இல்லாமலே தேகத்தை எரிக்கக்கூடிய தன்மையுடையது. இப்படிப்பட்ட துக்க சமயத்தில் நமது கனம் ஜே. எச். ஸ்டோன் அவர்களுக்குக் கடவுள் இரங்கி அவருக்குத் தேறுதல் அளிப்பாராக. இவருடைய இரண்டாங் குமாரர் அங்கிலப்படையில் லாயல் எஞ்சினீராக வேலைசெய்து வருகின்றார். அந்தக் குடும்பத்தவர்களுக்கு நேர்ந்த இந்தப்பெரிய துக்கத்திற்கு நாம் பரிதபித்து எவ்வளவு உபசாரவார்த்தைகள் சொன்னபோதிலும் அவர்களுடைய மனம் ஆறுமோ?

OFFICE OF THE REGIS... 10 APR 1915 MADRAS

ஸ்ரீ

உபாத்தியாயர்கட்கேனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| தொகுதி—க | 1915ஞு ஏப்ரில்மீ | பகுதி—கo |
|---|---|---|

## NOTES OF THE MONTH

## மாதாந்தரக் குறிப்புகள்

**சென்னை இழிஜனர் சங்கம்**
**The depressed classes mission society, Madras**

சென்னை ஆண்டர்ஸன் மண்டபத்தில் 1914ஞு டிசம்பர்மீ 31உ யில் இச்சங்கத்தின் நான்காம் வருஷோற்சவம் நடந்தேறப்பெற்றது. அப்பொழுது ஜனங்கள் திரள் திரளாகத் திரண்டு வந்தனர். கனந்தங்கிய அபர்ணர் துரையாகிய பெண்ட்லண்ட் பிரபு அவர்கள் தம் ஆதரவினைக்காட்ட அக்கிராசனம் வகித்ததோடு, சர் நாராயண சந்திரவர்க்கர் இந்தத் தாழ்குலத்தவர்க்காகச் செய்துகொண்ட மனு மிகவும் பொருத்தமானதென்றும் எடுத்துரைத்தார். எல்லா இந்திய மிஷனுக்குந் தலைவரான

சர் நாராயணரவர்கள் தீண்டாதவர்களுடைய நிலைமை முழுதும் மாறுதல் அடையவேண்டுமென வேண்டினார். அரங்கம்மாளவர்கள் திருவருட் பேற்றினைப்பெற்ற திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்) அவ்வகுப்பினைச் சேர்ந்தவரென்றும் அவர் எல்லோராலும் கொண்டாடப் படுகிறாரென்றும் எடுத்துரைத்தார்கள். கிராம பஜனை சன்மார்க்க விருத்தியை நாடுதலே இவ்வகுப்பாரை உயர் பதவியில் நாட்டுதலாகுமெனவும் சர் நாராயணரவர்கள் குறிப்பிட்டார்போலும். இதற்கு நமது டிபார்ட்மெண்டாருடைய உதவி சிறிது அவசியமே. தேவாரம், திருப்புகழ் முதலியவற்றைப் பண்ணுடன் பாடுஞ்சக்தியும் முக்கியமான ராகங்களில் ஞானமும் எப்பொழுது உண்டாகுமென்றும், இப்பொழுது டிரெயினிங் பாடசாலைகளிலுள்ள கிலுங்குகள் எப்பொழுது அகற்றப் படுமென்றும் யாங்கள் அந்த நல்ல நாட்களை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கிறோம்.

* * * * * *

இச்சென்னைச் சங்கமானது இரண்டு பகற் பள்ளிகளையும் மூன்று இராப்பள்ளிகளையும் வைத்து ஆதரிக்கின்றது. அப்பள்ளிகளில் வாசிப்பவர்களின் சங்கியை 204 என்று கணிக்கப்படுகிறது. வியாசர்பாடி பகற் பாடசாலையின் சங்கியை 80 க்குக் குறையாமலும் 95 க்கு மேற்படாமலும் இருக்கிறதாம். மாணவர்களில் 100 க்குப் பத்துவீதம் மேல்வகுப்புப் பிள்ளைகளும் அங்கு உண்டு என்று தெரியவருகிறது. உபாத்திமைத் தொழிலில் பயிற்சி பெறும்பொருட்டு அனுப்பப்பட்ட அறுவர்களில் மூவர் மாத்திரம் உபாத்திமை சர்டிபிகேட் பிரதமபரீக்ஷையில் இப்பொழுது தேறியுள்ளார். பிரமானந்த சுவாமிகள் ஜனங்களைக் கண்டு அவர்களுடைய சுகத்திற்கு ஏதுவாகிய பலவிஷயங்களைத் தாராளமாகப் பேசி வருகிறார். இச் சங்கமானது சிறுவர்களைத் தமது பள்ளிகளில் பழக்குவித்துச் சமர்த்தர்களாக்குகின்றது. அவர்கள் புலவிடங்களுக்குஞ்சென்று கல்விச்சாலைகளை ஏற்படுத்தித் தமது கடமையை நிறைவேற்றுவார்கள் போலும். இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும், கனந்தங்கிய நியாயாதிபதியுமாகிய சர் - சங்கர



நாயரவர்கள் இச் சங்கத்தாருடைய வேலை திருப்திகரமாயிருக்கிறதென்று கூறினார். அதனோடு சங்கத்திற்கு நிதியும் அவசியமாக வேண்டியிருக்கிறதென்றுஞ் சொன்னார்.

* * * * * *

யுக்த பாகமான கிராண்ட்
Proportionate grants

பிளேக் முதலிய விலக்கற்கரிய தடைகளால் பள்ளிக்கூடம் மூடப் பெறுமாயின், மூடப்பெற்ற பள்ளிக்கூடத்திற்கு முழுகிராண்டேனும் அல்லது ஒரு பாகமேனும் ஆலோசனைச் சங்கத்தின் (conference) அபிப்பிராயத்தின் பேரில் அளிக்கப்படுமாம். அவ்வாறு அளிக்கப்படுகையிலும் கிராம உத்தியோகஸ்தர்களுடைய ரிபோர்ட்டும் சூபர்வைஸர்களுடைய ரிபோர்ட்டும் அம் மூடுகையைப்பற்றி அவசியமாக விரும்பப்படும் போலும்.

* * * * * *

பின்னும் பாடக்கிரமம்
The curriculum again!

எலிமென்டரி கல்வியை விருத்தி செய்யவும் அவ்விருத்திக்குக் காரணமான எலிமென்டரி பாடக்கிரமத்தை மிகுந்த பழக்கத்திற்குக் கொண்டுவரவும் இந்தியா முழுதும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவ்விஷயத்தைப்பற்றி பற்பல மாகாணத்தார் கொள்ளும் நோக்கங்களும் அபிப்பிராயங்களும் நமக்குச் சந்தோஷத்தை விளைவிப்பனவாயிருக்கின்றன. பஞ்சாப் மாகாணத்தில் "குறுகிய பள்ளி நேரமே" பாடக்கிரமத்தை அனுபவத்திற்குக் கொண்டு வருதற்குப் பெருந்துணையாயிருப்பதாக அவ்விடத்தார் கருதுகிறார்கள். அப்படி அவர்கள் கருதுவது சரியென்றே சொல்லலாம். பஞ்சமர் பாடசாலைகளுக்கும் வேறு சில பாடசாலைகளுக்கும் பள்ளி நேரம் குறுகியதாக விருந்தால் நற்பயன் அளிக்கும் என்று நாமும் அடிக்கடி கருதுகிறோம். சொற்ப நேரத்தினையுடைய பாடசாலைகளில் தமது சிறுவர்கள் படித்துச் சொற்பகாலத்திற்குள் படிக்கவும் எழுதவும் கற்றுணர்ந்தார்கள் என்பதைப் பெற்றோர் அறிந்

தால், அவர்கள் தாம் அறிந்த பின்னுங்கூடத் தமது பிள்ளைகளை மேன் மேலும் கல்வியிற் பழக்காமல் ஆடுமாடு மேய்ப்பதிற் பழக்கு வார்களோ? ஆனபடியினால் நாம் இடத்திற்குத் தகுந்தபடி ஏன் நமது பாடக்கிரமத்தைச் சிறிது மாற்றிக்கொள்ளலாகாது?

* * * * * *

**பெண் கல்வி Female Education**

சரண்ணிய புரத்தில் (Sahranpur) நடந்த மங்கை சரத சாதனத்தின் (Maung Sarada Sadan) வருஷோற்சவத்தில் குமாரி நிர்மோகினி போஸ் (Kumari Nirmohini Bose) அம்மையார் இந்தியாவில் பெண்கல்வி யபிவிருத்தியடைவதற்கு நான்கு விஷயங்கள் முக்கியமானவை என்று எடுத்துரைத்தார்கள். அவை வருமாறு:—

(1) முதலாவது பெண்கள் புருஷர் மத்தியில் கலக்கப்படாதென்றிருக்கும் 'கோஷா' அல்லது 'பர்டா' முறையை கூடுமானவளவு நீக்குதல்;

(2) பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாத பருவமடைந்த கன்னிகைகள் வீட்டிற்குச்சென்று கல்வி கற்பித்தற்கு உபாத்தியாயினிகளை (Governess) நியமித்தல் இரண்டாவது காரியம்;

(3) படித்திருக்கும் பெரிய பெண்களும் ஸ்திரிகளும் அக்கம் பக்கங்களிலுள்ள படிக்காத சிறுமிகளை யெல்லாம் ஒன்றுகூட்டி இனிமையாகச் சிறிது நேரம் போதிக்கக் கிரகபாடசாலை (Home Schools) அமைப்பது மூன்றாவது விஷயம்;

(4) ஒவ்வொரு ஜில்லாக்களிலும் கைம்பெண்கள் இல்லம் (Widows' Home) ஏற்படுத்தி, அப்பெண்களைக் கல்வியின் அபிவிருத்திக் குழைக்கப் பழக்குதல்.

இந்த நான்கினையும் எடுத்துரைத்துவிட்டு முடிவாய் பெண்களைச் சிறுவயதில் விவாகஞ்செய்து கொடாமல் சற்றுவயது அடைந்தபிறகே மணஞ் செய்துகொடுத்தல் தக்க தென்றும், அப்படிச் செய்தாற்றான் அவர்கள் தமக்குக் கலியாணத்திற்கு முன்



கிடைத்துள்ள சொற்பகாலத்திலாவது ஏதாவது தகுந்த விஷயங்களைத் தக்கபடி யறிய இடமுண்டென்றும் எடுத்துரைத்தார்கள்.

* * * * * *

**பம்பாயில் தாழ்ந்த ஜாதியாருக்குப்புஸ்தக சாலைகள் Library for the Depressed Classes**

பம்பாயில் Social Service League என்னும் பரோபகார சங்கத்தார், அதிகப் படிப்பில்லாத தாழ்ந்த ஜாதியார்களின் பிரயோஜனத்துக்காகச் சில புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி, அதிலுள்ள புஸ்தகங்களை அவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுத்து, அவர்களைப் படிக்கும்படி செய்து, அவர்கள் படித்தானதின் பேரில், அதிற் கண்ட விஷயங்கள் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் பொருட்டு, அந்த ஸங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள், நேரில் அந்த விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் செய்வதுந் தவிர, Magic Lantern என்னும் புகைப்படக் காட்சி மூலமாய் அவர்களுக்குக் காட்டியும், கல்வியைச் சிறகச் சிறகப் புகட்டுகிறார்களாம்.

* * * * * *

**பரோடாவில் சுகாதாரப் பொருட் காட்சிசாலை Central Health Museum, Baroda**

பரோடா மஹாராஜா அவர்கள் தன்னுடைய பிரஜைகள் எல்லாவிதத்திலும் மேன்மேலும் அபிவிருத்தியடையும் பொருட்டு, ஏராளமான பணச்செலவு செய்து, தன்னுடைய ராஜ்ஜியத்தில் அநேக சீர்திருத்தங்களைச்செய்து வருகிறார்களென்பது அனைவரும் அறிந்ததொரு விஷயமே. அவர் இப்போது தன் ராஜ்ஜியத்திலுள்ள குடிகள் தீர்க்காயுளையும் ஆரோக்கியத்தையும் சௌக்கியத்தையும் பெறுவதற்குச் சாதனமான சுகாதாரவிதிகளை அவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய அவசியமான புஸ்தகங்களையும் உபகரணங்களையும் கருவிகளையும் அமைத்து பரோடா பட்டணத்தில் Central Health Museum என்ற ஒருபொருட் காட்சிச்சாலை கட்டி முடித்திருக்கிறார்களாம்.

* * * * * *

**முடிவுபரீக்ஷை**
**Final Examination**

இப்பரீக்ஷைக்குப் போகவேண்டியவர்கள் பழைய ரூல் பிரகாரம் ஐரோப்பிய ஸ்கூல்களையும் டிரேனிங் ஸ்கூல்களையும் தணிக்கை செய்யும் இனிஸ்பெக்டருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளாமல், தத்தமக்குரிய சர்கில் இனிஸ்பேக்டருக்காவது இனிஸ்பெக்டிரஸுக்காவது நேரே மனுசெய்துகொள்ளல்வேண்டும். இப்படிச் செய்யாமற்போனால் வீண்காலதாமதம் உண்டாகும்.

*　　*　　*　　*　　*　　*

**உபாத்திமைச் சங்கம் - திருப் பெருந்துறை**
**Teachers' Association Perundurai**

1915ஹு பிப்ரவரிமீ 3உ பெருந்துறை போர்ட் எலிமென்டரி பாடசாலை 3-வது உதவி உபாத்தியாயராகிய S. N. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் எலிமென்டரி பாடசாலைகளில் 'எண்வேலை' (Number work) போதிக்கும் விதத்தின் சில முக்கிய அம்சங்களைப் பற்றி உபந்நியாசஞ் செய்தார். மாணவர்களுக்கேற்ற கணக்குகளெல்லாம் சாதாரணமாய் எங்கும் கிடைக்கும்படியான பொருள்களைப் பற்றியதாகவும் லோக வியாபாரத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியதாகவுமே இருத்தல்வேண்டும்; முதல் முதல் வீட்டிலுள்ள பொருள்களைக்கொண்டு கணக்குகளைச் சுலபமாகப் போதிக்கலாம்; சிறுவர்களுக்கு எண்ணுவதில் அதிகப்பிரியம் இருப்பதால் சில பாடங்களை அதிகச் சிரமம் இல்லாமலே கற்றுக் கொடுக்கலாம் என்று ஐயர் சொன்ன விஷயம் மெச்சத்தகுந்ததே. ஸ்டாம்ப் வாங்குதல், நிறை, நாணயம், க்ஷேத்திர கணிதம், இராஜாங்கமுறை முதலிய விஷயங்களைக் கணக்கின் மூலமாகத் தொடர்முறைப் போதனையால் கற்பிக்க இடமுண்டு என்றும் ஐயர் குறிப்பிட்டார்.

*　　*　　*　　*　　*　　*

# காதலர் சோதனை

## அல்லது

## மரித்தோர் பிழைத்தல்

## "THE TEMPEST"

நடு ஸமுத்திரத்திலே ஒரு தீவில் ப்ராஸ்பரோ என்னுமொரு வயோதிகரும் அவருடைய ஏகபுத்திரியாகிய மிராண்டா என்னும் அழகிற்சிறந்த ஒரு யௌவன ஸ்த்ரீயுமாகிய இவ்விருவருமே நெடுங்காலமாய் வசித்துவந்தனர். அம்மாது கேவலம் ஒரு சிறு குழந்தையாயிருக்கும்போதே அத்தீவிற்கு வந்துவிட்டதால், தன்னுடைய பிதாவின் வதனத்தையொழிய வேறெந்த மானிட உருவத்தையும் கண்டிருந்ததாக அவளுக்கு ஞாபகமில்லை.

கற்பாறையுள் குடையப்பட்டிருந்த ஒரு குகையே அவர்களுடைய வாஸஸ்தலம். அக்குகை பல அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தது; அவற்றிலொன்றை ப்ராஸ்பரோ தன்னுடைய வித்யாஸ்தலமாக உபயோகித்துவந்தார். அக்காலத்தில் கற்றோர்களும் பண்டிதர்களும் அதிகமாய் அப்யஸித்துவந்த மாந்த்ரிகக் கல்வியைப்பற்றிய புஸ்தகங்களிற்சில அவ்வறையில் ஒழுங்காய் அடுக்கப்பட்டிருந்தன. இந்த மாந்த்ரிக வித்தை அவருக்கு அதிக உபயோகமாயிருந்தது. அவர் அத்தீவிற்கு வருவதற்குச்சில ஆண்டுகள் முன்னர் அங்கே வசித்திருந்து இறந்துபோன ஸிகோராக்ஸ் என்னும் சூன்யக்காரி அத்தீவிற்குச் சூன்யமிட்டிருந்ததால் ப்ராஸ்பரோ அவ்விடம் வந்தவுடன், அக்கொடிய சூன்யக்காரியின் கோரக் கட்டளைகளுக்குட்படாததற்காக அவளால் மரப்பொந்துகளிலும் மரத்தின் இடுக்குகளிலும் சிறைசெய்யப்பட்டிருந்த நற்குணமுடைய பேய்கள் பலவற்றை அவர் தன்னுடைய மாந்த்ரிகசக்தியால் விடுதலை செய்தனர். அதுமுதற்கொண்டு அவ்விடுதலைப்பேய்கள் ப்ராஸ்பரோவுக்குக் கீழ்ப்படிந்து அவர்சொற்படி நடந்துவந்தன. அவைகளுள் பிரதானமானது ஏரியல் என்னும் ஒரு விசித்ரப்பேயே. இந்த ஏரியல் என்னும் பேயினிடம் அடிக்கடி தன்னுடைய சத்ரு ஸிகோராக்ஸ் சூன்யக்காரியின் திவ்ய புத்ரனாகிய காலிபன் என்னும் ஒரு கோரஜந்துவைச் சித்ரஹிம்ஸை செய்து ஆனந்தமடையும் துர்க்குணம் ஒன்றைத்தவிர வேறு யாதொரு விதமான துர்க்குணமும் கிடையாது.

ப்ராஸ்பரோ அத்தீவிற்கு வந்தபோது குரங்கைவிட அதிக குரூபமாயிருந்த இந்த காலிபன் அவ்விடம் திரிந்துகொண்டிருந்தது. அவர் அதன் மீது பரிதாபங்கொண்டு அதற்குப்பேசக் கற்றுக்கொடுத்தார்; பலவிதத்திலும் அதைச் சீர்திருத்த முயன்றார். எவ்வளவுதான் சிரமப்பட்டபோதிலும், ஸிகோராக்ஸின் குணங்கள் எங்கேபோகும்? பால்வார்த்து வளர்த்தாலும்

வேம்புதன் கைப்பு குன்றுமா? காலிபன் தன்னுடைய துர்நடத்தைகளை விட்டபாடில்லை. ப்ராஸ்பரோ அதனை வழிக்குக் கொண்டுவர எடுத்துக் கொண்ட முயற்சிகளெல்லாம் ஆற்றில் கரைத்த புளியாய்விட்டது. இவ்வாறு தன் பிரயத்தனங்களெல்லாம் வீணானதுகண்டு வருத்தமுற்றும் ப்ராஸ்பரோ காலிபனைக் கைவிட்டுவிடவில்லை. தன்னாலானமட்டும் பின்னும் அதிகமாய்க் கஷ்டப்பட்டார். முதல்கோணல் முற்றும் கோணல்; ப்ரோஸ்பரோ தன் மண்டையை எவ்வளவுதான் உடைத்துக்கொண்டாலும், காலிபன் மாத்ரம் பழைய கந்தன் பழைய கந்தனே என்றிருந்தது. ஸிகோரக்ஸை அன்னையாகக்கொண்ட துரதிர்ஷ்டம் அதனை முற்றிலும் தொடர்ந்துவந்தது. அதனுடைய குணத்தை மாற்றமுயல்வது நாயின் வாலைக் குணக்கெடுப்பதையொக்கும் எனத் தெளிந்து ப்ராஸ்பரோ அதனைத்தன் அடிமையாக்கிக் கொண்டார். காட்டில் விறகு வெட்டுவது, அதனை வீடுகொண்டுவந்து சேர்ப்பது, கிணறுகளிலிருந்து ஜலம் தூக்குவது முதலான கஷ்டவேலைகளைச் செய்துவருதல் அதனுடைய தொழிலாயிற்று. அதுசெய்யும் தொழிலை மேற்பார்வை பார்க்க ஏரியல் அதற்கு எஜமானனாக ஏற்பட்டது.

காலிபன் வேலைசெய்யாமல் சோம்பேறித்தனமாய் உட்கார்ந்திருக்கும் போது, ப்ராஸ்பரோ ஒருவருக்குத்தவிர இதரர்களுக்குப்புலப்படாத ஏரியல் மெள்ள அதன்பின்னால் வந்து அதனைப்பலமாய்க் கிள்ளிவிடும்; சிலவேளை சேற்றில் உருட்டித்தள்ளிவிடும்; இன்னும் சில ஸமயங்களில் குரங்குருபங்கொண்டு அதன் எதிரில்நின்று அதை ஏளனஞ்செய்யும்; சிறிதுநேரத்திற்கெல்லாம் முள்ளம்பன்றி வேஷங்கொண்டு காலிபன் செல்லும்வழியில் முட்களை விரித்துக்கொண்டு அதன் கால்களைக் குத்தி ரத்தமயமாக்கிவிடும். ப்ராஸ்பரோ இட்ட கட்டளைகளைக் காலிபன் செய்துமுடிக்காமலிருக்கும் போதெல்லாம், ஏரியல் இவ்விதமாய்ப் பல்வேறு வகையாய்ச் சித்ரஹிம்ஸை செய்து அதனைப் படாதபாடும் படுத்திவைக்கும்.

இத்தகைய அரியசக்தியுள்ள அநேக பேய்களைத் தன் வசப்படுத்திக் கொண்டிருக்கும் ப்ராஸ்பரோவுக்கு நடந்தேறாத காரியமும் உண்டோ? அவர் நினைத்தமாத்ரத்தில் ப்ரசண்டமாருதத்தை உண்டுபண்ணிவிடுவார். இல்லாவிட்டால் ஒரு பெரும் புயற்காற்றைக் கிளப்பி ஸமுத்ரஜலத்தைத் ததத்தளிக்கச் செய்வார். அவர் மனதில் நினைத்துக் கட்டளையிடவேண்டியதுதான் ஸரி; அக்காரியங்கள் அத்தருணமே நடைபெற்றுவிடும். இப்பேர்ப்பட்ட அபார சக்தியையுடைய ப்ராஸ்பரோ தன்னுடைய பேய்களைக்கொண்டு ஸமுத்ரத்தில் ஒருபெரிய புயற்காற்றை உண்டுபண்ணிவிட்டார். அப்புயற்காற்றில் அடிபட்டு அலைபட்டு க்ஷணத்துக்குக்ஷணம் தண்ணீரில்மூழ்கி ஸமுத்ரபகவானுக்குப் இரையாய் விடும்போலத்தோற்றிய ஒரு கப்பலைத் தன் மகளுக்குக் காண்பித்து, அக்கப்பல் நிறைய நம்மைப்போன்ற மனிதர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார் ப்ராஸ்பரோ. அதைக்கேட்டு மனமுருகி மிராண்டா, "அப்பா தங்களுடைய அரிய ஸாமர்த்தியத்தால் தாங்களே



இப்புயற்காற்றை உண்டாக்கியிருந்தால், அக்கப்பலிலுள்ளவர்கள் படும் அவஸ்தையைக்கண்டு தங்கள் மனம் சற்றும் இரங்கவில்லையா? ஐயோ அக்கப்பல் அந்தப்பாறையண்டை வந்துவிட்டதே! அதன்மேல் மோதி உடைந்துவிடாதா? அத்தனை மனிதர்களும் துர்மரணம் அடைந்து விடுவார்களே! எனக்கு மாத்திரம் சக்தியிருந்தால் இவ்வாறு அவ்வழகிய கப்பலும் அதிலுள்ள ஜனங்களும் சின்னாபின்னமாவதைக் காண்பதற்குமுன் இந்த ஸமுத்ரத்தையே பாதாளத்தில் ஆழ்த்திவிடுவேன்" என்று கூறினாள்.

"குழந்தாய், பயப்படாதே; ஒருவருக்கும் ஒருதீங்கும் ஸம்பவிக்காது. அதற்கெல்லாம் நான் ஏற்பாடுசெய்திருக்கிறேன். கப்பலிலுள்ளவர்களில் ஒருவர்கூட இறக்கமாட்டார்கள். கண்மணீ, இவ்வளவுசிரமமும் உன்னைப்பற்றித்தான் எடுத்துக்கொண்டேன். நீ இன்னாள் என்பதாவது, உனது ஜன்மபூமி எது என்றாவது, அல்லது எவ்விடமிருந்து நீ இத்தீவிற்கு வந்தனையென்றாவது ஒன்றும் உனக்குத் தெரியாது. நான் உனது தந்தை; நாமிருவரும் இந்தக் குகையில் நெடுநாளாய் வசித்திவருகிறோம் என்னும் இந்த இரண்டு விஷயந்தவிர வேறு உனது பூர்வோத்ரம் ஒன்றும் உனக்குத் தெரியாது. நிர்மானுஷ்யமான இத்தீவிற்குவருமுன் நாம் எவ்விடத்திலிருந்தோம் என்பதாவது அல்லது அக்காலத்திய ஸம்பவங்கள் ஏதாவது உனக்கு நினைவிருக்கிறதா? அப்போது நீ மூன்று வயதுப் பூர்த்தியாகாத - பால்மணம் மாறாத இளங்குழந்தை. அப்போதைய விஷயங்கள் ஒன்றும் உன்ஞாபகத்திலிராது" என்றார் ப்ராஸ்பரோ.

"அப்படிக்கில்லை. ஏதோ இரண்டொரு விஷயங்கள் எனக்கு ஞாபகமிருக்கிறது?" என்றாள் மிராண்டா.

"என்ன விஷயங்கள்? நீ விளையாடிக்கொண்டிருந்த வீட்டின் நினைவா, அல்லது எந்த மனிதர்களைப் பற்றியாவதா? ஞாபக மிருக்கும் வரையில் சொல் பார்ப்போம்"

"ஆனால் அந்த இரண்டொரு விஷயங்களும் எனக்குக் கனவுகண்டது போலத் தானிருக்கிறது, நிரமாய்ச் சொல்லமாட்டேன். அப்போது எனக்குத் தாதிமார்கள் நாலைந்து பெயர்கள் இருக்கவில்லையா?"

"நாலைந்து பெயர்கள்தானா? இன்னும் அது உனக்கும் நினைவிருக்கிறதா? மிகவும் ஆச்சர்யம்! அதுபோகட்டும், நீ இவ்விடம் வந்த வரலாறு ஏதாவது தெரியுமா?"

"அது ஒன்றுதான் எனக்கு ஞாபகமிருந்தது, வேறொன்றும் எனக்குத் தெரியாது."

"பன்னிரண்டு வருஷமாயிற்று, குழந்தாய் இன்றைக்குப் பன்னிரண்டு வருஷமாயிற்று நான் மிலான் நாட்டுச் சிற்றரசனாயிருந்து. அப்போது

எனக்குப் பின்னால் என்னுடைய ராஜ்யத்துக்கு அதிபதியாக வேண்டியிருந்த என்னுடைய ஏகபுத்ரியாகிய நீ ஒரு ராஜகுமாரியாயிருந்தனை. எனக்குச் சகோதரன் ஒருவன் உண்டு. அவனுடைய நாமதேயம் அந்தோனியோ. அவனைச் சிறந்த யோக்கியன், சீலன், ஸத்யஸந்தன் என்றெண்ணி ராஜ்யவ்யவஹாரங்கள் யாவற்றையும் அவனிடம் ஒப்புவித்துவிட்டு நான் என் புஸ்தகமும் படிப்புமே கதியெனக் கிடந்தேன். சிறிதும் அவநம்பிக்கையில்லாமல் ஸகல ராஜகாரியங்களையும் அவனிடமே சாற்றிவிட்டு நான் என்னுடைய புத்தியையும் கல்வியையும் விசாலப்படுத்திக்கொள்வதிலேயே கருத்தாயிருந்தேன். இவ்வாறு இம்மண்ணுலக விஷயங்களைப் பொருட்படுத்தாது, ராஜ்யம் இருக்கும் நிலைமையென்ன, அதற்கு என்னென்ன குறைகளிருக்கின்றன, குடிகள் ஸுகமுற்றிருக்கிறார்களா அல்லது வருந்துகிறார்களா என்பதொன்றையும் கவனியாமல் இருந்துவிட்டேன். அதனுடைய பலன் வெகுசீக்கிரத்திலேயே கிடைத்துவிட்டது. ஸகல ராஜசின்னங்களையுந் தரித்து ஸர்வ அதிகாரங்களையும் செலுத்திவந்ததால் இறுமாப்படைந்து அவனுடைய மனக்குரங்கு காடும் கரையும் கால்விட்டோடத் தலைப்பட்டது. அவனுடைய புத்தி வரவர சஞ்சலப்படத் தொடங்கியது. இவ்வாறு நான் தெரியாத்தனமாய்க் கொடுத்த பதவியைக்கொண்டு தன்னை விரும்பும்படி அவன் ஜனங்களைச் செய்துகொண்டான். நாள் செல்லச்செல்ல தான் என்ன, ராஜப்ரதிநிதியா அல்லது ராஜனே தானோ என்ற மயக்கம் அவனுக்கு மேலிட்டது. பின்னுங் கொஞ்ச காலம் கழிந்தது. மயக்கம் மனதில் ஓர் அவாவைத் தூண்டிவிட்டது. எல்லா ராஜ்ய கார்யங்களும் நம்மாலல்லவோ நடைபெற்று வருகின்றன. நமக்குத் தெரிந்ததில் அரைக்கால் பாகமாவது ராஜ்யவ்யவஹாரங்களைப்பற்றி ப்ராஸ்பரோவுக்குத் தெரியுமா? ஜனங்களனைவரும் நம்மைப்பற்றியல்லவோ பேசுகிறார்கள். ப்ராஸ்பரோ எங்கு சென்றான், என்ன செய்கிறான் என்பதேதாவது அவர்கள் விசாரிக்கிறார்களா? இவ்வாறிருக்க, நாம் ஏன் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளக்கூடாது?" என்ற துராலோசனை அவன் மனதில் தோன்றியது. இந்த எண்ணம் எப்போது தோன்றியதோ, அந்தக்ஷணமே என் பகைவனான நேபில்ஸ் அரசனுடன் சதியோசனைசெய்து அவனுடைய உதவியைக்கொண்டு என்னை ராஜ்யத்தினின்றும் அப்புறப்படுத்திவிட்டான்.

"ஆமாம், நம்மை ராஜ்யத்தினின்றும் அப்புறப்படுத்துவானேன்? ஏன் அவ்விடத்திலேயே அவர்கள் நம்மைக் கொலைசெய்து விட்டிருக்கக்கூடாது?" என்றாள் மிராண்டா.

"என் செல்வக்குழந்தாய், அவர்களுக்கு அவ்வளவு தைர்யம் வந்துவிட்டதா? என்னுடைய ப்ரஜைகள் என்னிடம் வைத்திருந்த மாறாத அன்பை அவர்கள் அறியார்களா? என் ப்ரஜைகள் உண்மையில் என்னைத் தங்கள் தந்தையென்றல்லவா கருதி நேசித்துவந்தார்கள். அந்தோனியோ நம்மிருவரையும் ஒரு கப்பலில் ஏற்றிவந்து நடு ஸமுத்ரத்தில் பாய்மரம், சுக்கான் ஒன்றுமில்லாத ஒரு துர்நாற்றம்வீசும் பழையபடகில் நம்மை இறக்கிவிட்டுச் சென்றனன்.



அந்தப்படகு மூழ்கிப்போய் விடுமென்றும், அதனுடன் நாம் கடலுக்கிரையாய் விடுவோம் என்றும் அப்பபாவி எண்ணியிருந்தனன். ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு வேறொன்று ஆவதுமுண்டன்றோ? எல்லாம் மனிதன் நினைக்கிறபடியே முடிகின்றதா? சிலவேளைகளில் தெய்வம் வேறொன்று நினைப்பதில்லையா? அந்தோனியோ எண்ணிய எண்ணத்துக்கு மாறாகக் கடவுள் ஆஞ்ஞாபித்தார். என்னுடைய ஆப்தநண்பரான கன்ஸாலோ என்பவர் அக்கொடியபாதகன் அறியாமல் அப்படகில் குடிக்கத் தீர்த்தத்தையும் சிறிது உணவையும், ஸ்வல்ப உடைகளையும், எனக்கு ப்ராணனாயிருந்த சில புஸ்தகங்களையும் வைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார்."

"அப்பா, அக்காலத்தில் நானிருந்தது தங்களுக்குப் பெரிய இடைஞ்சலாக வன்றோ இருந்திருக்கும்? இத்தனைக் கஷ்டங்களுக்குமிடையில் என்னையும் வைத்துக்கொண்டு எப்படித்தான் தவித்தீர்களோ? உலகவ்யவஹாரமே காதிற்படாமல் கல்வியில் உல்லாஸமாய்க் காலங்கழித்துவந்த தாங்கள் எப்படித் திடீரென்று ஒரு தாயில்லாக்குழந்தையைக் கையில்வைத்துக்கொண்டு நடுஸமுத்ரத்தில் ஏற்பட்ட துன்பங்களுக்கிடையில் உயிர்பிழைத்து வந்தீர்கள்? அச்சமயத்தில் நானும் தங்களுக்கொரு சத்துருவாகவல்லவோ இருந்திருக்கவேண்டும்?"

"என் கண்ணே, அச்சமயம் நீ எனக்குச் சத்துருவாக இருந்ததாகவோ எண்ணுகிறாய்? உன்னைக்காப்பாற்றுவதா எனக்கொரு வருத்தமாயிருந்தது? அக்காலத்தில் நீ மாத்திரம் என்னுடன் இருந்திராவிட்டால் என் ப்ராணன் அந்நடு ஸமுத்ரத்திலேயே போய்விட்டிருக்கும். அவ்வளவு நிர்ப்பந்தங்களுக்குமிடையில் உனது அழகிய வதனத்தில் தவழ்ந்த புன்சிரிப்பன்றோ என் மனக்கவலையையெல்லாம் நீக்கி எனக்கோர் ஊக்கத்தைப் புகட்டும் ஸஞ்சீவியாயிருந்தது. என் நண்பர் அளித்த ஆகாரம் நாம் இந்தத் தீவுக்குவருமட்டும் இருந்தது. இத்தீவிற்கு வந்தது முதற்கொண்டு உனக்கு ஸகலவித கலைகளையும் கற்பிப்பதிலேயே எனது காலம் கழிந்துவருகிறது. நீயும் என் சிரமத்தை வீணாக்காமல் நான் கற்றுக்கொடுத்ததை க்ரஹித்துக்கொண்டு அதற்குரிய பலனையு மடைந்திருக்கிறாய்?"

"கடைதலைக்கும் கடவுள்தான் தங்களைக் காக்கவேண்டும். தங்களுடைய பூர்வசரித்ரத்தைக் கேட்க எனக்கு மிகவும் ஸந்தோஷமாயிற்று. அதிருக்கட்டும். இந்த ப்ரசண்டமாருதத்தை உண்டாக்கிய காரணமென்ன சொல்லும்" என்று ஆவலுடன் கேட்டாள் மிராண்டா?.

(To be continued)

## LESSONS ON TEMPERANCE
### for Pupils attending Elementary Schools

### எலிமெண்டரி பாடசாலைச் சிறுவருக்கு மதுபான விலக்குப்பாடம்

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்தும்
மெய்யறி யாமை கொளல்"

என்பது பொய்யா மொழி.

ஒருவன் சூரியப்பிரகாசத்தினை விரும்பாது, எல்லோராலும் விரும்பப்படுஞ் சூரியன் தன்கிரணங்களை வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்குந் தருவாயில், இருட்டறையை விரும்பி அதில் குடியிருந்து காலங்கழிக்கத் துணிவதுபோலச் சிலர் அறிவு என்னுஞ் ஞானசூரியனுடைய விளக்கமுற விளங்கத் துணியாது, அஞ்ஞானக் காரிருளில் காலங்கழிக்கத் துணிந்து பொருள் கொடுத்து அறிவை மயக்கும் பொருள்களை வாங்கிப்பருகி அறிவிழந்து அல்லற்படுகின்றனர். இது பேதைமையினும் பேதைமையே யன்றோ! அறிவு மயக்கம் பெற்றிருக்கும் காலங்களில் சொல்லத் தகுந்தவை இவை யென்பதும் சொல்லத் தகாதவை இவை யென்பதும் தெரியாது, நடத்த வேண்டிய காரியங்கள் இவை யென்பதும் நடத்தாது நீக்கவேண்டிய காரியங்கள் இவை யென்பதும் தெரியாது. இப்படிப் பகுத்தறியுஞ் சக்தியை அறவே யொழிக்கும் மதுபானத்தினை, முற்றும் தொடாது விடவேண்டுமென்று பெரியோர் பண்டைக்காலந் தொடங்கி முறையிட்டும் போதித்தும் வருகின்றனர். அவ்வாறு முறையிடப் பெற்றும் போதிக்கப்பெற்றும் வந்துகூட இம்மதுபானஞ் செய்யும் பழக்கமானது நந்தேயத்தைவிட்டு நீங்கவில்லை. அதைப்பற்றிப் போதியாது விட்டால் அது நன்றாக வேரூன்றிக்கிளைத்து செழித்துவிடும் என்பதனைக் காருண்ணியமுள்ள நமது கவர்ன்மெண்டார் - கல்வியிலாகா அதிகாரிகள் நன்கறிந்து சிறுவர்களுடைய நல்லியமான மனத்தில், அதனால் விளையும் இன்னல்களைப் பதிப்பித்து அவர்களுக்கு நல்ல அறிவினைக் கொளுத்த அதிக நாட்டத்தைச் செலுத்திவருகின்றனர். பள்ளிக்கூடத்துச் சிறார்களின் தேக சுகத்திற்கு அடுத்த பலவிஷயங்களைத் துண்டு விளம்பரங்களால் அடிக்கடி வெளியிடுகின்றார்கள். இப்படி வெளியிட்டு வருவதனால் தேச சுகத்திற்குச் சிறுவர்களும் சிறுவர்களுடைய கழகங்களுமே ஆதாரவாயிருப்பதாகத் தெரியவருகின்றது. சிறுவர்களும் சிறுவர் பள்ளிகளும் நாட்டிற்கு நன்மை புரியும் வன்மை யுடைத்தா யிருத்தலைப் பற்றியும் அவர்களுக்குச் செய்யவேண்டிய சுகாதாரங்களைப் பற்றியும் ரணவயித்திய சிகாமணியாகிய பானர்மன் துரையவர்கள் (Surgeon General Bannerman) சென்னையில் சாத்திரவுணர்ச்சியிற் றிறமை பெற்ற பெருமக்கள் கூடியிருந்த கூட்டத்தில், எடுத்து நன்றாகப் பேசி முடித்தார். லெஜிஸ்லேடிவ் கவுன்ஸலில் Hon'ble Mr. B. V. நரசிம்மம் ஐயரவர்கள் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் வயித்தியர்களுடைய பார்வையைப் பெறவேண்டும் என்னும் விஷயத்தினை எடுத்தேற்றியது மிகவும் சிலாக்கிக்கத்தக்கதே.

அமெரிக்கா கண்டத்தில் சுகாதாரத்தைப்பற்றி எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும், எலிமெண்டரி பிள்ளைகள் அவைகளை யறிய யவர்கள் செய்யும் ஏற்பாடுகளும், எலிமெண்டரி பள்ளிக்கூடத்தார் சுகாதார விதிகள் எங்கும் பரவச்செய்யும் பிரயத்தனங்களும் நமது 'சற்குரு' பத்திரிகையின் 'பிறதேச வர்த்தமானத்தினை' ஒழுங்காக வாசித்து வருபவர்களுக்குத் தெரியாமற் போகா.

நம்முடைய இராஜதானியில் அத்தகைய காரியத்தினைச் செய்ய மதுபான விலக்குகளைப்பற்றிய பாடங்களை எலிமெண்டரி பாடசாலைகளில் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருவதனால் அப்பாடங்களை இன்னபடி நடத்தவேண்டு மென்பதனைக் குறிக்கும் பாடக்கிரமம் ஒன்றுகாட்டி அதன் துணைகொண்டு நடத்தவேண்டுமென்று சொல்ல முன் வந்தேம்.

மதுபான விலக்குகளைப்பற்றிய போதனையானது மற்றைய போதனைகளைப்போலவே பிள்ளைகளுடைய அனுபவத்தினை அனு

சரித்ததாக இருத்தல் வேண்டும். அவர்களைச் சுற்றி நடைபெறும் விஷயங்களைக் கவனிக்கும்படி அவர்களைச் செய்வதனோடு, நமக்கு வேண்டிய விஷயத்திற்குரிய முடிவினைத் தரத்தக்க பல கேள்விகளையும் கேட்கவேண்டும். நம்முடைய போதனையெல்லாம் அளவறுத்ததாகவும், அவர்களுடைய அறிவிற்கு ஆவாகனம் ஆகக்கூடியதாகவும், மென்மையான மூளையினால் பகுத்தறியக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். நல்லொழுக்கமே தேகத்திற்கும் அறிவிற்கும் வன்மையையும் சுகத்தையும் தருவதல்லவா? பெரியோர்களும்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" என்று கூறியிருக்கிறார்களல்லவா? அப்படிப்பட்ட ஒழுக்க விதிகளிற் சிலவற்றையும் தேகசுகாதார விதிகளிற் சிலவற்றையும் கற்பிக்கும் நோக்கத்துடன் உபாத்தியாயர் போதித்தல் வேண்டும்.

மதுபான விலக்குகளைப்பற்றி வருஷத்திற்கு ஆறுபாடங்கள் நடத்தினால் சாலும் என்பது எமது அபிப்பிராயமாகும். இப்பாடங்களையும் தனிப்பாடங்களாகப் பாட வட்டவணையில் முத்திரித்துக்கொண்டு நடத்தவேண்டிய அவசியமில்லை. இவைகளைச் சுகாதார பாடங்களுடனும் அரசியற் பாடத்துடனும் செய்யுட் பாடத்துடனும் கலந்து நலம்பெற நடத்தலாம். ஆனால் வருடத்திற்கு இவ்வளவு பாடந்தான் நடத்தவேண்டும், இவ்வளவு விஷயந்தான் எடுத்துரைக்கவேண்டும், இவ்வளவினுக்குத்தான் அவர்களைச் சீர்திருத்தஞ் செய்யவேண்டும் என்னும் நியதி உபாத்தியாயர் மனத்தில் முந்தி வேரூன்றி யிருத்தல் வேண்டும். பத்து வயதுக் குட்பட்ட சிறார்க்கு இதனைப் போதிப்பது அவ்வளவு உசிதமல்ல. ஆனபடியினால், யாம் 3 ஆம் 4 ஆம் வகுப்புக்களிலேயே இதனை நடத்தத் துணிவோம். அடுத்தமுறை பாடங்களைக் கிரமப்படி போதித்தற்கு இன்றியமையாத் துணையாயிருக்கும் 'பாடக்கிரமத்தினை' வெளியிடுவோம்.

## "ROUGH CHECKS" IN ARITHMETIC

### உத்தேசக் கணக்குகள்.

குருட்டுப்பாடமாகப் படிப்பதும் ஒருகாரியத்தைச் செய்வதும் கூடாதென்பது எல்லாருக்குந் தெரிந்தவிஷயமே. தெரிந்திருந்தும் நாம் அடிக்கடி சொல்லும் பாடங்களிற் பெரும்பாலன குருட்டுத்தனமாகவே இருக்கின்றன. நூல் பிரகாரம் கணக்குப் போடுவது குருட்டுப்பாடமாகமுடியும் அல்லவா?

மாணவர்களை யோசிக்கச் செய்வதெப்படி? யோசிக்குந் திறமை தானே கணக்குப் போடுவதில் முக்கியமாக வேண்டியது? இத்திறமை பெறுவது கஷ்டமல்லவென்பது அநேக உபாத்தியாயர்களுடைய கொள்கை. உத்தேசக் கணக்குகளைச்செய்ய ஒருவாறு வழிகாட்டுவோம்.

நாம் செய்யப்போகும் காரியத்தின் நோக்கத்தினை அறிந்துகொண்டால் எந்தக்காரியத்தினையும் உற்சாகத்துடனே உழைக்கலாம். அப்படி நோக்கமின்றியும் வந்தது போனது கவனியாமலும் வேலையை மாத்திரம் செய்து முடித்தால் அதனைக் குருட்டுத்தனமான வேலையென்றே நாம் சொல்லல்வேண்டும்.

உற்சாகத்தை விளைக்குமாம் உத்தேசக் கணக்குகள். இதன் உண்மையை நாமும் பரிசோதித்துப் பார்க்கலாம். பாலர் வகுப்பார் விதைகளை எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருப்பதை விட்டு, உத்தேசக் கணக்குகளை மாத்திரம் போட ஆரம்பிப் பாராயின் எவ்வளவு உற்சாகத்துடனே விதைகளை எண்ணுவார்கள்! 20 வரையில் எண்ணத் தெரிந்தவர்கள் எதிரிற் சில விதைகளைக் கொட்டி, "அதில் எத்தனை விதைகள்?" என்று உத்தேசக் கணக்காய்க் கேட்டு, விடையைப் பெற்றுக்கொண்டு, பின்னர்ப் பிள்ளைகளை எண்ணச் சொல்லுவது மாதிரிக் கணக்காகும்.

கூட்டல் கணக்கு பெரும்பாலும் குருட்டுத்தனமான கணக்காகத் தான் முடிகிறது. கைவிரல்களால் எண்ணுவதும் வரிசை வரிசையாய்க் கூட்டுவதுமாகவே முடிகிறது. இவ்விதக் கணக்கிலுங்கூட உற்சாகத்தினை உண்டாக்க வழியுண்டு.

| | |
|---|---|
| பக்கத்திற் குறித்த கணக்கை | 19 |
| எடுத்துக் கொள்ளும். | 9 |
| பத்துப்பத்தாய் எண்ணினால் | 25 |
| விடை 50 க்கு கம்மியாய் இருக்கவேண்டுமென்று | 7 |

தெரிகிறது. இத்தகைய விடையைப் பெறுவதே நோக்கமாய் வைத்துக்கொண்டு உற்சாகத்துடனே ஏதோ ஒரு விதமான கணக்கைப்போடலாம்.

இன்னும் பெரிய கணக்கைக்கூட எடுத்துக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| பக்கத்திற் | 497 |
| குறித்த கணக்கைப் பாரும். | 273 |
| இதற்கு விடை | 709 |
| ஏறக்குறைய | 27 |
| 1540 ஆகிறதென்று தெரிகிறது. | 9 |

| | | | |
|---|---|---|---|
| காரணம்:— | 497 | * | 500 |
| | 273 | ,, | 300 |
| | 709 | ,, | 700 |
| | 27 | ,, | 30 |
| | 9 | ,, | 10 |
| | | | 1540 |

சரியான விடை 1515 ஆகிறது.

கழித்தலிலுங்கூட இப்படியே.

| | |
|---|---|
| பக்கத்திற் குறித்த கணக்கின் | 327 |
| விடை 100 க்கு அதிக மாயும் 200 க்குக் | 169 |

கம்மியாயும் இருக்க வேண்டு மென்று பார்த்தமாத்திரத்தில் தெரியும்.

இவ்வாறு யோசனை செய்து கணக்குப்போடும் மாணவன் சாதாரணமான பிழைகளை உடனே கண்டு பிடிப்பான். அதனோடு நில்லாமல் உற்சாகத்துடனும் கணக்கைப் போடுவான்.

(இன்னும் வரும்.)

* இந்தக் குறிக்கு அர்த்தம் "ஏறக்குறைய சமமாயிருக்கிறது" என்பதாம்.

## THE INFLUENCE OF TONE

## மென்குரலின் மேன்மை

பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுள் ஒரு சிலரே தந்தேகத்திற்கும் மனதிற்கும் ஒருவகைச் சிரமமும் இல்லாமல் போதிக்க அறிந்தவர்கள். பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்கையிலும் கேள்வி கேட்கையிலும் பல ஆசிரியர்கள் கடுமையாகவே பேசுகின்றனர். இப்படிக் கடுமையாகப் பேசுவதனால் அவர்களுடைய சரீரமும் மனமும் வேலையின் முடிவிலும், வேலை செய்யும் நாளின் முடிவிலும் சோர்வினை யடைகின்றன; மனக்கிளர்ச்சியைப் பெறாது ஒழிகின்றன. அது செய்யுங் காரியம் இம்மட்டோ? அன்று. கடுஞ்சொல்லானது காரியத்தையுஞ் சித்தி பெறச் செய்யாது அழிக்கின்றது.

கடுமையாகப் பேசும் உபாத்தியாயரிடம் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. அதனால் அவர்கள் உபாத்தியாயருடைய சொல்லில் சிரத்தை கொள்ளாதிருக்கத் தலைப்படுகின்றனர். பிள்ளைகளைச் சிரத்தைகொள்ளாதிருக்கப் பழக்குவது உபாத்தியாயருடைய கடுமொழியன்றோ? ஆனபடியினால், இக்குற்றம் பிள்ளைகளைச் சாராது உபாத்தியாயரையே சார்ந்து நிற்கும். பிள்ளைகள் பிள்ளைகளே. அவர்கள் தவறுவது இயல்பே. அதனைப் பொறுக்க வேண்டிய கடமை உபாத்தியாய ருடையதே. அந்தக் கடப்பாட்டை யறியாது உபாத்தியாயர் கடுமையாகப் பேசுவதாலும் கோபிப்பதாலும் காரியஞ் சிதை வுறுகின்றது. உபாத்தியாயர் மாத்திரம் இன்சொல்லுடனும் குளிர்முகத்துடனும் பிள்ளைகளுக்குப் போதிப்பாராயின் அவர்கள் அவராற் போதிக்கப்பட்ட விஷயத்தினை மனத்தினில் நன்றாகப் பதிய வைப்பார்கள்; உபாத்தியாயர் சொற்படியும் நடக்க விரும்புவார்கள்; அவர்கள் மீதும் பிரியங்கொள்வார்கள்.

"இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" என்னும்

பெருநாவலர் வாக்கும் பொய்க்குமோ? பொய்க்காது. ஆனபடியினால் உபாத்தியாயரா யுள்ளோர் கடுமொழியைக் கடிந்து தள்ளிவிட்டு, விரிநீர் வியனுலகம் மகிழ்தற்குக் காரணமாயிருக்கும் இன்சொல்லினைக் கைக்கொண்டு தமது பிள்ளைகளிடம் அன்பு பாராட்டி நடந்து நலம் பெறுவார்களாக.

# NOTES OF LESSONS

## பாடக்குறிப்பு

### 2. A River

### நதி

**குறிப்பு:**—நதியைப்பற்றிக் கிரமமாகச் சில பாடங்கள் நடத்த விஷயம் எவ்வளவு தூரம் இடந் தருகின்றது என்று முன்னர் ஆராய்ச்சி செய்துகொண்டு, அதன்பின் ஆற்று நீரின் ஓட்டம், அதன் அளவு, அதனுடைய பல பாகங்கள் ஆகிய இவற்றையெல்லாம் உபாத்தியாயர் தம் மனத்துள் ஆவாகனஞ் செய்து கொள்ளல் வேண்டும். இவைகளெல்லாம் அறிவுக்கு எட்டக்கூடியவைகளாகவே யிருத்தல் வேண்டும். இப்பொழுது நம்முடைய பாடமோ அடியிற் காட்டியவாறு நான்கு பகுப்புகளைக் கொண்டதாக விளங்கும்:—

1. நீரோட்டத்தைப்பற்றிய பொருட்பாடம்;

2. நூலினிடத்துக் காணும் சாஸ்திர சம்பந்தமான பதங்களை உற்பத்தி ஸ்தானம், கரை, முகத்துவாரம் முதலியவைகளைப் பற்றிய பாடம்;

3. குன்று, ஏரி, நதி முதலியவை பொருந்தப் பெறும் இடங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் அவர்கள் உள்ளபடி கண்டறியும் இயல்பான பொருள்களைப்பற்றிய வெளியுலாப் பாடம்;

4. வேண்டிய படங்களிருந்தால், உலகத்திலுள்ள பெரு நதிகளைப் பற்றிய கதைரூபமான பாடங்கள்.

படத்தைப்பார்த்து நதியின் நீளம் முதலிய விவரங்களைக் கண்டுபிடித்தலாகிய படம் (மாப்பு) பார்த்தல் (Map - reading) என்னும் பாடத்தை III - வது அல்லது IV - வது தரகதியில் நடத்தலாம். இதைப்பற்றித் தனியாய் ஒரு வியாசம் எழுதுவோம்.

இப்பொழுது யாம் முதலிற் கூறிய நதியின் நீரோட்டத்தைப் பற்றிய பொருட் பாடத்திற்கு வேண்டிய குறிப்புக்களை ஒருவாறு தரத்துணிவாம்.

**நோக்கம்:**—நீர் பாய்ந்தோடுந் தன்மையை ஒருவாறு கவனிக்கச் செய்தல்.

**ஆரம்பம்:**—இந்த கோலிக்குக் காலில்லை, ஆனால் எவ்வளவு நன்றாய் ஓடுகிறது பார். (மேஜையின்மேல் அதை உருட்டி விடு



தல்.) உருட்டாவிட்டால் கோலி ஓடுமா? ஆம். (மேஜையை ஒரு புறந் தூக்கிக் காட்டுதல்.) இந்த நீர்த்துளியைப் பாரும். (சிலேட் பலகைமேல் ஒரு துளி.) இது கூட ஓடும் (காட்டுதல்). ஆனால் கோலி ஓட்டத்துக்கும் இதன் ஓட்டத்துக்கும் வித்தியாசம் உண்டு; அது எப்படி? (கோலி அப்படியே ஓடும், நீர்த்துளி படிந்து, பாம்புபோல வழி முழுவதும் பாய்ந்தே செல்லும்.)

**கற்பித்தல்:**—பலகையைச் சாய்த்தால்தான் நீர் ஓடும். நீர் சற்று வேகமாய் ஓடும்படியான வாய்க்கால் ஒன்றை இந்தக் களிமண்ணினாற் பண்ணும். நீர் வார்த்துக் காட்டும்.

இதோ நான் கூச்சாய் மண்ணைக் கிளப்பி, உச்சியிற் பள்ளந் தோண்டி, அதில் நீர் சொரிகிறேன், பார். நீர் ஓடி வருகிறதுபார். அது தனக்காக வாய்க்கால் பண்ணிக்கொண்டு போவதைப்பார். வாய்க்கால்களைச் சற்றுக் கவனிப்போம். (மண் எங்கே கெட்டியாயிருக்கிறதோ அங்கே பாயாமல் வளைந்து போனதைக் காட்டுதல். சில இடங்களில் கற்களும் இருக்கக் கூடும்.) எத்தனை வாய்க்கால்கள் உண்டு? எண்ணு.

தோட்டத்தில் யார் வாய்க்கால் வெட்டுகிறார்கள்? நீர் என் கிணற்றினின்று பாய்கிறது? வா, பார்க்கலாம். (ஏற்றம் உயர்ந்த மட்டத்தில் இருப்பதைப் பார்க்கட்டும். எத்தனை தோட்டங்களுக்குப் பாய்கிறது, இந்த நீர்? இன்னும் தொலைவு தூரத்தில் இருப்பவைகளுக்குப் பாய்ச்சவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

வாய்க்கால்களைச் சற்றுக் கவனிப்போம். நீர் செய்த வேலையைப்பாரும். எப்படி மண்ணைத் தூக்கிக்கொண்டு போனது! இங்கே மேடாய் இருப்பதற்குக் காரணம் கண்டுபிடியும்.

அதோ தெரியும் அந்தக் காட்டுக்குப்போய் வரலாம். எத்தனை வாய்க்கால்! யார் இறைத்த நீர்? (இல்லை, சார், மழை.)

**முடிவு:**—பார்த்தவற்றை யெல்லாம் ஒரு பாட்டாய்ச் சொல்லலாம்.

குளிர்மிகும் நதிதான் கால்வாய் குலவிய வழியா யோடி
* அளிமலர்க் கொடி செடிக்கு ஆதர வாகப் பாய்கால்
தெளிவுடன் பார்க்கும் போது சிறுபாம் பெனவளைந்து
† களியர்போல் மேடு பள்ளம் கலந்துவீழ்ந் திரைந்து செல்லும்.

**க. ப. சுருக்கம்.** தண்ணீர் பள்ளமான இடத்துக்கு மெதுவான பூமி வழியாய் ஓடுகிறது.

* அளி = வண்டு. † களியர் = குடியர்.

# FOREIGN NEWS

## பிறதேசவர்த்தமானம்

**அமெரிக்காவில் குழந்தைகளுக்கானபுஸ்தகசாலை**
**Children's Libraries in America**

அமெரிக்காவில் சிறுவர்களும் சிறுமிகளும் உபயோகிப்பதற்காகப் பலவிடங்களில், குழந்தைகள் விரும்பிப் படிக்கக்கூடியவைகளும், சன்மார்க்க ஒழுக்கங்களைப் பலவிதமாய்ப் புகட்டத் தகுந்தவைகளுமான புத்தகங்களைக்கொண்ட அநேக புஸ்தகசாலைகள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு புஸ்தகசாலையிலும் சற்றேறக்குறைய 30,000 புத்தகங்கள் உண்டு என்கிறார்கள். அப்புத்தகங்களை உபயோகிக்கும் பிள்ளைகள் யாதொரு கட்டணமும் கொடுக்க வேண்டியதில்லையாம். அந்தப் புஸ்தகங்களை ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தினந்தோறும் உபயோகித்து வருகிறார்களாம்.

(பூர்ண சந்திரோதய பத்திரிகை)

*　*　*　*　*　*

**வெளியிலறியும் இயற்கைப்பாடம்**
**Nature study in the open**

இங்கிலாந்தின் கல்விச்சங்கங்களுள் ஒன்று, வெளிகளில் உலாவிப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்தாமே அறிந்துகொண்ட இயற்கைப் பொருள்களில் ஒன்றைப்பற்றி வியாசம் எழுதியனுப்பும்படிக்கும், அப்படி எழுதப்பெற்றுவந்த வியாசங்களுட் சிறந்த வியாசத்திற்குப்பரிசுகொடுக்கும் படிக்கும் தீர்மானித்திருக்கிறது. அந்தச்சங்கஞ்செய்தசூழ்ச்சி (யோசனை) மிகவும் மெச்சத்தகுந்ததே. அந்த விதமான நோக்கத்துடன் நம்முடைய இராஜதானியில் ஒருசங்கம் பிறந்து என்றைக்கு நன்மையைத்தரும் என்று எதிர்பார்க்கிறேம்.

*　*　*　*　*　*

**ஸ்காத்லாந்தில் செகண்டரி கல்வி**
**Secondary Education in Scotland**

ஸ்காத்லாந்தில் பிரைமரி பாடசாலையில் படித்து முடித்த பிள்ளைகள் ஆறு அல்லது எழுபேரில் ஒருவன் செகண்டரி படிப்பினைக்கற்க செகண்டரி பாடசாலையில் போய்ச்சேருவது, அந்தத்தேசத்துக் கல்விபிலாகாவின் பதிவுகளில் செம்மையான தொன்றாகவே காணப்படுகின்றது.

*　*　*　*　*　*



**சுகாதாரப் பொருட்காட்சி சாலை**
**Hygiene Parades**

அமெரிக்கா கண்டத்து யுனைடெட்ஸ்டேட்ஸில் உள்ள கற்றறிந்தோர் தேகாரோக்கியத்தினை விருத்திசெய்யும் மார்க்கங்களையறிய நமது சந்தாநேயர்களுக்கு விருப்ப மிருக்குமல்லவா? ஒரு மாகாணத்தார் "நோய் விலக்கு நாள்" ("Disease Prevention Day") என்றொருநாள் குறித்து அன்றையதினத்தில் வயித்தியர்களைக்கொண்டு முக்கியமான நகரங்களிலெல்லாம் வியாதியணுகா திருத்தற்குரிய வழிகளைக்குறித்த பிரசங்கங்களைச் செய்வித்துச் சுகாதாரத்திற்குரிய பொருள்களைக் காட்சியாக அமைக்கின்றார்கள். அக்காட்சிப்பொருள்களை வரிசையாக எடுத்துக்கொண்டு நகர்வலமுஞ் செய்விக்கின்றனர். காட்சிப்பொருள்களுடன் நகரில் உலாப்போகையில் பிரஜைகளிற் சிலர் தேகசுகத்தையும், சுகாதாரத்தையும் குறிக்கும் கொடிகளைச் சுமந்துகொண்டுஞ் செல்வர். ஒருமுறை இந்தப் பொருட்காட்சியார் ஒருவண்டியில் நிறையப் பிள்ளைகளை ஏற்றி, அவ்வண்டியில் "நாங்கள் சுத்தபோஜனத்தினால் போஷிக்கப்படுகிறோம்" என்னும் தொடர்மொழியை எழுதுவித்து, உலாவிற்கு அனுப்பினார்கள். மற்றொரு பட்டணத்தில் 8000 ஜனங்கள் ஒருமித்து இந்தவிதமான காட்சியில் கலந்து வேலைசெய்ததாகத் தெரியவருகிறது. ஒவ்வொருவீடும் பயங்கரமான ஈ, எலி, கரப்பான்பூச்சி (Cock roarch) அசுத்தமான இன்னம் முதலியவை பொருந்தப் பெறாதிருக்க வேண்டு மென்னும் விண்ணப்பத்தோடு ஒவ்வொருகொடியும் விளங்கினது.

*　*　*　*　*　*

**அமெரிக்கா சர்வகலாசாலைகளுக்குண்டான நிதியம்**
**Wealth of American Universities**

அமெரிக்கா கண்டத்துள்ள ஒவ்வொரு கலாசாலைக்கும் சொந்தமாக விருக்கும், ஊதியம் இவ்வளவு என்பதனை அடியில் இருக்கும் பட்டி அறிவிக்கும். அப்பட்டி நஞ் சந்தா நேயர்களுக்கு அதிக மகிழ்ச்சியினை யுண்டு பண்ணும் என்று நம்புகிறேம்.

| | | ரூபா. |
|---|---|---|
| ஹர்வார்ட் | (Harvard) | 8,23,20,000 |
| ஸ்டான்பர்ட் | (Stanford) | 7,20,00,000 |
| சிக்காகோ | (Chicago) | 5,44,95,000 |

| | | |
|---|---|---|
| ஏல் | (Yale) | 4,39,95,000 |
| டெக்ஸாஸ் | (Texas) | 3,00,00,000 |
| கார்னெல் | (Cornell) | 2,87,55,000 |
| கொலம்பியா | (Columbia) | 2,70,85,000 |
| பிற்ஸ்பர்க் | (Carnegie Institute of Technology, Pittsburg) | 2,10,00,000 |
| பென்ஸில்வானியா | (Pennsylvania) | 1,99,65,000 |

* * * * * *

கீழே குறித்துள்ள பட்டி அமெரிக்கச் சர்வகலாசாலைகளுக்கு வருடாந்தர வருவாய் இவ்வளவு என்பதனைக் காட்டும் :—

| அமெரிக்கச் சர்வகலாசாலைகளின் வருடாந்தர வருவாய் Annual Incomes of American Universities | | | ரூபா. |
|---|---|---|---|
| | ஆர்வார்ட் | (Harvard) | 76,95,000 |
| | கார்னெல் | (Cornell) | 74,55,000 |
| | மினிஸோடா | (Minnesota) | 70,65,000 |
| | விஸ்கான்ஸின் | (Wisconsin) | 64,65,000 |
| | பெனிஸில்வானியா | (Pennsylvania) | 57,15,000 |
| | கொலம்பியா | (Columbia) | 52,65,000 |
| | சிக்காகோ | (Chicago) | 52,20,000 |
| | ஏல் | (Yale) | 49,65,000 |
| | மிச்சிகன் | (Michigan) | 45,45,000 |
| | ஸ்டான்போர்ட் | (Stanford) | 42,00,000 |

# BOOK REVIEWS

## புத்தக விமரிசனை

**தங்கக்கிளி :—** இது தஞ்சை, கோவிந்தன் பிரதர்ஸ் என்னும் கம்பனியாரால் வெளியிடப்பட்டதொரு இனிய தமிழ் நாவல். நல்ல காகிதத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. தமிழ்மாது பன்னிறப்பட்டாடை யுடுத்திக்கொண்டு வெளிவந்தாற்போலப் பன்னிறங்களோடுகூடிய அட்டையுடன் இப்புத்தகம் வெளிவந்திருப்பதைப் பார்க்க மகிழ்ச்சியாக விருக்கிறது. கதையும் ஒருவாறு கற்பின்தன்மையைக் கட்டியுரைக்கின்றது. படித்தற்கு இனிமையைத் தரத்தக்கதாகவும் இருக்கிறது.

நாவல்கள் கற்றோராலும் மற்றோராலும் எழுதப்பெற்று மகளிர்க்கெல்லாம் நாவல் படிப்பதில் ஆர்வம் அளித்துவரும் இந்நாட்களில் இனிமையோடுகூடிய தமிழ் என்னுஞ் சுவையமுதத்தினை அள்ளியள்ளிச்சிறிது சிறிதாக ஊட்டித் தமிழ்ப்பாஷையின் அருமையையும் பெருமையையும் அறிவிக்கவேண்டியது அவசியமாகும். அப்படி அறிவித்தற்கு ஏதுவான வழியில் இது எழுதப்பெறாதிருத்தலைப் பார்க்க மிகவும் விசனமாக விருக்கின்றது. அன்றியும், 43,67,87 ஆம் பக்கங்களிலுள்ள சிற்சில மொழிகளால் இப்புத்தகம் மாணவர் கைகளில் பொருந்தப்பெறாது நீங்கவேண்டியிருக்கிறதே என்னும் விசனமும் எம்மை வருத்துகின்றது. அவ்விடங்களில் வேறு விதமாகத்தமது அபிப்பிராயத்தினை இந்நூலெழுதினவர் எடுத்தெழுதி யிருக்கலாம். இப்புத்தகத்தின் விலை மிகக்குறைவே; அணா எட்டே.

**மதிமுகி :—** இது 'நவீனகம்' என்னும் மாதாந்தர பத்திரிகையின் வாயிலாக வெளிவந்ததொரு உளவறியுந் தமிழ்நாவல். இது நாகை - தண்டபாணிப்பிள்ளை யவர்களால் எளிய தமிழ்நடையில் எழுதப் பெற்றுள்ளது. கதைவாசித்தற்கு இனிமையாகவே யிருக்கிறது. இக்கதையில் கோபாலர் என்னும் போலீஸ் உத்தியோகஸ்தரின் சூழ்ச்சியையும் கதாநாயகி யாகிய சரஸ்வதியின் தைரியத்தையும் பிள்ளையவர்கள் நன்றாக எடுத்துரைத்திருக்கின்றனர். இக்கதை சுருங்கி இரண்டாம் பாகத்தில் முடிவடைகின்றது. எட்டுபாரம் கொண்ட முதற்பாகத்தின் விலை 4 அணாவும் 8½ பாரங்கொண்ட இரண்டாம் பாகத்தின் விலை 6 அணாவுமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. இதனை வெளியிட்டோர் வேப்பேரியிலிருக்கும் அ- டேவிட் அண்டு கம்பனியார். தமிழுலகம் பயன்பெற நமது பிள்ளையவர்கள் இனி எழுதப்போகுந் தமிழ் நாவல்களைச் சற்றுக் கம்பீரமான தமிழ்நடையில் எழுதி வெளியிடுவாரென்று நம்புகிறோம்.

## THE PRELIMINARY EXAMINATION FOR TACHERS' CERTIFICATES 1915.

## டீச்சர் ஸர்டிபிகேற்றுக்குரிய பிரிலிமினரி பரீக்ஷை - 1915.

இப்பரீக்ஷை சென்ற மாதத்தில் புதுமுறைப்படி நடந்தேறிற்று. கணித பாடத்திற்கும் பூகோளபாடத்திற்கும், ஹையர் இரேட்டாருக்கும் லோயர் கிரேட்டாருக்கும் இதுவரை நடந்தது போலின்றி, இவ்விசை தனித்தனி பேபர் கொடுக்கப்பட்டன.

அவ்வாறு கொடுக்கப்பட்ட பேபர்கள் சுருக்கமான பேபர்களே. அதனால் எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க இடமுண்டு என்றெண்ணுகிறோம். பெரும்பாலும் எல்லாவித கேள்விக் காகிதங்களும் நல்ல முறையை யனுசரித்துக் காட்டுவனவா யிருக்கின்றன. கணிதபேபரும், ஹையர் கிரேட் பூகோள பேபரும், இராஜாங்க முறைநூற்கேள்விகளில் இறுதியாக நின்ற கேள்வியும், பேபரும் மிகவும் கவனிக்கத்தக்கவை. அவைகள் நல்ல கருத்துக்களை எடுத்துக் காட்டுவனவா யிருக்கின்றன. இயற்கைப் பாடப் பேபரோ நமக்கு ஒருவழிகாட்டி போலிருக்கிறது.

அடுத்த வருஷத்துப் பரீக்ஷைக்குப் பாடங்கள் மிகவும் சொற்பமாக விருக்குமாம்.

ஸ்ரீ

...REGISTRAR OF... 1915

# சற்குரு

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "—தமிழ்மறை

| தொகுதி—க | 1915ஞ மேமீ | பகுதி— கக |
|---|---|---|

## FEMALE EDUCATION
## பெண் கல்வி

### கனம் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் கூறிய விஷயங்கள்

சென்ற பிப்ரவரிமாதக் கடைசியில் காஞ்சிபுரம் பாலிகா பாடசாலை மாணவர்களுக்குப் பரிசுகள் அளிப்பதற்காக நடந்த வருஷோற்சவத்திற்குக் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர் சில அருமையான விஷயங்களை எடுத்துக்கூறினர். அவை வருமாறு :—

"தென்னிந்தியாவிலுள்ள பாலிகாபாடசாலைகளுள் இந்தக் காஞ்சிபுரத்துப் பாடசாலை சிறந்ததென்று சிலர் சொல்லக்கேட்டிருந்தேன். அது ஒருவாறு உண்மை யென்பதற்கு ஏற்ப இப்பொழுது இந்தப் பிள்ளைகளெல்லாரும் படிப்பு, பாட்டு, ஆட்டம் முதலிய வகைகளில் தங்களுடைய தேர்ச்சியைக்காட்டியது சந்தோஷமாயிருக்கின்றது. இதை நடத்துகிறவர்கள் இவ்வளவு சிரத்தையோடும் திறமையோடும் பரிபாலித்துவருவது கொண்டாடத்தக்க விஷயம்.

"பெண்கல்வி அவசியம் என்பதைப்பற்றி அதன் முக்கியத்தை இக்காலத்தில் எவரும் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசரமில்லை. ஏனென்றால், அது நிர்வாதமாய் ஏற்பட்டிருக்கின்றது; கௌரவமுள்ளவன் ஒவ்வொருவனும் பெண்கல்வி முக்கியமானதென்றும் அதை அபிவிருத்தி செய்யவேண்டு மென்றும் கொள்கிறான் என்பது நிச்சயம். ஆனால், பெண்கல்வி சம்பந்தமாகச் சில விஷயங்களை இவ்விடத்தில் சொல்ல மேற்கொள்ளுகிறேன்.

"எவ்விடத்தில் பெண்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு ஜனங்கள் உண்மையாய்ப் பிரயத்தனப் படுகிறார்களோ அவ்விடத்தில் துரைத்தனத்தார் தங்களால் கூடிய அளவு பொருளுதவி செய்துகொண்டே யிருக்கிறார்கள். பெண்கல்வியை வளர்க்க வேண்டு மென்பதில் துரைத்தனத்தார் பேரூக்க முடையவர்களாய் இருக்கிறார்களென்பது திருவல்லிக்கேணியில் பெண்களுக்கு ஹைஸ்கூலும், கடற்கரைச்சாலையில் ஸ்திரீகள் கலாசாலையும் ஏற்படுத்தி யிருப்பதனாலே நன்றாய்த் தெரிகின்றது.

"இந்திய கனவான்கள் ஒன்றுகூடி பெண்கல்வியை வளர்ப்பதற்கு எவ்விடத்தில் முயற்சிசெய்தபோதிலும் அவர்களுக்குத் துரைத்தனத்தார் தாராளமாய்ப் பொருளுதவிசெய்வதற்கு இஷ்டமுடையவர்களாய் இருக்கிறார்களென்பது நான் சட்ட நிர்மாண சபையில் மெம்பராய் இருந்த காலத்தில், அனுபவத்தினால், எனக்குத் தெரியும். ஆனால், பெண்கல்வியை அதிகப்படுத்துவதற்கு துரைத்தனத்தாருடைய உதவியின்மீதே சார்ந்திருப்பது கூடாது. துரைத்தனத்தார் பொருளுதவிசெய்ய வேண்டுமானால், நம்மவர்கள் தங்களால் இயன்றவரையில் பொருளிட்டு நடத்திக் காட்ட



வேண்டும். நம்முடைய முயற்சிக்குத் தக்கபடி அப்பொழுது துரைத்தனத்தார் உதவி செய்வார்கள்.

"பெண் கல்வியை வளர்ப்பதற்கு நம்மவர்கள் முன்வந்திருப்பது மிகவும் அருமையாய் இருக்கின்றது. அங்கங்கே ஆண் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் நம்மவர்கள் ஏற்படுத்தியதாகத் தெரிகின்றது; கணக்குப்பார்த்தால் பெண்கல்விக்காக நம்மவர்கள் ஊக்கமாய் முயற்சிசெய்யவில்லை யென்றே ஏற்படுகின்றது. இந்தக்குறையை நமது நாட்டாண்மைக் காரர்கள் சீக்கிரத்தில் தீர்த்துப் பெண்களுக்குப் பாடசாலைகள் ஏற்படுத்த முயற்சி செய்வார்களாக.

"பெண் கல்விக்காகப் பாடு படுகிறவர்கள் அருமையாய் இருக்கிறார்கள். இந்தக் காஞ்சிபுரத்துக் கமிட்டியைப்போலச் சில கமிட்டிகள் அங்கங்கே ஏற்படுமானால், பெண் கல்வி வளர்ந்தோங்கும். பெண் கல்வி விஷயத்தைத் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் தாராளமாய்க் கவனிக்கலாமே. இது விவாதத்திற்கிடமான விஷயமல்லவே. இதில் தலையிடுவது அவர்கள் மீது குற்றமாகாதே. கச்சேரிக் காரியங்கள் கழிந்த பிறகு இந்த விஷயத்தை மேற்கொண்டு அவர்கள் அதற்காக உழைப்பது அவர்களுக்கு இனிமையான காரியமாக இருக்குமே.

"துரைத்தன உத்தியோகஸ்தர்கள் கவனிக்கக்கூடிய நல்ல விஷயம் பெண் கல்வியே. இவ்விராஜதானியில் அங்கங்கே யுள்ள துரைத்தன உத்தியோகஸ்தர்கள் பெண் கல்வியை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வார்களாக.

"பெண்களுக்குச் சொல்லும் பாடங்களைப்பற்றி அநேகர் அநேகவிதமான அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அந்த விஷயமாய் என் அபிப்பிராயங்களை வெளியிடுவது தகுதியென்று நினைக்கிறேன்.

"ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான படிப்பு இருக்கவேண்டுமோ என்பது முதற்கேள்வி. பையல்களுக்குக் கொடுப்பதை யொத்த படிப்பு பெண்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய அளவு இந்தியாதேசம் இன்னும் பக்குவப்பட்டில்லை யென்று நினைக்கிறேன்.

"நாம் செய்யவேண்டிய காரியம் என்னவெனில், ஜனசமூகத்தில் ஸ்திரீகளுடைய நிலைமை இன்னது என்பது அவருக்கு நன்றாய்த் தெரியும்படி செய்யவேண்டும்; நம்முடைய தேசம் அபிவிருத்தியாகிப் பெருமை யடையவேண்டுமானால் ஸ்திரீகள் புத்தித் திறமைவாய்ந்து புருஷர்களுடன் ஒத்துப் பொதுஜன க்ஷேமத்திற்காக, நினைக்கவேண்டியது அவசியம்; ஸ்திரீகளுடைய சகாயமில்லாவிட்டால் நமக்குத் தேசாபிவிருத்தி உண்டாகாது, நம்முடைய ஜனங்கள் சிறப்படைய மாட்டார்கள், நம்மவர்கள் எல்லா விஷயத்திலும் தாழ்ந்து போவார்கள் என்று அவர்களுக்கு வற்புறுத்தவேண்டும். பிள்ளைகளின் தேகத்தைக் காப்பாற்றி அவர்கள் நல்ல பலமுடையவர்களாகும்படி ஸ்திரீகள் செய்யவேண்டுவதல்லாமல், பிள்ளைகளுக்கு நல்ல மனப்பழக்கமும் தேர்ச்சியும் நடவடிக்கையும் அமைப்பது ஸ்திரீகளுடைய கடமையே என்று அவர்கள் உணரும்படியுஞ் செய்யவேண்டும்.

"இப்படிப்பட்ட அபிப்பிராயங்களை ஸ்திரீகளுக்கு ஊட்டத் தக்கபடிப்பு அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது பெண்கல்விக்காக உழைப்பவர்களுடைய கடமையாகும்.

"பெண் கல்வியைப்பற்றி நான் திடமாய்ச் சொல்லக்கூடிய விஷயமொன்றுண்டு. அது என்னவெனில், ஹைஸ்கூல் ஸ்டாண்டர்டு வரையில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடங்களெல்லாம் அவரவர்களுடைய தேச பாஷையிலேயே இருக்கவேண்டும் என்பதே. பெண் பிள்ளைகள் அவரவர்களுடைய பிறப்புக்கும் வளர்ப்புக்கும் தக்கபடி ஸமஸ்கிருதம் முதலிய சிறந்தபாஷை ஒன்றில் நல்ல பயிற்சியுடையவர்களாய் இருக்கவேண்டும்.

"ஆண் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் பாடங்களில் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளையும் சுதேச பாஷைகளையும் கவனித்து யூனிவர்சிடியார் ஆதரிக்கவில்லையென்று எல்லாரும் இப்பொழுதே குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும், இந்த விஷயத்தில் யூனிவர்சிடியாருடைய அபிப்பிராயம் கொஞ்சம் மாறி நல்ல வழியில் திரும்பி யிருக்கின்றது. ஆயினும், அவர்களுடைய ஏற்பாட்டில் ஸம்ஸ்கிருதம் முதலியன தலையெடுக்குமென்று தோன்றவில்லை.



"ஆகையால், நமது பெண் பிள்ளைகள் தங்களுடைய சொந்த பாஷையில் நல்ல பயிற்சியுடையவர்களாக வேண்டுமென்பது அவசியமாய் ஏற்படுகின்றது. திருவல்லிக்கேணியிலுள்ள கவர்ன்மெண்ட் ஸ்கூலில் சுதேச பாஷையை முக்கியமாய்க் கொள்ளாமல் பாடங்களை யெல்லாம் இங்கிலீஷிலே கற்பிக்கிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆனால், கீழ்த்தரகதிகளிலுங்கூட இங்கிலீஷிலேயே பாடங்கள் கற்பிக்கிறார்கள் என்பது எவ்வளவு உண்மையோ தெரியாது. இதனால் உண்டாகும் தீமைகளை கவர்ன்மெண்டாருக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் சரியாய்த் தெரிவித்தால் இந்த ஏற்பாட்டை அவர்கள் உடனே மாற்றி விடுவார்கள் என்பது நிச்சயம்.

"ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துவைத்துப் படிப்பிக்கலாமா கூடாதாவென்பது மற்றொரு விஷயம். பிள்ளைகளும் பெண்களும் கௌரவத்தையும்; பெருமையையும், நாணயத்தையும் நாடுகிறவர்களேயானால், அவர்களை ஒன்றாகச் சேர்த்துவைத்தே படிப்பிக்க வேண்டுமென்று சிலர் வாதிக்கிறார்கள். பெண் பிள்ளைகள் தம்மோடுகூட இருப்பதனால் ஆண் பிள்ளைகள் மரியாதையாயும் ஒழுங்காயும் உடுக்கவும், நடக்கவும், பேசவும் இடம் உண்டாகிறதென்று பிரசிடென்சிகாலேஜ் மாணவர்கள் சொல்லுகிறார்கள்.

"மேற்சொல்லியபடி யெல்லாம் ஆண்பிள்ளைகள் நினைப்பது சரியே. பெற்றவர்களும் கணவர்களும் அப்படி நினைப்பார்களோ? நம்முடைய நாடு ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் ஒரே பாடசாலையில் படிப்பிக்குமளவு சீர்ப்பட்டிருக்கிறதோ?

"மற்றத்தேசத்தில் இருப்பதைவிட இத்தேசத்தில் பெண்கள் சீக்கிரமாய்ப் பருவமடைகிறார்களாதலால், அவர்களை ஆண்பிள்ளைகளுடன் சேர்த்துவைத்துப் படிப்பிப்பதனால், நாம் உத்தேசிக்கும் அபிவிருத்தி தடைபடும்; பெண் கல்வியே வேண்டாமென்று ஜனங்கள் சொல்வதற்கு அதனால் காரணம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்.

"இந்த விஷயத்தில் முக்கியமாய் நமக்கிருக்கவேண்டியது. ஜாக்கிரதை. நாம் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கிறோமோ

அவ்வளவு நல்லது. அந்த ஜாக்கிரதையில் குறைவுபட்டால் பெற்றோர்கள் தங்கள் பெண்களை ஆண் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் வீட்டிலே நிறுத்திக்கொண்டு விடுவார்கள்.

"பெண்கள் தங்களுடைய கணவர்வீட்டுக்குப்போன பிறகு அவர்கள் மேன் மேலும் படிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது மற்றொரு விஷயம். இப்பொழுது ஜனனா சொசைட்டிக்காரர்கள் ஹிந்துக்களின் வீடுகளுக்குத் தங்கள் ஸ்திரீகளை அனுப்பிப் படிப்புச்சொல்லிக் கொடுத்துவருகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீகள்வந்து இப்படிப் பாடஞ்சொல்லிக் கொடுப்பதில் ஹிந்துக்களில் அநேகருக்குப் பிரியமில்லை என்பது நிச்சயம். ஹிந்துக்கள் இந்த விஷயத்தில் வித்தியாசமாய் எண்ணுவது தகாதென்று சொல்லக்கூடும். ஆனால், அந்த வித்தியாசமான எண்ணத்தைப் போக்குவது நம்மால் முடியாத காரியம். ஆதலால், வீட்டுக்குப்போய்ப் பாடஞ்சொல்லிக் கொடுக்கக்கூடிய ஹிந்து ஸ்திரீகளை ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகள் செய்யவேண்டும்.

"மிஷன் சொசைட்டிக்காரர்கள் தங்களுடைய பெண் பாடசாலைகளை யெல்லாம் ஒன்றாய் இணைத்து அவைகளிலுள்ள பிள்ளைகள் மேலே படிப்பதற்கு அனுகூலமாய்த் தகுந்த இடத்தில் ஸ்திரீகள் காலேஜ் ஏற்படுத்துவதற்கு முயலுகிறார்களாம். இது நல்ல முயற்சியே.

"1913 வருஷத்து கல்வி ரிப்போர்ட்டின்படி 97,658 பெண்கள் எலிமென்டரி பாடசாலைகளில் படித்தார்களென்றும், 5,166 பெண்கள் செகண்டரி பாடசாலைகளில் படித்தார்களென்றும் தெரிகிறது. பின் சொல்லியவர்களுள் இந்திய கிறிஸ்தவர்கள், 3,424, பிராமணர்கள் 446, பிராமணரல்லாத ஹிந்துக்கள் 1154 என்று கணிக்கப்படுகிறது. இவ்வாறு செகண்டரி ஸ்கூல்களில் படிக்கும் பெண்களுள் கிறிஸ்தவர்களல்லாத மற்றச்சாதியார்கள் பாதிக்குக் குறைவாய் இருக்கிறார்கள். எலிமென்டரி ஸ்கூல்களில் படிப்பவர்களும் கிறிஸ்தவப் பெண்களே மற்றச் சாதியார்களைவிட மிகவும் அதிகமாய் இருக்கிறார்கள்.



"மிஷன் சொசைட்டிக்காரர்கள் 31 செகண்டரி ஸ்கூல்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; இந்தியர்கள் ஒன்றுகூட ஏற்படுத்தி யிருக்கிறதாகத் தெரியவில்லை. கிறிஸ்டியன் மிஷன்காரர்கள் 498 எலிமென்டரி ஸ்கூல்கள் வைத்து நடத்துகிறார்கள். மற்றச் சாதியார்கள் நடத்துவன வெல்லாம் 245. இவ்வாறு இந்தியர்கள் பெண்கள் விஷயத்தில் எடுத்துக்கொள்ளும் முயற்சி மிகக் குறைவு என்று ஏற்படுகின்றது.

"பெண் கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று இந்தியர்கள் வெகு ஆர்வமாய் உபந்நியாசங்கள் செய்கிறார்களே யல்லாமல், உண்மையாய் அதை அபிவிருத்தி செய்வதற்கு அவர்கள் பிரயத்தனப் பட்டதைக்காணோம்.

தாங்களே செய்வதற்குப் போதுமான புத்தியில்லாவிட்டாலும் மிஷன் காரர்களைப் பார்த்தாவது செய்யக் கூடாதா? ஒரு செகண்டரி ஸ்கூலாவது ஏற்படுத்தி, அதற்குச் சுற்றிலுமுள்ள எலிமென்டரி ஸ்கூல் பெண்கள் அதில்வந்து படிக்கும்படியாகவும், காலக்கிரமத்தில் அது காலேஜாக வளரும்படியும் செய்யக் கூடாதா?

"ஒவ்வொரு ஜில்லாவின் தலைப்பட்டணத்திலும் பெண்களுக்கு ஒரு செகண்டரி ஸ்கூலாவது இல்லாதது நிந்திக்கத்தக்கதே. நம்மவர்கள் இந்தக்குறையைத் தீர்ப்பதற்குப் பிரயத்தனப் படுவார்களாக. காஞ்சிபுரம் கமிட்டியார் இதற்கு வேண்டிய முயற்சியைச் செய்வார்களாக."

---

# AIRSHIPS.

# பற்பல ஆகாய வாகனங்கள்

க்ப்பல்கள் ஆகாயத்தில் அனுகூலமாகப் பறந்துகொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் (1) வாயுவைப் பார்க்கிலும் இலேசான கருவிகளென்றும் (2) வாயுவைப் பார்க்கிலும் பளுவான கருவிகளென்றும் இருவகுப்பாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளைப் பற்றிய நியாயங்கள் மிகவும் வித்தியாசமாயிருக்கின்றன; என்றாலும், வாயுவைக் காட்டிலும் இலேசான கருவிகளைக் குறித்துச் சற்றுக் கவனிப்போம். இவைகளில் விசேஷித்ததாகிய செப்பலின் என்பது தான் நாகரீகமுற்ற தேசங்களின் கவனத்தைத் தற்காலத்தில் வசப்படுத்தியிருக்கின்றது.

வாயுவை விட இலேசான கருவிகளின் ஆரம்பம் புகைக்கூடு (Balloon): இப்புகைக்கூட்டின் சரித்திரம் நீண்டதும் சந்தோஷகரமுமாயிருக்கும். ஆனால் தற்காலத்திலுள்ள இலேசான கருவிகளைக் குறித்து மாத்திரம் இங்குச் சற்றுக் கவனிப்போம். அவை பின்வருமாறு வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

### புகைக்கூடு

- பிரியமான விடத்துத் திருப்பக்கூடியது
  - உறுதியானவை
    - செப்பலின்
      - (அநேகமாக ஜெர்மானிய கப்பல்கள்)
  - பாதி உறுதியானவை
    - பிரித்தானிய, பிரான்சு, ஆகாய வாகனங்கள்
  - உறுதியற்றவை
    - சிலகப்பல்கள்
      - பிரான்சு கப்பல்கள்.
- பிரியமான விடத்துத் திருப்பக் கூடாதது.
  - சாதாரணமான புகைக்கூடுகள்
  - கட்டப்பட்ட புகைக்கூடுகள்

நமக்குப் பிரியமான திக்கில் திருப்பக்கூடிய புகைக்கூடுகளை ஆகாயவாகனங்கள் என்றும், நமக்குப்பிரியமான திக்கில் திருப்பக் கூடாத புகைக்கூடுகளை சாதாரணமான புகைக்கூடுகள் என்றும் சொல்லலாம். ஆகாய வாகனங்கள் யாவும் நமக்குப் பிரியமான



விடத்துத் திருப்புங்கால், அவ்விடத்தை நோக்கிச் செல்லக்கூடியவை. ஆகாய வாகனங்கள், உறுதியானவை, பாதிஉறுதியானவை, உறுதியற்றவை என மூன்று வகைப்படும். புகைக் கூட்டின் உட்புறம் உலோகத்தாலாகிய சட்டமிட்ட வேலையினால் அமைக்கப்பட்டும், அதேவிதமான உலோகத்தால் மூடப்பட்டுமிருக்குமானால், அப்புகைக்கூடு உறுதியான புகைக்கூடு என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட கப்பல், வாயுவினால் நிரப்பப்பட்டிருப்பினும், இல்லாவிடினும், ஒரே அளவும் தோற்றமுமுடையதாயிருக்கும். செப்பலின், இவ்வகைக் கப்பல்தான்.

பாதி உறுதியான ஆகாய வாகனங்கள் எவையெனில், அவைகளின் உட்புறத்தின் சட்டமானது இலேசான உலோகத்தாலாகிய கடினமான பொருளாற் செய்யப்பட்டும், தடித்த ரப்பர்துணியொத்த பொருளால் மூடப்பட்டுமிருக்கும். ஆகையால், அந்த ஆகாய வாகனமானது, வாயுவினால், நிரப்பப்பட்டு விரியுங்கால், தன் சரியான உருவைப் பெற்றுக் கொள்ளும். மற்ற வேளைகளில் மேலே மூடியிருக்கும் கித்தானுக்கு உட்புறத்திலுள்ள கடினமான சட்டம் ஆதாரமாயிருப்பதனால் வாகனத்தின் வெளித்தோற்றம், வாயு அடைத்தால் மலர்ந்தும், வாயு இல்லாதபோது சற்று அடங்கியும் (குவிந்தும்) காணப்படும்.

உறுதியற்ற வாகனங்கள், சாதாரணமான புகைக்கூட்டிற்கு ஒத்திருப்பினும், வடிவில் வித்தியாசமாயிருக்கின்றன. சாதாரணமான புகைக்கூடு கோள வடிவமாகவாவது, அல்லது அண்ட வடிவமாகவாவது இருக்கும். ஆனால் உறுதியற்ற ஆகாய வாகனங்கள் நீண்டவைகளாகவும், குழலைப் போன்றவைகளாகவும், ஒரு பிரமாண்டமான சுருட்டையொத்தவைகளாகவும் இருக்கும்.

### செப்பலின்.

இம்மூன்று வகையான ஆகாய வாகனங்களில் உறுதியான ஆகாய வாகனங்கள்தான் பெரியவைகளும், மிகவும் பயங்கரமானவைகளும், துரிதமாய்ச் செல்லக் கூடியவைகளும் மிக்க

விலையுயர்ந்தவைகளுமானவை. செப்பிலின்கள் இவைகளைச்சேர்ந்தவை. 'ஆகாயத்துக் குருபிகள்' என்று சொல்லப்பட்ட செப்பலினைக் குறித்துச் சுருக்கமாய் விவரிப்போம்.

தற்காலத்தில் உள்ள உறுதியான ஆகாயவாகனங்களில் சிறந்தது செப்பலின்; அலுமினியத்தினால் செய்யப்பட்டதும் குழலைப் போன்றதுமான கச்சைகளினால், நீண்டதும், சுருட்டு வடிவமுள்ளதுமான சட்டமொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. வாகனத்தின் நீட்டளவு முழுவதிலும் குழைவான தண்டங்கள் சமமாக வைக்கப்பட்டிருக்கின்றன., இந்தத்தண்டங்கள், இலேசாகவும், உறுதியாகவுமுள்ள பொருளால் செய்யப்பட்டக் குறுக்குச் சட்டங்களோடு பலமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தம்பவடிவமுள்ள வெளிப்புறத்துச் சட்டமிட்ட வேலைதான், செப்பலின் இனத்தைச் சேர்ந்த வாகனங்களுக்குச் சிறப்பான தோற்றத்தைக் கொடுக்கின்றது. இந்த பிரமாண்டமான சட்டம் மெல்லிய அலுமினியத் தகடுகளால் மூடப்பட்டிருப்பதனால் வெளிப்புறத்து மூடியானது சாதாரண காலங்களிலுங்கூட உறுதியாயும் சுருங்காமலு மிருக்கின்றது. ஆதலின், செப்பலின் உறுதியானதும், திருப்பக்கூடியதுமான ஒரு புகைக்கூடு என்று சொல்லப்படுகின்றது. இதன் பரிமாணத்தைக்கொண்டு வாகனங்களின் பரிமாணத்தையும் வாகனத்தின் பற்பல பாகங்களின் பரிமாணத்தையும் நிர்ணயிக்கலாம். யுத்தம் ஆரம்பமாவதற்குச் சற்று முன்னர், எல்லாக் கப்பல்களை விட மிக்க பெரியதாகிய செப்பலின் கப்பலின் நீட்டளவு 550 அடியும், குறுக்களவு 60 அடியுமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய அளவை நமக்குத் தெரிந்த ஒரு அளவோடு ஒப்பிட்டுப்பார்க்குங்கால், அது எவ்வளவு பிரமாண்டமானதாயிருக்கு மென்று ஒருவாறு நிதானிக்கலாம். இதைப் பார்க்கிலும் அதிகமான பரிமாணத்தை யுடைய கப்பல்களைக் குறித்து அறிக்கைப்பத்திரிகைகளில் அடிக்கடி காணலாம். சிறிது காலத்திற்கு முன்னர், ஏறக்குறைய $\frac{1}{4}$ மைல் நீட்டளவு கொண்ட கப்பலொன்று செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.



இந்த பிரமாண்டமான ஸ்தம்பத்தில் ஒழுங்காக அடுக்கியிருக்கும் புகைக்கூடுகளுக்கு இந்த வெளிப்புறத்துச் சட்டம் ஒரு மூடியைப்போன்றிருக்கிறது. இச்சட்டம் கிழக்கு மேற்கு சுற்றளவில் 16 அல்லது 17 க்கு மேற்பட்ட அறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அறையிலும் ஒரு புகைக்கூடு அமைக்கப் பட்டிருக்கும். ஆகையால், ஒரு செப்பலினை ஒரு சேர்க்கைப் (Compound) புகைக்கூடு என்று சொல்லலாம். செய்யப்பட்டிருக்கிற வைகளிலெல்லாம் பெரியதான கப்பலில் 17 புகைக்கூடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு புகைக்கூடும், வாயுகளிலெல்லாம் மிக்க இலேசானதாகிய ஜலவாயுவினால் நிரப்பப்பட்ட ஒரு காற்றுப் பையைப்போலிருக்கின்றது. புகைக்கூட்டினுள் ளிருக்கும் வாயுவை வெளியே நீக்குவதற்காக ஒரு கதவும், அப்புகைக்கூட்டை ஜலவாயுவினால் நிரப்புவதற்காக அதன் அடியில் சில ஒழுங்குகளும், அப்புகைக்கூடு எவ்வளவு வாயு கொள்ளுகின்றதோ, அவ்வளவு வாயுவைத் தானாகவே உள்ளே செலுத்தத்தக்கதாக இன்னொரு கதவுமாக ஒவ்வொரு புகைக் கூட்டிற்கும் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு புகைக்கூடும் 50,000 கன அடியுள்ள வாயுவைக் கொள்ளத்தக்க பரிமாணமுள்ளதாக விருக்கிறது. மேற் சொல்லிய காரியங்கள் தான் புகைக் கூட்டின் சிறந்த பாகமாயிருக்கின்றன. ஆனால், சில விசேஷித்த காரியங்களுக்காக அநேக ஒழுங்குகள் செய்யப் பட்டிருக்கின்றன.

இவைகளில் முதற்காரியம் யாதெனில், அலுமினியத்தினால் செய்யப்பட்ட நீண்டதொட்டிகள்: ஒவ்வொரு செப்பலினிற்கும் இரண்டு தொட்டிகள் பூட்டியிருக்கின்றன. ஒவ்வொரு தொட்டிக்கும் இரண்டு அடித்தட்டுகள் உண்டு. இவைகள் உறுதியான ரப்பரால் செய்யப்பட்ட கருவிகளினால் தாங்கப்பட்டிருப்பதால் நிலத்திலாவது, கடலிலாவது எளிதாய் இறங்குவதற்கு உதவியாயிருக்கின்றன. இவ்விரண்டு தொட்டிகளும் 200 அடி தொடங்கி, 300 அடி வரைக்குமுள்ள தொலைவிலிருப்பதால், மின் தபால்

கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு தொட்டியிலிருந்து மற்றத்தொட்டிக்கும், கப்பலைச் சுற்றியும் போக வழி ஒன்று உண்டு. புதியதாய் உண்டாக்கப்பட்ட ஆகாய வாகனங்களின் மேல் பாகத்தை அடைவதற்கும் ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கின்றது. மற்றக்கப்பல்கள் உயரப் பறந்து இக்கப்பலை எதிர்க்குங்கால், அக்கப்பல்களைத் தாக்குவதற்காக அந்த மேற்பாகத்தில் ஒரு பீரங்கியும் ஏற்றப்பட்டிருக்கின்றது. உறுதியான ஆகாய வாகனங்களின் இனத்தைச் சேர்ந்த கப்பல்களில் தான் இவ்வாறு செய்யக்கூடும். கப்பல்கள் ஆகாயத்தில் விரைவாய் ஓட அவைகளுக்கு வல்லமை கொடுப்பதற்கு ஒவ்வொரு தொட்டியிலும் இரண்டு மோட்டார் யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. 200 குதிரைகளுக்கு எவ்வளவு சாமர்த்தியமும் வல்லமையும் உண்டோ அவ்வளவு சாமர்த்தியமும் வல்லமையும் உள்ளது ஒரு யந்திரம். விசிறிபோன்ற சில கருவிகள் சங்கிலிகளின் மூலமாய் ஒவ்வொரு யந்திரத்திற்கும் இணைக்கப் பட்டிருக்கின்றன. இந்தக்கருவிகள் கப்பலின் பக்கங்களில் அதாவது கப்பலின் சருவாங்கத்தினருகே இணைக்கப்பட்டிருக்கின்றன. அக்கருவிகளின் கூரியபாகம், மின்சார சக்தியினால் சுற்றுகின்ற விசிறியின் கூரிய பாகத்தை யொத்திருக்கின்றது. ஆனால், அக்கருவிகளின் கூரிய பாகம், பிரமாண்டமான அளவிலும், வல்லமையிலும் மாத்திரம், மின்சார விசிறியின் கூரிய பாகத்திற்கு வித்தியாசப்பட்டிருக்கின்றது.

கப்பல் புரளாமல், உறுதிப்படுத்தும்படி அக்கப்பலின் பற்பலபாகங்களிலும் மீன்சிறகு போன்ற தடுப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள், கப்பல் புரளாதபடி வாயுவைத்தடுக்க ஏதுவாயிருக்கின்றன. கப்பலின் ஒரு முனையில் இரண்டுஜோடான பெருங்கருவிகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று சமமாகவும் மற்றொன்று செங்குத்தாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. செங்குத்தான கருவி, கடலில்கப்பலைச் செலுத்துவதற்கு உபயோகிக்கப்படுகின்ற சுக்கானை யொத்திருக்கின்றது. சுக்கான் கப்பலு



க்கு எவ்விதமாக உபயோகப்படுகின்றதோ, அவ்வித மாகவே, செங்குத்தான கருவியும் ஆகாய கப்பல்களைத் திருப்புதற்கு உபயோகமாகின்றது. ஆகாய வாகனம் நாற்றிசையும் மாறி மாறிச் செல்வதற்கு, இந்தச் செங்குத்தான கருவிதான், சாதனமாகின்றது. ஆகாய வாகனத்தைத் தன்நிலையிலிருந்து மேலே தூக்கவும், கீழே இறக்கவும், சமமான தட்டுகள் உபயோகப்படுகின்றன. இக்கருவி முற்றிலும் சமமாகவிருக்கும்போதும், பலமான காற்று மோதியடியாமலிருக்கும்போதும் வாகனம், தரைக்குச் சற்று உயரத்தில், சமமான திக்கையே நாடிச்செல்லும். இக்கருவியை மேலேயாவது, அல்லது கீழேயாவதுதிருப்பினால், வாகனமானது, ஆகாயத்திலிருக்கும் தன் நிலையிலிருந்து மேலே தூக்கப்பட்டாவது அல்லது கீழே இறக்கப்பட்டாவது இருக்கும். கப்பலில் இணைக்கப்பட்டிருக்கும் கொடிகள் வாகனம் ஓடாமல் அசைவற்றிருக்குஞ் சமயத்தில், காற்று எத்திசையாய் அடிக்கிறதென்பதைத் தெரிவிக்கும். வாகனத்தின் கீழ்ப்பாகத்தில் வெடிகுண்டுகளைச் சேகரித்து வைப்பதற்காக ஒரு இடம் உண்டு. அவ்விடத்திலிருந்தே, வெடிகுண்டுகள் கீழே எறியப் படுகின்றன. வெடி குண்டுகளின் மூலமாய்ச் செய்யப்படுகின்ற அழிவைப் போன்ற காரியங்களைச் செய்வதற்கு, ஏறக்குறைய $1\frac{1}{4}$ டன் அளவு கொண்டகுண்டு, மருந்து முதலிய யுத்த உபகரணங்களை ஓர் ஆகாய வாகனம் சுமத்திக்கொண்டு போகக் கூடும்.

HENRY DEVADOSS B.A., L.T.
Editor—The Popular Scientific Journal

குறிப்பு:—

யானை உருவிற்பெரியது என்பதும் வலிவிற் சிறந்தது என்பதும் அனைவருக்குந் தெரிந்த விஷயந்தானே? அப்படிப்பட்ட யானையை உருவிற் சிறியதான சிங்கம் தாக்கி அதன் மூளையை உரிஞுதல் தெரியாததல்லவே? அதுபோலவே உருவிற் பெரியதான செப்பலினை, நம்முடைய ஆங்கில ஆகாயவிமானங்கள் (aeroplanes) அதைவிட உயரமாகப்பறந்து சென்று அதனை அழிக்குந் திறமையை வெகு நன்றாகப் பெற்றிருப்பதால் வலிவிலும் செப்பலின் சிறந்ததென்று மயங்கவேண்டாம். நம்முடைய ஆகாய வாகனங்களைப்பற்றிய வியாசம் பின்னால் வெளிவரும்.

## NATURE LESSON

### Coffee காப்பி

1. காப்பிக்கொட்டையைத் தூள்செய்து, அதன்பேரில் வெங்நீரை வார்த்தால், அந்நீர் சிலநேரத்தில் காப்பிக்கொட்டையின் வர்ணத்தையும் வாசனையையும் பெறும்.

அதற்கு இங்கிலீஷில் (Infection) என்று பெயர். அதாவது மெலித்தரசம் என்று பெயர். ஒருவர், களைப்படைந்திருக்கும் பொழுதாவது, அல்லது நித்திரை யற்றிருக்கும் போதாவது இதைச் சாப்பிட்டால் ஒருவித சந்தோஷமும் சுறுசுறுப்பும் உண்டாகும்.

சாதாரணமாய்க் காப்பிக்கொட்டையை வறுத்து, அரைக்கும் யந்திரத்தில் அரைத்துத் தூளைப்பெறுவார்கள்.

காப்பிக்கொட்டையோ, ஒருவிதக் கருநிறமும், கெட்டியும் எளிதில் உடையும் தன்மையுமுடையது. தூளைப்போலவே இதற்கும் வாசனையுண்டு. இந்தக் கொட்டைகளுக்கு (Coffee Berries) என்று பெயர். இந்தக் கொட்டைகள், உஷ்ணப் பிரதேசத்தில் வளரும்படியான சில பட்டுப்போகாத செடிகளிலிருந்து அடையக்கூடியவை. இதுபோல செடிகளை, ஆங்கிலத்தில் (Ever Greens) என்று சொல்வதுமுண்டு.

## HISTORY OF THE COFFEE PLANT

### காப்பிச்செடியின் சரித்திரம்.

2. இதன் இலை நேர் சதுரமாகவும், முனையில் கூரிதாகவும் பச்சையாகவும் இருக்கும். செடி பசுமையானதாகையால், வருஷமுழுவதும் இலை நிறைந்திருக்கும். தானாகவே 15-அடி அல்லது 20-அடி உயரம் வளரும்; ஆனால் காப்பி பயிர் செய்யுமிடத்தில் அப்போதைக்கப்போது கத்தரித்து வருவதால் 6-அடி அல்லது



8-அடி இருக்கும். இதன் புஷ்பங்கள் நேர்த்தியாயும், வெண்மையாயும், ரோஜாவர்ணத்துடனும், அழகாயும், மல்லிகைப் புஷ்பம் போலும் இருக்கும். இந்தச்செடி புன்னைமரம்போல் தோன்றும். ஒரேகாலத்தில் புஷ்பங்கள் புஷ்பிக்கக்கூடியவையாதலால் இவை அடர்ந்திருக்கும். பார்வைக்குப் பனிமூடியிருப்பதுபோல் தோன்றும். இதற்கு நேர்த்தியான வாசனையுண்டு.

இதிலிருந்து சிறிய கறுத்தகாய்கள் அகப்படுகின்றன. இக்காயின்மேற்புறம், மிருதுவானசதை நிரம்பியுள்ளது. இதனுள், கோழிமுட்டை வடிவம்போன்ற இரண்டு பருப்புகள் உண்டு. இதற்குக் காபிபெர்ரி (Coffee Berry) என்று பெயர். இக்கொட்டை ஒருபக்கத்தில் சார்வாயும், மற்றொரு பக்கத்தில் தட்டையாயுமிருக்கும். காய்க்குள் இருக்கப்பட்ட இரண்டு பருப்புகளும், தட்டையானபாகத்தில் சேர்ந்திருக்கும். ஒவ்வொரு பருப்பையும் சுற்றி மெல்லியதோல் உண்டு.

OFFICE OF THE REGISTRAR OF
14 ... 1915
MADRAS

## HARVEST

### பயிரிடுவதும் அதன் அறுப்புகளும்

(1) ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள, அபிஸீனியாதேசத்தில் ஆரம்பத்தில் உண்டானது. இப்பொழுதும், அவ்விடத்தில் ஏராளமாய் வளர்ந்துவருகிறது. 1454-ம் வருஷத்தில் அரேபியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்பொழுதோ, உலகத்திலுள்ள ஏறக்குறைய எல்லா உஷ்ணப் பிரதேசங்களிலும், பயிராகின்றன. அதிகமாக அமெரிக்காவிலுள்ள, பிரவில் (Brazil), கிழக்கு இந்தியத்தீவுகள் (East Indies), (West Indies) மேற்கு இந்தியத்தீவுகள், (Ceylon) இலங்கை ஆகிய இடங்களில் வளர்கின்றன. வேறு செடிகள் முளைக்கக்கூடாத மேட்டுப்பாங்கில் இது நன்றாய் வளரும். ஆனால் பள்ளத்தாக்கில் வளரும் செடிகள் அதிகப்பலனைக்கொடுத்தபோதிலும், கொட்டைகள் மட்டமானதாக இருக்கும். மலைப்பாங்கில் பயிராகும் கொட்டைகள், அளவில்குறைந்தபோதிலும்,

நயமான கொட்டைகளாக இருக்கும். இந்தச் செடிகள் இரண்டு வருஷம்வரை காய்க்காது. மறு இரண்டுவருஷங்களுக்கு சாமான்யமாகக் காய்பிடிக்கும். பிறகு 18 அல்லது 20 வருஷங்களாகக் காய்த்துவளரும். சாரிசரியில் வருஷம் 1-க்கு ஒரு செடியிலிருந்து 2 பவுண்டு கொட்டைதேறும்.

(2) கொட்டைகள் முற்ற மேல் தோல் உதிர்ந்துவிடும். அப்பொழுது கொட்டைகளைச் சேர்க்கலாம். அரபியாதேசத்தில், மரத்தைக் குலுக்கிக் கொட்டை எடுக்கிறார்கள். அப்பொழுது துணியைக் கீழேவிரித்துக் கொட்டையைச் சேகரிக்கிறார்கள். எடுத்த பிறகு வெயிலில் காயப்போடவேண்டும். பிறகு ஒருபாத்திரத்தில்போட்டு, இரண்டு யந்திரங்களுக்கு நடுவில் விட்டு அரைத்து, மேல் உமிதூளாய் நீங்கியபிறகு, புடைக்கப்பெற்று காப்பிக்கொட்டைகள் ஏற்றுமதியாகின்றன. இவ்வாறு யந்திரத்தில் அரைக்கப்பெற்றபின், மறுதரம் வெயிலில் உலர்த்தவேண்டியது. பிரவிலில், மேற்கு இந்தியா, கிழக்கு இந்தியா தீவுகளில், முதிர்ந்த உடனே கொட்டைகளைப்பறித்து, பிறகு வெயிலில் காயப்போட்டு அல்லது உடனுக்குடனே யந்திரத்தில் தேய்த்து, தண்ணீரில் கழுவி, பிறகு கொட்டைகளை வெயிலில் உலர்த்திப் பொட்டலமாகக் கட்டுகிறார்கள்.

(இன்னும் வரும்)

கே. ஆர். இராமசாமி அய்யர்,
ஹெட்மாஸ்டர் போர்டு எலிமெண்டரி ஸ்கூல்
[illegible]ணம்.

ஸ்ரீ

# சற்குரு

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

| தொகுதி—க | 1915ளு ஜூன்மீ | பகுதி—கஉ |
| --- | --- | --- |

## PICTURE IN A SCHOOL ROOM.

## பாடசாலை அறைக்குப் படங்கள்.

எவ்விஷயத்தைப்பற்றி நிபந்தனைகள் ஏற்பட்டபோதிலும் யாம்சொல்லப்போகும் இவ்விஷயத்தைப்பற்றி விதிகள் ஏற்படுவது அசாத்தியமான காரியமே. சிலர் ஒருபடம்கூட மாட்டி அலங்கரியாமல் சுவர்களை எக்காலத்திலும் பரிசுத்தமான வெள்ளைநிறம்பொருந்த வைத்திருப்பார்கள். மற்றுச்சிலர் ஒரு சதுர அங்குல இடமுமில்லாமல் பலவிதப்படங்களைத் தொங்கவிட்டிருப்பார்கள். சிலர் பாடசம்பந்தமான படங்களை மட்டும் இருத்த விரும்புவார்கள். வேறுசிலர் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அலங்கரிக்கத்தகுந்ததாக இருந்தாற்போதும் என்பார்கள். அபிப்

பிராயபேதம் இத்தன்மையாக இருப்பினும் அதைப்பற்றி இரண்டொரு விஷயங்கள் சொல்வது முற்றிலும் அனாவசியமாகவும் பிரயோஜனகர மற்றதாகவும் இருக்கமாட்டாது.

படங்கள் இருவகைப்படும். சில படங்கள் வடிவத்தாலும் வர்ணச்சேர்க்கையாலும் விஷயத்தாலும் அழகாயிருந்து அலங்கரிக்கத்தகுந்தவையாக இருக்கும். வேறுசிலபடங்கள் பாடசாலையில் நடக்கும் பாடங்களை உதாகரிக்கக்கூடியவைகளாக இருக்கும். உதாரணமாக தாவரப்பொருட்களின் படங்கள், சண்டை, பிரசித்திபெற்ற கட்டடம், நகரங்கள், விசேஷபூபாகங்கள், இயற்கை அற்புதங்கள் முதலியவைகளைக்காட்டும் படங்கள். பாட்டுகளைச் சதாகேட்டுக்கொண்டிருந்தால் மட்டும் எப்படிச் சங்கீத வித்வானாகமாட்டோமோ அப்படியே சிறந்த சித்திரங்களைப் பார்த்து வந்தால் மட்டும் அந்த வித்தையில் தேர்ச்சியடையமாட்டோம். சிலநாட்கள் வரையில் இந்திரியங்களை அவை கவர்ந்து நிற்கும். பிறகு பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்றபடி வெறுப்பை உண்டாக்காவிடினும் நிஷ்பிரயோஜனமானதாகும். ஆதலால் அப்படத்தைப்பற்றி அடிக்கடி உபாத்தியாயர் சொல்லச் சமயம் நேராவிட்டால் அவைகளின் பிரயோஜனம் ஒன்றுமே இல்லாமற்போகும். பாடத்தின் சில பாகங்களை விளக்க உபயோகப்படவேண்டும். வியாஸபாடங்களுக்கும் உபயோகமாகவேண்டும். சித்திரபாடங்களின் விதிகளைக் கண்டறிய சாதகமாகவும் இருக்க வேண்டும். புகைப்படங்களும் ஹாப்டோன்படங்களும், லிதோகிராப்படங்களும் இருந்தால் உபயோகமாகவிருக்கும்.

பழக்கம் அதிகமாக வாகப் படங்களின்மீது வெறுப்பில்லாவிட்டாலும் அவைகளால் மனம் கவரப்படமாட்டாது. ஆதலினால் படங்களின் ஸ்தானத்தை மாற்றுவதுடன் சிற்சில வேளைகளில் அவைகளைக் கழற்றி வைத்து மறுபடியும் விரிக்கவேண்டும். படங்கள் அதிக உயரத்தில் இருந்தால் திருஷ்டிக்கு எட்டாமலிருப்பதோடு எடுத்து உபயோகிக்க அனுகூலமற்றுமிருக்கும். இக்காரணத்தினால் சில படங்கள் உபயோகப்படாமல் பூச்சி அடிக்கப்பட்டுத்தூசி நிரம்பி நிற்பது அநுபவசித்தம். சில மேற்கோள்கள் அல்லது பழமொழிகளை குணக்கல்விக்கு ஆதாரவாகப் பொறுக்கி



யெடுத்து அவைகளை உதாகரிக்கப் படங்கள் வரைந்து தொங்கவிடவும் வேண்டும். சமாசார பத்திரிகைகளிலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் சில படங்களைத் தெரிந்தெடுத்தல் உபயோகமானதே.

எப்படம் எவ்வகையதாகிலும் அப்பொருளின் மெய்ப்பொருளை மாணாக்கர்களுக்கு எடுத்துக்காட்டுவது ஆசான் கடமையாகும்.

N. KRISTNA RAO, B.A., L.T.
Sub-Asst. Inspector of Schools, Kumbakonam.

## ROUGH CHECKS IN ARITHMETIC.

### உத்தேசக் கணக்குகள்

(228 ஆம் பக்கத்தொடர்ச்சி)

2451 என்னும் எண்ணை 279 ஆல் பெருக்க வேண்டும். சரியான விடையானது $2400\times300$ க்குக் குறைவாயும் $2400\times280$ க்கு அதிகமாயும் இருக்க வேண்டுமென்று தெரிகிறது; அதாவது, 7,20,000 ஐயும் 6,72,000 ஐயும் கடவாதிருக்கவேண்டும் என்று விளங்குகிறது.

சாமான் ஒன்று ரூ. 74 வீதம் 23 சாமான்களை ரூ. 1000 க்கு வாங்கலாமா வென்று கேட்டமாத்திரத்தில் வாங்கமுடியாதென்று மாணவனுக்குத் தெரிய வேண்டும். ஏனென்றால், $70\times20=1400$ அல்லவா?

வகுத்தல் கணக்கொன்றை யெடுத்துக் கொள்வோம் — 4794-347 ஆல் வகுத்தல். இது 4800 ஐ 350 ஆல் வகுத்தாற் போல என்று சொல்லி, விடையானது 13 என்று தெரிந்துகொள்கிறோம். சரியான விடையும் இதுவே.

கடைக்கணக்குப் போடுவதில் இந்த உத்தேசமுறை மிகவும் உபயோகமானது. உதாரணமாக, (1) ஒருவன் $27\frac{3}{4}$ கஜத்துணி கஜமொன்று 7 அ. 9 பை. வீதம் வாங்க எண்ணினான்; அவன் கடைக்குச் சுமார் எத்தனை ரூபாய், தான் எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று முன்னதாக அறிந்துகொள்ள வேண்டுமானால், கணக்கை $\frac{1}{2}\times28=14$ ரூ. என்று போட்டு ஒரு நிமிஷத்

திற் கொண்டுபோகவேண்டிய தொகையைத் தெரிந்துகொள்வான். ரூபா 14 கொண்டுபோனால் மிச்சமாய்ப் பணம் நிற்குமென்று தெரிகிறது. சென்ற மாதத்தில் இதே கணக்கை நாம் பகுதி 5 ஆம் ஸ்டாண்டர்ட்டுப் பையனுக்குக் கொடுத்தபோது ரூ. 43—8—0 என்று விடையளித்தான்!

(2) ஒரு பாரம் ரூ. 23—5—4 வீதம் 179 பா. 13 ம 7 வீ 33 ப. உப்பின்விலை யாதென்றால், 180 பா. உப்பின் விலையைக்கணக்கிட்டு, விடையை ஒருவாறுதெரிந்துகொள்ளலாம்.

(3) மணங்கு ரூ. 12—4—8 வீதம் $2\frac{3}{4}$ மணங்கு பிடித்த 26 டப்பாக்களின் நெய் விலை என்ன?

ஒரு டப்பா 3 மணங்கு நெய் பிடிப்பதாகவும், மணங்கின் விலை ரூ. 12 ஆகவும் எண்ணி, 25 டப்பா நெய்யின் விலையைச் சுலபமாய்க் கண்டுபிடித்து ($3\times12\times25=900$), வந்த விடையைச் சரியான விடைக்கு ஓர் அடையாளமாக வைத்துக்கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

## PHYSICAL EXERCISE

## தேகாப்பியாசம்

சிறு பிள்ளைகளின் தேக வளர்ச்சிக்கும் மனோசுகத்திற்கும் தேக அப்பியாசம் இன்றியமையாதது. தேக அப்பியாசம் இல்லாவிட்டால் இரத்தம் சரியாய்ப் பரவாது. தசைநார்கள் பலப்படாது. நன்றாக ஜீரணமாகாது. மனோப்பியாசம் செய்வதற்கேற்றவாறு தேகாப்பியாசமுஞ் செய்துவர வேண்டும்.

சாதாரணமாக நமது உடலும் மனமும், ஒன்றுக்கொன்று நகமும் சதையும் போல் சம்பந்தப்பட்டே இருக்கின்றன. ஆதலினால் மேற்சொன்னவைகளில் ஏதாவது ஒன்று பலஹீனப்பட்டால் மற்றவைகளும் பலஹீனப்படும்.

நம் தேசத்தில், பாடசாலைகளிற் பயின்றுவரும் மாணவர்கள் தினம் குறைந்தபக்ஷம் 5, 6, மணிநேரம் வேலைசெய்து களைத்துப்போகின்றனர். அதன்பிறகு குறைந்தது அரைமணி நேரமாவது தேகாப்பியாசம் செய்ய நம் பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும் (செய்விக்க வேண்டும்).



தேகாப்பியாசம் வழக்கமாகச்செய்துகொண்டு வந்தால், அப்பிள்ளையின் முகம், கால்கள், மார்பு, முதலியவைகள் நன்றாக வளர்வதுந் தவிர ஒருவித தேஜஸும் உண்டாகின்றது. தவிர தேகாப்பியாசம் செய்வதால், அப்பியசிக்கும் அவ்வேளையில் நம்முடைய மற்ற மனக்கவலைகள் நீங்கி, வேறு யாதொரு வேலையிலும் மனம் நாடாமலிருக்கிறது.

தேக அப்பியாசம் செய்து வருவதால் நல்ல சுறுசுறுப்பும், ஒழுங்கும் ஏற்படுகின்றது.

இப்படித் தேக அப்பியாசம் செய்வதில் எல்லா அவயவங்களுக்கும் வேலைகொடுக்கவேண்டும். தினந்தோறும் பழகி வரவேண்டும். எக்ஸர்சைஸ்கள் (Exercise) படிப்படியாகக் கஷ்டமாயிருக்க வேண்டும். மிகக் கடினமான அப்பியாசங்களாக இருக்கக்கூடாது. பிள்ளைகளின் வயதுக்கும் தேக அமைப்புக்கும் ஒத்திருக்கவேண்டும். செய்யும் அப்பியாசங்கள் பார்வைக்கு லக்ஷணமாக இருக்கவேண்டும். உடம்பு அசௌக்யமான பிள்ளைகளை ஒரு போதும் தேகாப்பியாசம் செய்யும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது. தேகாப்பியாசம் காலை 7 மணிக்குள்ளும், மாலை $5\frac{1}{2}$ 6 மணிக்குமேலும் செய்யலாம். இக்காலங்களே அதற்குத் தகுந்தகாலங்களாம். இவற்றுள்ளும் பிந்திச்சொல்லியிருப்பது உத்தமம். தேகாப்பியாசம் செய்யுமிடமானது (Play ground) சற்று வெட்டவெளியா யிருக்கவேண்டும்; தரை கெட்டியானதா யிராதிருக்க வேண்டும். அப்படியிருந்தால் அந்தச்சிற்றிடத்தை மணலைக்கொண்டு நிரப்பிப் பழக்கவேண்டும்.

ஒரு அப்பியாசம் ஆரம்பிப்பதற்கு முன்னமே அந்த அப்பியாசம் எந்தெந்த அவயவங்களுக்குச் சம்பந்தப்பட்ட தென்றும், அதன் பிரயோஜனத்தையும், உபாத்தியாயர் பிள்ளைகளின் முன் எடுத்துச் சொல்வதுடன் தானும் ஒருதரம் மாதிரி அப்பியாசமாக (Model) பிள்ளைகளின் முன் செய்துகாட்ட வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் நடுவில் போதுமான இடம் விட்டிருக்க வேண்டும்.

உபாத்தியாயர் ஏககாலத்தில் பிள்ளைகள் எல்லோரையும் பார்க்கும்படியான இடத்திலிருந்து கட்டளை (Caution) கொடுக்க வேண்டும். கட்டளைக்குத்தகுந்தபடி பிள்ளைகள் செய்கிறார்களா என்பதை, எல்லாப்பிள்ளைகளையும் ஏககாலத்தில் கவனித்துப்பார்த்துக்கொள்ளும்படியான சக்தி உபாத்தியாயர்களுக்கிருக்க வேண்டும். எச்சரிப்பு கொடுப்பதில் குரலை உயர்த்தி எந்தப்பதத்தைச் சொல்லவேண்டுமோ, அந்தப்பதத்தைக் குரலை உயர்த்திச் சொல்லியும், எந்தப்பதத்தைக் குரலைத் தாழ்த்திச் சொல்லவேண்டுமோ, அவ்விடத்தில் தாழ்த்தியும் சொல்லவேண்டும். உதாரணமாக, (1) Kneels raise, Kneels lower, (2) Head to the right turn, Head to the front, Head to the left turn, Head to the front. (3) Eyes front, & so on.

ஒரு அப்பியாசத்தைக் குறைந்தது 3 தடவையாவது செய்விக்கவேண்டும். கட்டளையை அதிகமாக உரத்துச்சொல்லாமலும், வகுப்புப் பிள்ளைகளுக்குக் கேட்கும்படியாகவும் சொல்லவேண்டும். ஒவ்வொரு அப்பியாசம் செய்தவுடன் சற்றுப்பிள்ளைகள் இளைப்பாறும்படி சிலநிமிஷ நேரம்விட்டு, மற்றொரு அப்பியாசத்திற்கு (Caution) கொடுக்கவேண்டும்.

சரீர அப்பியாசத்தினைச் சாதாரணமான சிறு பிள்ளைகள் மாத்திரமல்ல, சிறியவர்களும் பெரியவர்களும் செய்துவருவதே மிகவும் நலமான காரியம். ஆனால் எல்லாப்பெரியவர்களும் அதாவது எல்லா மனிதர்களும் (Physical Exercise) செய்யவேண்டுமென்பது கட்டாயமன்று. தவிர அம்மாதிரி செய்துவருவதும் ஜனங்களுக்குக் கூடாத விஷயமாக ஏற்படுகிறது. ஆனால் அவர்கள் மட்டும் செய்யவேண்டியதில்லையோ வென்றால், அவர்களும் செய்யத்தான் வேண்டும், செய்தும் வருகிறார்கள். எப்படியெனில், ஒரு மனிதன் விறகு வெட்டிப்பிழைத்து வருகிறான். இவனுக்கு இந்த அப்பியாசமே போதுமானது. இதுபோலவே இன்னொருவன், மஞ்சளைச் சல்லித்துச் சரக்கு உண்டாக்குகிறான். மற்றொருவன் ஏற்றம் இறைக்கிறான், மற்றொருவன் ரிக்ஷாடிராலி, முதலிய வண்டிகள் தள்ளிக்கொண்டு செல்லுகிறான். மற்றவன் சுவர்கட்டுவதற்கு மண்ணைக்குழைத்தும், கற்களைத்தூக்கியும் தேகப்பிரயாசையுடன் வேலைசெய்கிறான். மற்றொருவன் குதிரைதேய்க்கிறான். மற்றொருவன் (Engine) க்கு கிணற்றிலிருந்து (Pipe) மூலமாக தண்ணீர் குடிக்கிறான். மற்றொருவன் கால்நடைகளுக்கு, பட்டை இடித்து நார்செய்து கயிறு திரிக்கிறான். ஒருவன் சம்மட்டி யடித்துக் கொல்லன்வேலை செய்கிறான். இம்மாதிரியாக எல்லா மனிதர்களும் தங்கள், தங்கள் சக்திக்குத்தகுந்தபடியும், தொழிலுக்கும், ஜாதிக்கும் தக்கபடியும், வறுமைக்குத்தக்கபடியும் வேலைசெய்து வருகிறார்கள். இவைகளும் ஒருவிதமான அப்பியாசங்களே யல்லாமல் வேறல்ல. சில கனவான்கள் தங்கள் கச்சேரி காரியம் ஆனபின்பு, (Foot Ball, Tennis) முதலான விளையாட்டுகளுக்குப்போகிறார்கள். இதுவும் ஒருவித (Physical Exercise) தான். இவ்வகையில் யாதொன்றிலுஞ் சேராமல், நன்றாகச்சாப்பிட்டுக்கொண்டு வீட்டிலிருப்பவர்களுக்கு நோய் கட்டாயம் அணுகும் என்பதில் தடையில்லை. அதுபற்றியே, "பாடப்பாட இராகம் படுக்கப்படுக்க ரோகம்" என்னும் பழமொழியும் வழங்குகிறது. அதாவது யாதொரு வேலையுமில்லாமல் சும்மா இருக்கும் சோம்பேறிகள், ஜீரணசக்தியிழந்து நோயாளிகளாகிறார்கள்.

ஆண்களுக்குத் தேகஅப்பியாசம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவுபெண்களுக்கும் இன்றியமையாததெனச் சொல்லலாம். (உதாரணமாக) நம் இந்தியதேசத்துப்பெண்கள் பெரும்பாலும் பிரசவகாலத்தில் ஆபத்துக்குட்பட்டுச் சிலர் பிழைக்கிறார்கள், சிலர் மரிக்கிறார்கள். ஆனால் இருப்பதும் இறப்பதும், நம்செயல் அல்லா விடினும் "இறுமுயிர்க்கும் ஆயுண் மருந்தொழுக்கல் தீதன்றால், அல்லன போலாவனவுமுண்டு சில" 'என்ற



படி அதாவது ஒரு பிரஜை சாகும் தறுவாயிலிருந்தாலும் நாம் மருந்துகொடுக்கிறோம், அந்த மருந்தால் நோய் அனுகூலப்பட்டாலும்படலாம் அல்லது அந்த மருந்தால், இந்த உலகத்தை மறந்தாலும் மறக்கலாம். ஆனால் கர்ப்பகாலத்தில் சற்று தேகஅப்பியாசங்கள் செய்து வந்தால் சற்று சுகமாகவே பிரசவிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, ஓர் ஏழை ஸ்திரீயும், நல்ல செல்வவான் வீட்டு ஸ்திரீயும் கர்ப்பவதிகளாயிருக்கிறார்களென வைத்துக்கொள்ளுவோம். இவர்களை ஷை விஷயத்தில் எடுத்துப் பேசுமளவில் இரண்டாவதாக எடுத்துச்சொன்ன பெண்பிள்ளையால் டாக்டர்கள் பிழைக்க இடமுண்டு. தவறினால் அவள் புருஷன் வேறு ஒரு மாமனாரைத்தேடிக்கொள்ளத்தக்க சமயமுமாகிறது. முதலிற் கூறிய பெண்பிள்ளையின் நிலைமையிலிருக்கிறவர்களுக்கு, கடவுள் கிருபையால் அம்மாதிரியான விபரீதங்கள் வரக்காரணமில்லை. ஆனால் இதன் அர்த்தமானது எல்லாரும் ஏழையாயிருக்க வேண்டுமென்பதல்ல. மற்றென்னவெனில், பின்னால் விவரிப்போம். அதாவது முன்னால் சொல்லப்பட்ட ஸ்திரீயானவள், தனது பூர்ண கர்ப்ப சமயம்வரை தேக உறுப்புகளுக்கு ஓயாதுவேலைகொடுத்து வருகிறார்கள். அம்மாதிரி வேலைசெய்வதால் ரத்த ஓட்டம் சரியாய் உண்டாகிக் கர்ப்பத்துக்கும் கர்ப்பணிக்கும், கஷ்டமில்லாமல் பிரசவமாகின்றது. இதற்கு மாறுபாடாகக் கனவான் வீட்டு ஸ்திரீகள் 4 மாதம் கர்ப்பணியாவதற்கு முன்னமே, அது முதல் பிரசவம் வரை—தனக்கு ஆசையாயுள்ள எல்லாப் பதார்த்தங்களையும் நன்றாய்த்தின்று ஜீரணமாவதற்குக்கூட வழியில்லாமல் செய்துகொள்ளுகிறார்கள். தவிரவும் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு நகர்வதில்லை. அவ்வாறில்லாமல் அந்தப் பெண்ணுக்கே சிறிது உலாவவேண்டுமென்ற எண்ணமிருந்தாலும், வீட்டிலுள்ளோர்கள், அதற்கிடங்கொடுப்பதில்லை. இப்படித்தாமே உடம்பைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

நிற்க - சில ஸ்திரீகள் பருத்தியைப்பஞ்சு செய்தும், கோலாட்டம், கும்மி முதலிய அப்பியாசங்கள் செய்தும், அவயவங்களுக்கு வேலைகொடுத்து வருகிறார்கள்.

இது நிற்க - சில மிருகஜாதிகளுக்கும் தேகப்பயிற்சி வேண்டுமெனத் தெரிகிறது. அதாவது, ஒரு. குதிரையை லாயத்தில் போட்டு பின்கால் இரண்டையும் இழுத்துக்கட்டிவிடுவதால், அந்தக் குதிரையானது உற்சாகமுள்ளதாகவும், சுறுசுறுப்புடையதாயும் காணப்படும். இந்தப்பிராணிக்கு இதுவே ஏற்றபயிற்சியாகவும் தேகமுயற்சியாகவு மிருப்பதாகத்தெரிகிறது.

நிற்க - நாய்க்குட்டிகளைச் சிறு குட்டியாயிருக்கும்போது, ஒரு அடி ஆழமுள்ள ஒருமண் குழிவெட்டி அதில் வைத்துவிடுகின்றனர். அந்தக் குட்டியானது மேலேறி சமதரைக்குவர அநேக தரம் ஏறி, ஏறிக்கடைசியில் வருகின்றது. இப்படித் தினந்தோறும் விடுவதால் அதன் கால்கள் நீண்டும்,

வயிறு ஒடுங்கியும் பார்வைக்கு லக்ஷணமான நாயாவதுடன் யாதொரு வியாதியுமில்லாமல் சரிவர நன்றாக வளர்ந்து வருகிறது. தவிர சாதாரண நாய்கள் வேட்டைக்கு உபயோகமாவதில்லை. ஏனெனில் சரியான பழக்க மிருந்தும் அதன் அவயவங்களுக்குச் சரியானவேலை யில்லாமையே காரண மாகும்.

இது நம்மவர்கள் பெரும்பாலும் மலஜலபாதைக்குச் சுமார் 1 மைல் தூரம்போய் விட்டுவருவதுண்டு. அப்படிப்போவதால் ஜீரணசக்தி உண் டென்பது நன்குதெரிகிறது. அந்த ஜீரணசக்தி 1 மைல்தூரம் நடந்தால் உண்டாயிற்றென்றும் நன்குதெரிகிறது. இவ்விதமாக நடப்பதும், வேறு விதமான அப்பியாசஞ் (Exercise) செய்வதும் உடம்புக்கு ஆரோக்கியமா யிருக்கிறது.

இவ்விதமாகவே ஒரு கன்றுக்குட்டி எவ்வளவு பால்பருகுகிறதோ, அவ் வளவு பாலே மற்றொரு கன்றுக்குட்டிக்கும் விடலாம். இவ்விரண்டுள் ஒன் றைக்காட்டில் மேயவிட்டுவிடலாம், மற்றொன்றைக் கட்டிப்போட்டு நல்ல புல்போட்டுவரலாம். இவ்விரண்டில் முன்னால் கூறியிருக்கும் கன்றானது நல்ல வலிவுள்ளதாயும் தேகலக்ஷணமுடையதாயும், சுறுசுறுப்புப் பொருந் தியதாயும் காணப்படும். பின்னால் கூறியிருக்கும் கன்று பெருமயிர் முளைக்கப்பெற்று அவலக்ஷணமாகிவிடும். ஏனெனில் முன்னால் சொன்ன கன்று வெகு கொஞ்சதூரம்போய் அவயவங்களுக்கு வேலையிடுகின்றன. ஆனதால் அது நல்ல வளர்ச்சிக்குக் காரணமாகின்றது. இதுபற்றியே நம்மவர்கள் கன்று மேய்வது நல்லது என்று சொல்லுகிறார்கள்.

இப்படிப் பகுத்தறியும் சக்தியில்லாத மிருகங்களுக்கும் தேகஅப்பி யாசம் இன்றியமையாததாயும், பெண்டுகளுக்கும் இன்றியமையாததாயு மிருக்கையில் ஆண்களான நமக்கு அது இன்றியமையாதது என்று சொல் லவும் வேண்டுமோ? சிறுபிள்ளைகள் வளர்ந்து மனிதர்களாகி நம்மைப் போலாகுபவராதலால் நம் பாடசாலை மாணவர்களுக்கு தேகஅப்பியாசம் மிகவும் அத்தியாவசியமானதே. பிள்ளைகளுக்கு ஏககாலத்தில் சுறு சுறுப் புடன் அவரவர்கள் வயதுக்குத்தக்கபடி அப்பியாசங்கள் கொடுத்து, பிள்ளை களை புஷ்டியான வாலிபர்களாக்கி விடுவார்களென்று, உறுதியாய் நம்பும் உங்கள் அன்பனை

S. N. கிருஷ்ணன்

3rd. Asst. Caste Elementary School, Perundurai.

---

குறிப்பு:—இவ்வியாசம், பெருந்துறையில் ஏப்ரல்மீ 10உ நடந்த உபாத்திமைச்சங்கத்தில் S. N. கிருஷ்ணஐயரவர்களால் வாசிக்கப்பெற்றது.

# READING

## வாசகம்

சென்ற நவம்பர் மாதத்தில் "வாசகம்" என்னுந் தலைப்பின் கீழ் யாம் எழுதிய விஷயமும், அதற்கு நமது நண்பராகிய பரி மணப் பல்லவராயர் அவர்கள் எழுதிய மறுப்பும், "வாசகப் பாடத்தின் ஆராய்ச்சிக்கோர் ஆராய்ச்சி" என்னும் விடையும் (9-வது சஞ்சிகை பார்க்க) நமது 'சற்குருவில் வெளிவந்திருத்தல் அனைவருக்குந் தெரிந்ததன்றே? அந்த "ஆராய்ச்சிக்கோர் ஆரா ய்ச்சி" என்னும் மறுப்பின் கண்டனத்துக்கு நமது நண்பராகிய பரிமணப்பல்லவராய ரவர்கள் சிரமப்பட்டுப் பின்னும் ஒரு கண் டனம் எழுதியனுப்பியுள்ளனர். அதை அப்படியே வெளியிடக் கூடாமையாயிருப்பதற்காக மிகவும் விசனிக்கின்றோம். அப்படியே வெளியிடாது நிறுத்தவேண்டியதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவைகளில் முக்கியமானவை:—நமது பத்திரிகையில் இவ்வித விரிந்த தர்க்கங்களை வெளியிடுதற்குப் போதுமான இடமில்லா மையொன்று. நமது நண்பர் அதில் எடுத்துக்கூறிய விஷயங்கள் பல திறத்தனவாயிருத்தலால் அவைகளை யெல்லாம் எடுத்துரைக் கின், அரித்து எடுக்கவேண்டிய சில நுண்ணிய விஷயங்கள் மறைபட்டுப் பயனற்றுப்போமே என்னும் வருத்தம் ஒன்று. அவர் கண்டனம் கண்டுவை (=கற்கண்டுவை) யொத்து இனிமை யாயிருந்தும் இவ்விரண்டு முக்கிய காரணங்களை முன்னிட்டு அதனை அப்படியே வெளியிடாது அதன் முக்கியாம்சங்களை ஒரு வாறு எமது சமாதானத்துடன் எடுத்துக்காட்டுகின்றோம்.

தொடர் முறைப்போதனையைப்பற்றி, விரைவில் தனியே ஒரு வியாசம் எழுதப்போகின்றமையால் அப்பொழுது பல்லவ ராயரவர்கள் இம்முறையைப்பற்றிக் கூறியவற்றிற் கெல்லாம் பதில் தோன்றும். இப்பொழுது பொதுமுறையையும் சிறப்பு முறையையும் கலந்து ஆராய்ச்சி செய்வது தக்கதன்று.

சில தினங்கட்கு முன்னர், 1913-14 ஆம் வருடத்திய வித்தியா விஷயமான ரிபோர்டுகளிற் சில வெளியேறின. அப்படி வெளியேறி வந்த ரிபோர்டுகளால் ஒவ்வொரு மாகாணத்திலும் எலிமெண்டரி கல்வியைப்பற்றிய கவலை நிறைந்திருப்பதாகத் தெரியவருகின்றது. இக்கவலையே பலர்க்குச் சோர்வையுண்டு பண்ணுகிறது. இக்கவலையுஞ் சோர்வும் தென்னிந்தியராகிய நம்மைவிட்டு நீங்கவில்லை. இரண்டொரு மாதத்திற்குமுன் வெளிவந்த ரிபோர்டினால் எலிமெண்டரி பள்ளிகள் நூற்றுக்கு மூன்றேவீதம் அதிகரித்திருப்பதாக விளங்குகிறது. அதிகரிப்பு அதிகமாயிராது இவ்வளவு குறைவாயிருத்தற்குக் காரணம் யாதாயிருக்குமென்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? எம்மைக்கேட்டால் ஊராருக்குக் கல்வியினிடத்தும் கல்விகற்கும் தமது பிள்ளைகளினிடத்தும் அதனைப்போதிக்கும் ஆசிரியரிடத்தும் அன்பும் ஆர்வமும் சிரத்தையுமில்லாமையே பள்ளிகள் அதிகரிக்காதிருத்தற்குக் காரணம் என்பேம். இப்படி ஊராரால் அபிமானிக்கப்பெறாத பள்ளிகளில் ஒருவன் வாசிப்பதால் அவன் அடையும் பயன் எவ்வளவினதாயிருக்கும் என்பதனை ஆய்ந்தாய்ந்து பார்ப்போர் ஒருசிலரே. அன்னார்க்கே அதன் உண்மையுந்தோன்றும். நிற்க. அப்படிப்பட்ட பள்ளிகளில் கற்கும் மாணவர்களில் 4 ஆம் வகுப்பு வரையில் சோர்வுறாது கற்போர் வெகுசிலரே. அச்சிலரும் சிரமப்பட்டு ஐந்துவருடம் கற்ற வாசகபாட புத்தகங்கள் மூன்றேயாகும். (மூன்று வாசகபாட புத்தகங்களை முற்றும் நடத்தின பள்ளிகள் சில இடங்களில் அருமையாகவும் இருக்கின்றன.) இவ்வாசகபாடங்களைச் செவ்வையாகப் படிக்கவும் எழுதவுந் தெரிந்த பிள்ளைகள் அச்சிலரினுஞ் சிலரே. இவைகளைச் செவ்வையாகப் படிக்கவும் எழுதவுந்தெரியாதவனை எவ்வாறு வாசித்தவன் எனக்கொள்வது? அன்னானைக்கண்டால் எக்குடியானவனுக்கு மதிப்புண்டாகும்? குடியானவனுக்கு அப்பிள்ளையின்மீது மதிப்பில்லாமற் போவதோடு அவன் கற்ற கல்வியினிடத்தும் கல்விச்சாலையினிடத்தும் கல்வி கற்பித்த உபாத்தியாயரிடத்தும் ஏனைய அதிகாரிகளிடத்தும் மதிப்பு ஒழிந்தேபோகிறது. ஆனபடி



யினால் இவ்விதக்குறைவுபாடுகளை நீக்கவும், பிள்ளைகளுக்குக் கல்வியை யபிவிருத்திசெய்யவும் எல்லாப்பாடங்களிலும் முக்கிய பாடமான வாசகபாடத்தினை எடுத்துக்கொண்டு, அதற்குளதாகிய சிறப்பினையும், அப்பாடத்தினை நடத்தவேண்டிய முறையினையும் வரைந்தாம்.

இவ்வித சிறப்பினையுடைய இப்பாடத்தில் நமது நண்பருக்கு "ஊக்கம் இருப்பதாகத் தெரியவில்லை" என்று யாம் 208 ஆம் பக்கத்திற் கூறியதனால் அவருக்குத் தமிழில் ஊக்கமில்லையென்பது கருத்தன்று. அவருக்குத்தமிழில் ஊக்கம் இருப்பது உண்மையே. அதனைப்பார்க்க எமக்கு மகிழ்ச்சியும் உண்டு. அவருக்குத் தமிழில் ஊக்கம் இல்லாதிருப்பின் யாம் கூறிய விஷயங்களை வாசிக்கவும், ஆராய்ச்சிசெய்யவும், கண்டனம் எழுதவும் மனம் இடம் தந்திராது. அவருக்கு ஊக்கம் இருப்பதனாலேயே இவைகளையெல்லாஞ் செய்ய நேர்ந்தது. அவர் ஊக்கத்தினிடத்து எமக்கு மகிழ்ச்சியில்லையேல் அவர் கண்டனங்கட்குப் பதிலெழுத எம்மனம் ஒருப்பட்டிராது. யாம் கூறியதெல்லாம் வாசகபாடத்தில் ஊக்கம் இல்லையென்பதே. அவ்வாறு யாம் கூறியது தவறன்று. அப்பாடத்திற் ஜனிக்கவேண்டிய ஊக்கம் நம் நாட்டிலேயே இன்னும் ஜனிக்காதிருக்கையில் இவரிடத்து மாத்திரம் எங்ஙன் ஜனித்திருக்கக்கூடும்? இவரிடத்து ஜனிக்காமை எமக்கு வியப்பைத்தரவில்லை. நமது நாட்டில் ஜனித்திருக்குமாயின் நம் சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள் வெளிவந்திருக்கவேண்டாவோ? நம் சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள் எங்கே? ('சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள்' என்னும் பட்டப்பெயருடன் வெளிவந்தும் சிறுவர்களுக்குப் பயன்படாமற்போகும் புத்தகங்களும் உண்டு. யாம் அவைகளைக்கொள்ளேம்.) மேனாட்டில் இருப்பதுபோல நம்நாட்டில் புத்தகசாலைகள் இருக்கவேண்டாவோ? அத்தகைய பொதுத்தன்மைத்தாய புத்தகசாலைகள் எங்கே? இவைகளை உரிமையாகக்கொண்டிராத நாம் ஊக்கமுடையேம் என்று சொல்ல நாணவேண்டுமல்லவா?

வாசிக்குந் திறமையைப் பிள்ளைகளுக்கு விருத்திசெய்யும் பெருந்தொழிலானது நமது தலையின்மீது சுமைபோற் கிடக்கின்றது. அதனைச் சரிவரச்செய்து முடிக்கப் பலவித முயற்சிகளையுஞ் செய்யவேண்டுவது உபாத்தியாயர்களாகிய நமக்கு இன்றியமையாக் கடனாய் நிற்கின்றது. செய்யவேண்டிய முயற்சிகளுள் நம்மனத்தைப் பெரிதும் கவர்வன இரண்டே (1) சிறுவர்களுக்கான புத்தகங்களை வெளியிடுவதும் (2) வாசகபாடத்தைச் சரியான முறையின்படி நடத்துவதுமே. இவ்விரண்டினுள் யாம் கூறவந்தது வாசகபாடத்தைப்பற்றியே. ஆயினும், இவ்விடத்து யாம் வாசகபுஸ்தகத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூறுவாம். வாசகத்திற்கென்று தனியாகப் புத்தகம் இருப்பது எப்படி இயலுமென்று நமது பல்லவராயர் வியப்புறுகின்றார். ஆங்கில பாடத்திற்காகத் தனியாய் (Non-detail) என்னும் வாசகத்திற்கேயுரிய புத்தகங்கள் உண்டல்லவா? அதைப்போலவே நமது எலிமென்டரி பாடசாலைகளுக்குப் புத்தகங்கள் இருக்கவேண்டிய அவசியம் இல்லையோ? இருந்தால் நன்மை விளையாதோ? படிக்கப் படிக்க (1) வாசகத்தில் வேகமும் (2) பாஷையில் ஞானமும் (3) படிக்கும் பழக்கமும் (4) ஆனந்தமும் அதிகரிக்காவோ. இத்தகைய புஸ்தகங்கள் சென்ற 4 அல்லது 5 வருஷங்களுக்கு முன்னர்த்தான் இங்கிலீஷில் முதல் முதல் வெளிப்பட்டன. அவைகள் வெளிவருதற்கு உபாத்திமாருடைய தூண்டுதல் காரணமாயிருந்தது. அவர்கள் அத்தகைய புத்தகங்களுக்கு உபயோகத்தையும் செலவையும் உண்டு பண்ணினமையினால் வியாபாரிகள் புத்தகங்களை வெளியிடலானார்கள். ஒவ்வொரு வருஷமும் நூறு நூறாய்ப் புத்தகங்கள் பதிப்பிக்கப்பட்டுவருகின்றன. இத்தகைய புஸ்தகங்களை வெளியிடும் பெரிய கம்பனிகள் சற்றேறக்குறைய பத்துக்கு மேற்பட்டே யிருக்கின்றன. நமது பல்லவராயரவர்களுக்கு ஆங்கிலத்தில் சிறிது பயிற்சியிருப்பதால் அவர் லாங்மன் கிரீன் கம்பனியார் பிரசுரித்துள்ள Indian Reading Books உள் ஒன்றினை வாங்கி, அது எழுதப்பட்டிருக்கும் எளிய நடையைக் கவனித்துப் பார்த்து அதைப்போல நந்தமிழில் புத்தகளுண்டோவென்று தேடிப்பார்ப்பாராக.

தற்காலத்து வழங்கும் வாசக புஸ்தகங்கள் பெரும்பாலும் பாடபுத்தகங்களைப்போன்றே யிருக்கின்றன. அவற்றின் நடை



யென்ன, சந்தியென்ன, சிறுவர்கள் வாயில் நுழையாத கடின பதங்களென்ன! இவற்றையெல்லாம் பார்க்கில் சாதாரண பி..ஏக்குக்கூட அத்தமிழினை வாசித்து, அதனை யனுசரித்து எழுதுவது கடினமாயிருக்குமென்று தோன்றுகிறது. அத்தகைய புத்தகங்களை இளைஞர் பின்பற்ற வல்லுனரோ? அவைகளை வாசிப்பதால் பாஷையின் ஞானம் விருத்தியடையுமோ? மேனாட்டார் சிறுவர்களுக்கு எளிய நடையில் புத்தகங்கள் எழுதக் கீழ் நாட்டாராகிய யாம் கடின பதங்களையுடைய கடுமையான நடையிலெழுதுவானேன்?

தனியாக வாசகபாடம் என்று ஒரு பாடம் இல்லாமையினால் பலவிதத் தீங்குகள் உண்டாகின்றன. அமெரிகாதேசத்து வாசகமுறை நமது தென்னிந்தியாவுக்கேற்ற தன்றென்றார் நமது நண்பர். மரத்தடியில் களைத்துப் படுத்திருக்கும் குடியானவர்களுக்குத் தேசிங்குராஜன் கதையை யொருவன் வாசித்து அவர்களை ஆனந்திக்குபடி செய்வது, இம்முறையை யனுசரித்ததன்றோ? இப்படி வெளியிலிருப்பவர்களுக்கு ஆனந்த மூட்டும் இம்முறையை நாம் ஏன் நம்பள்ளிக்குள் கொண்டுவரலாகாது? வெளியிலிருப்பவரைப்போல நம்பிள்ளைகள் ஏன் ஆனந்திக்கலாகாது? இம்முறையை நம்பள்ளிகளிற் கைசெய்வதும் அதனால் நம்பிள்ளைகள் ஆனந்தம் அடையப்பார்ப்பதும் நம்முடைய முக்கியமான கடமையே. தேவாரம் பாடக்கேட்கையில் பண்ணின் மீதும் பண்ணினையுடைய பதிகத்தின்மீதும் அறிவு பதிந்திருத்தல்போல வாசகத்திற்குரிய பகுதியைப் பையனொருவன் வாசிக்கையில் அவன் வாசிக்கும் முறையிலும் அவனால் வாசிக்கப்படும் விஷயத்திலும் புத்தி ஆழ்ந்திருக்கவேண்டும் என்பதே எமது கருத்தாகும். அவ்வாறு அறிவினை வசப்படுத்தக்கூடிய புத்தகங்களாகவே வாசக புத்தகங்கள் இருத்தல் வேண்டும். தேயிலையைப் பற்றிய பாடமும் பசுவைப்பற்றிய பாடமும் குதிரையைப்பற்றிய பாடமும் அறிவினை வசப்படுத்துமோ?

நமது நண்பர் பாடபுத்தகமென்றும் வாசகபுத்தகமென்றும் புத்தகங்களைப் பிரித்தது சரியே. நாம் இதுவரை எழுதியது வாசகபுத்தகத்தைப்பற்றிய விஷயம். மற்றொருமுறை பாடபுத்தகத்தின் முக்கிய லக்ஷணங்களைப்பற்றி யெடுத்துரைப்பாம். அப்

போது கடினபதங்களுக்கு அருத்தஞ் சொல்லிக்கொடுக்கவேண்டிய இடத்தையும் விதத்தையும் உதாரண முகத்தால் விளக்கிக் காட்டுவோம்.

நாம் இதுவரை எடுத்துக்கூறிய விஷயத்தின் சங்கிரகம் வருமாறு:—

புத்தகங்கள்:—தமிழ்ப்பாடத்திற்கு இருவகைப் புத்தகங்கள் தேவை—(1) பாடபுத்தகம் ; (2) வாசகபுத்தகம்.

வாசகம்:—இருவகைப்பட்ட புத்தகங்களிலும் வாசகம் நடைபெறும். ஆனால் முறைமாத்திரம் சற்று பேதப்பட்டு நிற்கும். பாடபுத்தகத்துள்ள பாடங்களுக்கு அரும்பதவிளக்கம் முதலியன வேண்டும். அரும்பதங்களுக்குப் பொருளுரைத்தல் முதலியன முடிந்தபின்னர்த்தான் வாசகபாடம் இவ்விடத்து நடைபெறலாம். வாசகபுத்தகத்துள்ள பாடங்களை யெடுத்து அப்படி வாசகத்தினை நடத்தவேண்டிய அவசியமின்று, வாசகபுத்தகம் மிகவெளிய நடையிலே எழுதப்பெற்றிருக்குமாகலான். மேலும் வாசகபுத்தகத்து அடங்கியிருக்கவேண்டிய விஷயங்களும் மாணவர் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரத்தக்கனவாகவே யிருக்கவேண்டும்.

முக்கிய நோக்கம்:—செய்யுணடைக்குச் சங்கீதம்போல உரைநடைக்கு (வாசகத்திற்கு) வாசிக்குந்தன்மை அத்தியாவசிகமாயிருத்தலால் அப்பாடத்தோடு வேறுபாடங்களைக் கலவாது அதனைத் தனிப்பாடமாகவே நடத்தல்வேண்டும்.

நண்பருடைய தூண்டுகோலினால் யாம் இவ்வளவும் எழுத நேர்ந்தது. அதற்காக யாம் வந்தனம் அளிக்கின்றோம். அவர் இவ்விஷயத்திற் சிரத்தைகொண்டு, எமக்குத் தூண்டுகோலாய் நிற்க, ஆராய்ச்சி செய்ததுபோலவே யாம் எழுதும் ஒவ்வொரு விஷயத்திலும் ஊக்கங்கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ச்சி செய்து தமது அபிப்பிராயங்களை நமது 'சற்குரு'வின் வாயிலாக அறிவிப்பாரென்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

# காதலர்சோதனை

அல்லது

## மரித்தோர் பிழைத்தல்

## LAMB'S TALES - THE TEMPEST

223 - ம் பக்கத்துத் தொடர்ச்சி

"நேபில்ஸ் அரசரும் எனது கொடிய ஸஹோதரரும் இத்தீவின் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். புயற்காற்றை எழுப்பியதன் காரணம் இப்போது தெரிந்ததா?" என்று ப்ராஸ்பரோ சொல்லிக்கொண்டிருக்கும்போது ப்ரசண்டமாருதம் வீசியது, அந்த ப்ரசண்டமாருதத்தில் அகப்பட்டுக் கப்பலும் கப்பலிலுள்ளவர்களும் தவித்தது, கடைசியில் கப்பலிலுள்ளவர்களுடையகதி இவையாவற்றையும் தன் எஜமானரிடம் ஆதியோடந்தமாய்ச் சொல்ல ஆவல்கொண்டு ஏரியல் அவ்விடம் வந்தது. இப்பேய்கள் மிராண்டா கண்களுக்குப் புலப்படா. ஆயினும் ப்ராஸ்பரோ ஏரியலுடன் பேசும்போது அவள் என்ன எண்ணிக்கொள்வாள்? தன் தகப்பனார் தமக்குத்தாமே ஏதோ பிதற்றிக்கொள்கிறார் என்றல்லவோ அவள் கருதுவாள். அவ்வித ஸந்தேஹம் ஒன்றும் அவள் மனதில் ஜனிக்கக்கூடாதெனக் கருதி ப்ராஸ்பரோ தம் மாந்திரிக தண்டத்தால் மெதுவாய்த்தொட உடனே மிராண்டா அயர்ந்த நித்திரையில் அமர்ந்தாள்.

மிராண்டா தூங்கத் தொடங்கியவுடன் ப்ராஸ்பரோ ஏரியலைப்பார்த்து "உனக்கிட்ட வேலையை எவ்வாறு செய்து முடித்தனை?" என்றுகேட்டார்.

அக்கப்பலிலுள்ளவர்கள் தாங்கள் கனவிலும் கண்டுகேட்டறியாத அவ்வளவு ப்ரமாதமான புயற்காற்றைக்கண்டு நடுங்கிப்போனதையும், முதல் முதலில் கடலில் குதித்த பெர்டிநண்ட் ராஜகுமாரனைப்பற்றியும், அவன் அவ்வாறு ஸமுத்ரத்தில் குதிக்கக்கண்ட அரசன் தன் மகன் ஸமுத்ரத்துக்குப் பலியாயினனென்று எண்ணி சோகமுற்றதையும், மற்றும் அங்குநடந்த ஸகல விஷயங்களையும் ஸாங்கோபாங்கமாய் ப்ராஸ்பரோவுக்கு ஏரியல் விளங்கக் கூறிற்று. "ஆனால் பெர்டிநண்ட் என்னமோ உயிரோடுதான் இருக்கிறார். தம் தகப்பனார் கடல் சூழ்ந்திறந்தனரென்று நிச்சயஞ்செய்துகொண்டு அநேகால் துக்காக்ராந்தராய்க் கைகளைக் குவித்துக்கொண்டு அவர் இத்தீவின் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு ஒருவித கெடுதியும் ஸம்பவிக்கவில்லை. அவர் தரித்திருக்கும் உடைகள்மாத்திரம் ஸமுத்ர ஜலத்தில் நனைந்திருக்கின்றன வென்றாலும் அவைகள் முன்னிலும் அதிக ப்ரகாசமாக இருக்கின்றன."

"பேஷ், அதுதான் ஸரி, நான் சொல்லியவற்றில் அணுவளவுகூடத் தவறாமல் எல்லாவற்றையும் ஸாமர்த்தியமாய்ச் செய்துமுடித்தாய்? அவரை இங்கு அழைத்துவா, என் குழந்தை அவரைப்பார்க்கவேண்டும். அரசரும் என்னுடைய ஸஹோதரரும் எங்கு இருக்கின்றனர்?"

"பெர்டிநண்ட் தண்ணீரில் மூழ்கியதை நாம் நேரிற் கண்டோம். ஆயினும், ஓர் ஆசை, தேடிப்பார்ப்போம்! என்று அவர்கள் அவரைத் தேடி அலைகின்றனர். கப்பலிலிருந்தவர்களில் ஒருவராவது இறக்கவில்லை. ஆனால் ஒவ்வொருவரும் தாம் மாத்ரந்தான் தப்பிப்பிழைத்ததாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கப்பலும் அவர்களுக்குப் புலப்படாவிட்டாலும் துறையில் பத்ரமாயிருக்கிறது."

"ஏரியல், நீ மிகவும் ஸமர்த்தன். நிரம்ப புத்திசாலித்தனமாய் எல்லாவற்றையும் செய்துமுடித்தாய். நீ இன்னும் எவ்வளவோ வேலை செய்யவேண்டியிருக்கிறது?"

"இன்னும் வேலையா! தாங்கள் என்னை ஸ்வயேச்சையாயிருக்கும்படி விடுதலை செய்து விடுவதாக வாக்களித்ததை மறந்துவிட்டீர்கள் போலும். இதுவரைக்கும் தங்களுடைய மனம் கோணாமல் நம்பிக்கையாய்த் தாங்களிட்ட வேலைகளையெல்லாம் சிறிதும் தவறுதலின்றி செய்து வந்திருக்கிறேன்; இதுவரைக்கும் நான் தங்களிடம் பொய்ப்புரட்டான வார்த்தையொன்றும் பேசியறியேன்: பாதிராத்ரியிலும் பன்னிரண்டு நாழிகையிலும் எப்போதாயினும் ஸரி, நீர் கட்டளையிட்டவுடன் நான் சிறிதும் முணுமுணுப்பின்றி உடனே எவ்வேலையையும் செய்து முடித்திருக்கிறேன். இவையெல்லாம் தங்களுக்கு ஞாபகமில்லையா?" என்று கேட்டது ஏரியல்.

"என்ன, உன்பாடு கொஞ்சம் கர்வம் அதிகமாய்விட்டதுபோ லிருக்கிறதே. பழையநாள் ஸமாசாரம் ஒன்றும் உனக்கு நினைவில்லைபோலும். நான் இத்தீவிற்கு வருமுன் நீ பட்டபாடு தெரியாது போலும். ஸிகோராக்ஸ் பெருமாட்டியை அடியோடு மறந்துவிட்டாயோ? அவள் பிறந்தது, வளர்ந்தது எந்தவூர்? சொல்."

"அவள் பிறந்துவளர்ந்தது ஆல்ஜியர்ஸ்."

"ஆர்ஜியர்ஸிலா பிறந்தாள்? அப்படியா ஸமாசாரம்? ஸரி. உனது பூர்வோத்தரங்களை நீ மறந்திருக்கின்றனையெனத் தோன்றுகிறது. சற்று உனக்கு ஞாபகப்படுத்தவேண்டும். இந்த ஸிகோராக்ஸ் கைதேர்ந்த சூந்யக்காரி; ஜனங்களெல்லாம் அவளைக்கண்டால் நடுங்குவார்கள். மனிதஸஞ்சாரமிருக்குமிடங்களில் அவள் வஸித்திருப்பது அபாயகரமானதென்றெண்ணி மாலுமிகள் அவளை நிர்மானுஷ்யமான இந்தத் தீவில் விட்டுப்போயினர். நீ கொஞ்சம் யோக்யனாதலால் அவளிட்ட குரூரமான ஏவல்களைச் செய்ய மறுத்தனை. ஆதலால் அவள் உன்னை மரப்பொந்தில் அடைத்துவிட்டனள். நீ அங்கேயே பரிதாபநிலைமையாய்க் கதறிக்கொண்டிருந்ததைக் கண்டு ஸஹியாமல் உன்மீது மனமிரங்கி உன்னை அந்தச் சிறையினின்றும் மீட்டேன்."



இவ்வாறு தான் சிறிதுகாலத்துக்குமுன் இருந்த ஸ்திதியை அறவே மறந்துபேசியதைப்பற்றி வெட்கமடைந்து ஏரியல் தன் எஜமானரைநோக்கி, "ஐயா, நான் கேவலம் நன்றி மறந்தவனாய்விட்டேன். இம்முறைமாத்ரம் சற்று பெரியமனது செய்து மன்னித்துவிடுங்கள். இனி ஒருபோதும் அடியேன் தங்கள் விருப்பத்துக்கு மாறாகச் செய்யமாட்டேன். இது உறுதி. பகலாயினும் ஸரி, இரவாயினும் ஸரி எந்த ஸமயத்தில் சொன்னாலும் நான் தாங்கள் காலாலிட்ட கட்டளையைத் தலையால் செய்துமுடிக்கிறேன்" என்று தலைகுனிந்து விஞ்ஞாபித்துக்கொண்டது.

"ஸரி, இனி அவ்வாறு நடந்துகொள். உன்னைச் சீக்ரத்தில் விடுவிக்கிறேன்" என்று ப்ராஸ்பரோ மேல் நடக்கவேண்டிய காரியங்களை அதனிடம் சொன்னார். உடனே ஏரியல் பெர்டிநண்ட் இருக்கும் திக்குநோக்கிச்சென்று, அங்கே அவன் முன்போலவே வ்யஸனத்திலாழ்ந்து கிடப்பதைக் கண்டது.

"யௌவன புருஷரே, புறப்படுங்கள். என்னுடன் வரவேண்டும். மிராண்டா உம்மைக் காணவேண்டுமென்று கூறுகிறாள். நான் செல்வழியே வாரும்" என்று சொல்லிவிட்டு ஏரியல் பாடிக்கொண்டே முன்னர்சென்றது. "உன்னுடைய தகப்பனார் ஸமுத்ரத்தடியில் ஸுகமாய் நித்திரை செய்துகொண்டிருக்கிறார். அவருடைய அஸ்திகளெல்லாம் பவழமாய் மாறிவிட்டன; அவருடைய கண்களிரண்டும் நல்முத்துகளாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவருடைய தேகத்தில் மாறுதல் அடையக்கூடிய அங்கங்களெல்லாம் கடல்நீரால் விலையுயர்ந்த நூதன வஸ்துக்களாக மாறிவிட்டன. ஸமுத்ரதேவதைகள் ப்ரதிநிமிஷமும் அவருடைய மரணத்தைப்பற்றி ப்ரலாபிக்கும் ஒலி இதோ என்காதில் விழுகிறது" என்னும் கருத்துடைய பாட்டை ஏரியல் பாடிக்கொண்டே சென்றது.

பெர்டிநண்ட் அதன் பாட்டைக் கவனித்துக் கேட்டான் அக்குட்டிப் பேய்த் தன் தகப்பனார் ஸமுத்ரத்தடியில் இறந்துகிடப்பதாகக் கூறுவதைக் கேட்டு அவன் ஆச்சர்யப்பட்டான். அவன் ப்ரமை நீங்கி ஏரியலின் பாட்டை அதிக கவனமாய்க் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டே அது போகும் வழியே போகலானான். ஏரியல் மிராண்டா, ப்ராஸ்பரோ இவர்களிருக்குமிடம் வந்து நின்றுவிட்டது பெர்டினண்டும் நின்றான். அவன் தனக்கெதிரே ஒரு பெரிய விருக்ஷத்தினடியில் ஒரு கிழவரும் அவருடன் ஒரு யௌவன மாதும் உட்கார்ந்திருப்பதைக்கண்டான்.

ப்ராஸ்பரோ தம் மகளைப்பார்த்து "மிராண்டா, அது என்னவஸ்து தெரியுமா?"

"அப்பா, அதுவும் ஏரியலைப்போன்ற பேய்களிலொன்றுபோலும். அது இந்தண்டையும் அந்தண்டையும் பார்ப்பதைப்பார். மிகவும் அழகாயிருக்கிறது. அது பேய்தானா?" எனக் கேட்டாள் மிராண்டா.

"குழந்தாய், அது பேயன்று நம்மைப்போலவே அதற்கும் உண்பது, உறங்குவது யாவும் உண்டு. நமக்கிருக்கும் உணர்ச்சிகளெல்லாம் அதற்கும் உண்டு. அந்த ஸுந்தரபுருஷன் கப்பலிலிருந்தவன். அவன் சற்று துக்கத்தால் முகம் வாடியிருக்கிறான். இல்லாவிட்டால் அவன் மிகவும் ரூபவானாயிருப்பான். அவன் தன் தோழர்களையும் பந்து மித்ரர்களையும் இழந்துவிட்டான் அவர்களைத் தேடித்திரிகிறான்."

"எல்லா மனிதர்களும் தன் தந்தையைப்போலவே நரைத்த மயிரும் சுளித்த முகமும் உடையவர்களென்று கருதியிருந்த மிராண்டா பெர்டிநண்டின் அழகிய தோற்றத்தைக்கண்டு அதிக ஆனந்தமடைந்தாள். தான் இதுவரைக்கும் கேட்ட விசித்ர சப்தங்களையும், அசரீரி வாக்குகளையும் பாட்டுகளையும்கொண்டு தானிருப்பது ஒரு மாந்த்ரிக ஸம்பந்தமான தீவு எனத் துணிந்த பெர்டிநண்ட் அழகே திரண்டு ஓர் உருவமெடுத்து வந்தது போலிருக்கும் மிராண்டாவைக் கண்டவுடன் அவளை அத்தீவில் வாஸஞ் செய்யும் தேவதையென்றெண்ணி பக்தி மரியாதையுடன் அவளுடன் பேசத் தொடங்கினான்.

உடனே மிராண்டா தான் தேவதை அல்லள் என்றும் இதர ஸ்த்ரீகளைப்போல் தானும் ஒரு ஸாமாந்ய ஸ்த்ரீதான் என்றும் கூறித் தனது சரித்ரத்தைச்சொல்லத் தொடங்குங்கால் ப்ராஸ்பரோ தடுத்துவிட்டார். அவர்கள் ஒருவரை யொருவர் பரஸ்பரம் காதலித்தனரென உணர்ந்து ப்ராஸ்பரோ மகிழ்ச்சியடைந்தார். ஆனால் பெர்டிநண்ட் மனதையும் அவனுடைய உண்மைக் காதலைப் பரிசோதிக்கும்வண்ணம் அவர் அவனைச் சிறிது கஷ்டங்களுக்கு உட்படுத்த உத்தேசங்கொண்டு அவனருகே சென்று கடுங்கோபங்கொண்டவர்போல் கடிந்து "நீ இந்தத் தீவை என்னிடமிருந்து அபஹரிக்க வேண்டுமென்ற துராலோசனை கொண்டு இவ்விடம் வந்திருக்கும் ஒற்றன். உன்னை ஸரியானபடித் தண்டிக்கிறேன். என் பின்னேவா. உன் கால், கை எல்லாவற்றையும் சேர்த்துக் குண்டுக் கட்டாய்க் கட்டிப் போடுகிறேன். கடல்நீர் தான் உனக்குப் பானம். உலர்ந்த சிறகுகளும், காய் கிழங்குகளும் தான் நீ புசிக்கவேண்டும்" என்றார்.

"அவ்வளவு ஸ்வலபமாய் நடந்துவிடக்கூடிய கார்யமா அது? என்னோடு ஒருகை பார்த்து ஸாத்யப்படாமற் போனால்தான் உனக்குக் கீழ்ப்படிவேன்." என்று பெர்டிநண்ட் தன் கத்தியை உறையினின்றும் எடுக்க ப்ராஸ்பரோ தன்னுடைய மாந்த்ரிக தண்டத்தால் அவனை இருந்த இடத்திலேயே ஸ்தாபனஞ்செய்துவிட்டார். அவன் கல்ஸதம்பம் போலானான்; இந்தண்டை அந்தண்டை அசையமுடியவில்லை.

இவ்வாறு தன் தகப்பனார் பெர்டிநண்டைத் துன்புறுத்தலைக் கண்டு ஸஹியாமல் மிராண்டா "தாங்கள் என்றைக்குமில்லாமல் இன்றைக்கு மாத்ரம் ஏன் இவ்வளவு க்ரூரமாயிருக்கிறீர்? அவரை அவ்விதம் துன்புறுத்த



வேண்டாம். அவருக்கு உத்தரவாதம் நான். நான் பார்த்த இரண்டாவது மனிதர் அவர். அவர் முற்றிலும் யோக்யரெனத் தோற்றுகிறது."

"வாயைமூடு. இனி இவ்விஷயத்தைப்பற்றி ஒருவார்த்தை எடு. உன்னை என்ன செய்கிறேன்பார். அவன் சுத்த அயோக்யன், திருடன். பொய்யன் அவனுக்காகப் பரிந்துபேச வந்துவிட்டனை. நீ காலிபனையும் அவனையும் தவிர வேறெவரையும் பார்த்ததில்லை. ஆகையால் அவனை மன்மதனென்று எண்ணி விட்டாய். மூடப்பெண்ணே, காலிபனுக்கும் இவனுக்கும் எவ்வளவு வித்யாஸமுண்டோ, அவ்வளவு வித்யாஸமுண்டு இவனுக்கும் இதர மனிதர்களுக்கும்" என்று ப்ராஸ்பரோ தன் மகளுடைய மனதைப் பரீக்ஷிக்கவேண்டுமென்று அதட்டிப்பேசினார்.

அதற்கு மிராண்டா, "எனக்கு அதிக ஆசையில்லை. இவரைவிட அழகான புருஷனைக் காணவேண்டுமென்று நான் இஷ்டப்படவில்லை" என்றாள்.

ப்ராஸ்பரோ ராஜகுமாரனைப்பார்த்து, "என்னுடன்வா, நான் சொல்கிறபடி கேட்டாகவேண்டும். வேறுவிதியில்லை. என் கட்டளைகளை நிராகரிக்க உனக்கு வல்லமை போதாது" என்றார்.

(இன்னும் வரும்)

## SYLLABUS OF LESSONS ON "TEMPERANCE"

## I Alcohol-Effects of Alcoholic Beverages on the Body

## மதுபான விலக்குப் பாடத்தின் பாடக்கிரமம்

### I. இலாகிரி - வெறியினைத்தரும் பானங்களைப் பருகுவதால் சரீரம் அடையும் பலன்

1. பீர் (beer) ஒயின் (wine) முதலிய சாராயங்களில் (spirits) இலாகிரி யுண்டென்று அல்லது மயக்கத்தினைத்தரும் சாராய சத்து உண்டென்று உணர்த்துவது.

நமக்குச் சாதாரணவுணவும் பானமும் உபயோகப்பொருள்களாய் இருப்பனபோல இந்த பீர், ஒயின், சாராயம் உபயோகப் பொருள்களாக விளங்காமற்போவதோடு அவை தேகத்திற்

குந் தீமையைத் தேடித்தரும் மதுவின் சத்தாகிய இலாகிரியைத் தமக்கேற்ற அளவுடன் கொண்டும் விளங்குகின்றன.

2. இலாகிரியின் குணத்தையும் உபயோகத்தையும் எடுத்துரைப்பது.

3. பீர், ஒயின், சாராயம் முதலியவற்றில் இருக்கும் சாராய சத்தின் அளவு இவ்வளவு என்று எடுத்துரைப்பது.

சாராயசத்தினை, ஜலம் கலவாமல், அப்படியே பருகுவது தவறென்றும், அப்படிச்செய்வதால் நோயும் கெடுதலும் அதிகமாக உண்டாகு மென்றும் அறிய வேண்டும்.

மதுபானங்களோடு சாராயத்தினைக் கூட்டுவதுபோல அதனைத் தண்ணீரோடு கலப்பதால் அதற்கு இயல்பாயுண்டாகிய தீக்குணம், முற்றுந்தேய்ந்து ஒழியாவிட்டாலும், சிறிது சிறிதாகத்தேய வலிவுகுறைபாடடைகின்றது.

4. சாராயசத்து கலந்த பானங்களைப் பருகுவதால் கீழ்க்குறிக்கப் பட்டுள்ளவைகளுக்கு ஊனம் உண்டாகின்றது என்று உணர்த்த வேண்டும்.

(i) தேக வளர்ச்சி மாறுபாடடைகிறது.

(ii) பிணியைத் தடுக்கும் தேகவலிவு சோர்வெய்துகிறது.

(iii) சரீரக்கட்டும் வேலைசெய்யும் ஆற்றலும் குறைவுறுகின்றன.

(iv) ஜீரணசக்தி நலிவடைகின்றது.

(v) சரீரத்துள்ள உஷ்ணம் தன்னளவிற் குறை வெய்துகின்றது.

(vi) சரீரத்தின் எல்லாக்கூறுகளையும் இராஜரீகஞ்செய்யும் மூளையும் சோர்வினைப் பெறுகின்றது.

(vii) உய்த்துணருஞ் சக்தியும் நுண்ணுணர்வும் தேய்வடைகின்றன.

5. சாராய சத்தினை அளவுகடந்து குடிப்பதால் விளையுந்தீமை (1) தேகக்கட்டுடைவது (2) மனவலி குன்றுவது (3) வாழ்நாள் தேய்வது (4) தேகசுகம் நீங்குவது ஆகிய இவையெனக்காட்டி உதாரண முகத்தால் விளக்க வேண்டும்.

## II EVIL CONSEQUENCES OF INTEMPERANCE TO THE INDIVIDUAL TO THE HOME, AND TO THE STATE

(For children over 12 only)

## II. மதுபானத்தால் தனக்கும், தன்குடும்பத்திற்கும், தன்தேயத்திற்கும் விளையுந் தீமைகள்

(12 - வயதுக்குமேற்பட்ட சிறுர்களுக்கு)

1. சாராயசத்து சேர்ந்த பானங்களைப் பருகுவதால் மனதிற்குஞ் சரீரத்திற்கும் கெடுதல் உண்டாவதன்றி ஒழுக்கத்திற்கும் விரோதம் உண்டாகின்றது. இவற்ருேடு பிறர்க்குந் தீமையை யுண்டுபண்ணுகிறது என்றறிவிப்பது.

2. எவ்வகைப்பட்ட மதுவையும் விலக்க வேண்டு மென்றும், களியாடி அறிவினை இழவாது சுயவறிவோடிருக்க வேண்டு மென்றும் போதிப்பது.

தீயொழுக்கங்களால் ஒருவனுக்குள்ள சுதந்தரம் நீங்குகிறது.

3. மிகுதியாக சாராயசத்தினைக் குடிப்பதால் உண்டாகுந் தீமைகளாவன :—

(i) விலைகொடுத்து நல்ல பொருளினை வாங்காது தீயதாகிய இதனை வாங்குவதால் திரவியம் நஷ்டமடைவதொன்று.

(ii) ஒளி நீங்குவது.

(iii) உத்தியோகஞ்செய்யும் சக்தி குறைவது; உத்தியோகமே யில்லாமற்போவது; தரித்திரம் மேலிடுவது.

(iv) தேகம் அசௌக்கியமடைவது; பிணிவருத்துவது. பைத்தியம் தொடர்வது.

(v) தனது கடமைகளைச் செய்யாது மறந்திருப்பது; சான்றோரால் மதிக்கப்பெறா திருப்பது. பாவம் விளைவது.

(vi) குடும்பம் சஞ்சலத்துடன் நசிப்பது; பெண்டிர் மக்கள் முதலியோர் பசியாலும் பிணியாலும், வறுமையாலும் அல்லலுறுவது.

4. சாராயசத்தினை மிகுதியாகக் குடிப்பதால் பிறர்க்குந் தேயத்திற்குந் தீமைகளைச் செய்தவனாகின்றான்.

மிகுதியாக இலாகிரிப்பொருளைக் குடிப்பதால் தனக்கும் தன் குடும்பத்திற்கும் தீமையைத் தேடிக்கொள்வதல்லாமல் பிறர்க்குந் தேயத்திற்குமே தீமையைப் புரிபவனாகின்றான். ஏழைகளுக்காகவும், குற்றவாளிகளுக் காகவும், பித்தர்களுக் காகவும் ஜனங்களுடைய பணம் ஏராளமாகச் செலவழிக்கப்படுகின்றது. அவர்களைப்பற்றியன்றோ ஜனங்கள் செலவழிக்க வேண்டியவர்களாகின்றார்கள். ஏழைகளாகவும், குற்றவாளிகளாகவும், பித்தர்களாகவும் மாறியவர்கள் இந்தக் குடியர்தானே? இப்படிச் செலவாவதால் உழைத்து ஈட்டும் ஜனங்கள் பலஹீனமடைகிறார்கள். தங்களுடைய சகோதரர்களை இப்படி யிழப்பதால் வலிவிலும் குறைபாடுறுகின்றார்கள்.

---

குறிப்பு:— இப்பாடக்கிரமங்களுக்கு விளக்கம் வேண்டியிருக்குமேல் வெளியிடப்படும். இப்பாடக்கிரமத்தினை எழுத எமக்கு ஆதாரவாயிருந்த ஆங்கில நூலுக்கும் அதனைச் சிரமத்துடன் எழுதிய கல்விச்சங்கத்தாருக்கும் யாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

---

## AN EXPERIMENT WHICH INTERESTED A CLASS
## வகுப்பிற்கு உற்சாகந்தந்த சோதனை

ஒருநாள் இராமன் என்னுஞ் சிறுவன் வெள்ளைவெளேரென்று உடுத்திக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வந்தான். அவனுடைய வெண்மையான உடையில் சில சுணைக்காய்கள் ஒட்டிக்கொண்டிருந்தன. அவற்றைப்பார்த்து உபாத்தியாயர் "இவைகள் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன், "சில புற்களின் முனையிலுண்டாகும் சிண்டுகள் இவை" என்று பதில் சொன்



னான். அதற்குள் மற்றொருவன், "விதைகள், விதைகள்" என்றான். அப்பொழுது உபாத்தியாயர், "அவசரப்படாதேயுங்கள்; இது வரையில் கவனித்துவந்த விதையின் (கொள்ளின்) வளர்ச்சியோடு ஒத்திட்டுப்பார்ப்போம். அது மெதுவாக விருந்தது; இது விரலில் தைக்கிறது; கைக்குக் கடினமாக விருக்கிறது" என்று கூறினார். அந்தச் சமயத்தில் சிறுவர்களிலொருவன், "இதற்குக் கொள்ளைப்போல மெல்லிய தோலிருந்தாலும் இருக்கலாம். அதனை நனைத்து ஊறவைத்துத் தோலை எடுக்க முயற்சிப்போம்" என்று மொழிந்தான்.

அப்படியே அநேக விதைகளை ஊறவைத்து மறுதினம் தோலை உரித்துப்பார்த்தார்கள். அப்படிப் பரீக்ஷை செய்ததில் அவர்கள் கண்டறிந்த விஷேடமாவன:—

1. உள்ளிருக்கும் பருப்பு மஞ்சள் நிறத்ததாகவும் கெட்டியானதாகவும் தினையைப்போன்றதாகவும் விளங்கினது ஒன்று.

2. கொள்ளைப்போல அப்பருப்பு பிளவுறாது ஒற்றையாகக் காணப்பட்டது ஒன்று.

இவ்விரண்டு விஷயத்தினையுங் கண்டறிந்த பின்னர் உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து, "இந்த விதையை நட்டு எவ்விதமான செடி முளைகிறதெனக் கண்டறியலாமோ?" என்றனர். உடனே பிள்ளைகள், "அப்படியே செய்யலாம்" எனக்கூறினர். பிள்ளைகள் சொல்லவும் உபாத்தியாயர் வாயகன்ற கண்ணாடிப் பாத்திரம் ஒன்றினுள் ஈரமான மையொற்றுங் காகிதத்துண்டொன்றினை யெடுத்து வைத்து அதில் விதையை நேராக வைத்தனர். பிள்ளைகள் அதனைக் கவனித்து வந்தனர்.

உபாத்தியாயர் பள்ளியில் இந்தப் பரிசோதனைசெய்து வருகையில் பிள்ளைகள் தம் வீட்டில் பரிசோதிப்பதற்காக வயலிலிருந்து விதைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். மூன்றாம் நாள் முளைவிட்டது. அதன் பின்னர் அச்சிறு செடி சற்றுப் பெரிதாக வளர்ந்து தொட்டியில் வைக்கப்பெறும் நிலைமையை அடையும் வரையில் கவனிக்கப்பட்டு வந்தது.

இந்தச் சோதனையின் பயன் வயலிலுள்ள சாதாரண புல்லினிடத்தும் கவனத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவ

தாக முடிந்தது. இவ்வித உற்சாகத்தினையும் மனக்கிளர்ச்சியினையும் இயற்கைப்பாடத்தில் உண்டாக்குவது நமது முக்கிய கடமையாகும்.

நமது கவனத்தை இழுக்கும் வேறு சில அம்சங்களை முடிவாக இங்கு எடுத்துரைப்பாம். அவை வருமாறு:—

1. விதையின் மேல் மூடியிலிருக்கும் கொக்கிகள் மிருகங்களுடைய உடலில் பற்றுதற்கும் அம்மிருகங்களின் மூலமாகப் பலவிடங்கட்குப் பரவுதற்கும் ஏதுவாக விருக்கின்றன.

2. பறக்கும் இலேசான விதைகளும் பரவுதற்கேதுவாகும் காரணத்தை யனுசரித்திருப்பனபோலப் புலப்படுகின்றன.

3. ஒற்றைப்பருப்பு இரட்டைப்பருப்பு விதைகளினின்று உற்பத்தியாகும் செடிகளுள் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசத்தினை எச்சரிக்கையுடன் குறித்தார்கள்.

4. முதலிற் குறித்த வித்தின் இலைகளையும் பின்மொழிந்த விதையின் இலைகளையும் ஒத்து நோக்கி அவைகளின் வடிவு முதலியவற்றின் பேதத்தினைக் குறித்தார்கள்.

## NO INFANT STANDARD!

## பாலர் வகுப்பு இல்லையே!

எலிமெண்டரி கல்வியை எல்லோரும் ஆசிக்கும்படி போதிப்பது முக்கியமாகும். அப்படி எல்லோரும் ஆசிக்கும்படி போதித்தால் அது எங்கும் பரவும். இப்படிப் போதிக்கவேண்டும் என்பதனையும் பரவவேண்டுமென்பதனையும் இப்பொழுது சில கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் உணர்கிறார்கள் என்று தெரியவருகிறது.

இரண்டொரு மாதத்திற்கு முன்னர், எலிமெண்டரி கல்வியை விருத்திசெய்யும் பொருட்டுச் சில மாகாணத்தார் சிற்சில இடத்தில் பள்ளிநேரத்தினைக் குறைத்துக்கொண்டதாக நமது சற்குருவில் அறிவித்தோமல்லவா? இப்பொழுது ஐந்து வருடத்ததாக இருக்கும் எலிமெண்டரி படிப்பினை, பாலர் வகுப்பை



நீக்கி, நாலுவருடத்திய படிப்பாக இருக்கும்பொருட்டு கொச்சி தர்பாரார் (Cochin Durbar) மாற்றியதாகத் தெரியவருகின்றது. இம்மாறுதலை அடுத்த டெர்மிலிருந்து பழக்கத்திற்குக்கொண்டு வருவார்களாம்.

முன்னர் யாம் பள்ளிநேரத்தைச் சுருக்கும்பொருட்டுச் சொன்னோம்; இப்பொழுதோ பாலர் வகுப்பையே எடுத்துவிட்டால் நலமாயிருக்குமென்று முறையிடுகின்றோம். "கின்டர் கார்டன் வகுப்பை" எடுத்துவிட்டால் நலமாயிருக்குமென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பாலர் வகுப்பு திருப்திகரமான வகுப்பாய்க் காணப்படவில்லை யென்றும், அதில் நடைபெறும் வேலையும் அவ்வளவு திருப்திகரமானதாக இருக்கவில்லை யென்றும், அவ்வகுப்பினைப்பற்றிப் பிள்ளைகளுடைய பெற்றோர்க்கும் மனத்திருப்தி கிடையாதென்றும் யாம் சொன்னால் தவறாகுமோ? அங்கு விளையும் பயனின் அளவினை யறிந்த பரீக்ஷாதிகாரிகள் எமது கொள்கையை அங்கீகரிப்பார்களென்றே நம்புகிறோம். அவ்வகுப்பினை அறவே எடுத்துவிட்டால் நன்மை விளையலாமென்று கருதுகிறோமேயல்லாமல் கல்விக்கு ஊனம் உண்டாகுமென்று கருதவில்லை.

பாலர் வகுப்பைப் பற்றிய விஷயத்தை யாம் இதுவரை எடுத்துப்பேசியதில்லை. இப்பொழுது, கின்டர் கார்டன் முறைப்படி எழுத்துக்களைப்போதிப்பதால் பெரும்பாலும் நற்பயனொன்றும் தெரியக்கிடவாமையால் பழைய முறைப்படி சிரமப்பட்டு எழுத்துக்களைப் போதிப்பதால் வரும் நஷ்டம் ஒன்றும் இராது என்று சொல்லத் துணிந்தோம். இதனைக் கல்வியிலாகா தலைவர்கள் அன்புடன் கவனித்து மாறுதலை உண்டுபண்ணும்படி அவர்களை வேண்டுகிறோம். கொச்சி தர்பாரார் செய்துள்ள ஏற்பாடு நமக்கு வழிகாட்டியாயிருப்பதோடு முடிவிலும் நற்பயனையுமளிக்குமென்றும் நம்புகிறோம். இவர்களுடைய முறையை ஆதாரமாகக்கொண்டு நமது பாலர்கள் வருடாந்தத்திற்குள் பாலபாடம் பாலசிக்ஷை என்னும் புத்தகங்களுள் ஒன்றினைப்படிக்கும் ஆற்றலைப் பெறப்பார்ப்போமாக.

# STORY - TELLING

## கதை சொல்லுதல்

### இரண்டாம் சஞ்சிகை 48-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிற கேள்விகளுக்கு விடைகள்

I. கதை சொல்லும்போது, உபாத்தியாயர் இடை இடையே (1) சம்பாஷிப்பதும், (2) புத்திசாலித்தனமும், சுலபமுமான கேள்வி கேட்பதும், இன்றியமையாதன என்பது என் மனப்பூர்வ அபிப்பிராயம்.

[எங்ஙன் எனின்:—கதைகள் (1) சித்திரமூலயமாகவே கற்பிக்கப்படவேண்டும் (2) இடையிடையே கதாசம்பந்த சம்பாஷணையும், கேள்விகளும் நிலவவேண்டும் என்னும் இருவிஷயங்களையும் நமது நண்பர் பலரும் நன்கு உணர்ந்தேயிருப்பார்கள். இஃது இங்ஙனமாக, சிலர் சித்திர சம்பந்தமாயும், கேள்வி "சம்பாஷணையுடனும் கற்பித்தல் தவறெனக்கருதி' உபந்யாசகர் போன்று தங்களுக்குத் தெரிந்த அபிநயத்துடனும், உற்சாகத்துடனும், ஓரே மூச்சாய்க் கதைசொல்ல ஆரம்பித்து நடத்துகிறார்கள். இது வீண் வேலையாய் முடிகிறது. ஏனெனின், கதையில் நிலவும் "முக்கிய அம்சங்களை "சித்திர மூலத்தாலன்றிச்சிறார்கள், நமது வாய்ப்பிரசங்கத்தால் உணரார்களென்பதும், முக்கியமான அம்சம் கவனிக்கப்படாதபொழுது, அக்கதை சிறார்மனத்தில் நெடுநாள் தங்காமல், சிதறிவிடும் என்பதும், மனத்திற் றங்கா விடிற் கதை மூலயமாய்க் கற்பித்த நீதியும் கனவாய் முடியும் என்பதும் பலரும் அறிந்த விஷயங்களேயாம்". இதுபற்றியன்றே நமது காருண்ய துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு நிலவும் கதாபுஸ்தகங்கள் சித்திரத்துடனேயே சஞ்சரிக்கின்றன.]

II. III. and IV. விஷயங்கள், கனம். P. பரிமணப்பல்லவராயர் அவர்களாலேயே பொருந்தக் கூறப்பட்டிருக்கின்றன.

V. சிறாருக்குக் கூறும் "கதைகள்"யாவும் துக்ககரமான முடிவையே உடைத்தாயிருக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

[ஏன் ஏனின்:—மாணவர்க்கு இன்பம் விளைவித்தலே கதை சொல்லுவதன் முக்கிய நோக்கம் என்பது உண்மையே. ஆனால், நாம் காலப்போக்கின் பொருட்டுக் கதை சொல்லுமமையதன்றோ, மங்களம் முதலிய, சந்தோஷ முடிவுடைய கதைகளைக் கூறவேண்டும். அங்ஙனமின்றி, பிள்ளைகளின் "சகவாஸ தோஷ துர்க்குணத்தை மாற்றவும், சிறார்கள் பிற்கால உலக நடவடிக்கையிலும், ஸ்கூலிலும், நடந்துகொள்ளும் மார்க்கத்தை வலியுறுத்தும்பொருட்டும் அல்லவா உபாத்தியாயர் என்னும் தோட்டக்காரர், பிள்ளைகளின் மனம் என்னும் புலத்தில், நீதி என்னும் விதையை, கதை என்னும் கருவியால், செலுத்துகிறார். அத்தகைய கருவியாகிய "கதை" யானது, துக்கசம்பவமாய் முடியின் பிள்ளைகள் தீயகாரியம் செய்யப் புகும்போதெல்லாம் (உதாரணமாக-பொய் பேச ஆரம்பிக்கும்பொழுதெல்லாம்) வண்ணான் பொய்பேசினதாலல்லவா முதலையால் இறக்கும்படி நேரிட்டது. ஆகையால் நாம் பொய்பேசாமலிருக்கவேண்டும் என்ற ஞானத்தை, சிறிது சிறிதாக அறிவார்கள். அங்ஙனமின்றி சந்தோஷ முடிவுடைய கதையாயிருப்பின், சந்தோஷத்தால் விளையாட ஆரம்பித்து, தீயவழியிற் செல்ல ஆரம்பிப்பார்கள்.)

10 வயதுடைய சிறுவர்கள் சேர்ந்த முதல் வகுப்புப்பிள்ளைகளிடம், I. சித்திர மூலயக்கதை, II. அபிநயத்துடன் (கேள்வி சம்பாஷணையின்றி) கூறும் கதை என்னும் இருவிதமான கதைகளையும் தனித்தனி நடத்தி, பரீக்ஷை செய்ததில், சித்திர மூலயத்தால் (கேள்வி, சம்பாஷணைகளுடன்) நடத்திய கதையே மிக்கபயன் தந்தது.

இது தான் என் அபிப்பிராயம். இனி மற்றைய நண்பர்களின் அபிப்பிராயத்தை அவாவுடன் எதிர் பார்க்கிறேன்.

K. S. ஆறுமுகம்,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
வேலாயுதபாளையம், தார்மபுரம் தாலுக்கா.

## A CHAT ON BOOKS

### புத்தகங்களைப்பற்றிய சிலமொழிகள்

தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் வெளியிடப்பட்டும் இப்பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டும் வரும் புத்தகங்கள் மிகுந்த சிலாக்கியமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. திருவேங்கட சதகமும் அதைப்போன்ற மற்ற சிறு நூல்களும் அரும்பதவுரையுடன் அச்சிடப்பட்டுள்ளன. தமிழில் விருத்தியடைய விரும்பும் நான்காம் வகுப்புப் பிள்ளைகள் இத்தகைய நூல்களையே வாங்கி வாசித்தல்வேண்டும்.

* * * * * *

இந்து பிள்ளைகட்குச் சொந்தமான கதைகளைச் சொல்ல விரும்பும் உபாத்திமாருக்கு 'ஆர்யசரித்திரம்' என்னும் புத்தகம் அதிக உபயோகப்படுமென்று நம்புகிறோம்.

* * * * * *

அநுபவ முறையால் கணக்கினைப் போதிப்பதற்குப் புத்தகந்தேடும் உபாத்தியாயர்கள் திருமலை கம்பனியாரால் வெளிப்படுத்தப்பட்ட அநுபவ முறைபோல போதகணிதம் Part I. என்னும் புத்தகத்தினை வாங்கவேண்டும். அதிற்காட்டப்பட்டுள்ள வழிகளிற் சில அருமையானவைகளாகக் காணப்படுகின்றன.

* * * * * *

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸ்காரர் வெளிப்படுத்தியுள்ள 'பாடசாலைப்படம்' (School Atlas) மிகவும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு தேசப்படத்தின் அழகினையுஞ் செம்மையினையும் செய்திறத்தினையும் நோக்க அந்தப் படங்களடங்கிய புத்தகத்திற்குக் குறித்துள்ள விலையாகிய அணா 12 ஐ மிகுந்த குறைவான விலையென்றே கூறல்வேண்டும். பட்டணங்களின் பெயர்களும் ஊர்களின் பெயர்களும் தமிழில் இல்லாமல் ஆங்கிலத்தில் இருப்பதனால் அப்புத்தகத்திற்கு அகௌரவம் ஏற்படாது. இப்படத்தொகுதியினை உபயோகிக்கவேண்டியவர்கள் 5 வகுப்பு முதல் 7 வகுப்பு வரையுள்ள பிள்ளைகளாதலால் பெயர்கள் ஆங்கிலத்தில் இருக்கலாம். இப்புத்தகம் வேண்டியவர்கள்



சென்னை, சுங்குராமசெட்டித் தெருவிலிருக்கும் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸ் மேனேஜரிடம் விலைக்குப் பெறலாம்.

* * *

இயற்கைப் பாடத்தினைப் போதிக்கும் உபாத்தியாயர்கள். C. இராஜகோபால நாயுடு அவர்களால் எழுதப்பட்டும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு மிருக்கும் கரும்பு, தென்னை, நெல், மா, விவசாய விளக்கம் என்னும் நூல்களை வாங்கி வாசிப்பார்களாகில் புதிதாகப் பலவிஷயங்களை யுணர்ந்தவராவார்கள்.

* * *

## FOREIGN NEWS

### பிறதேச வர்த்தமானம்

**நியூஸீலன்டில் செகன்டரி கல்வி**
**Secondary Education in New Zealand**

1913-ம் வருடத்திய நியூஸீலன்ட் செகன்டரி கல்வியைப்பற்றிய ரிபோர்டானது 10,000 ஜனத்தொகையுள் தொண்ணூற்று மூவரே ஒருவகையான செகன்டரி பகற்படிப்பைப் பெறுகிறார்களென்று கூறுகிறது. நூற்றுக்கு இருபத்தொரு பிள்ளைகள் சம்பளங்கொடுத்துச் செகன்டரி பள்ளியிற் சேருகிறார்களாம். சம்பளமின்றி படிக்கும் பிள்ளைகள் 1903 ம் வருடத்தில் இருந்ததைவிட 1913-ம் வருடத்தில் நூற்றுக்கு நூற்றுத்தொண்ணூறு வீதம் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. சம்பளமின்றி வாசிக்கும் சுதந்தரத்தை நியூ ஸீலன்டார் முற்றும் அநுபவிக்கிறார்கள் போலும்.

* * * * * *

**லண்டன் மாநகரத்தில் மாலைப்பள்ளிகள்**
**Evening Classes in London**

நல்லொழுக்கத்தினையும், நல்லறிவினையும், ஈசுரபத்தியினையும் விருத்திசெய்யும்பொருட்டு லண்டன்மாநகரத்தில் முதல் முதலாக மாலைப்பள்ளிகள் 1848-ஆம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பொழுது அப்பள்ளிகள் அம்மூன்று பாடங்களோடு அமையாது பல பாடங்களையும் போதிப்பதில் கையிட்டிருப்பதையும் கல்வியிலாகாவின் ஒவ்வொரு அதிகாரியும்

ஒவ்வொரு வகையிலும் மாலைப்பள்ளிகள் ஸ்தாபிக்க முயற்சிப் பதையும் பார்க்க எவ்வளவு சீக்கிரத்தில் இம்மாலைப் பள்ளிகள் முன்னுக்கு வந்தன என்று வியக்கவேண்டியதாயிருக்கிறது.

**ஐர்லன்ட் தேசத்தில் யோக்கியதா பத்திரம் பெருத உபாத்திகள்**
**Unqualified Teachers in Ireland**

கல்விச் சங்கத்தாருடைய (Board of Education) கட்டளைப் படி 45 வயதுக்குட் பட்டும் உபாத்திமைத் தொழிலிற் பயிலாதும் சாதாரண கல்வியிற் றேறியதாகப் பத்திரம் பெருதும் (No certificate of general Education) இருக்கும் உபாத்திகட்குச்சாதாரண கல்வியிற் சுலபமாக பரீக்ஷை யொன்றுவைத்து அப்பரீக்ஷையில் தேறியவர்களை 'யோக்கியதா பத்திரம் பெற்ற உபாத்திகளாக' மதிக்கிருர்களாம். இவ்விடத்தில் உபாத்திமைத் தொழிலிற் பயிலாது செஷன் பள்ளிகளில் படித்து உபாத்தியாயர் என எண்ணப்படவில்லையோ? இதைப்போலவே அவ்விடத்தும் உண்டுபோலும். ஆனல் நிபந்தனைகள் வேறுவிதமாக விருக்கலாம்.

*    *    *    *    *    *

**லண்டன்மா நகரத்து எலிமேண்டரி பள்ளிகள்**
**London Elementary Schools**

லண்டன்மா நகரத்துள்ள தொளாயிரத்துக்குச் சற்றேறக் குறைய வுள்ள எலிமென்டரி பள்ளிகளில் 7,50,000 பிள்ளைகள் வாசிக்கின்ருர்களாம். அவ்விடத்தில் யோக்கியதாபத்திரம் பெற்ற உபாத்திகள் ஆணில் 5,650 உம் பெண்ணில் 11,900 உம், ஆக 17,550 உபாத்திகள் என்றும் நிலைத்திருக்கிருர்களாம். அந்த 17,550 உபாத்திகளுள். 5,030 ஆண்பாலாரும் 9,590 பெண்பாலாரும் ஆக இருபாலிலும் 14,620 உபாத்திகள் உபாத்திமைத்தொழிற்பயில் உயர்தர கலாசாலையொன்றில் பழகியவர்களாம். அவ்விடத்திய கவுன்ஸிலார் எலிமென்டரி படிப்பிற்காக 5,000,000 பவுனும் செகன்டரி படிப்பிற்காக 1,000,000 பவுனும் வருடாந்தரத்திற் செலவழிக்கின்ருர்களாம்.

*    *    *    *    *    *



**பூச்சிகள் முகர்வது எப்படி?**
**How Insects smell?**

அமெரிகா கண்டத்துப் புலவருளொருவருடைய ஆராய்ச்சியினுல் தேனீக்களும் எறும்புகளும் தம்முடைய கால்களிலும் சிறகுகளிலும் உள்ள ஒருவகைப்பட்ட இந்திரியத்தினுல் மோப்பதாகத் தெரியவருகின்றது. கிராணேந்திரியம் பரிசாவயவத்தில் அதாவது அவைகளின் முகத்துள்ள மீசையில் இருந்ததாக நெடுநாளாக எண்ணப்பட்டு வந்தது.

*    *    *    *    *    *

**புதுகணக்குகள்**
**Fresh Sums**

இங்கிலாந்து தேசத்தில் எப்படிப் புதுகணக்குகள் உண்டாக வழிசெய்கிருர்கள் என்பதைக் கேட்டறிய நமது சந்தாநேயர்களுக்கு ஆவல் இருக்கலாம். புகழ்பெற்ற பெல்அண்டு ஸன்ஸார் உற்சாகத்தினை யுண்டுபண்ணும் புதிய கணக்குகள் எவ்வெட்டடங்கிய கேள்விக் கடிதங்கள் எழுகொண்ட அடுக்குகள் மாதந்தோறும் வெளிவர, கணிதத்தில் வன்மைபெற்ற புலவர்களைக்கொண்டு, ஏற்பாடுகள் செய்துவருகின்றனராம். இவர்கள் இப்படி யிருக்கிருர்களே நம்மவர்கள் எப்படியிருக்கிருர்கள் என்று விசாரித்துப்பார்க்கையில் நம்மவர்கள் ஆங்கில புத்தகத்தில் காணப்படும் கணக்குகளைத் தம்மதாகப் பாவிக்கும் உரிமை பூண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. ஒவ்வொரு நூலாசிரியரும் இத்தொழிலே மேற்கொள்ளுவார்களாகில் புதுகணக்குகள் பிறக்க இடமில்லாமற்போமே! புத்தகம் எழுத முன்வருபவர்கள் தம் அறிவாலுழைத்து புதுகணக்குகளை உண்டுபண்ணுவார்களென்று நம்புகிரும். அவ்வாறு செய்வார்களாகில் கணிதநூலும் முன்னுக்குவரும், பிள்ளைகளும் முன்னுக்கு வருவார்கள், எழுதினவரும் முன்னுக்கு வருவார். (யாமும் அன்னூர்க்கு உவப்புடன் வந்தனம் அளிப்போம்.)

161995

# NOTES OF THE MONTH

# மாதாந்தரக் குறிப்புகள்

**கேள்விகள்**
**Enquiries**

சில தினங்கட்கு முன்னர் உபாத்தியாய ரொருவர் உபாத்திமைச் சங்கங்களிலுள்ள கலாநிதியங்களில் வைக்கத்தகுந்த புத்தகங்கள் யாவை நீக்கத்தகுந்த புத்தகங்கள் யாவை என்று கேள்விகேட்டனர். இத்தகைய கேள்விகட்குப் பதில் அளிக்க எப்போதும் மகிழ்வோடு காத்திருக்கின்றோம். அவ்வாறு பதிலளிக்கு முன்னர் யாம் வேண்டுவது இரண்டுண்டு. முதலாவது கேள்விகேட்போர் தமது கேள்விகளை விபரமாகவும் தெளிவாகவும் எழுதியனுப்புதல் வேண்டும். இரண்டாவது, கேள்விகளுள் பலர்க்கும் பயன்படத்தகுந்ததா யிருக்குமாகில் அக்கேள்விகளையும் அவற்றிற்குரிய விடைகளையும் இப்பத்திரிகையில் வெளியிடுவோம். அப்படிப்பலர்க்குப் பயன்தராது ஒரு சிலர்க்கே உதவக்கூடியவைகளை இப்பத்திரிகையில் வெளியிட மாட்டோம். ஆனபடியினால் அவ்வித கேள்விகள் கேட்போர் அரையணா முத்திரைதலை வைத்தனுப்பிப் பதிலினைப்பெறவேண்டும்.

* * * * * *

**உபாத்தியாயருக்குள்ள கெழுதகைமை**
“The Spirit of the Teacher”

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூலின் பிரைமரி டிபார்ட்மெண்ட் சூப்ரின்டென்டன்டாகிய பிரம்மஸ்ரீ அருணாசல ஐயரவர்கள் “உபாத்திமைத் தொழிலின் மேன்மை” யைக் குறித்து வியாசம் ஒன்று எழுதியனுப்பினார்கள். அதற்காக அவர்கட்கு மனமுவந்து வந்தனம் அளிக்கின்றோம். உபாத்திமைத் தொழிலை மேற்கொண்ட உபாத்தியாயர்களெல்லாம் பலராலும் நன்கு மதிக்கத்தகுந்தவராயும் களங்கரகிதராயும் இருக்க வேண்டுமென்றும் அப்படியிருந்தாற்றான் பலதுறைகளிலும் இறங்கச்செய்யும் கல்வியைக் கற்பிக்கும் கௌரவமானவேலைக்கு அழகுண்டாகு மென்றும் ஐயரவர்கள் தம்வியாசத்துட் கூறுகின்றார். அப்படிக்கூறுவதோடு உபாத்தியாயர்கள் பிள்ளைகட்குக் கடவுளால் அளிக்கப்பட்ட அறிவு இத்துணைத்து, அவர்கள் இவ்வளவு அறிவுடன்றான் கூடினவர்கள், அவர்கட்கு இவ்வளவுதான் போதித்தல் வேண்டும் என்னும் பகுத்தறிவே நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் எடுத்துரைக்கின்றார். இது எல்லோராலும் அங்கீகரிக்கத்தகுந்ததும் மெச்சத்தகுந்ததுமே.

* * * * * *